17-4

॥ ஸ்ரீ: ॥

நாற்பது ஸம்ஸ்காரங்கள்

[கர்ப்பாதானம் முதலான ஸம்ஸ்காரங்களின் உட்கருத்தும், மந்த்ரார்த்தங்களும், தெளிவாக ப்ரயோகத்துடன் விளக்கப்பட்டு, புண்யாஹவாசனம், முகாந்தம், ஜயாதி ஹோமம், நாந்தீ ஶ்ராத்தம், வைதிக பரிபாஷை விளக்கம் ஆகியவைகள் அடங்கிய அனுபந்தத்துடன் கூடியது.]

[illegible] ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
7147

ப்ரசுரம்:
விஜய௵ பங்குனி௴

1954

“வைதிக தர்ம வர்த்தினீ”
2/218, தம்பு செட்டி தெரு, சென்னை-1.

விலை ரூ. 1-4-0

ப்ரசுரகர்த்தரின் ப்ரார்த்தனை


கோடிக்கணக்கான ஆஸ்திக கன, தனவான்கள் இருக்கும் இப்பாரத பூமியில், ப்ராம்மண ஸமூஹத்திற்கு இன்றியமையாத "நாற்பது ஸம்ஸ்காரங்கள்" என்ற இப்புத்தகத்தை ப்ரசுரித்து, ஸ்ரீ பரமாசார்யாளின் அனுக்ரஹ ரூபமான ஸ்ரீ முகமும் பெற்றது எங்கள் பெரும் பாக்யமே.

எங்கள் சிற்றறிவிற்கு எட்டிய வரையில், பற்பல அபூர்வ விஷயங்களைச் சேகரித்து, மிகக் குறைந்த விலையில், 170 பக்கங்கள் ப்ரசுரம் செய்திருக்கிறோம். ஒவ்வொருவரும் இதை வாங்கிப் படித்து, அனுஷ்டித்து அதனால் இஹ, பர ச்ரேயஸ்ஸை அடையவேண்டும் என்பதே எங்களுடைய அந்தரங்க அபிப்ராயம். இதில் ஏதாவது பிழைகளோ, இன்னும் சேர்க்கவேண்டிய விஷயங்களோ இருந்தால், அதை அன்புடன் அறிவித்தால், இரண்டாவது ப்ரசுரத்தில் நன்றியுடன் பயன்படுத்திக்கொள்ளுகிறோம்.

காரியதர்சி
வைதிக தர்ம வர்த்தினி.

ப்ரோக்ரஸ்ஸிவ் ப்ரிண்டர்ஸ், சென்னை—1.

174



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிப ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் } ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள்

ஸ்ரீ சக்ரம்

॥ श्रीः ॥

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकर भगवत्पाद प्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटि पीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्र सरस्वती श्रीपादैः

श्रीवत्स सोमदेवशर्मणे क्रियते नारायण स्मृतिः ॥

தங்களால் கவனத்துடன் தொகுக்கப்பட்டுள்ள "நாற்பது ஸம்ஸ்காரங்கள்" என்கிற புத்தகம் நம் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இப் புத்தகத்தில் மனிதர்களின் ச்ரேயஸ்ஸுக்கு அஸ்திவாரமாக அமைந்துள்ள ஸம்ஸ்காரங்கள் நன்கு விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. ஆஸ்திகர்களில் அனேகர் "முக்யமாய் அனுஷ்டிக்கவேண்டிய ஸம்ஸ்காரங்கள் என்ன என்பது நன்கு தெரியவில்லை. அவைகளை விளக்கிக் காட்டும் நூலும் அகப்படவில்லை. அத்தகைய புத்தகம் கிடைத்தால் நல்லது" என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்பேர்பட்ட ஆஸ்திக ஜனங்களுக்கு இப்புத்தகம் மிகவும் ப்ரயோஜனப்படும். அவர்கள் இப் புத்தகத்தை நன்கு படித்து, அந்தந்த ஸம்ஸ்காரங்களை அந்தந்த காலங்களில் அனுஷ்டித்து, தூய மனத்தினராகி, ஸகல ச்ரேயஸ்களையும் அடையவேண்டுமென்று ஆசீர்வதிக்கிறோம்.

விஜய யாத்ரா ஸ்தானம்
ஸ்ரீ காஞ்சி க்ஷேத்ரம்
விஜய பால்குன பகுள த்விதியை.

நாராயண ஸ்ம்ருதி:

பொருளடக்கம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிப ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் ஸ்ரீ முகமும் படமும்

அநுபந்தம்

[இவைகளின் விளக்கம்]

அவதாரிகை

உலகில் இறைவன் விசித்ரமான பல ஸ்ருஷ்டிகளைச் செய்கிறார். இயற்கையாக சில அம்சங்களை அளித்து, செயற்கையால் சிலவைகளைக்கொண்டு நன்மைபெறுங்கள் என, அதற்கேற்ற பொருள்களையும் தந்தருளுகிறார். நமது உடல் வளர்ச்சிக்கு எண்ணெய், உப்பு, சர்க்கரை முதலிய வஸ்துக்கள் மிகமிக முக்கியமானவை. பிறந்த உடல் வளர்ந்து, வாழ, செயற்கையான எண்ணெய் தேய்த்துக் கொள்ளல், மதுரமான ஆஹாரம், உப்பு முதலிய அறுசுவை கலந்த உணவு அருந்தல் முதலியவை களால் இயற்கையை வ்ருத்தி செய்கிறோம்.

தாய் வயிற்றிலிருந்து பிறந்தபடியே இருக்க இயற்கையே இடம் தருவதில்லை. செயற்கையால் சில மாறு தல்களுடன் சேர்ந்தால்தான் இயற்கையும் பரிமளிக்கிறது. இது சேதன வஸ்துக்களில் மாத்ரமல்ல. அசேதனமான ஜடவஸ்துவிலும் இதைக் காணலாம். சுரங்கத்திலிருந்து எடுத்த தங்கமோ, வைரமோ, கடலிலிருந்து எடுத்த முத்தோ பவழமோ அப்படியே பயன் படுவதில்லை. அதன்மீதுள்ள அழுக்குகளை அகற்றி, கடசல் பிடித்து, மெருகு கொடுத்தால்தான் அது பளபளவென்று ப்ரகாசிக்கின்றது. அழகைத் தருகின்றது நமக்கும்.

அங்ஙனமே, மனிதன் பிறக்கும்பொழுது தனக்குக் காரணமாயிருந்த பீஜ தோஷம், தான் தங்கியிருந்த கர்ப்பதோஷம் முதலியவைகளுடன் பிறக்கிறான். தோஷங்களை அகற்றும் உபாயம் பலவகை. சிலதை ஜலத்தினால் போக்கலாம். சிலவற்றை மண்ணினால் நீக்கலாம். இப்படி பலவகையான ஶுத்தி ஸாதனங்கள் இருக்கின்றன. முன் சொன்ன பீஜ கர்ப்ப தோஷங்களை நீக்க வேதம் கூறிய கர்மாக்களால்தான் முடியும் மற்றவை எதுவும் பயன்படா.

உடலில் உள்ள அழுக்கை ஜலத்தினல் அகற்று கிறேம். உடலுக்குள்ளே மனதில் தங்கி இருக்கும் மலத்தையும், ஜீவனிடம் உள்ள அவித்யா மலத்தையும் எப்படிப் போக்குவது? காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் இவைகளே மனதிலுள்ள மலம். அடிக்கடி உடல் எடுத்து மரிக்கக் காரணமான கர்மவாஸனையே ஜீவனின் மலம். இந்த மலங்களோ, இவைகளுக்கு இருப்பிடமான மனமோ, ஜீவனே, நமது கண்களுக்குப் புலப்படுவதில்லை. ஆனல், அவைகளின் தூண்டுதலால் நடக்கும் கார்யங்களைக் கொண்டே அவை களை அறிய வேண்டியிருக்கிறது. நன்கும் அவைகளை அறிறோம்.

கண்ணுக்குத் தெரியாத விஷயங்களை நமக்கு எடுத் துக் காட்டுகிறது வேதம். அதன் கருத்தை விளக்கிக் காட்ட மஹரிஷிகள் ஸூத்ரம் எழுதினர்கள். அந்த ஸூத்ரத்தில் மனோமலம் ஜீவமலம் அகல நாற்பது ஸம்ஸ்காரங்களையும் எட்டு ஆத்ம குணங்களையும் மஹரிஷி கள் கூறுகிறார்கள். மலத்தை அகற்றுவது மாத்ரமல்ல. இவை ப்ரும்மலோகத்தையும் தருகின்றன மூன்ருவது லோகமான ஸ்வர்க்கத்திலேயே துன்பம் கிடையாது. ஒரே இன்பமயம். ஏழாவதான ப்ரும்மலோகத்தில் ஒரே ஆனந்தம்தான். துக்கலேசம் கிடையாது. அந்த ப்ரும்மலோகம் சென்றவர் வேதாந்த க்ஞானமும் பெற்றி ருந்தால் பூமியில் வந்து மறுபடி ஜன்மம் எடுக்கவேண் டாம். அந்த கல்பத்தில் உள்ள ப்ரும்மாவின் உத்யோகம் முடிந்து அவர் பரப்ரும்மத்துடன் இரண்டற ஒன்ருகக் கலக்கும் வரை அவருடன் கூட இருந்து ப்ரும்ம விசாரம் செய்து அவருடன் கூடவே க்ரமமுக்தி அடைவர். அது தான் ப்ரும்மானந்தம் என்பது. அதை அடைவதே நம் நோக்கமாகும்.

இந்த ப்ரும்மலோகம் செல்ல நாற்பது ஸம்ஸ்காரங் கள் ஏணிபோல் இருக்கின்றன. இதைக் கௌதமர் தமது ஸூத்ரத்தினல் விளக்கிக் காட்டுகிறார் :—

यस्यैते चत्वारिंशत् संस्काराः न च अष्टावात्म गुणाः
न सः ब्रह्मणः सायुज्यं गच्छति ॥

யாருக்கு இந்த நாற்பது ஸம்ஸ்காரங்கள் இருக்கின்றனவோ, ஆத்ம குணங்கள் எட்டு இல்லையோ, அவர் ப்ருமம்மாவின் ஸாயுஜ்யத்தை அடைய மாட்டார். ஸம்ஸ்காரமும், குணமும் உள்ளவர் ப்ரும்ம ஸாயுஜ்யம் அடைவர் என்பது திண்ணம்.

ஜீவன் இருக்குமிடத்தை "இதோ" என்று தொட்டுக் காட்டுகிறது வேதம்.

पद्मकोश प्रतीकाशँ हृदयंचाप्यधो मुखं ।
तस्याः शिखायामध्ये परमात्मा व्यवस्थितः ॥

"கழுத்திற்குக் கீழே பன்னிரண்டு அங்குலத்தில், நாபிக்கு மேலே, ஹ்ருதயம் தாமரை மொக்குபோல் இருக்கிறது. அங்கே நீவார நெல்லின் வால்போல் மெல்லியதும், பீத வர்ணத்துடனும், அணுபோல் மிக ப்ரகாசிக்கின்றது. ஜ்வாலை சூழ்ந்து, ஸமஸ்த வஸ்துக்களுக்கும் இருப்பிடமானது அது. அதன் அக்ரத்தில் பரமாத்மா இருக்கின்றார். அவரது நிழலே ஜீவனாக இருந்து இன்ப துன்பங்களை அநுபவிக்கின்றது" என்று பரமாத்மாவையும், ஜீவனையும் விளக்கி, அதை இந்தக் கண்ணால் காண முடியாது என்றும் ஶ்ருதி வர்ணிக்கிறது.

அந்த ஜீவன் கர்ம வசத்தால் உடல் எடுக்கத் தாயின் வயிற்றிலுள்ள கர்ப்பப் பையை அடைகிறது. அதுதான் கர்ப்பாதானம் என்று பெயர். இதுவே நாற்பது ஸம்ஸ்காரங்களில் முதலாவதாம். இது பிறக்கப் போகும் ஜீவனுக்குக்காகத் தந்தை செய்யும் கார்யமாகும். ஔபாஸன அக்னி ஸாக்ஷியாகவே மந்த்ரங்களைக் கூறி ஹோமம் செய்து, கர்ப்பாதானத்தைச் செய்கிறோம். இந்த நாற்பது ஸம்ஸ்காரங்களைச் செய்த பிறகு இவ்வுடலைத் தீயிலிடுகிறோம். ஆரம்பத்திலும் முடிவிலும் அக்னியே நமக்கு ஸாதனமானது. அந்த அக்னியை இடையிலும், அதாவது

ஜீவித்திருக்கும் வரை, நித்யம் ஆராதிக்க வேண்டும். அக்னி இல்லாத ஸம்ஸ்காரமே இல்லை.

இப்படி, ஜீவன் இருப்பிடத்தைக் காண்பித்து, துன்பத்தை அகற்றி, இன்பத்தைப் பெற ஸம்ஸ்காரம் எனும் ஸாதனத்தைக் காட்டிய பின்பும் நாம் துன்பம் அடைகிறோம். துன்பத்தை வெறுக்கிறோம். இன்பத்தை விரும்புகிறோம். ஆனால், அதற்கேற்ற வழியில் மாத்ரம் செல்வதில்லை. நமக்கு உண்டாகும் துன்பத்திற்கு, துன்பத்தை உண்டுபண்ணும் வேறொரு மனிதனோ, நோயோ, ஈஶ்வரனோ காரணமில்லை. நாம்தான் காரணம். நமது கர்மாதான் முதற் காரணம்.

இந்த நாற்பது ஸம்ஸ்காரங்களே பகவானை ஆராதிக்கும் பூஜையாம். ஸ்வர்க்கமோ, வைகுண்டமோ, கைலாஸமோ, ப்ரும்ம லோகமோ, முடிவில் முக்தியோ பெற இவைகளே சிறந்த ஸாதனங்களாகும்.

स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः

தன் கர்மாவினால் பகவானை அர்ச்சிக்கும் மனிதன் ஸித்தி அடைகிறான் என்று கீதையில் பகவான் கூறுகிறார். இவைகளில் கல்யாணம், நிஷேகம் முதலியவைகளை ஸகல மதத்தினரும் செய்து கொள்கிறார்கள். ஆனால், அதில் தர்மத்தைப் புகவிட்ட பெருமை நமது ஸனாதன தர்மத்திற்கே தனிச் சிறப்பானது.

अप्यर्थ कामौ तस्यास्तां धर्म एव मनीषिणः

“அர்த்தமும் காமமும் கூட தர்மமாகவே இருந்தது அறிவுள்ள அரசனுக்கு” என்று கவிகுல திலகமான காளிதாஸன் ரகுவம்சத்தில் கூறுகிறார். கேவல பாஷையை வளர்க்க எழுதிய காவ்யத்தில் கூட தர்மத்தை ஆங்காங்கு வெளியிடுவது நம் தேச கவிகளுக்கும் விசேஷமாக கவிச்சக்ரவர்த்தி காளிதாஸனுக்கும் இயற்கையான குணமாகும் என்பது கவனிக்கத்தக்கது. இத்தகைய உத்தம தேசத்தில், மதத்தில் பிறந்து, உத்தமமான ஸம்ஸ்

காரம் என்ற ஸாதனங்களைப் பெற்றதற்கு நாம் பெருமை அடையவேண்டும். அப்படி உணர்ந்து அனுஷ்டித்த நமது முன்னோர் நித்ய ஆனந்தம் நிறைந்தவர்களாகவும், நோயற்ற உடல் பெற்றவர்களாகவும் வாழ்ந்தனர் என்பது ப்ரஸித்தம்.

தற்சமயம் பெயரளவுக்கு நாம் அந்த ஸம்ஸ்காரங் களைச் செய்கிறோம். அதிலும் பூர்ண ஶ்ரத்தை யுடன் இந்தக் கர்மாவை எப்பொழுது செய்யவேண் டும்? இதில் யார் யாரைப் பூஜிக்கின்றோம்? மந்த்ரத் தினால் என்ன கோருகிறோம்? என்பவைகளை உணராமல் செய்கிறோம். ஸந்த்யா காலத்தில் செய்யவேண்டியது என்பதைக் காட்டவே, கர்மாவிற்கே "ஸந்த்யா வந்தனம்" என்று பெயர் வைத்தது போல், குழந்தை பிறந்தவுடனே (அல்லது புண்யாஹ வாசனத்தன்றுவது) செய்ய வேண்டிய கர்மா என்று காட்டவே "ஜாதகர்மா" என்று அதற்குப் பெயரிட்டார்கள். அந்த ஜாதகர்மாவை நாம் எப்பொழுது செய்கிறோம்? என்று கூட தெரியாத வர் நம்மிடையே இருக்கின்றனர். பெயர் வைப்பது, விதிப்படி ஆஹாரம் அளிப்பது, குடுமிவைப்பது முதலிய எல்லாவற்றையும் உபநயனத்தோடு சேர்த்துச் செய் வதும், சிலர் உபநயனமும் விவாஹத்திற்கு முதல் நாளே நடத்துவதுமே ப்ராம்மண ஸமூஹத்திற்கு இழிவைத் தருகின்றன.

ஸமூஹமும், தனிப்பட்டவரும் முன்னேற வேண்டு மானால், காலத்தில் அந்தந்த கர்மாக்களைச் செய்ய வேண் டும். அவைகளை ஶ்ரத்தையுடனும், மந்த்ர அர்த்தங்களை உணர்ந்தும் அனுஷ்டிக்க வேண்டும்.

यदेव विद्यया करोति श्रद्धया उपनिषदा
तदेव वीर्यवत्तरं भवति॥

எதை நன்கு அர்த்தம் அறிந்து அனுஷ்டிக்கிறோமோ அதே அதிக வீர்யமுள்ளதாகிறது என்று சாந்தோக்ய உபநிஷத் வர்ணிக்கிறது. அர்த்தம் தெரிந்து ஶ்ரத்தை

யுடன் செய்தால் அதிக பலன் என்பதால், அர்த்தம் தெரியாமல் செய்வதற்கும் பலன் உண்டு என்றே ஏற்படுகிறது. கர்மாக்களைச் செய்யும்பொழுது வேறிடத்தில் கவனத்தைச் செலுத்தாமலும், வேறு பேச்சு பேசாமலும் செய்தால்தான் அந்தந்த தேவதைகளின் ப்ரஸாதத்தைப் பெறலாம். என்ன செய்கிறோம் என்று தெரியாமலும், ஸ்ரத்தை இல்லாமலும் செய்யும் கர்மாவின் பலனை நாம் அடைவதில்லை. ப்ரும்ம ரக்ஷஸ்கள் கொண்டு போகின்றன. ஆதலால் ஒவ்வொரு கர்மாவையும், அதில் விநியோகமாகும் மந்த்ரங்களின் பொருளையும் உணர்ந்து வேறு கவனமும் பேச்சும் இல்லாமல் செய்தால், கர்மாவின் பூர்ண பலனை அதிகமாக அடைவோம். இதை தெரிவிப்பதற்காகவே, "வைதிக தர்ம வர்த்தனீ" எனும் பத்ரிகையில் "கர்ப்பாதானம்" முதல் ஸம்ஸ்காரங்களை ப்ரசுரித்து வந்தோம். அவைகளைத்திரட்டி, அங்கு காணப்படாத அதிக சில விஷயங்களையும் சேர்த்து ஒரு புஸ்தகமாக வெளியிடுகிறோம். ஸந்த்யா வந்தனத்தைப்போல் இந்த நூலும் ஒவ்வொரு ப்ராம்மணர் வீட்டிலும் இருக்கவேண்டிய சிறந்த பொக்கிஷம். பெண் மக்கள் இதிலுள்ள விஷயங்களை நன்கு தெரிந்து கொண்டால், அவர்கள் ஸந்ததியும் அறிவுள்ளதாகவும், ஸ்ரத்தையும் நீண்ட ஆயுள் உள்ளதாகவும் இருக்கும். ஆதலால், பெண் மக்களும் படிக்கும்படி மிக எளிய நடையில் மந்த்ரார்த்தங்களையும் மற்றதையும் வெளியிடுகிறோம்.

"வைதிக தர்ம வர்த்தனீ" மூலமாக நாம் செய்து வரும் ஸமூஹத்தொண்டை ஒரு சில ஆஸ்திகர்களே அறிந்து ஆமோதிக்கிறார்கள். நமது ஸந்த்யா வந்தன நூலை ஒன்றே கால் ரூபாய்க்குக் கொடுப்பதைக் கண்டு ஆச்சர்யமடைந்த ஒரு பெரிய ஆஸ்திக கனவான், "இது வ்யாபாரிகளால் ப்ரசுரம் செய்யப்பட்டிருந்தால், ஐந்து ரூபாய் விலை வைப்பர். இதிலுள்ள அபூர்வ விஷயத்தைக் கவனித்தால், ப்ரதி ஒன்றுக்கு ஐம்பது ரூபாய் கொடுக்கலாம்" என்றார்.

நம் நோக்கத்தை உணர்ந்து, இந்த நூலை ஒவ்வொரு வரும் படித்துப் பயன் பெற்று, பலரையும் படிக்கும்படி செய்தால், மற்றும் பல இத்தகைய நூல்களை வெளியிட லாம். குழந்தைகளுக்கு உபநயனம், விவாஹம், ஸீமந் தம் முதலிய சுப முஹூர்த்தங்கள் நடப்பதற்கு முன் இந்த நூலை படிக்கும்படி செய்வது பெற்றோர் கடமை யாகும். மற்றோரும் இதை வாங்கி, சுப காலங்களில் ஓதியிட்டு, பரிசாக அளித்தால், ஒழிந்தபொழுது இதை அவர்கள் படிக்கக்கூடும். எங்கள் முயற்சி ஸபல மாகும் படி செய்ய நம் அன்பர்கள் முன்வந்து, கர்மாக்களைப் பொருள் அறிந்து செய்து, பிறரையும் அங்ஙனம் செய் வித்து, அரோக த்ருட காத்ரர்களாக வாழ்வார்களாக.

இத்தகைய நூல் இதுவரை எங்கும் வெளிவரவில்லை என்பது மிகையாகாது. நீங்கள் இதைப்படித்தால் மட் டும் போதாது. உங்கள் நண்பர்களையும் படிக்கும்படி செய்யவேண்டும். ஆஸ்திக ஸ்ரத்தையுள்ள தனிகர் நூற் றுக்கணக்கான ப்ரதிகளை வாங்கி ஏழைகளுக்கு இலவச மாகத் தரவேண்டும்! சுப காலங்களில் இதைப் பரிசாக வழங்கவேண்டும்.

40 ஸம்ஸ்காரங்களும் நமது மலமெனும் இருளை நீக்கி, அப்பப்போது ஒரு ப்ரகாசத்தைத் தருகின்றன. ஒவ் வொரு ஸம்ஸ்காரமும் ஒரு தீப ஜ்யோதிஸ் போலிருக் கிறது. மஹாஜ்யோதி ஸ்வரூபியான அகண்ட ஸச்சிதா னந்த பரப்ருஹ்மத்தில் நம்மை ஐக்கியப்படுத்தும் இவை ஒவ்வொன்றையும் ஒரு சிறிய தீபமாகவும், அகண்ட ஆத்ம ஜ்யோதிஸ்ஸை ஒரு பெரிய தீபமாகவும் சித்தரிப்பது மிகப் பொருத்தமானதல்லவா? 40 ஸம்ஸ்காரங்களையும் அர்த் தம் அறிந்து ஸ்ரத்தையுடன் அனுஷ்டித்தால் ஆத்மானந்த ஜ்யோதிஸ்ஸைப் பெறுவது திண்ணம்.

"தர்மோ ரக்ஷதி ரக்ஷித:"

இங்ஙனம்

ஆஸ்திகர் அடி பணியும்

ஆசிரியர்

நாற்பது ஸம்ஸ்காரங்கள்

முதலில் த்விஜன்மாவை ரக்ஷிப்போம்!

जन्मना ब्राह्मणो ज्ञेयः संस्कारैः द्विज उच्यते ।
विप्रत्वं विद्यया चापि त्रिभिः श्रोत्रिय उच्यते ॥

பிறப்பினால் ப்ராம்மணன், ஸம்ஸ்காரங்களால் த்விஜன் எனப்படுகிறான். விப்ர என்பது வித்யையால் உண்டாகிறது. இம்மூன்றும் சேர்ந்தால் ஶ்ரோத்ரியன் எனப்படுகிறான். ப்ராம்மண, க்ஷத்ரிய, வைஶ்ய என்பவர் 'த்விஜர்' எனப்படுவர். இருமுறை பிறப்பவர் என்பது அதன் பொருள். இருமுறை பிறப்பவை பக்ஷியும் பல்லுமாம். இவைகளுக்கும் 'த்விஜ' என்ற பெயருண்டு. பக்ஷி தாய் வயிற்றிலிருந்து முதலில் முட்டையாகப் பிறக்கிறது. பின்னர் குஞ்சாகிறது. பற்களும் ஒருமுறை முளைத்து விழுந்து, இரண்டாம் முறை பிறக்கின்றன. அப்படியே மூன்று வர்ணத்தாரும் தாய்தந்தையிடம் உண்டாகும்போது ஒரு பிறப்பையும், கர்ப்பாதானம், முதலிய 40 ஸம்ஸ்காரங்களால் மற்றோர் பிறவியையும் பெறுகின்றனர். ஆதலால் 'த்விஜர்' எனப்படுகின்றனர். வேத ஶாஸ்த்ர அப்யாஸத்தால் 'விப்ரன்' ஆகின்றான். இம்மூன்றும் ஒன்று சேர்ந்தால் 'ஶ்ரோத்ரியன்'. இந்த ஶ்ரோத்ரியனே உயர்ந்தவன். அவன் ஆசையற்றவனானால் மிகமிகச் சிறந்தவன். தைத்திரீய உபநிஷத் கூறும் ஆனந்த ஸோபனத்தில் இவனே முதற்படி. வைஶ்வ தேவத்தில் "அகாமோபஹதாய ஶ்ரோத்ரியாய ஸ்வாஹா" என அவனுக்கு ஒரு ஹோமம் செய்யப்படுகிறது. 40 ஸம்ஸ்காரங்களும் க்ரமமாக செய்யப்படின் ப்ரும்மலோகம் கிட்டும். இவைகள் உடல் மூலமாக உள்ளக் கமலத்திலுள்ள ஜீவனை அடைகின்றன. அந்த ஜீவனோ பரமாத்மாவினிடமிருந்து மாயையால் பிரிக்கப்பட்டவன். அவித்யையால், ஜனன மரணம், ஜரை, சோகமோஹம், பிணி பசி என்பன அவனுக்கு உண்டா

கின்றன. அவித்யை என்ற மலம் அகன்றால் ஞானம் உண்டாகும். ஞானத்தால் பேரின்பம் பெறலாம். நீண்ட நாளாக களிம்பு நிறைந்த ஒரு பாத்ரத்தைப் பல நாள் சுத்தம் செய்யவேண்டும். அப்பொழுதுதான் களிம்பு அகன்று ஸ்வபாவ நிறம் உண்டாகும். குடிக்கவும், மற்ற கார்யங்களுக்கும் அப்பொழுதுதான் பயன்படும். உள்ள தோஷத்தை அகற்றுவதே 'ஸம்ஸ்காரம்' எனப்படுகிறது.

அவையாவன: கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்ம, நாமகரணம், அன்னப்ராஶனம், சௌளம், உபநயனம், நான்கு வேத வ்ரதங்கள், ஸமாவர்த்தனம், கல்யாணம், பஞ்சமஹா யக்ஞம், ஏழு பாக யக்ஞங்கள், ஏழு ஹவிர்யக்ஞங்கள், ஏழு ஸோம ஸம்ஸ்தை என்பன. ப்ராஜாபத்ய, ஸௌம்ய, ஆக்னேய, வைஶ்வதேவ என்பன நான்கு வ்ரதங்கள். பஞ்ச மஹா யக்ஞ மாவது: தேவயக்ஞம், பித்ரு யக்ஞம், மனுஷ்ய யக்ஞம், பூத யக்ஞம், ப்ரும்ம யக்ஞம் எனப்படும். அஷ்டகா—அன்வஷ்டகா, பார்வணம், ஸ்தாலீபாகம், ஆக்ரஹாயணீ, ஶ்ராவணீ, சைத்ரீ, ஆஶ்வயுஜீ என்பவை ஏழு பாக யக்ஞங்கள். அக்னி ஆதானம், அக்னி ஹோத்ரம், தர்ஶபூர்ண மாஸம், ஆக்ரயணம், சாதுர்மாஸ்யம், நிரூட பசுபந்தம், ஸௌத்ராமணி என்ற ஏழும் ஹவிர்யக்ஞங்கள். அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்த்யம், ஷோடஶீ, வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம் என்ற ஏழும் ஸோம ஸம்ஸ்தை எனப்படும்.

மேற்கூறியவைகளில் கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்ம, நாம கரணம், அன்ன ப்ராஶனம், சௌளம், உபநயனம், வ்ரதம், ஸமாவர்த்தனம், விவாஹம் இவைகள் பெயரளவில்தான் நடக்கின்றன. அவச்யம் ப்ரதிதினம் செய்யவேண்டிய ஔபாஸனம், வைஶ்வதேவம் முதலியவைகளையே பலர் செய்வதில்லை. ஸர்ப்பபலி, சைத்ரீ, ஆக்ரயணீ முதலிய ப்ரதி வருஷமும் செய்யத்தக்கவைகளைச் செய்பவர் அரிது. அக்னி ஆதானம் முதலிய ஶ்ரௌத கர்மா எனப்படும் மூன்று அக்னிகளில் செய்யத்தக்க மற்ற ஸம்ஸ்காரங்களைச் செய்பவர் கோடி

யில் ஒருவர். இந்த ஸம்ஸ்காரங்களை அலக்ஷ்யம் செய்ததால் ஆத்ம சக்தியை இழந்தோம். பலவகை துன்பத்தையும் பெறுகிறோம். இவைகளின் பெருமையையும் அவஶ்யத்தையும் முறையே கூறுவோம். அன்பர்கள் படிப்பதோடு மட்டும் நிற்காமல், காலத்தில் அந்தந்த ஸம்ஸ்காரங்களைச் செய்யவேண்டும். பொருள் உணர்ந்து செய்யவேண்டும். ஶ்ரத்தையுடன் செய்யவேண்டும். மந்த்ர, தந்த்ர லோபமின்றி செய்யவேண்டும். இக் கர்மாக்களை வேதம் விதித்தது. தர்ம நூல் விளக்கிற்று. கல்ப ஸூத்ரங்கள் விவரித்தன.

முதல் ஸம்ஸ்காரம் கர்ப்பாதானம்

ஒரு மரம் நல்ல பழம் அளிக்கவேண்டுமானால், நல்ல விதையை நல்ல நிலத்தில் நல்ல காலத்தில் விதைக்க வேண்டும். ‘பருவத்தே பயிர்செய்’ என்பர். ஸாதாரண செடி கொடிகளுக்கே இந்த நியமம் வேண்டுமானால், அறிவு படைத்த மனிதனைப் பிறப்பிக்க எவ்வளவு நியமம் வேண்டும்? நற்புத்ரன் உண்டாகி, அவனும் அவன் பெற்றோரும் நன்மை பெற சில விதிகளைக் கூறுகிறது சாஸ்த்ரம். முதல் ஸம்ஸ்காரம் ஒழுங்காக இருந்தால் தான் மற்றவை நன்கு நடைபெறும். ‘கர்ப்பாதானம்’ எனும் கர்மாவின் பொருளை அடுத்தபடி கூறுவோம். தர்மநூல் கூறுவதுபோல் நடக்கவும் அதன் பெருமையை அறியவும் தர்ம விதியை முதன் முதலில் கவனிப்போம்.

ஸ்த்ரீகள் ருதுவான தினம் முதல் 16 நாட்களுக்குள் தான் கர்ப்பம் தரிப்பார்கள். 2, 4, 6, போன்ற இரட்டைப் பட்டதினங்களானால் ஆண்ஶிஶுவும், 1, 3, 5 போன்ற ஒற்றைப் பட்ட நாட்களானால் பெண்குழந்தையும் உண்டாகும். இந்த 16 நாட்களிலும், முதல் 4 தினங்களிலும், அமாவாஸ்யை, பௌர்ணமி, அஷ்டமி, சதுர்தஶி, ஏகாதஶி, த்வாதஶி, ஸங்க்ரமணம், ஜன்ம நக்ஷத்ரம் ஆகிய நாட்களிலும் ஸ்த்ரீ புருஷ ஸங்கமம் கூடாது. ரஜஸ்வலையான முதல் நாள் சண்டாளி. இரண்டாம் நாள்

ப்ரும்மஹத்தி செய்தவள். மூன்றும் நாள் வண்ணாத்தி எனப்படுவார்கள். நான்காவது நாள் ரஜஸ் ஸம்பந்தம் இருக்கு மாதலின், ஸத் புத்ரனை விரும்புவோர் இந்த 4 தினங்களையும் விலக்கவேண்டும். 4-வது தினத்தில் உண்டாகும் ஶிஶு அல்பாயுஸ் ஆகும். 5-ல் புத்ரீ, 6-ல் மத்யமமான புத்ரன். 7-ல் புத்ரனில்லாப் பெண். 8-ல் அடக்கி ஆளும் புத்ரன். 9-ல் நல்ல புத்ரீ. 10-ல் நற்புத்ரன். 11-ல் அதர்மம் செய்யும் பெண். 12-ல் சிறந்த புத்ரன். 13-ல் வ்யபிசாரியான பெண். 14-ல் தர்மக்ஞனும் ஆத்மக்ஞானியுமான புத்ரன். 15-ல் நல்ல இடத்தில் வாழ்க்கைப்படும் பெண். 16-ல் ஸகல நற்குணங்களு முள்ள புத்ரன். இப்படி முறையே ஜனிப்பார்கள். புருஷனின் வீர்யம் அதிகமானல் ஆணும், ஸ்த்ரீயின் சக்தி அதிகமானல் பெண்ணும், இரண்டும் ஸமமாயின் நபும் ஸகமும் பிறக்கும். ஆதலின் "உண்டி சுருங்குவது பெண்டிற் கழகு." என்பர்

ருது காலத்தில் ஒரு முறை அவஶ்யம் கர்ப்பாதானம் செய்யவேண்டும். இல்லையேல் ஶிஶுவைக் கொன்ற பாபம் உண்டாகும். பித்ருக்களின் கடனை நீக்குவதற்கு ஒரு புதல்வன் அவஶ்யம் வேண்டும். அது வரை ருது ஸங்கமம் அவஶ்யம். புத்ரன் ஜனித்த பின் நிர்பந்தமில்லை. பூர்ண கர்ப்பிணி, இஷ்டமில்லாதவள், ரோக முள்ளவள், விரிந்த கேஶமுள்ளவள், பசியுள்ளவள் அதிகமாக புஜித்தவள், ஆகிய ஸ்த்ரீகளிடம் கர்ப்பாதானம் செய்யலாகாது. ஶுத்தனய், கந்த புஷ்பங்களால் தன்னையும் மனைவியையும் அலங்கரித்து, தீபத்தை அருகில் வைத்துக்கொண்டு, முதல் ஸங்கமமானல் பூணலை யக்ஞோபவீதமாகவே தரித்து, நல்ல சிந்தையுடன் ஸங்கமம் செய்யவேண்டும். ஒரே ஸமயத்தில் இருவரும் வஸத்ரமில்லாதிருந்தால் தோஷமுண்டாகும். முதல் முறை தவிர மற்ற காலத்தில் பூணலைப் பின்புரம் மாலை போல் தொங்க விடவேண்டும். முதல் ஸங்கமத்தில் அவஶ்யம் உடனே ஸ்னனம் செய்யவேண்டும். மற்றவைகளில் நன்கு ஶுத்தம் செய்துகொண்டு, ஆசமனம் செய்துவிட்டுத் தனிப் படுக்கையில் படுக்கவேண்டும்.

ஸ்த்ரீகள், ப்ரஸவம்வரை புருஷ ஸங்கமம் வேண்டு மென இந்த்ரனிடம் வரம் கேட்டிருப்பதால், அவர்கள் கோரினல், ருது காலமில்லாதபோதும், அதாவது 16 நாட்கள் சென்ற பின்பும் ஸங்கமம் செய்வது பாபமல்ல. பகலும் இரு ஸந்த்யா காலங்களும் போகார்ஹமல்ல. அச்சமயம் கர்ப்பமுண்டானல் முறையே அல்பாயுஸாகவும், அஸுரகுணமுள்ளதாகவும் ஸிஸு தோன்றும். போக காலத்தில் இருவரும் கண்களை மூடலாகாது. கோபம் தூக்கம் முதலியவைகளைவிட்டு, ஸந்தோஷத்துடன் இருக்கவேண்டும். இந்த விதிகளை அனுஸரித்தவர் க்ருஹஸ்தராயினும் ப்ரும்ம சர்யத்தைக் கைக்கொண்டவராவர். அமாவாஸ்யை, பௌர்ணமிகளில் ஸ்த்ரீ ஸங்கமம் செய்தோர் இந்த்ரியத்தைஇழப்பர் என வேதம் கூறுகிறது. சாஸ்த்ர விதியை மீறி அதி ஸங்கமம் செய்வோரின் தாது குறையும். ரோக மூண்டாகும். செல்வமழியும். ஸத் கர்மாவும் கெடும்.

இது ஒரு ரஹஸ்ய விஷயம். இதற்குக்கூட சாஸ்த்ரம் கூறுவது அழகோ? என நினைப்பர் சிலர். முக்யமாக கவனிக்கவேண்டிய விஷயம் இதுதான். இதில் தவறு செய்தால், அது நமக்கும், பிறக்கப்போகும் ஸிஸுவிற்கும் தீமை செய்ததாகும். ஈ, எரும்பு முதல் ப்ரும்மா வரை அனைவருக்கும் போக இச்சை இயற்கை. இதில் சாஸ்த்ரம் புகுந்து, போகத்திற்கும் குறைவின்றி, அதைக் கட்டுப்படுத்தி முடிவில் மோக்ஷத்திற்கும் வழி காட்டுகிறது. சாஸ்த்ரம் இதைக் கேவல போகமாகக் கருதவில்லை. "மாதா பூர்வரூபம், பிதா உத்தரரூபம், ப்ரஜை ஸந்தி: ப்ரஜனனம் ஸந்தானம்" என்றும், "அரணியைக் கடைந்து அக்னி எடுப்பதுபோலாம் இது" என்றும் வேதம் கூறுகிறது. பேரின்பத்திற்குச் சிற்றின்பம் வழி காட்டியாம். ஸ்ருங்காரம் கூறாத கவியில்லை. புராணமில்லை. வாத்ஸ்யாயனர் தனியே ஒரு நூல் எழுதினர். கோபிகைகள் கண்ணனிடம் காட்டியது ப்ரேம பக்தி. குறித்த நல்ல நாளில் ருது கமனம் செய்தால், அங்கபங்கமின்றி, நல்லறிவு, நற்செயல், நல்லெண்ண

முள்ள குழந்தை பிறக்கும். த்ருதராஷ்ட்ரனின் தாய், ஸங்கமகாலத்தில் கண்களை மூடிக்கொண்டிருந்ததால் அவன் குருடனாகப் பிறந்தான். திதி என்பவள் ஸந்த்யா கால ஸங்கமத்தால் அஸுரரைப் பெற்றாள்.

ஒரு அரசனுக்குக் கர்ப்பாதானம் செய்ய நாள் இது ஸரியல்ல, அது ஸரியல்ல என்றார் புரோஹிதர். ஆனால் அவரோ அந்த விதியை மீறி ஸங்கம் செய்தார். அவரை அழைத்து அரசன், "எனக்கு மாத்ரம் நல்ல நாள் கிடைக்கவில்லையோ" என்றான். புரோஹிதர், கூன், குருடு, செவிடு, ஒற்றைக்கண், திக்குவாய், குரூபீ முதலிய தனது புத்ரர்களை அழைத்து அரசன் அருகே நிறுத்தி, "வேந்தே, விதியைத் தழுவாததின் பயன் இவை. இத்தகைய புத்ரர் வேண்டின் நாள் பார்க்க வேண்டாம்" என்றார். அசேதனமான படம் பிடிக்க எவ்வளவு நியமம்? நடுப்பகலோ, நடுநிசியோ, அதிக வெளிச்சமோ இருட்டோ கூடாது! அசைந்தாலோ, படம் கெட்டுவிடும்! சிறித்த முகத்துடன் இருக்கவேண்டும். "தானே புத்ரனாக மனைவியிடம் பிறக்கிறான். தந்தையின் ஒவ்வொரு அவயவமும் புத்ரன் அவயவமாகிறது" என வேதம் கூறுகிறது.

ஆதலின் சாஸ்த்ரவிதியைப் பூர்ணமாகக் கவனித்து நற் புத்ரனைப் பெறவேண்டும். கர்ப்ப வ்ருத்தியைப்பற்றி கர்ப்ப உபனிஷத் முதலியன மிக ரஸமாக விளக்குகின்றன.

கர்ப்பாதான மந்த்ர அர்த்தம்

கர்த்தா ப்ராதஸ்னானம் செய்து, ஸந்த்யா ஜபம் ஆனபின் ஔபாஸனம் செய்ய வேண்டும். அதன் பிறகு பவித்ர மணிந்து, ப்ராம்மணர்களை வணங்கி, தக்ஷிணையும் தாம்பூலமும் கரத்திலேந்தி, 'அஶேஷே' என்ற மந்த்ரம் கூறவேண்டும். வேதியருக்கு யத்கிஞ்சித் தக்ஷிணை அளித்து, ஆரம்பிக்கும் கர்மாவைச் செய்ய நமக்கு யோக்யதை உண்டாகும்படி அருள்புரிய அவர்களை வேண்டு

கிறோம். அவர்கள் 'ததாஸ்து' அப்படியே யோக்யதை உண்டாகட்டும் என அனுக்ஞை தருவர். இதற்கு 'அனுக்ஞை' எனப்பெயர். எந்தக் கர்மாவை ஆரம்பித்தாலும் இதை முதலில் செய்யவேண்டும். வேதமறிந்த ப்ராம்மணர்களிடம் ஸர்வ தேவதைகளும் வஸிப்பதால், அவர்களுக்குத் தக்ஷிணை கொடுத்து அவர்கள் மூலம் அனுக்ஞை பெறவேண்டும்—எல்லோரும் ஸமம் என்ற தப்பான கொள்கை கொண்டு, வேதமே அறியாதவருக்கும், வேதியருக்கும் காலணா, அரை அணா தக்ஷிணை அளிப்பது தவறு. வேதியருக்கு 4 அணாவுக்குக் குறையாமல் அளிக்கவேண்டும். அனுக்ஞை பெறுவதற்காக அளிக்கும் தக்ஷிணைக்கே 'அனுக்ஞை' எனப் பெயரிட்டு, 'எனக்கு அனுக்ஞை தரவில்லை' என்று கூறுவதும் தவறு. கர்த்தா அனுக்ஞை பெறுகிறானே தவிர, தருகிறானில்லை.

'மாங்கல்யாம்பரதாரம்' குட்டிக்கொண்டு, ப்ராணாயாமம் செய்து ஸங்கல்பம் செய்கிறோம். ஆரம்பிக்கும் கர்மா விக்னமின்றி நடப்பதற்காக முதலில், (மஞ்சளால் செய்த) விநாயகரைப் பூஜிக்கிறோம். த்யானம் முதலிய 16 உபசாரங்களைச் சுருக்கமாகச் செய்து, அவர் முன்னிலையில் கர்ம ஸங்கல்பம் செய்து, விக்னேஶ்வரரை அனுப்பிவிட்டு அந்த ப்ரஸாதத்தை தம்பதிகள் தரிப்பர். தேஶகாலங்களைக்கூறி,-நக்ஷத்ரத்தில்-ராசியில் பிறந்த-இன்ன பெயருள்ள என் மனைவிக்கு ருதுகாலத்தில் உண்டான தோஷம் அகல, போதாயனர் சொற்படி ருது சாந்தி ஜப கர்மா செய்கிறேன் என்பது ஸங்கல்பத்தின் பொருள். தான்யம், அரிசி, எள்ளு இவைகளில் ஒன்றைப் பூமியில் பரப்பி, அதன்மீது தர்ப்பத்தால் தாமரைப்பூ போல் எழுதி, அதன்மேல் கலஶத்தை வைக்கவேண்டும். கலஶத்தில் நூல் சுற்றி, உள்ளே வாஸனை தூபம் ஏற்றி, தர்ப்பத்தாலாகிய கூர்ச்சத்தை வைத்து வ்யாஹ்ருதியைச் சொல்லி ஜலத்தை விடவேண்டும். அதன்மீது மாவிலை, தேங்காய், வருண ப்ரதிமை, கூர்ச்சம் இவைகளை வைக்கவேண்டும். கூர்ச்சம் கர்மாவைக் கெடுக்கும் ராக்ஷஸர்

களை அழிக்கும். மாவிலை முதலிய துளிர்கள் ஸர்வ தோஷங்களையும் அகற்றும். சிவனிடமிருந்து உண்டான முக்கண் உள்ள தேங்காய் பாபத்தையும் பீடையையும் அகற்றும். இப்பொருள் கொண்ட மந்த்ரங்களைக்கூறி அவைகளை வைக்கவேண்டும். இதுவரை கூறப்பட்டவை உதகசாந்தி, ஷஷ்டி பூர்த்தி சாந்தி முதலிய கலசமுள்ள ஸகல கர்மாக்களுக்கும் பொதுவாம்.

கலசத்தில் வருணனை ஆவாஹனம் செய்து, அதன் மீது விஷ்ணுப்ரதிமையை வைத்து, அதில் அவரை ஆவாஹனம் செய்யவேண்டும். "ருத்ர சாந்தி ஜப கர்மாவில் தங்களை ரித்விக்காக-எனக்காக வேலை செய்பவராக-வரிக்கிறேன்" என ப்ராம்மணர்களை வரிக்கவேண்டும். அவர்கள் கலசத்தின் அருகில் அமர்ந்து 108 முறை விஷ்ணு காயத்ரீ, வேதாதி, ஆபோ, ஹிரண்ய, பவமான, வருண, விஷ்ணு, ருத்ர, ப்ரும்ம, தூர்க்கா, ஸ்ரீ, புருஷ முதலிய ஸூக்தங்களையும், பஞ்சசாந்தி, ரிசாம்ப்ராசீ என்ற மஹாமந்த்ரங்களையும் ஜபிப்பார்கள். சுருக்கமாக இவைகளின் பொருள் :-அந்தந்த தேவதைகளும் பாபத்தை அகற்றி, சுத்தமாக்கி, ஸகல பீடைகளையும் நீக்கி, இன்பம் அளிக்கட்டும் என்பதாம். 'நமோ ப்ரும்மணே' என்பதை மூன்று முறை ஜபித்து நிவேதனம் செய்யவேண்டும். வருணனையும் விஷ்ணுவையும் உத்வாஸனம் செய்து (அனுப்பிவிட்டு) மந்த்ர தீர்த்தத்தினால் தம்பதிகளை ப்ரோக்ஷிக்க வேண்டும். பத்னிக்கு இந்த கலச தீர்த்தத்தினால் அபிஷேகம் செய்தபின் சுத்த அக்னியில் ஹோமம் செய்யவேண்டும்.

அன்னத்தைப் பலாச இலையில் வைத்து காயத்ரியைக் கூறி ஹோமம் செய்யவேண்டும். "ஸவித்ரே இதம் நமம" -ஸூர்யனுக்கே இது. என்னுடையதல்ல-இதை உத்தேச த்யாகம் என்பர். இங்ஙனம் ஹோமங்கள் ஆனபின் அந்தந்த தேவதையைக் குறித்து "இதம் நமம" என்று கூற வேண்டும். விஷ்ணு ஸூக்தத்தினால் ஸமித்து, ப்ரும்ம ஸூக்தத்தினால் அன்னம், ருத்ர ஸூக்தத்தினால் ஆஜ்ய

ஹோமம் செய்து, ருதுவான நக்ஷத்ர வாக்யங்களால் ஸமித்து, அன்னம் ஆஜ்யம் இவைகளை 108 முறை ஹோமம் செய்யவேண்டும். "ஸ்விஷ்டக்ருத்" ஆன பின், உத்தர அங்கமாக ஜயாதி ஹோமம் செய்து உபஸ்தானம் செய்யவேண்டும். ஹோம ஆரம்பத்திற்கு முன் கர்மாக்களைக் கவனிக்க ப்ரும்மாவாக ஒருவரை வரித்து, உபஸ்தானத்திற்கு முன் ப்ரும்ம தக்ஷிணை அளித்து, ஜப ஹோமம் செய்தவர்களுக்கும் தக்ஷிணை தரவேண்டும். பின்னர் ஆஶீர்வாதம். இதுவரை காலை வேலை.

மாலை ஔபாஸநமானபின் இரவில் தம்பதிகள் க்ஷீரான்னம் (பால் சாதம்) உண்டு, பலதானம் செய்து குறித்த லக்னத்தில் முதலில் விக்னேஶ பூஜை செய்து. கர்ப்பாதான மந்த்ர ஜபம் செய்யவேண்டும். ருது ஸமாவேஶன மந்த்ரத்தைச் சிலர் விவாஹத்திலும் கூறுவதால், ருதுவானபின்தான் விவாஹம் நடந்தது எனச் சிலர் கூறுவர். அதற்குக் காரணம் மந்த்ர அர்த்தம் ஸ்த்ரீ புருஷ ஸங்கம் பற்றி கூறுவதேயாம். அது தவறு. ப்ரும்மசாரி ஸமிதாதான மந்த்ரத்தில் 'நல்ல குழந்தை பிறக்கவேண்டும்' என மந்த்ரம் கூறுகிறான். அந்த மந்த்ரார்த்தத்தைக் கொண்டு ஶாந்தி முஹூர்த்தம் ஆனபின் உபநயனம் எனக் கூறுவது போலாமது.

கர்ப்பாதான ஸமாவேஶந மந்த்ர அர்த்தம் :— "நாம் பலசாலிகளாயிருந்து வெகுகாலம் நீடித்திருக்கும் ரேதஸ் உள்ளவர்களான ப்ரஜைகளை உண்டு பண்ணுவோம். அரணியிலிருந்து கடைந்த அக்னியைப் போல், ஸத்புத்ரன் உண்டாகட்டும். பரமாத்மாவின் அம்சமான நான் பித்ருக்களின் நன்மையை நாடி ஸத்புத்ரனை உண்டுபண்ணுகிறேன். நல்ல வர்ணமும், செல்வமும் உள்ள ஆண், பெண்களைப் படைப்போம். நாம் யாசகர்களுக்கு தனமளித்து மோக்ஷத்தைப் பெறுவோம். நம் உருவம் புத்ரர் பிறப்பதற்கேற்ற சக்தி உள்ளதாக இருக்கட்டும். விஷ்ணு உன்னைக் கர்ப்பாதானத்திற்கேற்றவளாகச் செய்யட்டும். ப்ரும்மா என் மூலமாக

ரேதஸ்ஸை விடட்டும், 'தாதா' அதை கருவாக்கட்டும். 'த்வஷ்டா' அவயவங்களைச் செய்யட்டும். ஸினீவாலியும் ஸரஸ்வதியும் வஸிக்கும் உன்னிடம் அஶ்வினீ தேவர்கள் கருவை உண்டுபண்ணட்டும். அவர்களைப்போல் அழகாக குழந்தை உண்டாகட்டும். பூமி மழையால் பயிர்களை உண்டுபண்ணுவது போல் நீ நற்குழந்தையைப் பெறு. பூமி அக்னியையும் த்யுலோகம் இந்த்ரனையும், கருவில் வைத்திருப்பதுபோல் நீ கருவைத்தரி. ஹே, விஷ்ணோ! இவளிடம் 10-வது மாதத்தில் குழந்தையை உண்டுபண்ணு. 'நேஜமேஷ' எனும் ஹே க்ரஹமே! நீ இவளை விட்டு விலகு. இங்கு நீ வர விரும்பினால் புருஷக் குழந்தையுடன் வா. ஹே, மனைவியே, நீ எனது சக்தியை ஏற்று 10 மாதம் கர்ப்பந் தரித்து நற்குழந்தையைப் பெறு. க்ஞாதி களுக்குள் உத்தமியாக இரு. ஶரமானது பாணப் பெட் டியில் புகுவதுபோல் ஶிஶு உன் கருவில் நுழையட்டும். ஶிஶு, நொண்டி, செவிடு, பிசாசபீடை முதலிய தோஷ மின்றி, பூர்ணமாகிப் பிறக்கட்டும். அடுத்து பல புத்ரர் களை பிறக்கட்டும். நீ தேனு போல் இரு. ஹே, வாயோ, இந்த கர்மாவை ஸித்தி உள்ளதாகச் செய்".

இப்படிப்பட்ட பொருள் கொண்ட மந்த்ரங்களைக் கூறி, விதிப்படி நிஷேகம் நடத்தவேண்டும். மறுநாள் காலையில் நித்யகர்மாக்கள் ஆனபின் நாந்தீ ஶ்ராத்தம் செய்து கர்ப்பாதானம் எனும் ஸம்ஸ்காரத்தை முடிக்க வேண்டும்.

பும்ஸவனம்

கர்ப்பம் நன்றாகத் தெரிந்தபின், அது அசைய ஆரம்பிப்பதற்குமுன், 2, 3 அல்லது 4-வது மாஸத்தில் 'பும்ஸவனம்' என்ற ஸம்ஸ்காரம் செய்ய வேண்டும். புருஷக் குழந்தையாகவே பிறக்கவேண்டும் என்பது அதன் பொருள். முன் கர்மாவிற் கேற்றபடி ஆணோ பெண்ணோ பிறக்கும். நமது ப்ரார்த்தனை புருஷ ப்ரஜை வேண்டும் என்பதே. 6 அல்லது 8-வது மாஸத்தில்

செய்யவேண்டியது 'ஸீமந்தோன்நயனம்' எனும் கர்மா. இவ்விரண்டையும் சேர்த்தும் செய்யலாம் என விதி கூறினதால், தற்சமயம் இரண்டும் சேர்த்தே செய்யப்பட்டு வருகிறது. 'வளைகாப்பு' அல்லது 'பூச்சூட்டல்' என்பது ஶிஷ்டாசார வகையில் வந்து, பெண்மக்கள் சேர்ந்து செய்யும் லௌகிக கர்மா. பும்ஸவனம், ஸீமந்தம் இரண்டும் பிறக்கும் குழந்தைக்காகவே என்று சிலர், தாயாருக்காகவே என்று சிலர், இருவருக்கும் சேர்ந்தே என்பது சில ரிஷிகளுடைய மதம். ஒவ்வொரு கர்ப்பத்திற்கும் இவைகளைச் செய்யவேண்டும் என சிலர் மதம்.

உதக ஶாந்தி, ப்ரதிஸரபந்தம் இவைகளை முதலில் செய்யவேண்டும். ருது ஶாந்தியில் கூறியதுபோல் கலஶத்தில் வருணனை ஆவாஹனம் செய்து உதக ஶாந்தி மந்த்ரத்தை ஜபிக்கும்படி ப்ராம்மணர்களை வரிக்கவேண்டும். ருது ஶாந்தி, உதகஶாந்தி, ஷஷ்டி பூர்த்தி ஶாந்தி, (அபிஶ்ரவணம்) ஆகிய இவைகளில் கூறப்படும் மந்த்ரங்கள் தனியாக ஒரிடத்தில் ஒரு ப்ரஶ்னமாக அமைந்தவை அல்ல. ஆங்காங்கு அமைந்துள்ள, பாபத்தை அகற்றி நன்மையைத் தருவதான மந்த்ரங்களைக் கல்ப ஸூத்ரம் சேர்த்துக் கூறுகிறது. அந்த மந்த்ரங்கள் அனைத்தும், நம்மை பீடிக்கும் ராக்ஷஸர் முதலியவைகளை அகற்றி, நம்மைப் பாவனமாக்கி, இன்பத்தை அளிக்கும்படி கோரும் பொருள் உள்ளவை. புருஷர்களுக்கு அன்ன ப்ராஶனம், சௌளம், உபநயனம், வ்ரதம், ஸ்நானம், விவாஹம், புனர் விவாஹம் முதலியவைகளில் ப்ரதிஸரம் என்ற கங்கணம் கட்டுதல் செய்யவேண்டும். பும்ஸவனம், ஸீமந்தோன்நயனம், அன்ன ப்ராஶனம், சௌளம், விவாஹம் முதலியவைகளில் பெண்களுக்கு ப்ரதிஸரபந்தம் செய்ய வேண்டும். நமக்கு ரக்ஷையான இதை நாம் கர்மா பூர்த்தியானவுடன் அவிழ்ப்பதில்லை. வைஶ்யர் முதலிய சிலர் விவாஹ காலத்தில் அதைக் கட்டி, விவாஹமானவுடன் அவிழ்த்து விடுகின்றனர். ஸாம வேதிகள் ஶ்ராவணத்தில ப்ரதிஸர பந்தம் செய்துகொள்வது ப்ரஸித்தம். இந்தப்ரதிஸர பந்த கர்மாவில் ஜபம் செய்ய ப்ராம்ம

ணர்களை வரிக்கவேண்டும். இதில் காயத்ரீ, வேதாதி, க்ருணுஷ்வ, அக்னேயஸூஸ்வின் (இதில் 4 மந்த்ரம்), ததிக்ரா, ஆபோ, ஹிரண்ய, பவமான, வருண ஸூக்தம், ருத்ர ஸூக்தம், ப்ரும்ம ஸூக்தம், விஷ்ணு ஸூக்தம், ஸ்ரீ ஸூக்தம், இவைகளுடன் நமோ ப்ரும்மணே என்பதை மாத்ரம் மும்முறை ஜபிப்பார்கள். இந்த மந்த்ரங்களும் நமது துன்பத்தை அகற்றி இன்பத்தை ஊட்ட, அந்தந்த தேவதைகளை வேண்டும் பொருளுள்ளவைகளாம்.

வருணனைப் புன: பூஜை செய்து கலஸத்திலிருந்து அனுப்பிவிட்டு, ஸுரபிமதி, அப்லிங்க மந்த்ரமிவைகளால் ப்ரதிஸரம் எனும் கயிற்றைப்ரோக்ஷித்து, 'தேவஸ்யத்வா' என்ற மந்த்ரத்தினல் கர்த்தாவையும் ப்ரோக்ஷித்து, அக்கயிற்றைக் கையில் எடுத்து, இடதுகை கட்டவிரலாலும் மோதிர விரலாலும் அடியில் பிடித்துக்கொண்டு, வாஸுகியை த்யானம் செய்து வலது கை கட்டவிரல், மோதிர விரல் இவைகளால் 'த்ரியம்பகம்' என்ற மந்த்ரத்தினல் ஒரு முறையும், மந்த்ரமில்லாமல் இருமுறையும், விபூதியுடன் மேல் முகமாகத் தடவவேண்டும். கர்த்தாவின் இரு கரதலங்களிலும் நிறைய அரிசியை வைத்து அதன் மீது பழத்தையும், அதன் மேல் அந்த ஸூத்ரத்தையும் வைத்து 'அக்னிராயுஷ்மான்' என்ற மந்த்ரம்கூறி அஞ்ஜலியை மந்த்ரித்து, புருஷனனல் வலது கையிலும், ஸ்த்ரீயானல் இடது கையிலும் கட்டவேண்டும். பும்ஸவன ஸீமந்த கர்மாவில் ஸ்த்ரீயின் இடது கரத்தில் கட்டவேண்டும். இதைக் கட்டுவதற்கு முன் நவக்ரஹங்களினல் உண்டாகும் தோஷம் அகலவும் அவர்களின் அருளைப் பெறவும், 'நவக்ரஹப்ரீதி' எனக் கொஞ்சம் தக்ஷிணை அளிப்பது முக்யம். ப்ரதிஸரம் கட்ட 'ப்ருஹத்ஸாம' என்ற மந்த்ரம் கூறவேண்டும். இதன் பொருள் : "இந்த ஸூத்ர பந்தம் இதைத் தரிப்பவருக்கு ஒரு ரக்ஷையாக இருக்கட்டும்" என்பதாம். கற்பூர ஹாரத்தி ஆனவுடன் புஷ்பத்தினல் கற்பூர ஜ்வாலையை ப்ரதக்ஷிணமாகச் சுற்றி, ஸ்வாமியின்மீது அந்த புஷ்பம் ஸமர்ப்பிக்கப்படுகிறது இந்த மந்த்ரத்தால்தான்.

இங்ஙனம், முதல் நாள் அல்லது அன்று காலையில் உதகசாந்தியும் ப்ரதிஸரபந்தமும் ஆனபின், நித்ய கர்மாவை முடித்துக்கொண்டு, தம்பதிகள் ஸ்னானம் செய்து மடி வஸ்த்ரமணிந்து, கால் அலம்பி ஆசமனம் செய்து, பும்ஸவன கர்மாவை ஆரம்பிக்கவேண்டும். காலையில் ஸ்னானம் செய்து ஆசாரத்துடன் இருந்தால் போதும் என இந்தக் கர்மாவிற்காகத் தனியாக ஒரு முறை ஸ்னானம் செய்வதில்லை. கர்மா ஆரம்பத்திலும், புதிய அல்லது மடி வஸ்த்ரம் அணிந்த பின்பும் அவஶ்யம் கால் அலம்பி ஆசமனம் செய்யவேண்டும். முன் கூறியபடி தம்பதிகள் தக்ஷிணை, தாம்பூலங்களைத் தட்டுடன் எடுத்துக்கொண்டு 'அஶேஷே ஹேபரிஷத்' எனக்கூறி, அவர்களிடம் தக்ஷிணையை அளித்து 'இக்கர்மாவைச் செய்ய எனக்கு யோக்யதை உண்டாகும்படி அனுக்ஞை தாருங்கள்' என வேண்டிக்கொள்ள வேண்டும். 'ததாஸ்து' என அவர்கள் அனுக்ஞை அளிப்பர்.

பிறகு ஸங்கல்பம். பும்ஸவன கர்மாவினால்(பத்னிக்கு) ஸம்ஸ்காரம் செய்கிறேன் என்பது ஸங்கல்பார்த்தம். இந்தக் கர்மாவை ஔபாஸன அக்னியில் செய்யவேண்டும். பும்ஸவன ஸீமந்தோன்நயனம், ஶ்ராத்தம் முதலியவைகளை ஔபாஸனாக்னியில் செய்யவேண்டும் என விதி. அக்னியில் ஹோமம் செய்யவேண்டிய கர்மாக்களில் எல்லாம் 'முகாந்தம்' என சுருக்கமாக ப்ரயோகத்தில் கூறப்படும். இதையும் ஜயாதி ஹோமத்தையும் பற்றி பின்னர் கூறுவோம்.

பாத்ர ஸாதனம் செய்யும்போது, இதில் 6 பாத்ரங்களுடன் இரு காய்களுள்ள ஆலங் கொழுந்தையும், அமிக்குழவி, புது வஸ்த்ரம் இவைகளையும் ஸாதனம் செய்ய வேண்டும். 'முகாந்தம்' ஆனபின் धाता (தாதா) என 4 மந்த்ரமும் यस्त्वा (யஸ்த்வா) என 4 மந்த்ரமும் கூறி ஹோமம் செய்யவேண்டும். இச்சமயம் பத்னீ கணவனை தர்ப்பையினால் தொட்டுக் கொண்டிருக்கவேண்டும். விதி கூறியவிடம் தவிர மற்ற ஸமயங்களில் ஒருவரையொருவர் தொடக்கூடாது. (1) ஜகத்பதியான ஈஶானன் எங்களுக்

குச் செல்வத்தைத் தரட்டும். அவர் எங்கள் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யட்டும். धात्रे इदं न मम (2) ப்ரஜையையும் செல்வத்தையும் அளிக்கும் தாதாவே இவ்வுலகைப் படைத்தார். அவரே யஜமானனுக்குப் புத்ரனை அளிப்பவர். அத்தகைய அவருக்கு நெய்யுடன் ஹவிஸ்ஸைத் தருகிறேன். தாத்ரே இதம் ந மம. (3) தாதா எங்கள் முன்னோருக்குத் தந்ததுபோல் எங்களுக்கும் செல்வத்தை ஜீவனத்திற்குப் போதிய அளவு தரட்டும். ஸத்ய தனரான அவரது பக்தாநுக்ரஹ புத்தியை த்யானம் செய்கிறோம். தாத்ரே இதம் ந மம. (4) ப்ரஜையை விரும்பி மனைவியினிடம் கர்ப்பாதானம் செய்த எனக்கு தாதா ஸந்ததியை அளிக்கட்டும். மரணமில்லாத மற்ற தேவர்களும் நம் வீட்டை அண்டி இருக்கட்டும். தாத்ரே இதம் ந மம. இந்த 4 மந்த்ரங்களும் மூன்றும் காண்டம் 3-ம் ப்ரஶ்னம் 11-வது அநுவாகத்தில் தாத்ரு ஹோமத்திற்கு யாஜ்யா புரோனுவாக்யைகளாகக் கூறப்பட்டவைகளாகும்.

(1) ஹே அக்னியே! மர்த்யனான நான் மரணமில்லாத உம்மை, ஸ்துதியிலீடுபட்ட மனதோடு அழைக்கிறேன். குழந்தைகளுடன் யான் மரணமில்லாமல் உண்ணும்படி அன்னத்தை அளியும். அக்னயே புத்ரவதே இதம் ந மம. (2) ஹே அக்னியே, நற்கர்மாவைச் செய்பவருக்கு ஸுகத்தை அளிக்கின்றீர். அவர் புத்ர பௌத்ரருடன் செல்வத்தையும் அடைகிறார். அக்னயே புத்ரவதே இதம் ந மம. (3) ஹே பலவானான இந்த்ரனே, உம்மிடம் எல்லோரும் விரும்பத்தக்க வஸ்துக்கள் இருக்கின்றன. ஆதலால் உம்மைவிட உயர்ந்தவர் யாருமில்லை. இந்த்ராய புத்ரிணே இதம் ந மம. (4) ஒவ்வொரு ஶஸ்த்ரத்திலும், யஜமானனால் பிழிந்து அளிக்கப்பட்ட ஸோமரஸமானது இந்த்ரனை ஸந்தோஷப்படுத்தட்டும். அவருக்கு ஸமமானவர் கூட தங்களுக்குக் கஷ்டம் வரும்போது இவரையே தந்தையைப்போல் அழைக்கின்றனர். இந்த்ராய புத்ரிணே இதம் ந மம. இந்த 8 ஹோம மந்த்ரங்களிலும் 'ஹவிஸ்ஸை அளிக்கிறேன்' என்பதற்கு அறிகுறியாக ஸ்வாஹா எனக் கூறவேண்டும். 'அவருக்கே இந்த பொருள் அளிக்கப்

பட்டது. என்னுடையதல்ல' என பின்னர் உத்தேஸ த்யாகம் கூறுகிறோம். இந்த 4 மந்த்ரங்களும் முதல் காண்டம் 4-ம் ப்ரஸ்னம் 47-வது அனுவாகத்தில் அக்னிக்கு ஹவிஸ்ஸைத்தரும் யாஜ்யாபுரோனு வாக்யா மந்த்ரங்களாம்.

இக்கர்ம ஸம்ருத்திக்காக ஜயாதிஹோமம் செய்ய வேண்டும் ப்ரும்மாவுக்குத் தக்ஷிணை அளித்து கன்யகையைக்கொண்டு, ஆலங்கொழுந்தை அறைத்துப் புது வஸ்த்ரத்தில் வைத்து, க்ரஹப்ரீதி செய்தபின் 'புகும்ஸவனமஸி' என்ற மந்த்ரத்தைக் கூறி, கட்டை விரலால் மனைவியின் வலது நாஸிகையில் பிழியவேண்டும். மனைவியை மேற்கு முகமாக உட்காரவைத்து புருஷன் கிழக்கு முகமாயிருந்து பிழியவேண்டும். 'புத்ரனுக்காக (மூக்கில்) பிழியப்பட்டாய்' என்று மந்த்ரத்தின் பொருள். இதன் பின் புருஷன் ஸங்கல்பம் செய்து, நாந்தீ ஸ்ராத்தத்தை ஹிரண்ய ரூபமாகச்செய்து புண்யாஹ வாசனம் செய்யவேண்டும். பின்னர், அக்னி உபஸ்தானம் செய்து பும்ஸவன கர்மாவைப் பூர்த்தி செய்கிறோம். பும்ஸவனத்துடன் ஸீமந்தம் சேர்த்தே செய்யப்படுகிறது.

ஸீமந்தம் அல்லது ஸீமந்தோன்னயநம்

'ஸீமந்தம்' எனும் கர்மாவைச் செய்துகொள்ளும் கர்ப்பிணியின் தலைமயிரை, பன்னிமுள், தர்ப்பை, பேத்திக் கொத்து ஆகியவைகளால் வகுடாகப் பிரிப்பதால் 'ஸீமந்தோன்னயநம்' என இதற்குப் பெயர் உண்டானது. இதற்கு உதகஸாந்தி, ப்ரதிஸரபந்தம், அப்யுதயம் எனும் நாந்தி இவை பூர்வாங்கமாகும். ஸீமந்தத்திற்காகக் குறித்த நாளில், நித்ய கர்மாவை முடித்துக்கொண்டு, 'அஸேஷே ஹே பரிஷத்' என்று இந்த கர்மாவைச் செய்ய நமக்கு யோக்யதை உண்டாகவேண்டும் என அனுக்ஞை பெற்று, விக்னேஸ்வர பூஜைசெய்து, 'ஸீமந்தோன்னயந கர்மாவினல், தர்ம பத்னியை ஸம்ஸ்காரம் உள்ளவளாகச் செய்கிறேன்' என ஸங்கல்பம். (பெண்களுக்கே இந்த

ஸம்ஸ்காரமானதால், 'என் பிள்ளைக்கு ஸீமந்தம்' என தவறுதலாகக் கூறுவதை நேயர் திருத்தவேண்டும்). ஔபாஸன அக்னியை எதிரில் ப்ரதிஷ்டை செய்து 'முகாந்தம்' செய்யவேண்டும். பாத்ர ஸாதனத்துடன் வகுடு பிரிக்க தர்ப்ப ஸ்தம்பம், பன்னிமுள், பேத்திக் கொத்து, முளையுடன் கூடிய நெல்பயிர் இவைகளையும் ஸாதனம் செய்யவேண்டும். ஆஜ்ய பாகம் ஆனபின், பும்ஸவனத்தில் கூறப்பட்ட 'தாதா' முதல் 'உக்த உக்தே' என்றவரை உள்ள 8 மந்த்ரங்களாலும் ஹோமம் செய்ய வேண்டும். (இவை முன் கூறப்பட்டன.) பிறகு உத்தராங்கமான ஜயாதி ஹோமம், அநுக்ஞாதம் முத லான ப்ராயச்சித்த ஹோமங்கள் ஆனபின், ப்ரும்மா வுக்கு தக்ஷிணை அளித்து அனுப்பிவிட்டு, 'க்ருஹப்ரீதி' செய்து, அக்னிக்குப் பின் புறத்தில் கிழக்கு முகமாக மனைவியை உட்காரவைத்துப் புருஷன் பன்னிமுள் முதலி யவைகளைக்கொண்டு கீழ்வரும் அர்த்தமுள்ள இரு மந்த் ரங்களால் வகுட்டைப் பிரித்து, பன்னிமுள் முதலியவை களைப் பின்னால் எறிந்துவிடவேண்டும்.

மந்த்ர அர்த்தம்: முதலில் மூன்று வ்யாஹ்ருதி. பின்னர், 'ராகா' எனும் பூர்ணிமையின் அதிஷ்டான தேவதையை நல்ல ஸ்துதியால் அழைக்கிறேன். ஸௌபாக்யத்தோடு கூடிய அந்த தேவதை என் ஸ்துதியைக் கேட்டு மனதில் நன்கு சிந்திக்கட்டும். இந்த கர்மாவைக் குற்றமற்றதாகச் செய்யட்டும். ஊசி நுனிபோல் கூர்மையாய், எங்கும் தடைபடாத புத்தியுள்ள புத்ரனைத் தரட்டும். அப்புத்ரன் பல்வகை தானம் செய்பவனாக இருக்கட்டும். ஸுரூபம் வாய்ந்த எந்த ஸுமதியால் யாகம் செய்பவருக்குப் பொருளைத் தருவாயோ அந்த ஸுமதியுடன் எங்களிடம் பலவகையான புஷ்டியை அளி. (தைத்திரீய ஸம்ஹிதை 3-3-11). பிறகு வீணாகானம் செய்வதாக இரு மந்த்ரங் கள். அவைகளின் பொருள் :—ஹே யமுனையே, உனது தீர்த்தில் வஸிக்கும் ஸால்வ தேசத்தினர், பலவகையான ராஜ்ய கார்யத்தைச் செய்துகொண்டு வரும் யௌகந் தரியே எங்கள் அரசன் எனப் பாடுகின்றார்கள். (இதில்

'யமுனேயே' என்பதற்கு பதில் நாம் எந்த நதி தீரத்தில் வஸிக்கின்றோமோ அந்த நதியின் பெயரைக் கூறவேண்டும்). முற்கூறிய கானம் யமுனா நதீ தீரத்திலுள்ளவர் பாடுவது எல்லா ப்ராஹ்மண ஸ்திரீகளும் பாடும் பாட்டு இது. அதன் பொருள் :—ப்ராஹ்மண ஸ்த்ரீகள் எல்லோருக்கும் ஸோமனே ராஜா. முளையுடன் கூடிய நெற்பயிரை ஸூத்ரத்தில் கட்டி, அதைக் கர்ப்பிணியின் ஶிரஸில் கட்டி, நக்ஷத்ரம் உதயமாகும் வரை மௌனமாக இருக்கும்படி செய்யவேண்டும். நக்ஷத்ர உதயமானபின் கன்றுக்குட்டியைப் பின் தொடர்ந்து, வ்யாஹ்ருதிகளை ஜபித்து கிழக்காவது வடக்காவது சென்று மௌனத்தை விடவேண்டும். பிறகு, ஸத்புத்ரன் ஜனிக்கவேண்டும் என உமாமஹேஸ்வரராக, லக்ஷ்மீ நாராயணராக எண்ணி ப்ராம்மணர்களுக்கு 'பலதானம்' செய்து, அக்னி உபஸ்தானம், அக்ஷதை ஆஶீர்வாதத்துடன் ஸீமந்தோன்னயநம் பூர்ணமாகிறது.

ஜாதகர்ம விவரம்

கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தோன்னயநம் என்பன கூறப்பட்டன. பின்னர், குழந்தை பிறந்தவுடன் செய்யவேண்டியது 'ஜாதகர்மா' என்ற ஸம்ஸ்காரம். ஜாத—பிறந்தவுடன், கர்மா—செய்யவேண்டிய ஸம்ஸ்காரம் என்று இதன் பொருள். பித்ரு கடன் ஸத்புத்ரன் ஜனித்தவுடன் அகலுகிறது. ஆதலால், அன்றைய தினம் நம் பித்ருக்கள் நமது வீட்டை நாடி வருகின்றனர். தந்தை உடனே ஸ்னானம் செய்து தொப்புள்கொடி அறுப்பதற்குள் நாந்தி ஶ்ராத்தம், தானம் முதலியவைகளைச் செய்ய வேண்டும். இரவில் ஸ்னானம், தானம் ஶ்ராத்தம் செய்யக் கூடாதென்பது பொதுவான விதி. இதற்கு மாறாக சில ஸமயங்களில் ராத்ரியில் ஸ்னானம், தானம், ஶ்ராத்தம் செய்யவேண்டும் என விஶேஷ விதி கூறுகிறது. புத்ர ஜனனம், யாகத்தில் அவப்ருதம், க்ரஹணம், ஸங்க்ரமணம் ஆகிய இச்சமயங்களில் இரவில் ஸ்னான தானாதிகளைச் செய்யவேண்டும். புத்ர ஜனனமும் யாத்ரையும் இரவில்

 7147 R689

நேர்ந்தால் உடனே தானம் செய்யவேண்டும். அது அழிவில்லாத பயனைத்தரும். இரவில் வீட்டில் ஸ்னனம் செய்ய நேரிட்டால், பகலில் எடுத்துவைத்த ஜலத்தில் ஸ்வர்ணத்தை—தங்க மோதிரத்தை—போட்டு, அக்னி எதிரில் ஸ்நாநம் செய்யவேண்டும். குளிர்ந்த ஜலத்தில்தான் செய்யவேண்டும். பகலானால், குளம் முதலிய தீர்த்தங்களில் கட்டிய வஸ்த்ரத்துடன் குதிக்கவேண்டும். அப்பொழுது மேலே எழும்பும் தீர்த்தத்தினால் பித்ருக்கள் பேரின்பம் அடைகின்றனர் என்பர்.

தொப்புள்கொடி அறுக்கும்வரை தீட்டு இல்லாததால் தானம் செய்வதும், தானம் வாங்குவதும் பாபமல்ல. அச்சமயம் ஸ்வர்ணம், பூமி, பசு, தான்யம் முதலியவைகளைத் தானம் செய்யவேண்டும். ஆசௌசம் அல்லது ஸூதகம் உள்ளவர்களுக்கு க்ரஹண காலத்தில் தீட்டில்லை. பஹிஷ்டாஸ்த்ரீகள் கூட அப்பொழுது ஸ்னனம் செய்யவேண்டும். தர்ப்பணமும் தானமும் செய்ய வேண்டும். அதுபோல், நாபிக்கொடி அறுக்கும்வரை தீட்டில்லை. ஏதேனும் அச்சமயம் அஸௌகர்யம் இருந்தால் தீட்டுப்போன பிறகு, 10 நாள் கழித்து உடனே இந்த ஜாதகர்மாவைச் செய்யவேண்டும். புஜித்தவுடன் ஸ்னனம் செய்யக்கூடாது என்றாலும், புத்ரன் பிறந்த விஷயம் கேட்டவுடன், புஜித்திருந்தாலும் ஸ்னனம் செய்யவேண்டும். அக்னி ஹோத்ரம் செய்பவராயின் ஓர் இஷ்டி செய்யவேண்டும். ஒவ்வொரு வருஷத்திலும் நாம் பிறந்த தினத்தில் பலருக்கு அன்னதானம் செய்ய வேண்டும். அந்தந்த கர்மாவுக்கு ஏற்பட்ட காலத்தில் அது அதைச் செய்தால்தான் பூர்ண பயனுண்டாகும். இந்த கர்மா ஜீவனுக்கு பரலோக ஸாதனம் மாத்திரமல்ல, குழந்தைக்கு ஏற்படக்கூடிய ஸகல அரிஷ்டங்களையும் அகற்றுகிறது. பாலாரிஷ்டம் வராமல் காப்பாற்றுகின்றது. துஷ்ட க்ரஹங்களை அக்குழந்தையின் அருகே வராதபடி அகற்றுகிறது.

ஆதலால், நமது அன்பர்கள் குழந்தை பிறந்தவுடன், அதிலும் ஆண் குழந்தை பிறந்ததும், குளிர்ந்த ஜலத்தில்

கோவிந்தர் ஆண்டவர்
A. No...........

ஸ்னனம் செய்வதுடன் புண்யாஹ வாசன தினத்தில் ஜாதகர்மாவை அவஶ்யம் செய்யவேண்டும். இப்பொழுதோ ஜாதகர்மா, நாமகரணம், அன்ன ப்ராஶனம், சௌளம் ஆகிய இவைகளை உபநயனத்துடன் ஒன்ருகச் சேர்த்துப் பலர் செய்கின்றனர். அது ஶாஸ்த்ர ரீதியாகத் தவறே ஆகும். அந்தந்த கர்மாவிலும் தனித்தனியாக பித்ருக்களேயும் தேவர்களேயும் ஆராதித்து அவர்களின் அருளேப் பெறமுடியாமல் போகின்றது அல்லவா? குழந்தைகளின் ஆரோக்யம், நீண்ட ஆயுஸ், பாலாரிஷ்டம் இல்லாமை இவைகளை விரும்புவோரும் பித்ருக்களின் ப்ரஸாதத்தை வேண்டுவோரும், வைதிக கர்மாவிலும் ஶிஷ்டாசாரத்திலும் அன்புடையோரும் தவருமல் அந்தந்த காலத்தில் அந்தந்த கர்மாவைச் செய்யவேண்டுகிரோம். இக்காலத்திலும் சில அன்பவர்கள் இங்ஙனம் காலத்தில் கர்மாவைச் செய்து வருவதையும் நேயர்களுக்கு அறிவிக்கின்ரோம்.

ஜாத கர்ம மந்த்ர அர்த்தம்

முன்னம் கர்ப்பாதானுதிகளில் செய்ததுபோல் தம்பதிகள் அனுக்ஞை, விக்னேஶ்வர பூஜை, ஸங்கல்பம் செய்து, பிறகு வாத்ஸப்ரமெனும் நிவஸ்பரி என்ற அனுவாக மந்த்ரத்தால் குழந்தையைத் தொடவேண்டும். உபநயனத்துடன் சேர்த்து ஜாதகர்மா செய்வோர் உரிய காலத்தில் அதைச் செய்யாததற்காக ஸர்வப்ராயஶ்சித்தம் செய்யவேண்டும். ப்ராயஶ்சித்த கர்மாவிற்கு ப்ரதிநிதியாக, க்ருச்ரம் என்று கொஞ்சம் ஹிரண்யத்தைத் தானம் செய்து லௌகிகாக்னியில் பூர்வாங்கங்களை முடித்து, வ்யாஹ்ருதியைச் சொல்லி, நெய்யினுல் ஸர்வ ப்ராயஶ்சித்த ஹோமம் செய்ய வேண்டும். வத்ஸப்ர என்ற ரிஷி குமாரர் கண்டுபிடித்ததால் "வாத்ஸப்ரம்" என்று பெயர். அது தைத்திரீய ஸம்ஹிதை 4-2-2-வது அனுவாகமாம். இது அக்னிசயனம் என்ற யாகத்தில் அக்னி உபஸ்தானத்திற்கும் இப்படியே கூறப்படுவதால் ப்ரதிதினம் காலை மாலை அக்னி ஹோத்ரம் செய்வோர் இதை ஜபிக்கின்றனர். இதில் 11 மந்த்ரங்கள் இருக்கின்றன.

மந்த்ரார்த்த ஸங்க்ரஹம்: (1) திவஸ்பரி- அக்னி முதலில் ஆகாயத்தில் ஸூர்யனாகத் தோன்றினர். பிறகு பூமியில் அக்னியாக அவதரித்தார். மூன்றாவதாக ஸமுத்ரத்தில் பாட பாக்னியாகத் தோன்றினர். இம்மூன்று பிறப்புக் களிலும் தன்னை உபாஸிப்பவரிடம் அனுக்ரஹ புத்தி உள்ளவர். அவரை நான் கிழவனாகும்வரை புரோடா ஶாதிகளால் வ்ருத்தி செய்யவேண்டும். (2) வித்மா தே - ஹே அக்னே! முற்கூறிய மூன்று இடங்களிலும், கார்ஹ பத்யம் முதலிய இடங்களிலும், ரஹஸ்யமான தேவேத்த, மன்வித்த என்ற மந்த்ரத்தால் கூறப்படும் நாமாவிலும், மின்னல் ரூபமாக நீர் வரும் இடத்திலும் (மேகத்தி லும்) உம்மை நன்கு அறிய அவா கொள்கிறோம். (3) ஸமுந்ரே-ஸமுத்ரத்திலும், ஜலத்திலும் மூன்றாவதான தேஜோ மண்டலத்திலும் இருக்கின்ற உம்மை யாகம் செய்பவர் வேதியில் பூஜிக்கின்றனர். ரித்விக்குகளிடம் அன்பு கொண்டு வேதியரிடம் வேதார்த்தத்தைக் கூறும் நானும் உம்மை ப்ரகாசப் படுத்துகிறேன். (4) அக்ரந்தத் - ஆகாயத்திலுள்ள மேகம் செடி கொடிகளை ஸந்தோஷப் படுத்திக்கொண்டு அக்னி தாபம் உண் டாகாமல் மழை பெய்து எப்படி கர்ஜிக்கின்றதோ, அங்ஙனம் அக்னி தனது கிரணத்தால் உலகத்தை ஸந்தோஷப்படுத்துகிறது. (5) உஶிக் - அனுக்ரஹ புத்தி உள்ளவரும், பாபத்தை அகற்றுபவரும், நல்ல புத்தி உள்ளவரும், மரணமில்லாதவருமான அக்னி, மனித ருடைய நன்மைக்காக அளிக்கப்பட்டிருக்கிறார் அவர் தூமத்தால் நம் கண்ணைக் கெடுக்காமல் மேலே செல்லும் ஜ்வாலையோடு ப்ரகாசிக்கிறார். (6) விஶ்வஸ்ய - உலகை அறிந்தவரும், உலகில் கர்ப்பம் போல் நடுவில் இருப்பவ ரும், பிறந்தவுடன் ஆகாஶத்தை வ்யாபிப்பவருமான அக்னியை நான்கு ரித்விக்குகளுடன் கூடிய யஜமானன் பூஜிக்கிறான். அவர் பர்வதம் போன்ற மேகங்களை உண்டுபண்ணுகிறார். (7) ஸ்ரீணாம் - பசு முதலிய ஸம்பத் தையும், செல்வத்தையும் அளித்து யாகத்தைக் காப்ப வரும், அரணியைக் கடைந்தபோது ஜனிப்பவரும், மழை

பொழியும்போது இடியாக இடிப்பவருமான அவர் காலையில் அக்னி ஹோத்ரிகளால் ஹோமம் செய்யப்பட்டு ப்ரகாசிக்கிறார். (8)-யஸ்தே - மங்களமான தேஜஸ் உள்ள வரே, எந்த யஜமானன் உபஸ்தரணம் (ஹவிஸ்ஸுக்கு முன்பு பாத்ராபிகாரம்), அபிகாரம் (ஹவிஸ்ஸின்மீது நெய் விடுதல்) முதலியவைகளோடு ஹோமம் செய்கிறானோ, எப்பொழுதும் யுவாவாக இருக்கும் ஓ அக்னியே, தெய்வபக்தி உள்ள அந்த யஜமானனுக்கு உயர்ந்த செல்வத்தைத் தாரும் (9) ஆதம்பஜ-ஹே அக்னே! வைதிக கர்மாவிலும் சாஸ்த்ரத்திலும் என்னை ஊக்கமுள்ளவனாகச்செய்யும். நான் அக்னியிடமும் ஸூர்யனிடமும் ப்ரியமாக இருக்கும்படி செய்யும். எனக்கு புத்ர பௌத்ராதிகள் பிறப்பதால் ஆனந்தம் உண்டாகட்டும். (10) த்வாமக்னே - ஹே அக்னே! வேள்வி செய்வோர் அனைவரும் ப்ரதிதினம் உமக்காகவே கர்மாக்களையும், அதற்கு அனுகூலமான செல்வத்தையும் வைத்துக்கொண்டு உம்மோடுகூட வஸிக்கின்றனர். இத்தகைய கர்ம ஆசையும், கர்ம ஸாதனமான செல்வமும் மேன்மேலும் வ்ருத்தியாக வேண்டுமென செல்வவானான உம்மை வேண்டுகின்றனர். (11) த்ருஸாநோ - அக்னி ஸுவர்ணம்போல் அழகாக ப்ரகாசிக்கிறார். அவரை எவரும் அவமதிக்க முடியாது. அவர் ஹவிஸ்ஸுகளால் அம்ருதராக ஆகிவிட்டார். இவரைத் தேவலோக வாஸிகள் நல்ல ரேதஸ் உடையவராகப் படைத்தனர்.

இம் மந்த்ரத்தால் குழந்தையைப் பிதா அபிமர்ஸனம் செய்து (தொட்டு) அஸ்மின் என்ற மந்த்ரத்தால் மடிமீது வைத்துக்கொள்ள வேண்டும். மந்த்ரார்த்தம்: இக் குழந்தை ஸ்வதந்த்ரனாக வளர்ந்து எனக்குப் பலவகையான இச்சையைப் பூர்த்தி செய்யவேண்டும். (இது மந்த்ர ப்ரஸ்ன மந்த்ரம் 2-12). அங்காத் என்ற இரு மந்த்ரங்களால் குழந்தையின் உச்சி முகர வேண்டும். மந்த்ர அர்த்தம்: ஓ குழந்தாய் எனது ஒவ்வொரு அங்கத்திலிருந்தும் நீ உண்டானாய். என் ஹ்ருதயத்திலிருந்து உண்டானாய். 'புத்ர' எனும் நீ எனது ஆத்மாவாக இருக்கிறாய். நீ

நூறுண்டு ஜீவித்திரு. அஸ்மாபவ-நீ கல்போல் அசையாமல் ஸ்திரமாய் இரு! கோடாலி போல் (சத்ருவுக்கு) இரு! அழுக்கில்லா ஸுவர்ணம்போலிரு! பசுக்கள் தனது கன்றை ப்ரீதியுடன் ஹிங்காரத்தால் முகருவதுபோல் உன்னை யான் முகருகிறேன். என்று கூறி, எந்த நக்ஷத்ரத்தில் குழந்தை பிறந்ததோ அந்த நக்ஷத்ரத்தால் (க்ருத்திகா என்று) வலது காதில் கூறி அழைக்க வேண்டும். மேதாந்தே என்ற மந்த்ரங்களால் தேனையும் நெய்யையும் கலக்கி ஸுவர்ணத்தில் தர்ப்பையை முடிபோட்டு, அந்த ஸுவர்ணத்தால் குழந்தை வாயில் தடவி அது உட்கொள்ளும்படி செய்யவேண்டும். மேநாம் - உனக்குஸவிதா எனும் தேவன் மேதையை அளிக்கட்டும். ஸாஸ்வதீ தேவியும் தாமரஸ மாலை அணிந்த அஸ்வினீ தேவர்களும் அங்ஙனமே உனக்கு மேதையை அளிக்கட்டும். த்வயி - உனக்கு மேதையையும் குழந்தையையும் தேஜஸ்ஸையும் அக்னி உண்டுபண்ணட்டும். மேதை, ப்ரஜை, இந்த்ரியம் இவைகளை இந்த்ரன் உண்டுபண்ணட்டும். க்ஷேத்ரியை என்ற மந்த்ரங்களைக் கூறி கூர்ச்சத்தால் (தர்ப்பை முடியால்) குழந்தைக்கு ஸ்னானம் செய்விக்க வேண்டும். மந்த்ர அர்த்தம் - சிகித்ஸை செய்ய முடியாத நோயிலிருந்தும் பிஸாசாதிகளின் தலைவனான நிருரிதியினிடமிருந்தும், துரோஹம் செய்பவரிடமிருந்தும் வருண பாஸத்திலிருந்தும் உன்னை விடுவிக்கிறேன். உன்னைப் பாபமில்லாதவனாக்கி, வேத அத்யயனம் செய்வதற்கு ஏற்றவனாகச் செய்கிறேன். ஆகாஸம், பூமி இரண்டையும் உனக்கு அனுகூலமாகச் செய்கிறேன். நீருடன் தீயும், ஓஷதிகளுடன் விண்ணும் மண்ணும், காற்றுடன் ஆகாஸமும், நான்கு திக்குகளும் உனக்கு மங்களத்தை உண்டுபண்ணட்டும். யாதைவி: இந்த்ர ஸம்பந்தியான தேவி, ப்ரதானமான 4 திக்குகள் வாயுவால் ரக்ஷிக்கப்படுபவர், ஸூர்யன் ஆகிய இவர்கள் கிழவர்களாகும் வரை உன்னை உலகில் ஸ்தாபிக்கிறேன். (நீண்ட காலம் எனப் பொருள்). உன்னிடமுள்ள யக்ஷ்மரோகம் நிருரிதியிடமே செல்லட்டும். இந்த குமாரன் யக்ஷ்ம ரோகம், பாபம், த்ரோஹி, வருண

பாபம், நிருரிதி ஆகியவைகளிடமிருந்து விடுவிக்கப் பட்டான். ஏழ்மை அகன்றது. ஸுகத்தைக் பெற்றான். புண்யலோகத்தில் உண்டானான். இப் பொருளுள்ள மந்த்ரத்தைக் கூறி ஒரு முறை கூர்ச்சத்தால் ஸ்னானம் செய்வித்து 'ப்ரணவத்துடன் வ்யாஹ்ருதிகளால் தயிரை யும் நெய்யையும் கலக்கி வெண்கலத்தால் ஒரு முறை குழந்தைக்கு ஊட்டவேண்டும். மிகுதியைப் பசுக்கொட்ட கையில் ஜலத்துடன் கலந்து கொட்ட வேண்டும்.

குறிப்பு :—தகப்பனுக்குப் பதில் வேறு ஒருவர் குழந்தைக்கு ஜாத கர்மா செய்தால் "என் அங்கத்திலிருந்து உன் அங்கம் உண்டாகிறது" என்ற மந்த்ர அர்த்தம் "உன் பிதாவின் அங்கத்திலிருந்து" என்ற ப்ரகரணத்தை ஒட்டி மாறும். ஆத லால், நாம் மந்த்ரத்தை மாற்றக்கூடாது சாஸ்த்ரம் கூறிய விடத்தில். சிஷ்யனுக்காக குரு நாந்தி செய்யும்போது "இவனு டைய பித்ருக்கள்" என்று கூறவேண்டும்.

பிறகு, மாநே என்ற மந்த்ரத்தால் குழந்தையைத் தாய் மடியில் விட வேண்டும். அர்த்தம்—இக்குழந்தையை ராக்ஷஸர் கொல்ல வேண்டாம். பசு முதலியவை என் வீட்டை விட்டு வேறிடம் செல்ல வேண்டாம். நம் வீட்டி லுள்ள பசு புத்ர ரூபமான தனத்தில் ப்ரியமாக இரு. அவைகளை வ்ருத்தி செய். "அயம் குமார:" என்ற மந்த்ரத்தால் தாயின் வலது ஸ்தனத்தை குழந்தைக்குக் கொடுக்கவேண்டும். பொருள்—இக்குழந்தை பால் குடிக் கும் வ்யாஜமாக தீர்க்க ஆயுளை அடையட்டும். ஓ ஸ்தனமே! இவனுக்கு நீ பாலைப் பெருக்கு. ஆயுஸ், வர்ச்சஸ், யஶஸ், பலம் இவைகளையும் வ்ருத்தி செய். (இம் மந்த்ரத்தைக் கூறி, விதிப்படி குழந்தைக்குத் தாய் பாலூட்டி மற்ற பாக்யங்களையும் வேண்டுகிறோம். 12 அல்லது 16 வயதில் உபநயனத்துடன் சேர்த்து ஜாத கர்மா செய்தால் அவன் எப்படிப் பால் குடிப்பது? மந்த்ரத்தால் வேண்டப்படும் பாக்யத்தை எப்படி அடை வது? நிமித்தாபாவே நைமித்திகா பாவ: பால் குடிக் காததால், அதற்காக ஏற்பட்ட மந்த்ரத்தைக் கூற

வேண்டாமே என சிலர் நினைப்பது ஸஹஜம். ஆனல் அது தவறு. அந்த வேத மந்த்ரத்தைப் படிப்பதால் ஒரு புண்யம் (இதை 'அபூர்வம்' என மீமாம்ஸா சாஸ்த்ரம் கூறுகிறது) உண்டாகிறது. அதை நாம் இழக்கக் கூடாது. காலத்தில் கர்மாவைச் செய்து அந்த மந்த்ரத்தை ஸபலமாகச் செய்யவேண்டும். பிறர் செய்ய வில்லை என்று கூறுவதை விட நாம் காலத்தில் செய்து, நமக்கு ஸ்வாதீனமானவர்களையும் செய்யும்படி தூண்டினல், அது பிறர்க்கு நிதர்ஶனமாகும்.)

அடுத்த இரு மந்த்ரங்களால் பூமியைத் தொடவேண்டும். யத்பூமே:—ஓ பூதேவியே! உனது ஹ்ருதயமானது (நிழல்) ஆகாஶத்திலுள்ள சந்த்ரன் நடுவில் களங்கமாக இருக்கிறது. அதை யான் பார்த்துக்கொண்டு ஜீவித்திருக்க வேண்டும். உன்னைத் தொடுவதால், புத்ரனுக்காகவோ, அவனது புத்ரனுக்காகவே நான் அழும்படி நேரக் கூடாது. யத்தே ஸுஸிமே-நன்ருக எல்லைகளைப் பிரித்துள்ள தேவி! உனது ஹ்ருதயம் செடி கொடிகளை வளர்க்கும் சக்தியாக சந்த்ரனிடத்தில் இருக்கிறது என்பதை அறிவோம். உன்னை யாம் ஸ்பர்ஶிப்பதால், புத்ர பௌத்ரர்களை நாடி நாம் அழாமல் இருக்கவேண்டும். பிறகு குழந்தை தலைமீது ஜலகும்பத்தை வைத்து ஜபிக்க வேண்டும். (சிறு குழந்தையானல், தலைமீது படும்படி பிதா பிடித்துக் கொள்ளவேண்டும்.) நாமயதி—எந்த இடத்தில் மந்த்ரத்தை சொல்கிருேமோ, எந்த இடத்தைத் தொடுகிருேமோ அங்கு அமர்ந்த இக்குழந்தை நோயில்லாதிருக்கும். அழாமலிருக்கும். ஆப:—ஓ ஜலதேவதையே! நாங்கள் உறங்கும்போது நீ விழித்திருந்து ராக்ஷஸர்களை விரட்டு. குழந்தையை ஹிம்ஸை செய்யாமல் ரக்ஷிப்பதற்காக கடுகு கலந்த தவிட்டை ஹோமம் செய்யவேண்டும். அயங்கலிம்—ஓ மருத்துக்களே,! பசி கொண்ட நாயைப் போல் இக் குழந்தையைப் பக்ஷிக்கவரும் கலி தேவதையை, ஓயாமல் கத்தும் ஆட்டுக்குட்டியைப்போல் தூரே தூக்கி எறியும். ஶண்டே—ஓ அக்னியே ஶண்டேரதன், ஶண்டிகேரன், பெரியவனும் துஷ்டனுமான உலூகலன், கர்ப்

பத்தை நழுவும்படி செய்யும் ச்யவநன் என்ற நான்கு அஸுரர்களையும் தூக்கி எறியும். அயஸ்ஸண்டோ-ஓ அக்னியே, அயோமுகன், ஸண்டன், மர்க்கன், உபவீரன், உலூகலன், ச்யவநன் இவர்கள் அழியட்டும். கேஸிநீ—அக்னே, கேஸிநீ, ஸ்வலோமிநீ, கஜாப, அஜோப, காஸிநீ, முதலான பிஸாசங்கள் தூரே செல்லட்டும். அவை நாஸமாகட்டும். மிஸ்ர—மிஸ்ரவாஸஸ், ரக்ஷோ ராஜனால் தூண்டப்பட்ட குபேரனைச் சார்ந்தவர்கள், ஸஜானிகன், கிராமத்தை நாடி வருகின்றவர், உபநயனம் ஆகாத குழந்தைகளைக் கொல்ல வருகின்றவர் ஆகிய இவர்கள் நாஸமாகட்டும். ஏதாள்—ப்ரும்ம புத்ரரான அக்னே, "இவர்களைக் கொல்லு. இவர்களைப் பிடி" என்று கூறிக்கொண்டு நீர் அவர்களைத் துறத்தும். குழந்தைகளைத் தேடி வருபவரும் பெரிய பற்களுள்ளவரும், விரிந்த கேஸமுள்ளவரும், தொங்கும்ஸ்தனமுள்ளவருமான பிஸாசங்களை ப்ராம்மணனான நானும் அறிவேன். நக்தம்—ராத்ரியில் ஸஞ்சரிப்பவரும் ப்ரகாஸமான மார்புள்ளவரும், சூலத்தைக் கையில் ஏந்தியவரும், கபாலத்தைப் புஜிப்பவருமான பிஸாசிநிகளுக்கு முன்னே 'இதோ இந்தக் குழந்தையைப் புஜி,' என உரக்கச் சொல்லிக்கொண்டு செல்கிறது பிஸாசங்களின் தந்தை. தாயோ வியாதியுள்ள குழந்தைகளைத் தேடிக்கொண்டு பின்னால் செல்கிறாள். இவர்களை நாஸம் செய். நிஸீத-அர்த்த ராத்ரியில் ஸஞ்சரிப்பவள் பிஸாச ஸஹோதரி. கதவு த்வாரத்தால் உள்ளே இருப்பவரைப் பார்ப்பது சிலது. தூங்குபவரை எழுப்புகிறது சிலது. ப்ரஸவித்த ஸ்த்ரீயைப் பக்ஷிக்க எண்ணம் கொண்டது சிலது. ஓ அக்னே, இப் பிஸாசங்களின் மாம்ஸத்தையும், ஹ்ருதயத்தையும், கண்களையும் நீ கொளுத்து. இங்ஙனம் இரு கரங்களாலும் மூன்று மூன்று முறை ஹோமம் செய்து மிருதியைக்கொண்டு பலி கொடுக்கவேண்டும்.

இந்த ஜாத கர்ம அங்கமாக ஒரு நாந்தி ஸ்ராத்தம் செய்து, புண்யாஹவாசனம், அக்ஷதை, ஆசீர்வாதத்துடன் ஜாதகர்மா பூர்த்தியாகும். குழந்தைப் பருவத்தில் வ்யாதி ரூபமாக வரும் துர்தேவதைகளை அகற்றி, குழந்

தையைக் காப்பதற்காகவாவது காலத்தில் இதைச் செய்வது நலம்.

நாமகரணம்

கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தோன்னயனம், ஜாதகர்மா ஆனபின் 11-வது நாள் செய்யவேண்டிய 5-வது ஸம்ஸ்காரம் இது. பிறந்த குழந்தைக்குப் பெயர் இடுவது இதன் நோக்கம். உலக வ்யவஹாரத்திற்காகப் பெயர் வைப்பது. நமக்கு இந்த உலகம் மாத்ரமல்ல, தேவலோகம் முதல் ப்ரும்மலோகம் வரை ஸம்பந்த முண்டு. சிற்சில புண்யத்தால் அந்தந்த உலகம் போவோம். அங்கு நம் கர்மாவிற்கேற்க பலன் அளிக்கப்படும். அதற்காக நாம் பிறந்தவுடன் நமது பெயர் அவ்வுலகங்களிலும் குறித்துவைக்கப்படும். தேவர்களும் அறிவதற்காக தேவ பாஷையால் - ஸம்ஸ்க்ருதத்தால் - ஸகலகர்மாக்களையும் செய்கிறோம். இதை அனுஸரித்து ஜனனமரணம் இங்கு பதிவு செய்யப்படுகிறது. குல தேவதையின் நாமா, ரிஷி நாமா, முன்னோர் அல்லது நக்ஷத்ர நாமாவை வைக்க வேண்டும் (கல், மரம், பச்சை என அன்யர் பெயர் வைத்துக்கொள்வதைப் பார்த்து தற்காலத்தவர் அங்ஙனம் பெயர் வைப்பதும், "ஜகதீசன்" என்பதை "ஜே. டைசன்" என்பதும் முழுப்பெயரைக்கூறுமல் முதல் எழுத்தை கா, ரா, பா, வி, எனப் பெயர் கொள்வதும் அடிமை புத்தியையும் நாஸ்திகத்தையும் காட்டுகிறது. பகவன் நாமாவை அடிக்கடிகூற அவகாசம் ஏற்பட்டு, நாம் அஜாமிளனைப்போல் நற்கதி பெறட்டுமென பகவன் நாமாவை வைக்கச் சொன்னர்கள். பகவன் நாமாவை வைத்து, முழுப்பெயரையும் கூறி அழைக்க வேண்டுகிறோம். நாராயணனை நாணு, கிருஷ்ணனை கிசா என்றும் அழைக்காதீர்). புருஷர்களுக்கு 2 எழுத்து, 4 எழுத்துள்ளதாகவும், க, ச, ட, த, ப. இவ்வர்க்கங்களின் 3, 4 எழுத்துக்களில் ஆரம்பிப்பதாயும் கீர்ந: ஹிரண்ய என்பது போல் இருக்கவேண்டும். ர்ந என்பது ஒரே எழுத்து. பெண்களுக்கு அழகாயும், ஸுலபமாய் அர்த்தமாவதும், கடைசி

எழுத்து தீர்க்கமாயும் (யஶோதா என்பதுபோல்) இருக்க வேண்டும். ப்ராம்மணன் பெயருக்குப் பின்னால் ஶர்மா, க்ஷத்ரியனுக்கு வர்மா வைஶ்யனுக்கு குப்தா அல்லது பால சூத்ரனுக்கு தாஸ என்றும் சேர்க்கவேண்டும். இவைதான் ஶுப அஶுபகாலங்களில் ஸங்கல்பத்தில் கூறப்படும் நாமாக்கள். அய்யர், ஶாஸ்த்ரீ, தீக்ஷிதர், ஶ்ரௌதி இது போன்றவை அவரவர் யோக்யதையால் ஏற்பட்டவை.

குழந்தை பிறந்த நக்ஷத்ரம், ராஶி, இவைகளைக்கூறி, இதற்கு நாமா வைக்கிறேன் என்று ஸங்கல்பம் செய்ய வேண்டும். அந்த கர்மாவிற்கு அங்கமாக புண்யாஹ வாசனம் செய்யவேண்டும். கும்பத்தில் வருணனை ஆவாஹனம் செய்து, ஷோடஶோபசார பூஜை செய்ய வேண்டும். க்ரஹங்களால் உண்டாகும் தோஷம் நிவர்த்தியாகி, அவை ஸந்தோஷம் அடையும் பொருட்டு க்ரஹ ப்ரீதி செய்து புண்யாஹ மந்த்ரம் ஜபிக்கும்படி ப்ராம்மணர்களை ப்ரார்த்திக்கவேண்டும். நாமகரண கர்மாவுக்கு புண்யாஹத்தைத் தாங்கள் கூறுங்கள் என்று 3 முறை கூறி இந்த கர்மாவிற்கு ஸ்வஸ்தி கூறுங்கள் என வேண்டுகிறோம் "நீ நாராயண ஶர்மா" எனக்கூறி, நாராயண ஶர்மாவிற்கு ஸ்வஸ்தி கூறுங்கள் என ப்ராம்மணர்களை இரு முறை கேட்கவேண்டும். ரித்திம்—செழிப்பை நீங்கள் கூறுங்கள் என்று 3 முறை கூறவேண்டும். மற்றவை ஸாமான்ய புண்யாஹவாசனம் போலாம். இந்தகர்மாவிற்கு அங்கமாக அப்யுதயம் என்ற நாந்தி ஶ்ராத்தம் செய்து, அதன் அங்கமாக ஒரு புண்யாஹவாசனம் செய்தால் இந்த கர்மா பூர்த்தியாகிறது.

இது மிகச்சிறிய ஸம்ஸ்காரம். புண்யாஹவாசன தினமான 11-வது தினத்தில் ஜாதகர்மா, நாமகரணம் என்ற இரண்டையும் செய்யலாம்.

குறிப்பு: மற்ற ஸூத்ரக்காரர்கள் ஜாதகர்மா முதலே நாந்தி செய்கின்றனர். ஆபஸ்தம்ப ஸூத்ரக்காரர் நாமகரணம் முதலே நாந்தி செய்கின்றனர். ஜாதகர்மாவில் செய்வதில்லை.

அன்ன ப்ராசனம்

ஆருவது மாதத்தில் செய்யவேண்டிய ஸம்ஸ்காரம் இது. விதிப்படி குழந்தைக்கு அன்னம் ஊட்டுவதால் அன்ன ப்ராஶனம் என்று பெயர். நல்ல நாள் பார்த்து தம்பதிகள் நித்ய கர்மாவை முடித்து, மற்றவைபோல் அனுக்ஞை பெற்று, தர்ப்பைமீது அமர்ந்து, பவித்ர மணிந்து, பத்னி தர்ப்பையால் பதியைத் தொட்டுக் கொண்டிருக்க, விக்னேஶ்வர பூஜை ஆனபின் ஸங்கல்பம் செய்ய வேண்டும். முதலில் அன்ன ப்ராஶன கர்மாவுக்கு அங்கமாக ப்ரதிஸர பந்த கர்மா செய்யவேண்டும். ப்ரதி ஸரபந்தம் என்பது கங்கண தாரணம் எனப்படும். இதைப்பற்றி முன்பேயே கூறினேம். ஆண் குழந்தைக்கு வலது கையிலும் பெண்ணுக்கு இடது கையிலும் கட்டவேண்டும். இந்த கங்கணதாரணம் போதாயன ஸூத்ரத்தில் கூறப்பட்டது. ஆபஸ்தம்பிகள் உதகஶாந்தி முதலியன போல் இதையும் போதாயனோக்த ப்ரகாரேண என்று கூறி அனுஷ்டிக்கின்றனர். உடனே அப்யுதயம் என்ற நாந்தீ ஶ்ராத்தம். அதற்கு அங்கமாக புண்யாஹ வாசனம். புண்யாஹவாசன தீர்த்தத்தால் குழந்தையை யும் அன்னம் முதலியவற்றையும் ப்ரோக்ஷிக்க வேண்டும். பிறகு—நக்ஷத்ர—ராசியில் பிறந்த இந்த என் குழந்தையை அன்ன ப்ராஶன கர்மாவால் ஸம்ஸ்கார முள்ளவனுகச் செய்கிறேன் என ஸங்கல்பம் செய்து, நவக்ரஹங்களின் ப்ரீதிக்காக க்ருஹப்ரீதி செய்யவேண்டும். ஸுவர்ண பாத்ரத்தில் உப்பு உறப்பு இல்லாமல் அன்னத்தைத் தயிர், தேன், நெய் இவைகளுடன் சேர்த்து भूरपॅ (பூரபாம்) என்று 4 மந்த்ரங்களைக்கூறி ஒரு முறை குழந்தைக்கு அதை ஊட்டவேண்டும். (உபநயனத்துடன் சேர்ந்து அன்ன ப்ராஶனம் செய்தால் எப்படி ஊட்டுவது? இந்த ஸம்ஸ்காரமில்லாமல், குழந்தை கண்டதை உண்ட பின் இதைச்செய்து பயனென்ன? அப் (ஜல) தேவதை, ஔஷதி தேவதைகளின் அருளையும் அதனுல் உண்டாகும் ஆரோக் யத்தையும் பெறுவதெப்படி? காலத்தில் இதைச் செய் தால் குழந்தைக்கு நோயும் குறையும். நம் நேயர்களாவது

இதையும் இதைப்போலவே மற்ற ஸம்ஸ்காரங்களையும் காலத்தில் செய்ய வேண்டுகிறோம்.)

பூரபாம்—ஶர்மன் இதில் முதலில் உள்ளது முதல் வ்யாஹ்ருதி. அதைக் கூறியதனாலேயே ஓர் அத்ருஷ்டம் உண்டாகிறது. தீர்த்தம், ஒஷதி இவைகளின் ரஸத்தை உனக்கு ஊட்டுகிறேன். அந்த தீர்த்தமும் ஒஷதியும் உனக்கு க்ஷேமத்தைத் தரட்டும். நோயை உண்டுபண்ணாமல் இருக்கட்டும்.—ஶர்மா உள்ளவனே! புவ:—ஶர்மன். முன் போலவே இரண்டாவது வ்யாஹ்ருதி. அர்த்தமின்றியே கேவல உச்சாரணத்தால் பலனைத் தருகிறது. முன் கூறியதே மந்த்ரம். அர்த்தமும் அப்படியே. ஸுவ: ஶர்மன் மூன்றாவது வ்யாஹ்ருதி, மந்த்ரமும் அர்த்தமும் முதல் கூறியதே ஆகும். பூர்—ஶர்மன். மூன்று வ்யாஹ்ருதிகளைச் சேர்த்துக் கூறி, முன்போலவே மந்த்ரமும் அர்த்தமுமாம். ஒரே மந்த்ரம் 3 தனி வ்யாஹ்ருதி, மூன்றையும் சேர்த்து ஒரு முறை கூறுவதால் 4 ஆகிறது. இந்த நான்கு மந்த்ரங்களையும் கூறி முடித்த பின், தங்க மோதிரத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஒரு முறை குழந்தைக்கு அன்னமூட்டுவர். பிறகு ஆசிர்வாதம் செய்து, ப்ருஹஸ்பதி ஸம்பாவனை செய்து, ஹார்த்தி எடுத்தால் இக்கர்மா பூர்த்தியாகிறது.

அன்ன ப்ராஶனமானவுடன் அக்குழந்தை எப்படி ஜீவிப்பான் என்று பரீக்ஷை செய்யும்படி மார்க்கண்டேயர் கூறுகிறார். குழந்தையின் எதிரில் சில பொம்மைகள், ஆயுதம், சாஸ்த்ரம் முதலியவைகளை வைக்கவேண்டும். குழந்தை அவைகளில் முதலில் எதைத் தொடுகிறதோ அது ஸம்பந்தமான ஜீவனத்தைக் கைக்கொள்வான் என அறியலாம்.

ஶிகை வைக்கவேண்டியது ஏன்?

ஶிகை வைக்கும் ஸம்ஸ்காரம் இது. வேதத்தினால் விதிக்கப்பட்ட கர்மா இது. முதல் ஆண்டு, மூன்றாம் ஆண்டு அல்லது ஐந்தாவது ஆண்டிலாவது அவஶ்யம்

செய்ய வேண்டிய கர்மா சூடாகரணம் என்பது. சூடா என்றால் ஶிகை. அதை விதிப்படி வைப்பது சூடாகரணம். சூடாகரணம் எந்த ஸம்ஸ்காரத்தில் செய்யப்படுகிறதோ அது "சௌளம்" எனப்படும். வேத மந்த்ரங்களைக் கூறி, அக்னியில் ஹோமம் செய்து நாந்தீ ஶ்ராத்தத்தால் பித்ருக்களைப் பூஜித்துச் செய்யும் கர்மா இது. இப்படி வேதோக்தமான மந்த்ரங்களைக் கூறி வைத்த ஶிகையை வேதோக்தமான மந்த்ரங்களைக் கூறியேதான் எடுக்க வேண்டும். இஷ்டப்படி மாற்றக்கூடாது. அது எப்பொழுதெனில், க்ருஹஸ்தனுக்கு உரிய கர்மாக்களை நன்கு செய்து, யாகாதிகளால் தேவர் கடனை நீக்கி, ஸத் புத்ரனைப் பெற்று, அதனால் பித்ரு கடனை அகற்றி, தீவ்ர வைராக்யம் உண்டானால் ஸன்யாஸம் செய்து கொள்ள வேண்டும். அச்சமயம், பித்ருக்களுக்குப் பூஜை செய்து, அக்னியை ஆராதித்து, க்ருஹஸ்த ஆஶ்ரமத்திற்கு உரியதும், அவஶ்யம் வேண்டியதுமான ஶிகை, யக்ஞோபவீதம் இவைகளை ஸன்யாஸியே களைய வேண்டும். அச்சமயமே ஶிகையை எடுக்கவேண்டும். இடையில் எக்காரணம் பற்றியும் ஶிகையை எடுக்கக்கூடாது. மாதத்திற்கு ஒரு முறை க்ருஹஸ்தன் க்ஷவரம் செய்து கொள்ள வேண்டும். ஞாதிகள் அல்லது மாதா பிதாக்கள் இறந்ததால் உண்டாகும் ஆஶௌசம் (தீட்டு) நிவர்த்தியாகும்போதும், ப்ரயாகை முதலிய புண்ய தீர்த்தங்களிலும் விதிக்கப்பட்ட வபநம், ஶிகை தவிர வபநத்திற்காக விடப்பட்டு வளரும் மயிரையே அகற்றுவதாம். விஷயமறியாத சிலர் இதரரைப்போல் திருப்பதி முதலிய க்ஷேத்ரங்களில் சென்று ஶிகையுடன் வபநம் செய்து கொள்வது (மொட்டை அடித்துக்கொள்வது) சாஸ்த்ர விரோதமாம். நோயினால் அல்லது ராஜசிக்ஷை முதலியவைகளால் ஶிகை போய் விட்டால் (யக்ஞோப வீதம் இல்லாவிட்டால் எப்படி ஸந்த்யாவந்தனம் முதலிய கர்மாக்கள் செய்ய யோக்யதை இல்லையோ அப்படியே) கர்மாக்களைச் செய்ய யோக்யதை இல்லாமல் போகிறது. அச்சமயம் பசுவின் வால் மயிர் அல்லது தர்ப்பையை சிரஸில் ஶிகைபோல் வைத்துக்

கொண்டு கர்மா செய்யவேண்டும். தலையில் வைப்பது கஷ்டமாக இருந்தால், காதுக்கும் தலைக்கும் இடையே அதைச் சொருகி வைத்துக் கொண்டு கர்மா செய்ய வேண்டும்.

ஆன்ஹிகத்தில் முதல்கர்மாவான ஸ்நான கர்மாவில் ஸ்நான அங்கமாக பித்ருக்கள் அருளை நாடி ஶிகோதகம் விடவேண்டும். அதாவது, ஸ்நானம் ஆனபின் பின்னால் தொங்கும் ஶிகையை முன்புறமாகத் தள்ளி, அங்கிருந்து ஜலம் விழும்படி செய்யவேண்டும். ஆதலால் ஶிகை மிக அவஶ்யம் வேண்டும். பஞ்சாயதன பூஜை காலத்திலும், பஞ்சாக்ஷரி முதலிய ஜபகாலத்திலும் 'ந்யாஸம்' என்ற கர்மாவில் அந்தந்த மந்த்ரம் அல்லது பீஜாக்ஷரத்தால் ஒவ்வொரு அங்கத்தையும் தொடவேண்டும். அச்சமயம் ஶிகை மிக அவஶ்யம் வேண்டும். இல்லறத்தே உள்ளவன் குடும்பி எனப்படுவான். குடும்பி ஶிகை தரிக்க வேண்டும். அதுவே குடுமி என மாறி வந்தது போலும்! நமது சரீர அமைப்பு ஒரு ரதம் போலும், ஒரு நகரம் அல்லது வீடு போலும் இருப்பதாக உபநிஷத்துக்கள் கூறுகின்றன. அதற்கு ஶிகை என்பது கூரைபோலாகும். மேற்கூரை இல்லாத வீடுபோலாகும் ஶிகை இல்லாத உடல். அன்றியும், விக்ஞான சாஸ்த்ரத்திலும், ப்ரக்ஞான சாஸ்த்ரத்திலும் கரைகண்டவர்களும், அனுபவ க்ஞானம் பெற்று உலக நன்மையில் ஈடுபட்டவர்களுமான நம் மஹரிஷிகள் ஶிகை விஷயமாகக் கூறியிருக்கும் தத்வம் நம் சிறிய புத்திக்கு எட்டாதது. மேரு மந்தர மலைக்கு ஸமமாக பாபங்கள் நமது கேசத்தை அண்டியிருப்பதால் புண்ய காலங்களில் (சிகையை விட்டு விட்டு மிகுதியை) வபநம் செய்து கொள்ளவேண்டும். பாப நிவ்ருத்திக்காகச் செய்யும் கூஶ்மாண்ட ஹோமம், யாகதிக்ஷை முதலிய கர்மாக்களில் வபநம் விதிக்கப்பட்டிருக்கிறது. கேஶம், நகம் இவை நமது உடலிலிருந்து வளர்ந்த உயிரற்ற அம்சமானதால் அதை நாம் தரிக்கக்கூடாது. வபநம் செய்துகொள்ள வேண்டும் என்றும், இரு கக்ஷங்களை முதலிலும், பிறகு முகம், பிறகு தலை என்ற முறைப்படி

செய்து கொள்ள வேண்டும். அதனல் ஸ்வர்க்கம் முதலிய நன்மை உண்டாகும் எனவும் வேதம் கூறுகிறது. மரத்தில் உலர்ந்த சிறகுகள் தானே உதிர்கின்றன. அது செடியின் வளர்ச்சிக்கு அவஶ்யமாம். அதேபோல், துளஸியின் கதிர், புக இலையின் நுணி, வாழை மரத்தின் அருகில் உண்டாகும் கன்றுகள் ஆகிய இவைகளைக் கிள்ளி அல்லது வெட்டி எறிவது தாய் வாழையின் வ்ருத்திக்குக் காரணமாவது போல், ஶிகையை வளர்த்து அதன் வ்ருத்திக்குக் காரணமாக மற்ற இடத்தில் வபநம் செய்து கொள்ளும் படி கூறினர் போலும். பசுவின் குளம்பு அளவு நடுவில் சிகை வைத்துப் பின்புறமாகக் கட்ட வேண்டுமென ஒரு ரிஷியின் கொள்கை. நடுவில் சிகை வைத்து முன்பறம் அல்லது பக்கவாட்டில் முடிய வேண்டும் என மற்ருேர் ரிஷியின் மதம். அதைத் தழுவியே சிலர் முன் புறத்திலும் சிலர் பக்கத்திலும், சிகை கட்டி விடுவதைக் காணலாம். (அவர் முக்காணி தில்லை தீக்ஷிதர்.)

நமது மூளைதான் ஸகல அவயவங்களிலும் சிறந்த பாகம். மனம் அங்கு சென்று ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு வகையான வேலையைச் செய்கிறது. வேலை செய்யும் இடம் கனமான கூரைபோன்ற சிகையால் மூடப்பட்டால், மூளைக்கு உறுதி என சிகை விதித்தனர் போலும். ரிஷி பேதத்தாலும் குல ஆசார பேதத்தாலும் சிகை வைப்பது வெவ்வேறு இடமாயினும், ஓரிடத்தில் சிகை, மற்ற இடத்தில் வபநம் என்ற விஷயத்தில் வேற்றுமையே இல்லை. வெளியில் சென்று வெய்யிலிலும் மழையிலும் அடிபடாத பெண் மக்களுக்குத் தலை நிறைய சிகை வைக்கச் சொன்னதற்கும் ஒரு சிறந்த காரணம் இருத்தல் வேண்டும். அன்றியும், பெற்ருேர் இறந்த ஆண்டில் ஆப்திகம் ஆகும் வரை புத்ரன் (பித்ரு மாத்ரு தீக்ஷை) வபநம் செய்து கொள்ளக்கூடாது. மனைவி கர்பிணியானல், கர்பம் வ்யக்த மாகத் தெரிந்தபின் 10 மாதம் வரை வபநம் செய்து கொள்ளக்கூடாது. விவாஹ தீக்ஷை, உபநயன மானபின் ஆறு மாதம் உபநயன தீக்ஷை. இந்த தீக்ஷை காலத்திலும் வபநம் கூடாது. ப்ரஸவித்த பத்நீ

வதுநாள் வபநம் செய்துகொள்ளவேண்டும் என்று சாஸ்த்ரம் கூறுகிறது. பேற்ளுேர் ஶ்ராத்தத்திற்கு முன்பும் பின்பும் சில நாட்களாவது வபநம் செய்து கொள்ளாமல் இருக்கவேண்டும்.

மாதத்திற்கு ஒரு முறை க்ருஹஸ்தனும், இருமாதத்திற்கு ஒரு முறை ஸன்யாஸியும், அமாவாஸ்யை பௌர்ணமிகளில் ஆஹிதாக்னியும் வபநம் செய்து கொள்ள வேண்டும். ஞாயிறு, செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் வபநம் கூடாது. சதுர்த்தியில் வபநம் செய்து கொண்டால் தாய்க்கு ஆகாது. சதுர்த்தஶி ஸஹோதரிக்கும், ஷஷ்டி ப்ராதாக்களுக்கும், ஏகாதசி, த்வாதசி, பௌர்ணமி, அமாவாஸ்யை பித்ருக்களுக்கும் ஆகாது. ப்ரதமையும் நவமியும் தனதான்யத்தை அழிக்கும். அஷ்டமி குடும்பத்தை அழிக்கும் என்றும், க்ருத்திகை, பூரட்டாதி, உத்திரட்டாதி நக்ஷத்ரங்களில் வபநம் செய்து கொள்ளக் கூடாது என்றும் சாஸ்த்ரம் கூறுகிறது. தாய்க்கு தன் குழந்தையிடம் உள்ள அன்பை விட நம்மிடம் அதிக அன்புள்ளது சாஸ்த்ரம். நமது நன்மைக்காகவே ஏற்பட்டது அது. சாஸ்த்ர நம்பிக்கை கொண்டு கர்மா செய்யவேண்டுமே தவிர, காரணம் கேட்டோ, பயனைக் கோரியோ செய்தல் உசிதமன்று. நாள் செய்வதை நல்லவர் செய்ய முடியாது. "மயிர் நீங்கவும், உயிர் போகவும் நாளா" என எளிதில் கூறலாகாது. சனி, செவ்வாய், அஷ்டமி, அமாவாஸ்யை என்று கவனியாமல் வபனம் செய்து கொள்வதும், சிகை இல்லாமல் இருப்பதும், தானே வபநம் செய்து கொள்வதும், பூணல் இல்லாததை போலாம். இவைகளைக் கவனித்து நடப்பதுடன், வட தேசத்தவர்போல், கிராப்பின் நடுவிலாவது சிறிது சிகையேனும் வைத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

சௌள மந்த்ர அர்த்தம்

மூன்ருவது வருஷத்தில் செய்யவேண்டிய கர்மா இது. இதற்குப் பூர்வாங்கமாக உதகஶாந்தி, அங்குரம்,

ப்ரதிஸரம், நாந்தி இவைகளைச் செய்து முடித்து, சௌளம் செய்யவேண்டும். சுபதினத்தில் பெற்ளோர் நித்ய கர்மாவை முடித்துச் சுத்தராய் இன்ன நக்ஷத்ரத்தில் இன்ன ராசியில் பிறந்த இப்பெயர் ஶர்மா உள்ள குழந்தையைச் சௌள ஸம்ஸ்காரம் உள்ளவனாகச் செய்கிறேன் என ஸங்கல்பம் செய்து, குழந்தைகளுக்குக் காரம், உப்பு, புளி இல்லாமல் ஆஹாரம் செய்து வைக்கவேண்டும். (உரிய காலத்தில் செய்யாமல் உபநயனத்துடன் சேர்த்து ஜாதகர்மா முதல் சௌளம் வரை செய்பவரே தற்சமயம் அதிகமானவர். உபநயனத்தில் இங்ஙனம் ஒரு ஆஹாரம், வபநம் உண்டு. சௌளத்திற்காக ஒன்று, உபநயனத்திற்காக ஒன்று ஆக இரண்டு முறை ஆஹாரம், இரண்டுமுறை வபனம் செய்யவேண்டும். அப்படி இருமுறை செய்ய நேர்ந்த போது முதல் முறை சர்க்கரை, நெய், பால் ஆகிய இவை களால் போஜனம் செய்துவைத்து, வபன மந்த்ரத்தை மாத்ரம் சொல்லவேண்டும். உபநயநத்தன்று குமார போஜனம் என்று இரு அல்லது ஒரு ப்ரும்மசாரிக்கு வஸ்த்ரமளித்துக் கூட உட்கார்ந்து சாப்பிடச் சொல் கிறோம். அச்சமயம், பொங்கல், கருவடாம், குழம்பு முதலியன பரிமாரப்படும். ஆனால் சாஸ்த்ரம் உப்பு புளி களை வேண்டாம் எனக் கூறுவதைக் கவனித்து நம் நேயர் காலத்தில் சௌளம் செய்து இதையும் கவனிக்க வேண்டு கிறோம்.)

லௌகிக அக்னியை ப்ரதிஷ்டை செய்து வடபுறம் பாத்ரங்களை ஸாதனம் செய்யும்போது, உஷ்ண ஜல பாத்ரம், ஶீதஜல பாத்ரம், தர்ப்பை, யவதான்யம், சலாலு, தர்ப்பைக்கதிர், சாணி, பன்னி முள், கத்தி இவைகளை மற்றவைகளுடன் ஸாதனம் செய்யவேண்டும். ஆஜ்ய பாகம் வரையிலுள்ள (முகாந்தம் எனப்படும்) பூர்வ அங் கத்தைச் செய்து முடிக்கவேண்டும். குமாரனைத் தொட்டுக் கொண்டே தாதா ததாது முதல் 4 யஸ்த்வா முதல் 4 மந்த் ரங்களைக் கூறி ஹோமம் செய்யவேண்டும். (ஏற்கனவே இம்மந்த்ர மந்த்ரார்த்தங்கள் பும்ஸவனம் எனும் ஸம்ஸ் காரத்தில் கூறப்பட்டவை. அதைச் சுருக்கமாக இங்கு

கூறுவோம்). தாதா. ஈசானன் எங்களுக்குச் செல்வத்தை தரட்டும். எங்கள் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யட்டும். ப்ரஜை முதலியவைகளை அளிக்கும் தாதாவே உலகத்தைப் படைத்தவர். அவரே யஜமானனுக்குப் புத்ரனை அளிப்பவர். அவருக்கு ஹவிஸ்ஸைத் தருகிறோம். அவர் முன்னோருக்குத் தந்ததுபோல் எங்களுக்கும் செல்வத்தைத் தரட்டும். அவர் ஸத்யஸந்தர். பக்தரிடம் அன்பு கொண்ட அவரை த்யானம் செய்வோம். கர்ப்பாதானம் செய்த எனக்கு, அவர் ஸந்ததியைத் தரட்டும். மற்ற அமரரும் நம் வீட்டில் அமரட்டும். யஸ்த்வா—ஹே அக்னே, அமரரான உம்மை மனதோடு துதிக்கிறேன். எனக்குக் குழந்தைகளுடன் உண்ண உணவைத்தாரும். நற்கர்மாவைச் செய்பவருக்கு ஸுகத்தை அளிக்கிறீர். ஹே இந்த்ரா! உம்மிடம் விரும்பத்தக்க பொருள்கள் இருக்கின்றன. உம்மைவிட உயர்ந்தவர் யாருமில்லை. யக்ஞத்தில் ஸோமரஸம் உம்மை ஸந்தோஷப்படுத்தட்டும். கஷ்டம் வந்தபோது எல்லோரும் உம்மைச் சரணமடைகின்றனர். இந்த 8 ஹோமங்களும் ஆனபிறகு உத்தராங்கமாக ஜயாதி ஹோமம் செய்யவேண்டும். அக்னியைப் பரிஷேசனம் செய்து, சமியை நீக்கி, அக்னிக்குமேற்கே, கிழக்குமுகமாகக் குழந்தையை உட்காரவைத்து, பாத்ரத்துடன் ஸாதனம் செய்த முள்ளம் பன்றி முள், தர்ப்பைகளை எடுத்து, அவைகளால் க்ஷவரம் செய்யவேண்டிய மயிரை ஒதுக்க வேண்டும். உஷ்ணேன என்ற மந்த்ரத்தைச் கூறி, உஷ்ண ஜலத்தை சீதஜலத்துடன் சேர்க்க வேண்டும். மந்த்ர அர்த்தம்: உஷ்ணேன-ஹே வாயோ, உஷ்ணமான ஜலத்தைக்கொண்டுவாரும். அதிதி கேசங்களை வபனம் செய்யட்டும். குழந்தையினுடைய தலையை ஜலம் நனைக்கட்டும். இவன் 116 வருஷம் ஜீவித்திருக்கவும் நன்கு ப்ரகாசிக்கவும், நீண்டகாலம் கண்பார்வை கெடாமல் ஸூர்யனைப் பார்க்கவும் ஜலம் அருள் புரியட்டும்.

பிறகு ஒவ்வொரு திக்காகத் தலையைத் தர்ப்பையால் துடைத்து எறியவேண்டும். கிழக்கு திக்கில் சிகையைத் துடைக்கக் கூறும் யேநாவபந் என்ற

மந்த்ரத்தின் பொருள்: எந்தக் கத்தியினுல் வபந கர்மாவில் குசலரான ஸவிதா ஸோம ராஜாவுக்கும் வருணனுக்கும் வபநம் செய்தாரோ அந்தக் கத்தியினுல், ப்ராம்மணர்களே! இம்மாணவனுக்கு வபநம் செய்யும் படி எனக்கு உத்திரவு கொடுங்கள். இக்குமாரன் தீர்க் காயுள் உள்ளவனுகவும், உணவை ஜீர்ணம் செய்யும்சக்தி வாய்ந்தவனுகவும் இருக்கட்டும். இதைக் கூறி கத்தியினுல் கேசத்தை நறுக்கி, தென்புறத்தில் பத்னி அல்லது ப்ரும் மசாரி கையில் வைத்திருக்கும் யவத்துடன் கூடிய சாணி யில் போட்டு கை அலம்பவேண்டும். தென்புறம் வபநம் செய்யும்போது கூறும் யத்க்ஷுரேண என்ற மந்த்ர அர்த் தம்: தீக்ஷ்ணமாயும் ப்ரகாசமாயுமுள்ள கத்தியால் கேசங் களே வபநம் செய்கிறேும். மாணவன் தலையைச் சுத்த மாகச் செய்! அவன் ஆயுளை அபஹரிக்காதே! மேற்கு புறம் கேசத்தைச் சேதிக்கும்போது கூறும் யேந என்ற மந்த்ர அர்த்தம்: எதனுல் பூஷா, ப்ருஹஸ்பதி, அக்னி, இந்த்ரன் ஆகியவர்கள் ஆயுள் வ்ருத்தியின் பொருட்டு வபநம் செய்தாரோ, அந்தக் கத்தியால் இம்மாணவனுக்கு ஆயுஸ், கீர்த்தி, க்ஷேமம் இவை வ்ருத்தியாகும்படி வப நம் செய். முன்போல், அறுத்த கேசத்தைச் சாணியில் போட்டு, கை அலம்பி, வடக்கு புறத்தில் யேந என்பு தால் அறுக்கவேண்டும். அதன் பொருள்: எதனுல் பூஷா, ப்ருஹஸ்பதி, அக்னி, இந்த்ரன் இவர்களது ஆயுஸ் வ்ருத்தியாகும்படி வபநம் செய்தாரோ, ஹே—ஶர்மா வுள்ள மாணவனே, உனது ஆயுள் வ்ருத்தியாகும்படி அதனுல் வபநம் செய்கிறேன். நீ நீண்டநாள் வர்ச்சஸ் ஸுடன் நல்ல மனதுள்ளவனுக இரு.

இக்கேசங்களைச் சாணியுடன் அத்தி மரத்தடியில் அல்லது தர்ப்பை ஸ்தம்பத்தில் போடவேண்டும். அச் சமயம் கூறும் உப்த்வா என்ற மந்த்ர அர்த்தம்: ப்ருஹஸ்பதி ஸவிதா, ஸோமன், அக்னி என்ற இவர்கள் கேசத்தை பலவிடங்களில், அதாவது த்யாவா, பூமி, ஜலம், ஸுவர்க் கம் முதலிய இடங்களில் போட்டதுபோல் நானும் அத்தி, தர்ப்பை முதலிய இடங்களில் போடுகிறேன். பிறகு

தென்புறம் அமர்ந்த ப்ரம்மாவுக்குத் தக்ஷிணை யளித்து இந்த ஜலத்தால் அம்பட்டனைக்கொண்டு மாணவனுக்கு வபநம் செய்விக்கவேண்டும்.

மாணவனும் பிதாவும் ஸ்நாநம் செய்து, மடியுடுத்திக் காலலம்பி, ஆசமனம் செய்து, அக்ஷதாசிர்வாதம் செய்து, அக்னி உபஸ்தானம் செய்யவேண்டும். இத்துடன் சௌளம் பூர்த்தியானது.

உபநயன விவரம்

இது மிக முக்யமான சிறந்த கர்மா. ஆதலால் ஆபஸ்தம்ப ரிஷி "அத உபநயனம் வ்யாக்யாஸ்யாம:" எனத் தனிக்கட்டமாக ஆரம்பிக்கிறார். இதைப் பற்றி மிக அவஶ்யம் அறியவேண்டியதைக் கூறி, பின்னர் கர்மாவை ஆரம்பிப்போம். ஜாதகர்மா முதல் சௌளம் வரை அந்தந்த காலத்தில் செய்துவிட்டு கர்ப்பாஷ்டமத்தில் ப்ராம்மணனுக்கும், கர்ப்ப ஏகாதஶத்தில் க்ஷத்ரியனுக்கும், கர்ப்ப த்வாதஶத்தில் வைஶ்யனுக்கும் இவ்வுபநயனத்தைச் செய்யவேண்டும். வஸந்த ருது ப்ராம்மணனுக்கும், க்ரீஷ்ம ருது க்ஷத்ரியனுக்கும், ஶரத் ருது வைஶ்யனுக்கும் சிறந்த காலம். (சித்திரை-வைகாசி வஸந்த ருது. ஆனி-ஆடி க்ரீஷ்ம ருது. ஆவணி-புரட்டாசி வர்ஷ ருது, ஐப்பசி-கார்த்திகை ஶரத் ருது. மார்கழி-தை ஹேமந்த ருது, மாசி-பங்குனி ஶிஶிர ருது.) குழந்தையின் வாக்கு நன்றாக இருந்து, குழந்தைக்கும் ப்ரும்மவர்ச்சஸ் வேண்டுமென பிதா விரும்பினால் ஐந்தாவது வயதில் ப்ராம்மணனுக்கு உபநயனம் செய்விக்கலாம்.

உப-நயனம் என்ற இரண்டு சொல்தொடர் இது. ஸமீபத்தில் அழைத்துச் செல்வது எனப்பொருள். வேத மந்த்ரமே "உபநயே" என்று கூறுவதாலும் இப்பெயர் இடப்பட்டது. யாரை யாரிடம் அழைத்துச் செல்வது? பூணல் போட்டுக்கொள்ளும் மாணவனைக் குருவினிடம் அழைத்துச் செல்வது என்று பொருள். மாணவனைக் காயத்ரீ எனும் ப்ரும்மத்தினிடம் அழைத்துச் செல்வது என்றும் கூறுவர். இதுவரை மாணவன் இஷ்டமானபடி

உண்ணலாம். உடுக்கலாம். உறங்கலாம். உபநயநமான பின் ப்ரும்சாரியாகி விட்டாய் என்று குரு கூறி, சில நியமங்களை உபதேசிப்பார். அவைகளைக் கைகொள்ள வேண்டும். உபநயனம் என்பது மறு பிறவியாகும். ஶுக்லஶோணித ஸம்பந்தத்தால் பிறந்த பிறவியைவிட இப்பிறவி மிகச் சிறந்தது. இதில் குருவே பிதா, காயத்ரியே மாதா. உபநயனமான பின்புதான் ஸகல வைதிக கர்மாவையும் செய்ய அதிகாரம் ஏற்படுகிறது. குழந்தைக்கு உயர் ஜன்மாவையும், சிறந்த அறிவுக் கண்ணையும் அளிக்கும் பிதா, முதலில் சுத்தனாகவும் காயத்ரீ ஜபம் செய்பவனாகவும் இருக்க வேண்டும்

உபநயன மந்த்ரத்தையும், மந்த்ர அர்த்தத்தையும், அங்கு செய்யப்படும் கர்மாவையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். இல்லையேல் குருடன் குருடனுக்கு வழி காட்டுவது போலாம். ஆதலின் காயத்ரீ உபதேசம் செய்யும் பிதா அல்லது மற்றவர், சில விஷயங்களை முதலில் கவனித்து அனுஷ்டிக்கவேண்டும் முதலில் பிழையின்றி. அபஸ்வரமின்றி, காயத்ரீ உபதேசிப்பதற்கு முன் சில நாட்களாவது ஆயிரம் ஆவர்த்தி ஜபம் செய்ய வேண்டும். உபநயன மந்த்ர, மந்த்ரார்த்தங்களைத் தெரிந்தவர் மூலம் முன்னதாகக் கேட்டு வைத்துக்கொள்ள வேண்டும். 100 ப்ராம்மணர்களுக்கு அன்னமிட வேண்டுமாதலால், மற்ற படாடோப செலவுகளைக் குறைத்து, அன்னதானம் ப்ராம்மண தக்ஷிணைகளை நன்றாகச் செய்ய வேண்டும். காலம் தவறாமல் 8 வயதில் பூணல் போட வேண்டும். ஸந்த்யாவந்தனம், ப்ரும்மயக்ஞம், ஸமிதாதானம் முதலான மந்த்ரங்களைத் தக்கவரைக்கொண்டு அபஸ்வரமின்றி கற்பிக்க வேண்டும். தான் ஆசாரத்துடன் இருந்து, உபநயனமான மாணவனுக்கும் ஆசாரத்தைக் கற்பிக்கவேண்டும். காயத்ரியைவிட சிறந்த மந்த்ரமில்லை. அது பரப்ரும மஸ்வரூபம். ஆதலால்தான் காயத்ரீ உபதேசத்தை வேறெந்தப் பெயராலும் அழைக்காமல் 'ப்ரும்ம உபதேசம்' என்கின்றனர். அது அதி ரஹஸ்யமானதால், பட்டினால் மூடிக்கொண்டு உபதேசிக்கிறோம்.

காயத்ரீ மந்த்ரத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் வித்யுத் சக்தியை (எலெக்ட்ரிக் கரண்டை) விட அதிக சக்தி வாய்ந்தது. அந்த சக்தியைச் சிஷ்யனுக்குக் கொடுக்கிறார் குரு. அது வெளியில் சிந்தாவண்ணம் பட்டு அதைத் தடுப்பதால், எலெக்ட்ரிக் கம்பிக்குப் பட்டு நூல் சுற்றுவதுபோல், பட்டை உபயோகிக்கிறோம். உபதேசமே மிக முக்ய கர்மாவானதால் அச்சமயம் அப சகுனம் நேரா வண்ணம் மங்கள வாத்யம் கெட்டியாக வாசிக்கப்படும். ஆனால், அந்த கோஷம் மாணவன் காதில் மந்த்ரம் விழாதபடி தடுப்பதாக இருக்கக்கூடாது. மாணவனுக்குப் பெற்றோர் முதலியவர் இல்லாவிடிலோ, ஸ்வல்ப செலவுகூட செய்யமுடியாத நிலையிலோ 16 வயது வரை ஆபத்கால பக்ஷமாக உபநயனம் செய்யலாம். 16 வயது ஆகியும் உபநயனம் ஆகாதவன் பதிதனாவான். மாண வன் தாய் 6 மாதத்திற்குமேல் கர்பிணியாய் இருந்தால், புத்ரனுக்கு உபநயனம் செய்யக்கூடாது. இது ப்ராம்மண் யத்தைத் தரும் முக்ய கர்மாவாதலால் காலதாமதமின்றி முக்ய காலத்தில் செய்யவேண்டும். 100 பேருக்கு அன்ன மளிக்க முடியாவிடில் முடிந்தவரை அன்னமளித்து 4 நாட்கள் விதிப்படி உபநயனம் செய்விக்க வேண்டும். மந்த்ரம், மந்த்ர அர்த்தம் இவைகளைக் கேட்பதும், முன் ஒருவாரமாவது நித்யம் 1008 முறை காயத்ரீ ஜபம் செய் வதும் மிகமிக அவஶ்யமென மறுமுறை நினைவூட்டுகி றோம். யாசகம் வாங்கியாவது காலத்திலிதை செய்யும்படி சாஸ்த்ரம் கூறுகிறது. பெண் கல்யாணமானால், சட்டம், வரன், ஸம்பந்தி பூஜை, வரதக்ஷிணை முதலிய கஷ்டங்கள் உண்டு. உபநயனத்தில் இத்தகைய ஶ்ரமங்கள் இல்லாத தால், நம் அன்பர்கள் இதையாவது காலத்தில் செய்து, ஸந்த்யாவந்தனம், ப்ரும்மயக்ஞம், ஸமிதாதானம் முதலிய மந்த்ரங்களைக் கற்பிக்க வேண்டுகின்றோம்.

உபநயனம் செய்யும் வகை

குறிப்பு :—"புருஷார்த்தம் ஒன்றல்ல. ஸ்ம்ருதிகளோ பின்ன பின்னமானவை. ரிஷி ஒருவரல்ல. ஒருவரேயானால் அவர்

சொல்லே ப்ரமாணமாகக் கொள்ளமுடியும். தர்மத்தின் தத்வமோ குஹையில் மறைத்து வைக்கப்பட்டது போல் ரஹஸ்யமானது. இந்த நிலேயில் சிஷ்டர் எந்த வழி சென்றனரோ அதே நமக்கு வழி" என்ற சான்றோர் சொற்படி, பல ஸூத்ரக்காரர். ஒரு ஸூத்ரத்தைத் தழுவி ப்ரயோகமாக எழுதியவர் பலர். சிஷ்டாசாரத்தைக் கைக்கொள்வோமெனில் அதுவும் பலவிதமாகக் காணப்படுகின்றது. ஆதலால், வைதிக கர்மாக்களே அனுஷ்டிப்பதிலும், பிறர்க்குக் கூறுவதிலும் உள்ள ச்ரமத்தை அனுஷ்டாதாதான் அறிவர். இங்கு ஆபஸ்தம்ப ஸூத்ரத்தைத்தழுவி ச்ரௌதபூஷணம் ஸ்ரீ முத்து ச்ரௌதிகள் எழுதிய ப்ரயோகத்தை ஒட்டி எழுதப்படுகிறது. ஒன்றுமே அறியாமல், உபாத்யாயர் சொற்படி ஏதோ செய்கிறோம் என்று செய்யாமல், சிறிதாவது கர்ம தத்வம் தெரிந்து நடத்தவேண்டும் என்ற அவாவால் சிற்றறிவுக்கு எட்டிய அளவு 'எழுதுகிறோம். இக்கருத்தை நன்கு உணர்ந்து இதை ப்ரசாரம் செய்யும் சில பண்டிதர்களுக்கு எவ்வளவு நன்றி கூறினும்போதா. மற்ற பண்டிதர்களும் இதை அன்புடன் நோக்கி, மனிதருக்கு இயற்கையான தோஷங்களேக் களைந்து, குணத்தைக் கொண்டு தர்ம அபிவிருத்திக்கு ஸஹாயம் செய்து, தர்ம பலனே அனுபவிக்கும்படி வேண்டுகிறோம்.

இந்த உபநயன கர்மாவிற்குப் பூர்வாங்கமான உதக ஶாந்தி, அங்குர, ப்ரதிஸர, (பாலிகை, ரக்ஷை) நாந்தி இவைகளே முதலில் செய்யவேண்டும். உதக ஶாந்தியை முதல்நாள் காலேயில் அல்லது இரவில் செய்வது அவரவர் ஸௌகர்யத்தைப் பொருத்தது. அப்யுதயம் எனும் நாந்தியை அன்ன ஶ்ராத்த ரூபமாகச் செய்வது இன்னும் மலேயாளத்திலும், இங்கும் சில விடங்களிலும் உண்டு. அஃதே நல்லது. அப்படி ஸௌகர்யமில்லாதவர் அதம பக்ஷமாக எட்டுபேரை வரித்து நாந்தி செய்வது உசிதம். அப்படி வரிப்பதற்குச் சில அஸௌகர்யங்கள் தோன்றில், மொத்தமாகத் தத்தம் செய்து ப்ராம்மணர்களுக்குத் தக்ஷிணையாகக் கொடுப்பது வழக்கம்.

பெற்றோர் மாணவனுடன் உட்கார்ந்து உபநயன ஸங்கல்பம் செய்யவேண்டும். - இந்த நக்ஷத்திரத்தில் -

இந்த ராஶியில் உண்டான—இந்த ஶர்மா உள்ள என் குமாரனை (குமாரனுக்கு) உபநயனம் செய்கிறேன் என்பது ஸங்கல்ப அர்த்தம். முதலில் அனுக்ஞை பெற்றுக்கொண்டு, வழக்கப்படி விக்நேஶ்வர பூஜை செய்யவேண்டும். மஞ்சள் பிள்ளையாரைப் பிடித்து, அதற்கு ஷோடஶோபசார பூஜை செய்து, நிர்விக்நமாக இக் கர்மா நடக்கவேண்டுமென ப்ரார்த்தித்து, அவர் முன்னிலையில்தான் மேற்கூறிய ஸங்கல்பம் செய்து கொண்டு, அவரை யதாஸ்தானம் செய்யவேண்டும். பிறகு மாணவன் தரித்துக்கொள்வதற்காக உபாத்யாயர் கொண்டுவந்திருக்கும் யக்ஞோப வீதத்தை ஶுத்தம் செய்ய புண்யாஹவாசனம் செய்யவேண்டும்.

புண்யாஹவாசனம் என்பது சில முக்கிய கர்மாக் களுக்கு அங்கமாகச் செய்யப்படும் ஒரு கர்மா. 'ஜயாதி' போல் இதையும் பின்னர் விளக்குவோம். அந்த புண்யாஹ வாசன தீர்த்தத்தால் மாணவனையும் யக்ஞோப வீதத்தை யும் ப்ரோக்ஷிக்க வேண்டும். அதற்கு அனுக்ஞை பெறுவ தற்காக தாம்பூலத்துடன் தக்ஷிணையை எடுத்துக்கொண்டு "அஶேஷே ஹே பரிஷத்" என்று கூறவேண்டும். ஓ பரி ஷத்தே, தங்கள் திருவடியில் என்னால் ஸமர்ப்பிக்கப்பட்ட ஸ்வல்பமானாலும்கூட யதோக்த தக்ஷிணையாக இதைக் கருதி, தாம்பூலத்தையும், தக்ஷிணையையும் ஏற்றுக் கொண்டு இம்மாணவனுக்கு யக்ஞோபவீதம் தரித்துக் கொள்வதற்கு யோக்யதை ஸித்திக்கட்டுமென அனுக் ரஹம் செய்யுங்கள் என்பது அனுக்ஞையின் கருத்து. கர்மாவின் ஆரம்பத்தில் ஓர் அனுக்ஞை. இப்போது ஒன்று. ப்ருஹ்மோப தேச காலத்தில் ஒன்று. இப்படி எவ்வளவு முறை அனுக்ஞை, அடிக்கடி உபாத்யாயர் தெச்சரிக்கிறார் பணத்திற்கு என்று கருதக் கூடாது. ஸாதுக்களது அனுக்ரஹத்தால்தான் நமக்கு ஒரு கர்மா வைச் செய்ய யோக்யதை உண்டாகின்றது. அவர்களைப் பூஜிக்காமல் உத்திரவு கேட்கக்கூடாது. அவர்களுக்கு நாம் எவ்வளவு கொடுத்தாலும் போதாது என்பதைக் காட்டவே "யத்கிஞ்சித் தக்ஷிணாமபி"—மிக ஸ்வல்பமாக

இருந்தாலும் என்று-காலணு முதல் ஒரு ரூபாய் வரை அல்லது அதைவிட அதிகம் கொடுப்பவர்கூட இதையே கூறவேண்டும். முன்பு பொதுவாக உபநயன கர்மா விற்காக அனுக்ஞை பெற்ருேம். இப்போது பூநூல் தரிப்பதற்காகக் கேட்கிருேம். இப்படி ஒவ்வொரு கர்மா விற்கும் அனுக்ஞை பெறுவதுதான் முறை. அதேபோல் "க்ரஹப்ரீதி" என்பதுமாம். "யக்ஞோப வீத தாரண லக்னத்தை அபேக்ஷித்து எந்த எந்த க்ரஹங்கள் ஶுபஸ் தானத்தில் இருக்கின்றனவோ, எந்த எந்த க்ரஹங்கள் ஶுபேதர ஸ்தானங்களில் இருக்கின்றனவோ (இங்கு ஶுபகர்மாவில் அஶுப என்ற சொல்லைக்கூருமல் 'ஶுபேதர' என்று சொல்வது கவனிக்கத்தக்கது.) அந்த க்ரஹங்கள் மிகச் சிறந்த ஶுப பலத்தை அளிப்ப தற்காக நவக்ரஹ ரூபியான ப்ராம்மணருக்கு தக்ஷிணை யுடன் தாம்பூலம் தருகிறேன்" என உபாத்யாயருக்கு க்ரஹப்ரீதி அளிக்கவேண்டும். இதுவும் சில கர்மாக்களுக் குப் பூர்வாங்கமாக அடிக்கடி செய்யப்படும். யக்ஞோபவீத தாரணத்திற்காக ஸங்கல்பம் செய்துகொண்டபின் இந்த க்ரஹ ப்ரீதி செய்யவேண்டும். பலருக்கும் அளிக்கலாம்.

யக்ஞோபவீததாரண ஸங்கல்பம்: ஶுக்லாம் பரதரம்— ஶாந்தயே. ஓம்பூ:—ரோம். மமோபாத்த ஸம்ஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீபரமேஶ்வர ப்ரீத்யர்த்தம்—நக்ஷத்ரே— ராஶௌ ஜாதஸ்ய மம குமாரஸ்ய ஶ்ரௌத ஸ்மார்த்த விஹித நித்ய கர்மானுஷ்டான யோக்யதா ஸித்யர்த்தம் ப்ரும்மதேஜோபி வ்ருத்யர்த்தம் மமகுமாரேண யக்ஞோப வீத தாரணம் காரயிஷ்யே. க்ருஹப்ரீதி செய்து மந்த்ரமில் லாமல் குமாரனை ஆசமனம் செய்விக்க வேண்டும். (நாம் தரித்துக்கொள்ளும்போது மமோ பாத்த—ப்ரீத்யர்த்தம் யக்ஞோப வீத தாரணம் கரிஷ்யே என்று கூறவேண்டும். ('காரயிஷ்யே' எனில் தரிக்கும்படி செய்கிறேன் என்று பொருள்). யக்ஞோப வீதத்தைத்தரிப்பதற்கு ஒரு மந்த்ரம் உண்டு. மந்த்ரம் என்ருல் அதைக் கண்டு பிடித்தவர் அல்லது அதனல் பயனடைந்த ரிஷி ஒருவர் இருப்பர். அதற்கு ஒரு சந்தஸ் (வ்ருத்தம்) உண்டு. அதனுல்

கொண்டாடப்படும் தெய்வம் ஒன்று உண்டு. அவை களைக்கூறி இந்த மந்த்ரம் இந்த கார்யத்தில் பயன்படுகிறது எனக் கூறவேண்டும். அது தான் கீழே வரும் மந்த்ரம்.

யக்ஞோபவீத தாரண மஹா மந்த்ரஸ்ய பரப்ரும்ம ரிஷி: (தலைமீது கை விரல்களை வைக்கவேண்டும்.) த்ருஷ்டுப் சந்த: (நுனி மூக்கில்) பரமாத்மா தேவதா. (மார்பில்) யக்ஞோப வீத தாரணே ஜபே விநியோக: என்று கூறி, பிதா அல்லது பூநூல் போடுகிறவர் குமாரனுடைய இரு கரங்களுடன் தன் கரங்களால் அதைப்பிடித்துக்கொண்டு மந்த்ரத்தைக் குமாரனுக்குச் சொல்லி வைக்கவேண்டும். வலது கையை உள்ளங்கை மேலே நோக்கி இருக்கும்படியும், இடது கையின் உட்புறம் கீழ்ப்பக்கம் நோக்கி இருக்கும்படியும், பிடித்துக் கொள்ளவேண்டும். யக்ஞோப வீதம்—தேஜ:. மந்த்ர அர்த்தம் "யக்ஞோப வீதமானது மிகமிகச் சுத்த மானது. ப்ரும்மாவுடன் கூடவே முன் உண்டானது. அது ஆயுஸ்ஸைக் கொடுக்கக் கூடியது. மிக ஸ்ரேஷ்ட மானது. வெண்மையானது. அதைத் தரிக்கிறேன். பல மும் தேஜஸ்ஸும் உண்டாகட்டும்." இம்மந்த்ரத்தை கூறி, யக்ஞோப வீதத்தை மாணவன் தரிக்கும்படி செய்து முன்போல் மந்த்ரமில்லாமல் ஆசமனம் செய்விக்க வேண்டும். "யக்ஞோ—க்ருஹ்ணாந்து" என்று ஆசார் யன் கேட்கவேண்டும். "யக்ஞோப வீதத்தைத் தரிக்கும் படி செய்த முகூர்த்தம் நல்ல முஹூர்த்தமாக இருக்க வேண்டும் என்று அநுக்ரஹம் செய்யுங்கள்" என்பது பொருள். "ஸு முஹூர்த்தோஸ்து"—நல்ல முஹூர்த் தமாக இருக்கட்டும் என ப்ராம்மணர்கள் கூறுவார்கள்.

மாமன்பாட்டனர் செய்யும்சீர், வேஷ்டி, மாணவனது தாய் தந்தைக்கு வேஷ்டி, புடவை, வெள்ளி பஞ்ச பாத்ர உத்தரிணி, தாம்பாளம், மோதிரம் முதலியன அளிப்பர். அத்துடன் வரும் வெள்ளிப் பூணல், தங்கப் பூணல்களைப் பெற்று, நூல் பூணலுடன் வெள்ளி, தங்கப் பூணல்களை அலங்காரமாக தரிப்பது ஸம்ப்ரதாயத்தில் வந்த வழக்கம். வெள்ளிப் பூணல், தங்கப் பூணல்களைத் தானம் செய்தால்,

செய்பவரது குடும்பத்தில் குழந்தைகள் மறிக்கமாட்டார்கள். பூர்வ ஜன்ம பாப விசேஷத்தால் குழந்தைகள் பிறந்துபிறந்து இறந்தால், பெற்ருேர் வெள்ளி, தங்கப்பூணலைத் தானம் செய்ய வேண்டும் என கர்ம விபாகம் கூறுகிறது. அன்றியும், பூணல் தரித்தபின் மாணவன் தனது பித்ருவர்க்கத்தைப் போலவே மாதா மஹ வர்க்கத்தையும் தர்பணுதிகளால் ஸந்தோஷப்படுத்துகிருன். ஆதலால் அவனது அம்மான் பாட்டன் மாணவனுக்குச் சீர் செய்வதும், தங்கப் பூணல், வெள்ளிப் பூணல், பக்ஷயங்கள் அளிப்பதுமான முன்னேர் ஸம்ப்ரதாயம் அர்த்த புஷ்டியுள்ளதென ஸ்பஷ்டமாகும்.

இதுவரை ஸாதாரணமாக யக்ஞோபவீத தாரணம் நடந்தது. இதன் பின் குமாரபோஜனம். இம்மாணவனுடன் சில ப்ரும்மசாரிகளைச் சாப்பிடும்படி செய்வதும், அவர்களுக்குப் புது வஸ்த்ரமளிப்பதும் மற்ளெரு பழக்கம். வஸ்த்ர தானத்தால் ஸர்வ தேவதைகளும் ஸந்தோஷமடைகின்றனர். ஆயுளும் வ்ருத்தியாகின்றது. ஆதலால் மாணவனது ஆயுளைப் பெருக்கும் இந்த ஆசாரம் மிக ப்லாக்யமானது. ஆனல், குமார போஜனத்தில் பொங்கல், குழம்பு, கருவடாம், அப்பளாம் பக்ஷிப்பதுதான் சாஸ்த்ர விரோதமான கார்யமாகும். உப்பு, காரம் இல்லாமல் நெய், பால் கலந்த அன்னம் அளிக்க வேண்டுமென்பது சாஸ்த்ரம். குமார போஜனத்தில், மாணவனுக்குப் பிதா, மந்த்ரமின்றி, பரிஷேசனம், ஆபோசனம், ப்ராணுக்னிஹோத்ரம், உத்தரா போசனம் முதலியன செய்விப்பர். காயத்ரியைச் சொல்லி, பிதாவே அன்னத்தைப் ப்ரோக்ஷிக்க வேண்டும் என்பது சௌநக மஹர்ஷியின் மதமாகும். பின்னர் உபநயன அங்கமாக மாணவனுக்கு வபனம் விதிக்கப்பட்டுள்ளது. சௌளம் என்ற ப்ரகரணத்தில் இந்த விஷயம், மந்த்ரம், மந்த்ரார்த்தம், செய்யவேண்டிய முறை அனைத்தும் விளக்கப்பட்டிருப்பதை இங்கு நேயர் கவனிக்கவேண்டும்.

லௌகிக அக்னியை ப்ரதிஷ்டை செய்து ஆஜ்ய பாகம் வரை செய்யவேண்டும். பாத்ர ஸாதனம் செய்யும்

போது தர்ப்பை, ஜலம், கூர்ச்சம், வஸ்த்ரம், அஸ்ம (கல்), பலாஶ தண்டம், க்ருஷ்ணாஜினம், மேகலை முதலியவை களையும் ப்ரதிஷ்டை செய்யவேண்டும். பிறகு மாணவன் வலது கையில் ஒரு பலாஶ ஸமித்தைத் தந்து, அதை உபநயனம் செய்பவர் வாங்கி, ஆயுர்தா—நயேமம, ஆதேஹி என்று ஆசார்யன் கூற, குமாரன் அதை அக்னியில் வைக்க வேண்டும். மந்த்ரார்த்தம்: "ஹே தேவ, ஆயுளை அளிப்பவர் நீரே. ஸ்துதியை ஏற்றுக்கொண்டு ப்ரகாஶமான அவயவமுள்ளவராய், ஆஜ்யத்தைப் பின்புறமும் வைத்துக் கொண்டு ஆஜ்யபானம் செய்யும். ஆஜ்யம் பசுவினிடம் உண்டானது. அம்ருதம் போல் சுவையானது. அந்த ஸமித்தின் ஆஹுதியானது, பிதா புத்ரனைப்போல், இந்த மாணவனைத் தீர்க்காயுள் உள்ளவனாகச் செய்யும்." ஆயுர்தே—அக்னய இதம் நமம என்று உத்தேசஶத்யாகம் கூறவேண்டும். பிறகு அக்னிக்கு வடபுறத்தில் உள்ள கல்லில் மாணவன் வலது காலை வைக்கச் செய்து ஆதிஷ்டேமம்—யந: என்ற மந்த்ரம் கூறவேண்டும். ஆதிஷ்ட எனும் இம்மந்த்ரம் விவாஹத்தில் கல்யாணப் பெண் அம்மி மிதிக்கவும் பயன்படுகிறது. இதன் பொருள்: "குழந்தாய், இந்தக் கல்மீது நில். இதன் மேல் நின்று அந்தக் கல்போல் அசையாதிரு. உன்னை எதிர்த்துச் சண்டையிடுகிறவர்களை எதிர்த்து நில். அவர்களை அவமதிக்கும்படியான சக்தி உனக்கு உண்டாகட்டும்." பிறகு புது வஸ்த்ரத்தை ரேவதீஸ்த்வா—நவனம் என்ற மந்த்ரங்களால் மந்த்ரிக்க வேண்டும். மந்த்ர அர்த்தம்: "ஓ வஸ்த்ரமே, ரேவதி எனும் தேவதை நீ பருத்தியாய் இருக்கும் போது உன்னைப் பிய்த்தெடுத்தது. க்ருத்திகா தேவதை உன்னை நூலாக்கிற்று. தீய என்ற தேவதை நூலிலிருந்து வஸ்த்ரமாக நெய்தது. ஞ்ஞு எனும் தேவதை தறியிலிருந்து அறுத்தெடுத்தது. மற்றும் ஆயிரக் கணக்கான தேவதைகள் இரு புறங்களையும் ஒழுங்காக்கித்தந்தனர். அந்தஆயிரக் கணக்கான தேவதைகள் ஸவிதா எனும் தேவனுக்கு வஸ்த்ரமாக இருந்தனர். அந்த பெரிய தேவதைகள் ஸவிர்யனுக்கு வஸ்த்ரமாக இருந்தது போல், நீ இம்மாணவனுக்கு வஸ்த்ரமாக இரு."

மேலே யா அக்ருந்தன்—ஸம் வ்யயஸ்வ என்று மூன்று மந்த்ரங்களைக் கூறி மாணவனுக்கு வஸ்த்ரத்தை இடுப்பில் கட்டவேண்டும். (1) எந்த தேவதைகள் வஸ்த்ரத்தை முதலில் பருத்தியிலிருந்து எடுத்தனவோ, எவை நெய்தனவோ, எவை இருபுறமும் ஒழுங்காகும்படி செய்தனவோ, அந்த தேவதைகள் உன்னை நீ கிழவனாகும்வரை சூழ்ந்து கொள்ளட்டும். நீ தீர்க்காயுஸ்ஸாக இருந்து வஸ்த்ரத்தைத் தரித்துக்கொள். (2) ரேவதி முதலிய தேவதைகளே! இக் குமாரனை வஸ்த்ரத்தால் மூடுங்கள். மறையுங்கள். இவனை நூறு ஆயுஸ் உள்ளவனாகச் செய்யுங்கள். இந்த வஸ்த்ரத்தை ப்ருஹஸ்பதி ஸோமராஜாவுக்குத் தீர்க்காயுஸ்ஸாக இருந்து உடுத்திக்கொள்ளும்படி கொடுத்தாரல்லவா? (3) குழந்தாய்! இதை நீ கட்டிக்கொள். தீர்க்காயுஸ்ஸாக இரு. பந்துஜனங்களை ரக்ஷிப்பவனாக இரு. நூறாண்டு நல்ல வர்ச்சஸ் உள்ளவனாக ஜீவித்திருந்து தனதிகள் வ்ருத்தியடையும்படி வஸ்த்ர தாரணம் செய்துகொள்.

(இங்கு வஸ்த்ரத்தை மந்த்ரிக்க இரண்டு மந்த்ரம். தரிக்க மூன்று மந்த்ரம். பின்னர் ஒரு மந்த்ரமும் கூறப்பட்டன. இவை அனைத்தும் வஸ்த்ரத்தை உண்டுபண்ண பல தேவதைகள் கூடியிருப்பதாகவும், இதை முன்னம் ஸூர்யன் அணிந்ததாகவும், ப்ரஹஸ்பதி சந்த்ரனுக்கு அளித்ததாகவும் கூறி, சந்த்ரன் எப்படி ப்ரகாசமாகவும் நீண்ட ஆயுள் பெற்றவனாகவும் இருக்கிறானோ அங்ஙனமே இம் மாணவன் இருக்கவேண்டும் என்றும் கூறுகின்றன. இதனால் எங்கும், எக்காலத்திலும், எக்கார்யத்திற்கும் தேவதைகள் ஸஹாயம் இருக்கிறது என்ற தத்வமும் மாணவன் தீர்க்காயுளாகவும், ப்ரகாசத்துடனும் இருக்கவேண்டும் என்ற ப்ரார்த்தனையையும் மஹரிஷிகள் விளக்கி இருக்கின்றனர். இவ் வஸ்த்ரத்தை மந்த்ரத்துடன் மாணவன் இடுப்பில் நாபியின் மேலே, தொங்கவிடாமல் சுற்றிக்கொள்ளவேண்டும். அச்சமயம் சிறுவயதாக இருந்தால் 8, 9, 10 வரை கௌபீனத்தை உடுத்திக்கொண்டு துடை திறந்திருப்பதற்காக வெட்கப்படாமல் இருப்பான்.

அதற்குமேல் வயதானவன் கௌபீனம் அணிந்திருந்தாலும், பலர் எதிரில் முன் கூறியபடி அரிய வெட்கப்படுவது ஸஹஜம். பெண் குழந்தைகளுக்கு வெட்கப்பட ஆரம்பிப்பதற்கு முன் விளையாடும் காலத்திலேயே மணம் செய்யவேண்டும் எனக் கூறியதுபோல் மாணவரும் வெட்கப்பட ஆரம்பிப்பதற்கு முன்பேயே உபநயனம் செய்யவேண்டும்.)

வஸ்த்ரம் அணிந்தபின் பரிதம்—ஜீவன் என்ற மந்த்ரத்தைக் கூறி ஜபிக்கவேண்டும். மந்த்ரார்த்தம்: “நீ இந்த வஸ்த்ரத்தை, க்ஷேமமாக இருக்கும்பொருட்டு தரித்துக் கொண்டாய். இதை அணிந்து ஆப்தர்களான க்ஞாதிகளுக்கு ரக்ஷகனாக இரு. நூறாண்டு ஜீவித்திரு.” பிறகு முஞ்ஜிப் புல்லினால் செய்யப்பட்ட மேகலை என்பதை மூன்று சுற்றாக ப்ரதக்ஷிணமாய் இடுப்பில் சுற்றவேண்டும், (சில விடங்களில் ஸாதாரண தர்ப்பையைத் திரித்து ஒரே சுற்றாகக் கட்டுவர். ஶ்ரத்தை உள்ள க்ருஹஸ்தர் முன்னதாகவே உபாத்யாயரிடம் சொல்லி நல்ல முஞ்ஜிப்புல்லைக் கொண்டு மூன்று சுற்று வரும்படி பின்னச் சொல்லவேண்டும்.) மௌஞ்ஜி அணிய மந்த்ரம்: இயம்—மாரிஷாம். பொருள்: “இந்த மௌஞ்ஜி துர்வசனங்களை அகற்றிக்கொண்டு, அழகிய வீட்டைப் பாவனமாக்கிக் கொண்டு நம்மை வந்தடைந்தது. அன்றியும் இது ப்ராண அபானங்களுக்கு பலத்தை உண்டுபண்ணிக்கொண்டு தேவர்களுக்கு ப்ரியமாயும் அழகாயும் இருக்கிறது. மேலும், இம்மேகலை யக்ஞத்தை அல்லது ஸத்யத்தை ரக்ஷிக்கின்றது. தபஸ்ஸை நன்றாகக் காக்கின்றது. ராக்ஷஸர்களைக் கொல்கின்றது. ஶத்ருக்களை அவமதிக்கின்றது. அத்தகைய அம்மேகலை நமக்கு நான்குபுறத்திலும் ப்ரதக்ஷிணமாகச் சூழ்ந்திருக்கட்டும். மங்களமான மேகலையால் ரக்ஷிக்கப்பட்ட நாம், ஓ மேகலே, உன்னைத் தரித்துக்கொண்டு, நாம் துன்பம் அடையாமல் இருக்க வேண்டும் என வேண்டுகிறோம்.

பிறகு, மித்ரஸ்ய — நஹேதம் என்ற மந்த்ரங் கூறி க்ருஷ்ணாஜினத்தைத் தரிக்கவேண்டும். மந்த்ர அர்த்தம்:

"ஸூர்யனுக்குக் கண்ணாக இருக்கிறாய். அத்யந்தம் பல முள்ளதான தேஜஸ்ஸாக இருக்கிறாய். யசஸ்ஸை அளிப்பதாகவும், வ்ருத்தி உள்ளதாகவும், ப்ரகாச முள்ளதாகவும், துதிக்கத்தக்கதாகவும் அன்னத்தை அளிப்பதாகவும் இருக்கின்ற இந்த மான்தோலை நான் தரிக்கிறேன்." இம் மந்த்ரங்களைக் குரு மாணவனுக்கும் சொல்லி வைக்க வேண்டும்.

அக்னிக்கு வடபுறத்தில் வைக்கப்பட்ட அம்மிமீது நின்று, மாணவன் வஸ்த்ரம், மேகலை, க்ருஷ்ணாஜினம் இவைகளை அணிந்தான். பிறகு அக்னிக்கு வட புறத்தில் தர்ப்பையைப் பரப்பி அதில் மாணவன் மேற்கு முகமாக அமரவேண்டும். குரு கிழக்கு முகமாக இருந்து மந்த்ரத்தைச் சொல்லி வைக்கவேண்டும். அதற்கு ஆகந்த்ரா-க்ருஹேப்ய: என்ற மந்த்ரம். இதன்பொருள்: "எனக்கு அபிமுகமாக வருகின்ற ஆசார்யனுடன் சேர்ந்தேன். அவர் அருளால் யமனை என் அருகே வராமல் விரட்டி விட்டேன். அரிஷ்டங்களைக் கடப்பேன். ஆசார்யனுக்கும் க்ஷேமம் உண்டாகட்டும். க்ருஹஸ்தாஸ்ரமம் செல்லும் வரை எனக்கும் க்ஷேமம் உண்டாகட்டும்." பிறகு குரு, தன் கையில் ஜல அஞ்ஜலியை எடுத்து அதை மாணவன் கையில் விடவேண்டும். அது கீழே விழுந்த பின் அந்த ஜலத்தால் மந்த்ரத்தைக் கூறி ஒரு முறையும், மந்த்ரமில்லாமல் இரு முறையும் மாணவன் தன்மீது ப்ரோக்ஷித்துக் கொள்ள வேண்டும். ஸமுத்ர—ஆயன்: இந்த ப்ரோக்ஷண மந்த்ர அர்த்தம்: எந்த ரஸ்மிகளுடன் எங்கள் பித்ருக்களான அங்கிரஸர்கள் முன்னம் அம்ருத பானம் செய்தார்களோ, அந்த ரஸ்மியுடன் கூடிய ஜல பிந்துக்கள் என்மீது விழுந்தன. அவைகளால் யான் அம்ருதத்தை அடையவேண்டும். (முன்னோரிடம் நாம் கொள்ள வேண்டிய பக்தியை இது விளக்குகிறது). அக்னி—நவ என்ற மந்த்ரங்களைக் கூறி குரு சிஷ்யனது கையை மேல் முகமாக அக்ரபித் என்றபோதெல்லாம் உருவி விடுவது போல் செய்யவேண்டும்.

மந்த்ர அர்த்தம்: "நான் உனது கையைப் பிடிப்பது அக்னியே பிடிப்பதுபோலாகட்டும். ஸோமன், ஸவிதா,

ஸரஸ்வதி, பூஷா, அர்யமா, அகும்ஶர், பகர், மித்ரர் ஆகிய இவர்கள் உன் கையைப் பிடிக்கட்டும். தர்மத்தினல் நீ மித்ரனுக்கு ஸமமானவனுகிருய். அக்னியே உனக்கு ஆசார்ய ஸ்தானத்தில் இருக்கட்டும்." குரு தனது கையினல் தன்னைச் சரணமடைந்த மாணவனைப் பிடித்து அவனை மாணவனுக ஏற்றுக் கொள்கிருர். தான் அவனைப் பிடிப்பது முன் கூறிய தேவதைகளே பிடித்ததுபோலாகட்டும். அக்னியே ஆசார்யனுக இருக்கட்டும். என குரு கோருகிருர். அப்படித் தான் அவனைத் தன் கையால் பிடித்தது தேவர்களே பிடித்தது போலாகட்டும் என்று ப்ரார்த்திப்பதுடன், அந்த தேவர்களிடம் அம்மாணவனை ரக்ஷிப்பதற்காக ஒப்படைக்கிருர். அதற்கேற்ற மந்த்ரமும் அதன் பொருளும்: அக்னயே—ய்யஸௌ. இம்மந்த்ரத்தில் 'அஸௌ' என்று வரும் இடங்களில் மாணவனது பெயரை ஶர்மாவுடன் கூறவேண்டும். ஓ—ஶர்மன், உன்னை ரக்ஷிக்கும் பொருட்டு அக்னியிடம் உன்னைக் கொடுக்கிறேன். ஸவிதா, ஸரஸ்வதி, ம்ருத்யு, யமன், கதன், அந்தகர், ஜலதேவதை, ஒஷதி, வைஶ்வாநரருடன் கூடிய ப்ருத்வி ஆகியவர்களிடம் நன்கு உன்னைக் காப்பாற்றுவதற்காக அவர்களிடமே உன்னை யான் ஒப்படைக்கிறேன். பெற்ருேர் தன்னிடம் (குருகுலத்திற்கு) அனுப்பும் மாணவனை குரு எவ்வளவு ஜாக்ரதையாக தேவர்கள் மூலம் காப்பாற்றுகிருர் என்பதையும் மனிதனல் ரக்ஷிக்கப் படுவதை விட தேவர்களால் காக்கப்படுவதே சிறந்தது என்பதையும் இந்த மந்த்ரம் விளக்கிக் காட்டுகிறது.

அடுத்தபடி, குரு மாணவனை தேவஸ்—அஸௌ என்ற மந்த்ரத்தைக் கூறி அருகே அழைத்துக் கொள்கிருர். இம் மந்த்ரத்தில் காணப்படும் உபகயே என்ற சொல்லைக் கொண்டுதான் இந்த ஸம்ஸ்காரத்திற்கு உபநயனம் என்ற பெயர் தோன்றிற்று. மந்த்ரார்த்தம்:—ஶர்மன். ஸவிதா எனும் தேவனது அநுக்ஞையின் மீது உன்னை யான் என்னருகே ஏற்றுக்கொள்கிறேன். மாணவனைக் குரு, தன்னருகே, வேதத்தின் அருகே, காயத்ரின் அருகே, காயத்ரியின் பொருளான பரமாத்மாவினருகே அழைத்

துச் செல்கிறுர் என்ற பல பொருள்கொண்டு 'உபநயனம்' என்ற சொல் அமைந்துளது. இதைக்கொண்டு, வேத வித்யை கற்க வேதம் கூறும் ஸம்ஸ்காரம் இது. விவாஹாதிகளில் செய்வதுபோல் கேவலம் உத்ஸவம், விளையாட்டு முதலியவைகளுக்கு இதில் இடமில்லை என்பது ஸ்பஷ்டமாகிறது.

ஸுப்ரஜா:—போஷை: என்ற மந்த்ரத்தைக் குரு சிஷ்யனது வலது காதில் ஜபிக்கவேண்டும். மந்த்ர அர்த்தம்: ஒ ப்ரும்மசாரி, நல்லவனும், வீரனும், வர்ச்சஸ்வியும், போஷாக்குள்ளவனுமான குழந்தை உண்டாகி, நீ நல்லப்ரஜை உள்ளவனுகவும், நல்ல வீரனுகவும், வர்ச்சஸ்வியாகவும் போஷணை உள்ளவனுகவும் ஆவாய். இங்கு குரு சிஷ்யனது கல்விக்கு மாத்ரம் பொறுப்பாளி யில்லாமல், அவன் குடும்ப வ்ருத்திக்கும் விசேஷமான பல நன்மைகளுக்கும் முழுப் பொறுப்பாளியாக இருக்கிறுர் என எடுத்துக் காட்டுகிறது இம்மந்த்ரம். தந்தையே உபநயனம் செய்தால் கேட்கவேண்டுமா? மேலே சிஷ்யன் "ஹே குரோ ஸவிதா எனும் தேவதையினுல் அனுமதிக்கப்பட்டு நீர் என்னை உமது ஸமீபத்திற்கு அழைத்துக்கொள்ளும். நான் வேத அத்யயனம் செய்வதற்குரிய வ்ருதத்தை — ப்ரும்மசர்யத்தை—அடைந்து விட்டேன்;' என்ற பொருள்கொண்ட ப்ரும்மசர்ய—ப்ரஸூத: என்ற மந்த்ரத்தைக் கூறவேண்டும். இம்மந்த்ரத்தில், யார் ப்ரும்மசாரி? ப்ரும்மசாரி என்ன செய்ய வேண்டும்? என்பது நன்கு எடுத்துக் காட்டப்படுகிறது. வேதத்திற்கே ப்ரும்மம் என்று பெயர். அந்த வேதத்திற்குத் தாய்போன்ற காயத்ரிக்கும் ப்ரும்மம் என்று பெயர். வேதத்தாலும், வேத ஸாரமான காயத்ரியாலும், வேதாந்தத்தாலும் கூறப்படும் தெய்வத்திற்கும் ப்ரும்மம் என்று பெயர். அந்த மூன்று வகையான ப்ரும்மத்தினிடம் ஸஞ்சாரம் செய்பவர் ப்ரும்ம சாரியாவர்.

பிறகு குருவின் கேள்விக்கு ஶிஷ்யன் ஸமாதானம் கூறும் வகையில் மந்த்ரம் அமைந்துளது. 'நீ என்ன

பெயர் உள்ளவன்? என குரு கேட்க, தன் பெயரைக் கூறி, சிஷ்யன் இன்ன பெயருள்ளவன் எனச் சொல் கிறான். பிறகு குரு "நீ யாருடைய ப்ரும்மசாரியாக இருக்கிறாய்?" என்று கேட்க, "ப்ராணனுக்கு ப்ரும்ம சாரியாக இருக்கிறேன்" என்கிறான். இந்த மந்த்ரத்தி லிருந்து பல விஷயங்கள் புலப்படுகின்றன. "கோநா மாஸி?" உனக்கு என்ன பெயர்? என்ற கேள்வி ஏற்கனவே, அதாவது அதற்குரிய காலத்தில் ஜாதகர்மா ஆனவுடன் நாமகரணம் ஆய்விட்டதென்பதைக் காட்டு கிறது. இப்போது நடப்பதுபோல், உபநயனத்தன்றே நாம கரணம் நடத்தி இருந்தால், சில நாழிக்குள் அதை மறந்து உன் பெயர் என்ன என்று கேட்கவேண்டிய அவஸ்ய மிராது. அதனால் நாமகரணம் காலத்தில் நடந்திருக்கும் என்பது தெளிவாகிறது. அன்றியும் உபநயன மந்த்ரம், மந்த்ரார்த்தம், காயத்ரியின் பொருள் தெரியாதவன் ஒருவனுக்கு உபநயனம் செய்து வைப்பது அக்குமாரனை இருளில் தள்ளுவதாகும் என்ற வசனப் படி, இவைகளை அறியாத தகப்பன் உபநயனம் செய் வதைவிட, இவைகளை நன்கு உணர்ந்த குருவைப் போன்றவர் உபநயனம் செய்து வைக்க வேண்டும் என்ற ஒரு மஹரிஷியின் கக்ஷிக்கு இம்மந்த்ரம் பல மளிப்பது போலாகும். எப்படி? குருவினிடம் புதியவ னை மாணவன் தனக்கு உபநயனம் செய்து வைக்க வேண்டுமென்று வந்தபோது, தந்தையாயிருந்தால், பிள்ளையின் பெயர் தெரியுமல்லவா? நீ யார் எனக் கேட் பாரா? அவன் பெயர் தெரியாததால், நீ யார், உன் பெய ரென்ன என்று கேட்க அவஸ்யமுண்டு. அன்றியும் நீ யார் என்ற கேள்விக்கும் பின்னால் குரு சொல்லும் உப தேச மந்த்ரங்களுக்கும் பொருள் விளங்கும்படி இளமை யிலேயே வேதம் தவிர மற்ற காவ்ய க்ஞானம் இருந் திருக்கும் எனத் தெரிகிறது. "யாருடைய ப்ரும்ம சாரி?" என்ற கேள்விக்கு "ப்ராணனுடைய ப்ரும்ம சாரி" என்கிறான் சிஷ்யன். இங்கு ப்ராணன் என்பது ஆத்மாவாகும். முன் கூறிய வேதம், காயத்ரீ, பரமாத்மா

அல்லது பரப்ரும்மம் என்ற மூன்றில் எதை நாடுகிறாய்? என்ற குருவின் கேள்விக்கு "பரமாத்ம ஸ்வரூபத்தையே நாடுகிறேன்" என்று சிஷ்யன் சொல்லும்போது, ப்ரதானமான பரமாத்மாவை உபதேசி எனில் க்ரமமாக காயத்ரீ, வேதம் இவைகளும் கூறப்படும் என்பதும் ஸ்பஷ்டமாகிறது.

பிதா சொல்ல வேண்டிய மந்த்ரம்:—ஶர்ம ஏஷதே—ஸஞ்சர ஶர்மன்—"ஹே ஸூர்ய தேவ, உன்னுடைய ப்ரும்மசாரி இவன். இவனை நீர் ரக்ஷியும். அவன் உமது புத்ரன். அவன் மரணம் அடையாதிருக்கட்டும். தீர்க்காயுஸ்ஸாக இருக்கட்டும். அக்னி, வாயு, ஸூர்யன், சந்த்ரன், ஜலம் இவைகள் எந்த வகையான நன்மையைப் பெற்றிருக்கின்றனவோ அந்த நன்மையை இந்த மாணவன் பெறட்டும்." அடுத்த மந்த்ரம்:—அத்வநாம்—பாரமஶீய. அர்ச்சிராதி வழிகளுக்குத் தலைவனான ஸூர்ய! உமது அருளால் இம்மாணவன் துன்பமில்லாமல் ப்ரும்மசர்ய மார்க்கத்தை அடையட்டும்.

அக்னி ப்ரதிஷ்டை செய்து ஆஜ்ய பாகம்வரை முடித்துப் பின்னர் உபநயனத்திற்குரிய முக்ய ஹோமங்கள் 11 செய்ய வேண்டும். மந்த்ரத்தை ஆசார்யன் கூறி, மாணவன் கையைப் பிடித்துக்கொண்டு ஹோமம் செய்ய வேண்டும். சில மந்த்ரம் மாணவனுக்கும் சில இருவருக்குமாம். (1) யோகே—ஶூதயே ஸ்வாஹா. குதிரையை ரதத்தில் பூட்டும்போது எப்படி அதன் வேகம் வ்ருத்தியாகின்றதோ அப்படி ஒவ்வொரு கார்யத்திலும் இந்த்ரனது சக்தி வ்ருத்தியாகும். அத்தகைய இந்த்ரனை நாங்கள் அவருக்கு தோழனைப்போலிருந்து ஒவ்வொரு கார்யத்திலும் எங்களை ரக்ஷிக்கும் பொருட்டு கூப்பிடுகிறோம். இந்த்ராய இதம் நமம. (2) இமமக்ன—ஸத்ஸ்வாஹா. அக்னி வருண ஸோமாதிப்ய: வீஶ்வேப்யோ தேவேப்ய; இதம் நமம. ஹே அக்னே, இம்மாணவனை ஆயுஷ்மானாகவும் வர்ச்சஸ்வியாகவும் செய்யும். ஹே, வருண, இவனுக்கு விவாஹமானபின் ப்ரியமான புத்ரனை அளியும். ஓ ஸோம

ராஜனே, நீங்களும், ஓ அதிதே நீங்களும், இவனுக்குத் தாயைப்போலிருந்து ஸுகத்தைத் தாருங்கள். ஓ விஸ்வே தேவர்களே, நீங்களும் இவன் தீர்க்காயுஸ்ஸாக இருந்து ஸுகத்தை அனுபவிக்கும்படி செய்யுங்கள். (3) ஶத மின்னு—நந்தோ ஸ்வாஹா. தேவேப்ய இதம். நமம. ஓ தேவர்களே. எங்களுக்கு மிக அல்பமாக நூறு வயதே உளது. அந்த வயதிலும் சிறிதுகாலம் சிறுவர்களாக இருக்கிறோம். சிறிதுகாலம் சிறுவர்களுக்குப் பிதாவாக இருக்கிறோம். ஆயுளே அல்பம். அதில் இளமை, கிழத் தனம், குடும்பக் கவலை ஆக பல கஷ்டம். இதனிடை யிலே அபம்ருத்யுவும் நேராதபடி தீர்க்காயுஸ்ஸாகச் செய் யுங்கள். (4) அக்னிஷ்ட—ஆநநாது ஸ்வாஹா. அக்னீந்த்ர மருத் ஆதித்ய வஸுப்ய: இதம் நமம. அக்னி நமது ஆயுளைச் சிறந்ததாகச் செய்யட்டும். புஷ்டியை வ்ருத்தி செய்யட்டும். இந்த்ரன் ஆதித்யர்களுடனும் வஸுக்க ளுடனும் நமக்குப் புஷ்டியைத் தரட்டும். (5) மேதாம்— மேஸ்வாஹா: அங்கிரோப்ய: ஸப்தர்ஷிப்ய: ப்ரஜாபதயே அக்னயே இதம் நமம. எனக்கு அங்கிரஸ்ஸுகள் மேதையைத் தரட்டும். ப்ரஜாபதி, அக்னி மேதையைத் தரட்டும். (6) அப்ஸராஸு—இஹஸ்வாஹா. மேதா யஶோப்யாம் இதம் நமம. அப்ஸரஸ்ஸுகளிடம் உள்ள மேதையும், கந்தர்வரிடமுள்ள யஶஸ்ஸும், தெய்வீக மானதும், மானுஷிகமுமான மேதை என்னை வந்து அடையட்டும். (7) இமம்—ராசகே ஸ்வாஹா. வருணாய இதம் நமம. ஹே வருண, இந்த எனது ஆஹ்வானத் தைக் கேளும். கேட்டு இப்பொழுதே என்னை ஸுகப் படுத்தும். உம்மை யான் பாலகன் என துதிக்கிறேன். (8) தத்வா—ப்ரமோஷீஸ்வாஹா. வருணாய இதம் நமம. ஓ வருண! பலரால் துதிக்கப்படும் நீர் நமது ஆயுளை அபஹரிக்காதீர். கோபமின்றி சாந்தராக நாம் கூறுவதை அறியும். பின்சொல்வதை யான் உம்மிடம் யாசிக்கிறேன். மந்த்ரத்தால் நீர் துதிக்கப்படுபவர். யக்ஞம் செய்பவர் எல்லோரும் ஹவிஸ்ஸுகளால் உம்மையே வேண்டுகின் றனர். (9) த்வன்னோ—மன் ஸ்வாஹா. அக்னீ வருணப்

யாம் இதம் நமம. ஓ அக்னே, நீர் எல்லாம் அறிந்தவர். என்மீது வருண ராஜனுக்கு இருக்கும் கோபத்தை அகற்றும். நீர் யாகம் செய்பவரில் சிறந்தவர். நன்ருக ஹவிஸ்ஸை எடுத்துச் செல்பவர். ப்ரகாசமுள்ளவர். எனது பகைவரால் உண்டாகும் கபடம், பந்தம், ஹிம்ஸை முதலியவைகளை என்னிடம் வராதபடி அகற்றும். (10) ஸத்வம்நோ—ரதி ஸ்வாஹா. அக்னி வருணப்யாம் இதம் நமம. ஹே அக்னே, நீர் தேவர்களில் முதல்வர். இந்த இரவு விடியும்போது என்னைக்காக்க என் அருகில் இரும். வருணன் என்மீது அவன் பாஶத்தை வீசாதபடி செய்யும். எனது இஷ்டத்தைத் தாரும். நான் அளிக்கும் ருசியான ஹவிஸ்ஸைச் சாப்பிடும். நான் உம்மை அடிக்கடி அழைக்கும்படி இரும். (11) த்வமக்னே-பேஷஜக்கு ஸ்வாஹா. அக்னயே அயஸ இதம் நமம. ஓ அக்னே, நீர் பக்தருக்குத் தேடி அடையத்தக்கவராக இருக்கின்றீர். குற்றமற்றவரான நீர் எங்கள் மனதிற்கும் ஹிதமாயிருக்கிறீர். அத்தகைய நீர் நாங்கள் அளிக்கும் ஹவிஸ்ஸைத் தேவர்களுக்குத் தருகின்றீர். அப்படிப்பட்ட நீர் எங்களுக்கு நன்மையைத் தாரும்.

இந்த ஹோமம் ஆனபின் இதற்கு உத்தராங்கமாக ஜயாதி ஹோமங்களைச் செய்யவேண்டும். பிறகு, இந்த உபநயன கர்மாவில் யஜுர்பேஷ ப்ராயஶ்சித்தம் கரிஷ்யே. புவஸ்வாஹா வாயவ. இதம் நமம. அனுக்ஞாதம்—ஸ்வாஹா என்ற 3 ஹோமங்களையும் செய்ய வேண்டும். பரிஷேசனம், ப்ரணீதா தீர்த்த ப்ரோக்ஷணம் தாய்தந்தை புத்ரன் ஆகிய மூவர்க்கும்.

ப்ரும்மோபதேஶம்

ஆசார்யன் மாணவனுடன், மனைவியுடனும், 'நமஸ் ஸதஸே' என்று பெரியோர்கள் மீது அக்ஷதையைப் போட்டு, நமஸ்காரம்செய்து, தக்ஷிணை, தாம்பூலத்தைத் தட்டுடன் கையில் எடுத்துக் கொண்டு, அஶேஷே—ஸ்விக்ருத்ய என்று கூறி, பெரியோருக்குத் தக்ஷிணை தரவேண்டும். "ஓ பரிஷத்தே, தங்கள் திருவடியில் ஸமர்ப்பித்த தக்ஷிணை மிகச்சிறியதாக இருந்தாலும், யதோக்த

தக்ஷிணைபோல் தாம்பூலத்தையும் ஏற்றுக்கொண்டு, ப்ரும்மோபதேஶ யோக்யதைஉண்டாகவேண்டும் என அருள் புரிக" என்பது அதன் பொருள். இது ப்ரும்மோபதேஶம் பெறுவதற்கு மாணவனுக்கும், உபதேஶம் செய்யத் தனக்கும் யோக்யதை உண்டாக வேண்டுமென ப்ரார்த்திப்பதற்காக முக்ய தக்ஷிணை அளிப்பதால், அந்த காயத்ரியை நன்கு ஜபிப்பவரும், அத்யயனம் செய்தவரும், ஶிஷ்டர்களுமான பெரியோர்களுக்கு முழுத்தேங்காயும் ஶக்திக்கேற்ற தக்ஷிணையும் தரவேண்டும். இச்சமயம் வேஷ்டியும் கொடுக்கலாம். பிறகு சொல்லும் மந்த்ரம்: நக்ஷத்ரே—குமாரஸ்ய, ஜன்ம ப்ரப்ருதி—யோக்யதா ஸித்திம் அனுக்ரஹாண இந்த நக்ஷத்ரம், ராசியில் பிறந்த இந்த ஶர்மாவுள்ள என் குமாரனுக்கு, பிறந்தது முதல் இதுவரை, பால்ய வயதில் அறியாமையால் தாய் தந்தைகளை உபேக்ஷை செய்ததால் உண்டானதும், தனது வர்ணம் அல்லது வேறு வர்ணத்து ஸ்த்ரீகளது பாலையும், தன் தாயின் பாலையும் உட்கொண்டதால் உண்டானதும், தகாதவருடன் உட்கார்ந்து உண்டது, உச்சிஷ்டம் அருந்தியது, பங்க்திக்கு ஏற்காதவருடன் உட்கார்ந்து உண்டது, தன் ஜாதியாரையும், பிற ஜாதியார் முதலியவர்களையும் தீண்டியது, அந்தந்த காலத்தில் தக்க ஶரீர ஶுத்தி செய்து கொள்ளாதது முதலியவைகளால் உண்டானதுமான பாபங்கள் அகன்று, மாணவனுக்குக் காயத்ரியை உபதேஶம் பெறவும், எனக்கு உபதேஶிக்கவும் யோக்யதை உண்டாக வேண்டுமென தாங்கள் அருள் புரியுங்கள்," என முன் கூறிய மந்த்ரத்தால் வேண்டுகிறோம்.

தக்ஷிணையைப் பெற்ற ஸாதுக்கள் "ததாஸ்து. யோக்யதா ஸித்தி ரஸ்து" என அநுக்ஞை தருவார்கள். அதைப் பெற்றுக்கொண்டு "ப்ரும்மோபதேஶ முஹூர்த்த லக்நாபேக்ஷையால் ஆதித்யன் முதலான நவக்ரஹங்களது ப்ரீதியை ஸம்பாதிப்பதற்காக க்ரஹப்ரீதி என்று தக்ஷிணை தரவேண்டும். அக்னிக்கு மேற்கு புறத்தில் வடக்கு நுனியாக கூர்ச்சத்தை வைத்து மாணவன்

குருவினிடம் "கூர்ச்ச:" என்று கொடுக்கவேண்டும். பிதா "ஸுகூர்ச்ச:" என்று கூறி 'ராஷ்ட்ர ப்ருதஸி—யேஷம்' என்றும் கூறி அதன் மீது அமரவேண்டும். "ஒ கூர்ச்சமே, நீ ராஜ்யத்தையே வஹிக்கும் ஶக்தி வாய்ந்தவர். எங்கள் ஆசார்யனுக்கு ஆஸனமாக இரு. உன்னை விட்டு யான் பிரியாது இருக்கவேண்டும். (கூர்ச்சம் என்பதே குருச்சு அல்லது கூர்ச் என கூறப்படுகிறது போலும்). ஆசார்யன் பணிவிடை செய்ய அடிக்கடி ஆஸனத்தை யான் அவருக்கு அளிக்கவேண்டும். பிறகு, குமாரன் மேற்கு முகமாக உட்கார்ந்து, குருவின் பாதங்களை அலம்பி, சந்தனத்தால் அலங்காரம் செய்து ஸ்வர்ணபுஷ்ப தக்ஷிணை அளித்து, தனது வலது கையினுல் அவருடைய வலது காலையும், இடது கையால் இடது காலையும் பிடித்துக் கொண்டு, நமஸ்கரித்து, "ஸாவித்ரீம் போ அனுப்ருஹி" என ப்ரார்த்திக்க வேண்டும். ப்ரும்மா பத்னீ இருவரும் அருகிலிருக்க பட்டினுல் மாணவனையும் தங்களையும் மூடிக்கொண்டு மாணவனது வலது காதில் பிதா காயத்ரீ மந்த்ரத்தை உபதேஶிக்கவேண்டும்.

முதலில் ப்ரணவத்துடன் முதல் வ்யாஹ்ருதியைக்கூறி காயத்ரியின் முதல் பாதத்தையும், பிறகு இரண்டாவது வ்யாஹ்ருதியைக் கூறி இரண்டாம் பாதத்தையும், பிறகு மூன்ரும் வ்யாஹ்ருதியைக் கூறி மூன்ரும் பாதத்தையும், பின்னர் முதல் வ்யாஹ்ருதியைக் கூறி, காயத்ரியின் முதல் பாதம் இரண்டாம்பாதம் இரண்டையும் சேர்த்தும், பின்னர் இரண்டாவது வ்யாஹ்ருதியைக் கூறி மூன்ரும்பாதத்தையும், பின்னர் மூன்ருவது வ்யாஹ்ருதியைக் கூறி மூன்று பாதங்களையும் சேர்த்தும் உபதேசிக்க வேண்டும். இதேபோல் மாணவனைக் கூறும்படி சொல்லிவைக்க வேண்டும். "ப்ருஹ்மோபதேஶ முஹூர்த்தம் ஸுமுஹூர்த்தமாக இருக்கட்டும் என அநுக்ரஹம் செய்யுங்கள்" என பிதா கூறவேண்டும். ததாஸ்து ஸுமுஹூர்தோஸ்து' என ப்ராம்மணர் ஆசீர்வதிக்கவேண்டும்.

மாணவன் அவ்ருதமஸௌ—கோபாய என்ற மந்த்ரத்தைக் கூறி, மேல் உதட்டை ஜலத்துடன் தொட்டுத்

தடவி ஆசமனம் செய்யவேண்டும். காயத்ரீ மந்த்ர அர்த்தம்:—எந்ததேஜஸ் எல்லோராலும் த்யானம் செய்யத் தக்கதோ, அப்படிப்பட்ட தேவரான ஸூர்யனுடைய, மிக அழகானதும் பாபங்களை அகற்றுவதுமான தேஜோ மயமான ரூபத்தை த்யானம் செய்கிறோம். எந்த தேவர் நமக்கு தர்ம விஷயமான புத்தியைத் தூண்டுகிறாரோ. அவ்ருதம் என்ற மந்த்ர அர்த்தம்: நான் இந்த காயத்ரீ மந்த்ரத்தால் வ்ருத்தி அடைந்தேன். என்னுள்ளே இருக்கும் சிறந்த ஆத்மாவே! காயத்ரீ எனும் இந்த தனத்தைக் காப்பாற்று. ப்ரும்மண என்ற மந்த்ரத்தைக் கூறி, இரு காதுகளையும் தொடவேண்டும். அதன் பொருள் "ஓ கர்ணங்களே, காயத்ரீ எனும் மந்த்ரத்திற்கு நீங்கள் ஆணி போலிருங்கள். காயத்ரியே ஸாவித்ரீ எனப்படும். அதைப்பெற்ற பின் மாணவன் அந்த உத்தம தனத்தைக் காப்பாற்றும்படி தன் அந்தராத்மாவை வேண்டுகிறான். இரு காதுகளையும் பார்த்து, ஆணி அடித்தால் எப்படி பெட்டியிலுள்ளதை வெளியே எடுக்க முடியாதோ அப்படி காயத்ரீ மஹாமந்த்ரத்தை உள்ளேயே ஜாக்ரதையாக வைத்து ரக்ஷியுங்கள். கேட்ட வழியே மந்த்ரம் வெளிச் செல்லாதிருக்க வேண்டும் என மந்த்ரம் கூறுகிறது.

இதைக் கவனித்தால், காயத்ரியை எவ்வளவு மதிப்புடன் ஜாக்ரதையாக ரக்ஷிக்கும்படி வேதமே கூறுகிறது என நன்கு அறியலாம். ஆகையால் காயத்ரீ விஷயத்தில் நாம் மிக ஶ்ரத்தையுடன் நடக்கவேண்டும். அபஸ்வர மில்லாதபடியும், எழுத்துப் பிழை இல்லாதபடியும், பொருளையும் விளக்கி, குழந்தைகளுக்குச் சொல்லவேண்டியது பிதாவின் கடமையாகும். காயத்ரீ உபதேசமான பின்புதான் மாணவனுக்கு ஸந்த்யா வந்தனம், ஸமிதா தானம், வேதாத்யயனம் முதலிய கர்மாக்களில் அதிகாரம் ஏற்படுவதால், காயத்ரியையும் ஸந்த்யா வந்தனத்தையும் குழந்தைகள் ஶ்ரத்தையுடன் செய்யும்படி தூண்டுவது தந்தைக்கு மாத்ரமல்ல, தாய்க்கும் அது கடமையாகும்.

'பலாஶ தண்டத்தை ஸுஶ்ரவ:—ஸூயாஸம் என்ற மந்த்ரத்தைக் கூறி, தரிக்கவேண்டும். மந்த்ர அர்த்தம்:

தேவர்கள் கூறிய ப்ருஹ்மவாதத்தைக் கேட்டு பலாமரம் ஸுஸ்ரவஸ் என்ற பெயரைப் பெற்றது. அத்தகைய ஓ ஸுஸ்ரவஸ் எனும் பலாஶ தண்டமே! உன்னைப்போல் நான் ஸுஸ்ரவஸ்ஸாக ஆகவேண்டும். நல்ல வேத விஷயங்களைக் கேட்கவேண்டும். நீ எப்படி தேவர்களது நிதியைக் கார்க்கின்றாயோ அங்ஙனமே நானும் ப்ராம்மணர்களது நிதியான வேதத்தைக் கார்க்கவேண்டும். ஸ்ம்ருதிஞ்சமே—ப்ரயாஸம் என்ற மந்த்ரத்தை மாணவனுக்குச் சொல்லி வைக்கவேண்டும் மந்த்ர அர்த்தம்:—நினைவு வேண்டாததை மறப்பது, தோஷத்தை நிந்திப்பது, குணத்தை நிந்திக்காமலிருத்தல், நல்ல விஷயத்தில் ஶ்ரத்தை, மற்றதில் அஶ்ரத்தை, நற்கல்வியை அறிவது, மற்றதை அறியாதது, நல்லதைக் கேட்பது, மற்றதைக் கேளாமலிருத்தல், ஸத்யம், அவஶ்யமானதில் அந்ருதம், பிக்ஷாசரணாதி தபஸ், ஶக்தியில்லாத தினத்தில் தவமில்லாமை, நியம அத்யயனம், வ்ருதம், அஶக்தனான போது அவ்ருதம், இம்மாதிரி இரண்டு இரண்டுகளாக அமைந்த எல்லாம் எனக்கு வ்ருதமாக இருக்கட்டும்.

ப்ராம்மணர்களுக்கு வேத விஷயமாக உள்ள வ்ருதமும், இந்த்ரன், ப்ரஜாபதி, தேவன், பிதா, பித்ரு ராஜன், கந்தர்வன், அப்ஸரஸ் இவர்களுடன் கூடி அக்னி பகவானுடைய வ்ருதமும் எனக்கு வ்ரதமாகும். என்னிடம் எனக்குத் தோன்றிய வ்ரதம் (அதாவது ஆசார்யர் மற்றொரு மாணவனை ஒரு கார்யமாக அனுப்பும்போது நானே அந்த வேலையைச் செய்வது) முதலிய வ்ரதங்கள் என்னால் கைக்கொள்ளத்தக்கனவாம். அக்னியின் வ்ரதம் வ்ரதத்தைக் காப்பதாம். இந்த்ரனது வ்ரதம் உலகில் ப்ரதான மாயிருத்தல். ப்ரஜாபதி வ்ரதம் படைத்தல். தேவ வ்ரதம் தானம் செய்தல். தேவர்களை ஸந்தோஷப்படுத்துவது தேவராஜ வ்ரதம். ப்ரியமாகப் பேசுதல் மனுஷ்ய வ்ரதம். குடிகளை ரக்ஷிப்பது மனுஷ்ய ராஜ வ்ரதம். புத்ரோத்பத்தி செய்வது பித்ருக்களது வ்ரதம். ஸமமாக இருத்தல் யமனது வ்ரதம். தேவர்களைத் துதிப்பது கந்தர்வர்களது வ்ரதம். நன்கு பரிசரணை செய்வது

அப்ஸரஸ்களின் வ்ரதம். இத்தகைய வ்ரதங்கள் ஒரு மனிதனது வாழ்க்கைக்கு மிக அவஶ்யமானதால், நல் வாழ்க்கைக்கு வழிகாட்டியான ப்ரும்மசர்ய வ்ரதத்தி லேயே இவை அனைத்தும் வேண்டப்படுகின்றன. ஆதலால் உபநயனம் என்பது கேவலம் ஜீவனுக்கு ஸம்ஸ்காரத்தை அளிக்கும் அத்ருஷ்ட கர்மா மாத்ர மல்ல. இல்லற வாழ்க்கைக்கு மிக அவஶ்யம் வேண்டிய ஸகல பாக்யங் களையும் தேவர்களிடம் வேண்டுகின்ற த்ருஷ்ட பலமளிக் கும் கர்மாவுமாகும்.

உநாயுஷா—அநு என்ற மந்த்ரத்தைக் கூறி மாணவன் எழுந்திருக்கவேண்டும். மந்த்ரார்த்தம்:—ஓ தேவர்களே, ஆயுஸ்ஸுடனும், எனக்கு ஏற்பட்ட நூறு ஆயுஸ்ஸுட னும், பலத்தை அளிக்கும் ஓஷதி ரஸத்துடனும், பர்ஜன் யனுக்குள்ள ஶுஷ்மம் என்ற பலத்துடனும் கூட நான் எழுந்திருக்கிறேன். (குருவினிடம் காயத்ரீ உபதேசத்தை உட்கார்ந்தபடியே கேட்டு, மாணவன் எழுந்திருக்கும் போது, தான் தீர்க்காயுஸ்ஸாக இருந்து நல்ல பலத்துடன் இந்த உத்தம காயத்ரியை நன்கு ஜபிக்கவேண்டும் என ப்ரார்த்திக்கிறான்). தச்சக்ஷுர்—ஸூர்யந்த்ருஶே என்ற மந்த்ரங்களால் ஸூர்யனை உபஸ்தானம் செய்து தர்சிக்க வேண்டும். மந்த்ர அர்த்தம்: ஸூர்ய தேஜஸ்ஸானது மிக ப்ரஸித்தமானது. உலகிற்குக் கண்போன்றது. தேவேந்த்ரனால் அமைக்கப்பட்டது. கிழக்கு திக்கில் பரிசுத்தமாகத் தோன்றுவது. நூறாண்டு அந்த ஜ்யோ திஸ்ஸை யான் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டும். நூறாண்டு செல்வத்துடன் ஜீவித்திருக்கவேண்டும். புத்ர பௌத்ராதிகளுடன் இன்பத்தை அனுபவிக்கவேண்டும். ஐஶ்வர்யத்துடன் இருக்கவேண்டும். ப்ரியமும் ஹிதமு மான சொற்களைக் கேட்கவேண்டும். நன்கு அவர் பெருமையைக் கூறவேண்டும். எவராலும் ஹிம்ஸிக்கப் படாமல் நான் இருக்கவேண்டும். பல காலம் ஸூர்யனைப் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும். (உபதேஶம் ஆன வுடன் அம்மந்த்ரத்தின் அர்த்தமான ப்ரத்யக்ஷ ஸூர்ய னைத் தர்ஶிப்பதும் துதிப்பதும் மிகப் பொருத்தமானது.

அன்றியும், ஸூர்ய ரஶ்மி நமது அரோக த்ருடகாத்ரத்திற்கு முக்ய காரணமானதால் அவரிடம் கேட்கும் ப்ரார்த்தனே மிக அர்த்தமுள்ளது. தற்கால இன்பத்தை மாத்ரம் கோராமல், புத்ர பௌத்ரர்களின் ஸுகத்தையும் கோருவது தீர்க்க தர்ஶனத்தைக் காட்டுவதாகும். இம் மந்த்ரம் நித்யம் மாத்யான்ஹிக உபஸ்தானத்திலும் கூறப்படுகிறது.)

ஸூர்ய உபஸ்தானம் ஆனபின், மாணவன் தன்னே விட்டுப் பிரியாமல் இருப்பதற்காக குரு யஸ்மின்—ம்யஸௌ—ஶர்மன் என்ற மந்த்ரத்தைக் கூறி, மாணவனது வலது கையைப் பிடிக்கவேண்டும். மந்த்ர அர்த்தம்: ஏற்கனவே தோன்றியவரும், இப்போது பிறக்கின்றவரும், இனி பிறக்கப்போகின்றவருமான மனிதர் ப்ரும்மாவினிடம் தங்கி இருக்கிறார்கள். அந்த ப்ரும்மாவினுடைய உத்திரவினால் உன்னே யான் பிடித்துக் கொள்கிறேன். எனக்காக உன்னே ஏற்றுக் கொள்கிறேன். ஓ—ஶர்மன். இது ஆன பின் ஸமிதாதானம். (உபநயனமானவுடனேயே ஆரம்பித்து விவாஹம் ஆகும்வரை ஸந்த்யா வந்தனம்போல் விடாமல் நித்யம் செய்யவேண்டிய கர்மா இது. ஸமிதாதானம் செய்யாததினத்தில் ப்ரும்மசாரியின் ஆயுளே அந்தகன் அபஹரிப்பதாக வேதம் கூறுகிறது. அதாவது, எத்தனே நாள் ப்ரும்மசாரி ஸமிதாதானம் செய்யவில்லேயோ அத்தனே நாள் அவனது ஆயுள் குறையும். பெற்றோர் இதைக் கவனித்து, 10 நிமிஷத்தில் செய்யக்கூடியதும், ஆயுஸ், பலம், வர்ச்சஸ், மேதை, ஆரோக்யம், செல்வம், ஸந்ததி முதலியவைகளே அளிக்கக்கூடியதுமான இக்கர்மாவை, காலே மாலேகளில் செய்யும்படி கவனிக்கவேண்டும்.)

ஸமிதாதானம்

ஓம் ஶுக்லாம் பரதரம்—ஶாந்தயே. ஓம் பூ:—மமோபாத்த—ப்ரீத்யர்த்தம் ப்ராத: ஸமித: ஆதாஸ்யே. பரித்வாக்னே—ப்ரும்ம சாரிபி: என்ற மந்த்ரத்தைக்

கூறி நான்கு புறமும் உள்ள அக்னியை ஒன்ருகச் சேர்ப்பதுபோல் பரிஸமூஹனம் செய்யவேண்டும். பிறகு மந்த்ரம் ஒன்றுமில்லாமல் அக்னியைப் பரிஷேசனம் செய்யவேண்டும். மந்த்ர அர்த்தம்: ஹே அக்னே, உன்னை யான் நான்கு புறமும் துடைத்து சோதனம் செய்கிறேன். அதனுல் எனக்கு ஆயுஸூம் தனமும் வ்ருத்தியாகட்டும். நல்ல குழந்தை பிறந்து அதனுல் யான் நல்ல குழந்தை உள்ளவனுகவும், பேரனுல் நல்ல பேரன் உள்ளவனுகவும், வர்ச்சஸ்ஸினுல் நல்ல வர்ச்சஸ் உள்ளவனுகவும், புஷ்டிகரமான பொருட்களால் ஸூபோஷனுகவும், வீட்டினுல் நல்ல விடுள்ளவனுகவும், நல்ல ஆசார்யனுல் ஸூபதியாகவும், என்னுடன் அத்யயனம் செய்யும் ப்ரும்மசாரிகளால் நான் நல்ல வேதாத்யயன ஶீலனுகவும் ஆகவேண்டும். ஸமித்துக்களை ஸ்வாஹா என்ற போது அக்னியில் வைக்க வேண்டும் 12 ஆஹூதிகள். (1) அக்னயே-ஸமேதயஸ்வாஹா. அர்த்தம்:—ஓ அக்னே, மிகப் பெரியவரும், செல்வமும் மேதையும் நிறைந்தவருமான உமக்காக இந்த ஸமித்தைக் கொண்டுவந்தேன். இந்த ஸமித்தால் நீர் ப்ரகாசிப்பதுபோல், தீர்க்க ஆயுஸ்ஸாலும், வர்ச்சஸ்ஸாலும், நல்ல லாபத்தாலும், மேதையாலும், ப்ரஜையாலும், பசுக்களாலும், ப்ரும்ம வர்ச்சஸ்ஸாலும், உண்ணும் ஶக்தியினுலும், என்னை நன்ருக ப்ரகாசிக்கும்படி செய்யும். (2) ஏதோஸி—ஸ்வாஹா. அர்த்தம்:—ஓ ஸமித்தே, நீ அக்னி ஜ்வலிப்பதற்கு ஸாதனமாக இருக்கிருய். உன்னை ஹோமம் செய்யும் நானும் வ்ருத்தியடைய வேண்டும். (3) ஸமிதஸி—மஹி ஸ்வாஹா. அர்த்தம்:—நீ ஸமித் அல்லவா? உன்னுல் நானும் நன்கு வ்ருத்தியடைய வேண்டும். (4) தேஜோஸி—தேஹி ஸ்வாஹா. அர்த்தம்:-தேஜஸ்ஸூக்கு நீர் காரணம். என்னிடத்தில் தேஜஸ்ஸை உண்டுபண்ணும். (5) அபோ—வர்ச்சஸா ஸ்வாஹா. ஸமிதாதானம் எனும் இக் கர்மாவைச் செய்கிறேன். இதனுல் எனக்கு மேன்மேலும் கர்ம ஶ்ரத்தை வ்ருத்தியாகவேண்டும். ஓ அக்னியே. ஸமித்தினுல் நான் உம்மை ப்ரதிதினமும் அர்ச்சிக்கவேண்டும். என்னை நீர் வர்ச்சஸ்

உள்ளவனாகச் செய்யும். (6) ஸம்மா—தநேன ச ஸ்வாஹா. அக்னே, என்னை வர்ச்சஸ், ப்ரஜை, தனம் இவைகளுடன் கூடியவனாகச் செய்யும். (7) வித்யுன்மே—ரிஷிபி: ஸ்வாஹா. இக்கர்மாவைச் செய்யும் என்னை தேவர்களும் ரிஷிகளுடன் கூட தேவேந்த்ரனும் அறிவர். (8) அக்னயே —நாகாய ஸ்வஹா. ப்ரபை யுள்ளவரும், ஸ்வர்க்கத்தில் நாகன் என்ற பெயருள்ளவருமான அக்னிக்கு ஸமித்தை அளிக்கிறேன். (9) த்யா—ஸ்வாஹா. த்யுலோகமாயும், பூமிவடிவனாயுமுள்ள அக்னிக்கு ஸமித்தைத் தருகிறேன். (10) ஏஷாதே—மானஸ்ச ஸ்வாஹா. ஓ அக்னே, உமக்கு இந்த ஸமித்தைத் தருகிறேன். அதனால் நீர் வ்ருத்தி யடையும். பூர்ணனாக இரும். நானும் அதனால் வ்ருத்தி யாக பூர்ணனாக இருக்கிறேன். (11) யோமாக்னே—தரு ஸ்வாஹா. ஓ அக்னே, உலகிலுள்ள நல்ல பொருள்களைப் பெறுவதற்கு ஏற்றவனான எனக்கு அதை அளிக்க வேண்டும். அதை யான் பெறக்கூடாது என எவன் நினைக்கின்றானோ அவனை அந்த பாக்யம் இல்லாதவனாகச் செய்யும். (12) ஸமித மாதாய—ஓ அக்னே. நான் இந்த ஸமித்தை உமக்கு அளித்து பூர்ண வ்ரதனாக ஆக வேண்டும். ஆஹுதி முடிந்தது.

பிறகு முன்போல் மந்த்ரமில்லாமல் பரிஷேசனம். அக்னியில் ஒரு ஸமித்தை வைத்து, அக்னி உபஸ்தானம் கரிஷ்யே என எழுந்து, யத்தே அக்னே—ததாது என்ற மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். அர்த்தம்: ஓ அக்னே, உன்னிடமுள்ள தேஜஸ்ஸினால் நான் தேஜஸ்வியாக வேண்டும். உமது வர்ச்சஸ்ஸால் நான் வர்ச்சஸ்வியாக வேண்டும். உமது பாபத்தை அகற்றும் சக்தியால் நான் அந்த சக்தி உள்ளவனாக ஆகவேண்டும். அக்னி எனக்கு மேதையையும் ப்ரஜையையும், தேஜஸ்ஸையும் தரட்டும். இந்த்ரன் எனக்கு மேதையையும், ப்ரஜையையும் இந்த்ரி யத்தையும் உண்டு பண்ணட்டும். ஸூர்யன் எனக்கு மேதையையும் ப்ரஜையையும் ப்ரகாசமான வர்ச்சஸ்ஸை யும் அளிக்கட்டும். அக்னயே நம:

மந்த்ர ஹீனம் க்ரியாஹீனம் பக்திஹீனம்
ஹுதாஶன.
யத் ஹுதம்து மயா தேவ பரிபூர்ணம் ததஸ்துதே.
ப்ராயஶ் சித்தானி அஶேஷாணி தப: கர்மாத்ம
கானிவை.
யானி தேஷாம் அஶேஷாணாம் க்ருஷ்ணனு
ஸ்மரணம் பரம்.

ஓ அக்னி தேவரே, மந்த்ரம், க்ரியை, பக்தி, இவைகள் குறைவாக இருந்தாலும், நான் செய்த இந்த ஹோமம் பரிபூர்ணமாக இருக்கட்டும். தபஸ், கர்மா வடிவமான எவ்வளவு ப்ராயஶ்சித்தங்கள் உண்டோ அவைகளுக்குள் ஸ்ரீ க்ருஷ்ணனை நினைப்பதே சிறந்த ப்ராயஶ்சித்தமாம்.

நமஸ்காரம் செய்து, ‘அபிவாதயே’ கூறவேண்டும்.

பிறகு, அக்னி இல்லாததான பஸ்மாவை எடுத்து, ஜலத்தைவிட்டு குழைக்கும்போது, மானஸ்தோகே—விதேமதே, என்ற மந்த்ரம் கூறவேண்டும். மந்த்ர அர்த்தம்: ஓ ருத்ர தேவரே, எனக்கு உண்டாகும் குழந்தைகளிடமும், எனது ஆயுவிலும், பசுக்களிடமும் குதிரைகளிடமும் ஹிம்ஸை செய்யாமல் அன்பாய் இரும். கோபங்கொண்டு எனதுவேலைக்காரர்களை ஹிம்ஸிக்கவேண்டாம். நான் ஹவிஸ் உள்ளவனாக இருந்து, நமஸ்காரம் முதலிய உபசாரம் செய்கிறேன். (ஒவ்வொரு மந்த்ரங்கூறி, குறித்த இடத்தில் பொட்டு வைக்கவேண்டும்) மேதாவீ பூயாஸம் (நெற்றியில்). புத்தியுள்ளவனாய் இருக்கவேண்டும். தேஜஸ்வீ பூயாஸம் (வலது புஜம்). தேஜஸ் உள்ளவனாய் இருக்கவேண்டும். வர்சஸ்வீ பூயாஸம் (இடது தோள்) வர்சஸ் உள்ளவனாய் இருக்கவேண்டும். ப்ரும்ம வர்சஸ்வீ (ஹ்ருதயம்) ப்ரும்ம வர்சஸ் உள்ளவனாய் இருக்கவேண்டும். ஆயுஷ்மான் பூயாஸம் (கழுத்து) ஆயுஸ் உள்ளவனாய் இருக்கவேண்டும். அன்னாதோ பூயாஸம் (பின் கழுத்து) உண்ணும் சக்தி உள்ளவனாக இருக்கவேண்டும். ஸ்வஸ்தி பூயாஸம். (தலை) க்ஷேமம் உள்ளவனாய் இருக்கவேண்டும். இத்துடன் ஸமிதானம் முடிந்தது.

பிறகு பிதா மாணவனைப் பார்த்து உபதேசிக்கும் உபதேசங்களுக்கு எல்லாம் பொருளை உணர்ந்து, மாணவன் 'ஸரி' எனக்கூறவேண்டும்.

குரு : ப்ரும்மசர்ய ஆஸ்ரமத்தை அடைந்து விட்டாய்.

மணவன் : (பாடம்) ஆம்.

குரு : அன்னம் புஜி என்று நான் கூறிய பிறகே புஜிக்கவேண்டும். ஆனல் என் உத்திர வின்றி தீர்த்தம் சாப்பிடலாம்.

மாணவன் : அப்படியே செய்கிறேன்.

குரு : ஸமித் கொண்டு வருவது முதலிய கர்மாக் களைச் செய்.

மாணவன் : அப்படியே செய்கிறேன்.

குரு : பகலில் தூங்காதே.

மாணவன் : அப்படியே தூங்கவில்லை.

குரு : பிக்ஷை எடு.

மாணவன் : அப்படியே பிக்ஷை எடுக்கிறேன்.

குரு : ஆசார்யனுக்கு அடங்கி இரு.

மாணவன் : அங்ஙனமே அடங்கி இருக்கிறேன்.

இதைக் கூறியவுடன் மாணவன் தாயாருக்கு நமஸ் காரம் செய்து "பவதி பிக்ஷாம் தேஹி" எனக் கூற வேண்டும். பிறகு தாய் அரிசி பிக்ஷை அளிப்பள். மும் முறை பிக்ஷைவாங்கி. அதேபோல் மற்ற பந்து ஸ்த்ரீகளிட மும் பிக்ஷைவாங்கி, அவ்வரிசியை ஆசார்யனிடம் அளிக்க வேண்டும். குரு "நத்ஸுபிக்ஷம்" என வாங்கிக்கொள் வார். பிறகு அக்ஷதை ஆசீர்வாதம் செய்து, ஹார்த்தி எடுத்து முதல் நாள் கார்யம் பூர்த்தி. அன்று முதல் மாணவன் நான்காவது நாள் வரை, உப்பு புளிப்பு, காரம் இல்லாமல் புஜிக்கவேண்டும். நித்யம் மூன்று வேளை ஸந்த்யாவந்தனமும், இரண்டு வேளை ஸமிதாதானமும் செய்துவரவேண்டும். நான்காவது நாள் காலையில் ஸந்த்யா

வந்தனம், ஸமிதாதானம் ஆனபின், மாணவனுக்கு என்னை தேய்த்து ஸ்னனம் செய்து வைத்து, மாத்யான் ஹிகம், ப்ரும்மயக்ஞம் ஆனபின், வீட்டிலிருந்து கிளம்பி, கிழக்கிலோ வடக்கிலோ போய், பலாஶமரத்தின் அடியில் மூன்று ஸ்தண்டிலம் செய்து, புண்யாஹவசன ஜலத்தால் அவைகளை ப்ரோக்ஷித்து, முறையே ப்ரணவம், ஶ்ரத்தை மேதை என்ற தேவதைகளை ஆவாஹனம் செய்ய வேண்டும். (இது இப்பொழுது வீட்டிலேயே நடக்கிறது). அதற்கு த்யானம், ஆவாஹனம் முதலான 16 உபசாரங்களைச் செய்து, யஶ்சந்தஸாம்—கோபாய என ப்ரணவத்திற்கும், ஶ்ரத்தயா—வர்த்தயாமஸி என ஶ்ரத்தைக்கும், மேதாதேவீ—மேதே என மேதைக்கும் உபஸ்தானம் செய்ய வேண்டும்.

ப்ரணவ உபஸ்தான மந்த்ர அர்த்தம் :—“ப்ரணவமானது வேதத்தின் காளைபோல் சிறந்ததாகும். ஸர்வ ஜகத் ஸ்வரூபமுமாம். ஸர்வவேதத்திற்கும் மேலானது. மோக்ஷத்திற்குக் காரணமாக உண்டானது. அப்படிப்பட்ட பரமேஶ்வர ஸ்வரூபமான ப்ரணவம் எனக்கு மேதையைத் தரட்டும். ஒ தேவ! மோக்ஷத்திற்கு ஸாதனமான வேதத்தை தர்ஶிக்கத் தக்க சக்தி உள்ளவனாக நான் இருக்கவேண்டும். எனது உடல் நோயின்றி, வித்யாப்யாஸத்திற்கு ஏற்றதாய் இருக்கவேண்டும். நாக்கும் மிக மதுரமாய் இருக்கட்டும். காதுகளால் நன்கு கேட்க வேண்டும். ப்ரும்மத்திற்கு நீ ஆலம்பனமாய் (ஆஶ்ரயமாக) இருக்கிறாய். மேதையால் சூழப்பட்டிருக்கிறாய். நான் கேட்ட வேதத்தை ரக்ஷி.” மேதோபஸ்தான மந்த்ர அர்த்தம் :— “இந்த்ரன், ஸரஸ்வதி, தாமரைமாலை அணிந்துள்ள அஶ்விநீதேவர் ஆகியவர் எனக்கு மேதையைத் தரட்டும். அப்ஸரஸ்ஸுகளிடமும், கந்தர்வர்களிடமும் உள்ள மேதையும், தேவரிடமும், மனிதரிடமும் உள்ள மேதையும், காமதேனுபோல் என்னைவந்து அடையட்டும். காமதேனு போன்றதும், பல ரூபமுள்ளதும், தேவர் உடலில் ஹிரண்யவர்ணமாயுள்ளதும், ஜகத் ரூபமாக உள்ளதும், ஜகத்தினால் வேண்டத்தக்கதும்,

பலமுள்ளதும், பால் தயிர் முதலியன அளித்து என்னை வளர்ப்பதுமான மேதா தேவி ஸுமுகியாக வந்து என்னை அடையட்டும்.''

ஸ்ரத்தோபஸ்தான மந்த்ர அர்த்தம் :—“ குருவாக்ய, ஶாஸ்த்ர வாக்யங்களில் உண்டாகும் நம்பிக்கையே ஸ்ரத்தை எனப்படும். அதற்கு அதிஷ்டான தேவதை ஸ்ரத்தா தேவி. அந்த ஸ்ரத்தையால் அக்னி ஜ்வலிக்கின்றது. ஸ்ரத்தையால் ஹவிஸ் கிடைக்கின்றது. ஸௌபாக்யம் உண்டாவதற்கும் ஸ்ரத்தையே காரணம் என உன் பெருமையை எங்கும் கூறுகிறோம். ஓ ஸ்ரத்தையே, உனக்குப் பூஜையை இப்பொழுது செய்பவனும், இனி செய்யப்போகின்றவனுமான எனக்கு ப்ரியமானது உண்டாகும்படி அருள்புரியும். எனக்கு மாத்ரமல்ல. உலகில் போகத்தை விரும்பும் ஸகல ப்ராணிகளுக்கும், யாகம் செய்பவருக்கும் இன்பம் தாரும். உக்ரமான அஸுரரை ஜயிக்க தேவர் எங்ஙனம் ஸ்ரத்தை கொண்டார்களோ, அவ்வளவு ஊக்கத்துடன் நீர் எனது போகத்திலும், போக ஸாதனத்திலும், யாகம் செய்வோரிடமும் அன்பு வையும். தேவர்களும், தனது ப்ராணனை ரக்ஷிக்க விருப்பங்கொண்ட யாகம் செய்வோரும், ஸ்ரத்தையான உன்னையே உபாஸிக்கிறார்கள். முழுமனதுடன் ஸங்கல்பத்துடன் கூடிய ஸ்ரத்தையை உபாஸிக்கிறார்கள். அதற்காக ஸ்ரத்தையுடன் ஹவிஸ்ஸை ஹோமம் செய்கிறார்கள். ஹே ! ஸ்ரத்தே, காலையிலும், பகலிலும், மாலையிலும் உன்னை யான் அழைக்கிறேன். வைதிக கர்மாக்களில் எனக்கு ஸ்ரத்தை உண்டாகும்படி செய். இந்த ஸ்ரத்தா தேவி தேவர்களிடம் வஸிக்கிறாள். இவ்வுலகெல்லாம் ஸ்ரத்தை நிறைந்துளது. இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் ஸ்ரத்தையை ஹவிஸ்ஸினால் வ்ருத்தி செய்கிறேன்.

பிறகு ப்ரம்மசர்ய வ்ரதத்தில் ஏற்படும் குறை நீங்குவதற்காக ப்ராயஸ்சித்த ரூபமாய் யத்கிஞ்சித் த்ரவ்ய தானம் செய்ய வேண்டும். பலாஶ மரத்தினடியில் தண்டத்தைப் போட்டுவிட்டு, தீக்ஷா வஸ்த்ரம், யக்ஞோபவீதம், மேகலை, க்ருஷ்ணாஜினம் முதலியவைகளைப் புதிய

தாக வேறு தரிக்கவேண்டும். பழைய தீக்ஷா வஸ்த்ரத்தை ஆசார்யரிடம் கொடுக்கவேண்டும். அதைப் பெற்றுக் கொள்ளும்போது குரு சொல்ல வேண்டிய மந்த்ரம் இது. யஸ்தே—ஸுஜாதம். அர்த்தம் :—நீ முதலில் அணிந்த வஸ்த்ரத்தை யான் எடுத்துக்கொள்கிறேன். உன்னை விஶ்வே தேவர் காக்கட்டும். நற்பிறவி பெற்ற உன்னைத் தழுவி, உனக்கு அநேக ஸஹோதரர் உண்டாகட்டும். நீயும் அவர்களும் நன்கு வ்ருத்தி யடையுங்கள்.

அக்ஷதை ஆசிர்வாதம் செய்து, ஹாரத்தி எடுத்து பெரியோர்களுக்கு நமஸ்காரம் செய்யவேண்டும். இத்துடன் உபநயனம் பூர்த்தியானது.

வேத வ்ரதங்களின் விவரம்

4 அல்லது 8 வேத வ்ரதங்கள் என்பன உபநயன மான பின் நடக்கவேண்டிய ஸம்ஸ்காரம். இவை எல்லாம் ஏக காலத்தில் சேர்த்து விவாஹ ஸமயத்தில் செய்யப்படு கிறது இப்பொழுது. நாம் யஜுர் வேதிகளுக்கு, ஆபஸ் தம்ப ஸூத்ரக்காரர்களுக்கே இந்த ஸம்ஸ்காரங்களைக் கூறுகிறோம் என்பது நேயர்களது நினைவில் இருக்க வேண்டும். க்ருஷ்ண யஜுர் வேதத்திலுள்ள ஏழு காண் டங்களுக்கும், நான்கு காண்ட ரிஷிகள் அதிஷ்டான தேவதைபோல் பூஜிக்கப்படுகின்றனர். ப்ரஜாபதி, ஸோமன், அக்னி, விஶ்வே தேவர்கள் ஆகிய இவர்களே ப்ரும்ம யக்ஞ தர்ப்பணத்திலும் ஶ்ராவணத்திலும் இங்கும் பூஜிக்கப்படுகின்றனர். அந்தந்த காண்டங்களை ஆரம் பிக்கும்போது, அந்தந்த காண்ட ரிஷிகளை நாடி தர்ப் பணம், ஹோமம் முதலிய பூஜை செய்வது வ்ரதமாம். இங்ஙனமே ஆரம்பித்த காண்டம் முடிந்தவுடன் அந்த காண்ட ரிஷிகளுக்கு ஒரு பூஜை. இங்ஙனம் நான்கு ரிஷி களுக்கும் செய்வதே, ஆரம்பத்தில் நான்கு, முடிவில் நான்கு ஆக அஷ்ட வ்ரதங்கள் எனப்படும்.

வேத ஆரம்பம், முடிவு இரண்டையும் செய்யாமல் வ்ரதம் மாத்ரம் செய்வது ஒரு தப்பு. அதற்காக வேதமே

கற்கவில்லையே, வ்ரதம் ஏன் செய்ய வேண்டும்? என அதை விடுவது அதனிலும் பெரும் தப்பு. ஆரம்பத்தை யும் முடிவையும் ஒன்ருகச் சேர்த்து செய்வது இரண் டாவது தப்பு. நான்கு காண்ட ரிஷிகளுக்கும் தனித் தனி பூஜை செய்வதைவிட்டு, எல்லோருக்கும் ஒன்ருக ஒரே நாளில் செய்வது மூன்ருவது தப்பு. கல்யாணத் திற்காக வேத வ்ரதம் செய்வது நான்காவது தப்பு. பின், ஏன் இப்படி பலராலும் வெகு காலமாகச் செய்யப்படுகிறது? காலத்தில் விதிப்படி ஒவ்வொரு காண்ட ஆரம்ப முடிவுகளிலும் செய்யாவிடினும், வேதம் பூர்ணமாக அத்யயனம் ஆனபின்பு (கல்யாணத்தன்று செய்யாமல் முன்னதாகவே) அஷ்ட வ்ரதங்களையும், ஒரு காண்ட ஆரம்பம், உத்ஸர்ஜனம் என்று தனித்தனியே வேத வ்ரதம் நான்கையும் அனுஷ்டிக்கவேண்டும். (இப்படி என் குரு தன் புத்ரனுக்குச் செய்து வைத்தார். —ஆசிரியர்). இன்றைக்கும் மிக அபூர்வமாக சில இடங் களில் இது நடக்கின்றது. இன்னொரு கர்மா ஆரம்பிக் கும் வரை அதன் முன் செய்யவேண்டிய கர்மாவிற்குக் காலம் உண்டு. "ஆகாலாத் கால:" என்ற விதியைத் தழுவியே பலர் ஸமாவர்த்தனம் என்ற அடுத்த ஸம்ஸ் காரம் ஆரம்பிப்பதற்குள் இதைச் செய்யவேண்டுமென, விவாஹத்திற்கு முதல் நாள் அல்லது சிறிது நேரம் முன்பு செய்கின்றனர்.

ஜாத கர்மா முதலியவைகளை உபநயனத்தில் சேர்த் துச் சிலர் செய்வதுபோல், விவாஹத்தில் வேத வ்ரதம், ஸமாவர்த்தனம் இவைகளைச் சேர்த்தே இப்போது செய் கிறோம். வ்ரதம் செய்து ஸமாவர்த்தனம் ஆரம்பிக்கும் போது ப்ரும்மசாரிக்கு அடையாளமான ஒரு பூணல், தண்டம், மேகலை, க்ருஷ்ணஜினம் இவைகள் இவனை விட்டுவிடும். பஞ்ச கச்சம், இரண்டு பூணல் தாரணம், புஷ்பதாரணம், மையிட்டுக் கொள்ளல், குடை பிடித்துக் கொள்வது, பாதுகை தரிப்பது போன்றவை ஸமாவர்த் தனம் செய்யும் இவனை வந்து அடைகின்றன. அவனுக்கு ஸ்னாதகன் என்று பெயர். ஸ்னாதகனை பின்பே விவாஹம்

அல்லது ஸஹபத்னீ யோகம் என்ற ஸம்ஸ்காரம் செய்து கொள்ள யோக்யதை உண்டாகிறது. விவாஹம் செய்து கொள்ளாதவர்கூட வேத வ்ரத, ஸமாவர்த்தனங்களை அவஶ்யம் செய்யவேண்டும்.

அஷ்ட வ்ரதம்

கிருஷ்ண யஜுர் வேதம் 7 காண்டமாக பிரிக்கப் பட்டிருக்கின்றது. ஆனல் இதற்கு அதிஷ்டான தேவதை கள் போன்ற காண்ட ரிஷிகள் நால்வரே ஆவர். ஆகவே ப்ராஜாபத்ய காண்டம், ஸௌம்ய காண்டம், ஆக்நேய காண்டம், வைஶ்வதேவ காண்டம் என பிரிக்கப்பட்டன. முதலில் ப்ராஜாபத்ய காண்ட வ்ரதத்தை ஆரம்பித்து ப்ரஜாபதி எனும் காண்ட ரிஷிக்குத் தர்ப்பணம், ஹோமம் செய்து அதற்கு அங்கமான சில கர்மாக்களையும் செய்து முடித்துப் பின்னர் ப்ராஜாபத்ய காண்டவ்ரத உத்ஸர் ஜனம் செய்யவேண்டும். இங்ஙனம் மற்ற 3 காண்ட ரிஷிகளுக்கும் தர்ப்பண ஹோமாதிகள் செய்து அந்தந்த வ்ரத ஆரம்பம் உத்ஸர்ஜனம் என்ற வகையில் 8 வேத வ்ரதங்கள் செய்யவேண்டும். இவ் வ்ரதங்கள் வேத அத்யயநத்தைப் பலப்படுத்தி அந்த மூலமாக ஆத்ம ஸம்ஸ்காரமாகின்றன.

இவைகளைத் தனித்தனியே செய்ய அவகாசம், தனம் மற்ற ஸௌகர்யம் இல்லாதபோது, ஸமான தந்த்ரமாகச் சேர்த்துச் செய்யலாம் என்று கருணாமூர்த்திகளான முனிவர் கூறினர். பெரும்பாலும் இப்போது இந்த பக்ஷமே பல இடங்களில் நிலைத்து விட்டது. (இது ஸந்த் யாவந்தன ஜப ஆரம்பத்தில் ப்ரணவத்திற்கு ரிஷி சந்தஸ் தேவதை கூறியதுபோல், ஸப்த வ்யாஹ்ருதிகளுக்கும் தனித்தனியே ரிஷி சந்தஸ் தேவதைகளைக் கூறுமல் பூராதி ஸப்தவ்யாஹ்ருதிகளுக்கும் என்று சேர்த்துக் கூறுவது போலுள்ளது). வழக்கம் போல் குருவும் சிஷ்யனும் நித்ய கர்மாக்களை முடித்துச் சுத்தர்களாகி அனுக்ஞை பெற்று 4 காண்ட வ்ரதாரம்பங்களை முதலில்

ஆரம்பிக்கவேண்டும். அநுக்ஞையில் தக்ஷிணையைக் கொடுத்துவிட்டு பிதா-இந்த நக்ஷத்ரத்தில் இந்த ராஶியில் பிறந்த இந்த ஶர்மாவான மாணவனுக்கு உபநயநம் முதல் இதுவரை ப்ரும்மசர்ய ஆஶ்ரமத்திற்குக் கூறப்பட்ட ஶௌச ஆசாரத்தையும், ப்ராதஸ் ஸந்த்யை, ஸமிதாதாநம், நியமாத்யயநம், மாத்யான்ஹிகம், ப்ரும்மயக்ஞம், பிக்ஷை எடுத்தல், ஸாயம் ஸந்த்யை, ஸமிதாதாநம், குருகுல வாஸம் இவைகளை அனுஷ்டிக்காததாலும், பழையது உண்ணல், எச்சிலன்னம் உண்ணல், தீட்டன்னமுண்ணல், தாம்பூலமணிதல் ஆகியவைகளால் உண்டானதும், அந்தந்த காலத்தில் செய்ய வேண்டிய வ்ரதத்தைச் செய்யாததாலுண்டானதும் ஆகிய ஸர்வ பாபங்களும் அகல இம் மாணவனுக்கும் வ்ரத லோபத்திற்காகச் செய்யவேண்டிய க்ருச்ரத்திற்கு ப்ரதிநிதியாகக் கொஞ்சம் ஹிரண்ய தாநம் செய்வது மூலமாக ப்ராஜாபத்ய ஸௌம்ய ஆக்நேய வைஶ்வதேவ காண்டவ்ரத உபக்ரமம், உத்ஸர்ஜந கர்மா இவைகளை ஸமான தந்த்ரமாகச் செய்ய யோக்யதை ஸித்திக்க வேண்டுமென அனுக்ரஹம் செய்யுங்கள் என உத்திரவு பெற்று இக்கர்மா நிர்விக்னமாக முடிவதற்கு விக்நேஶ்வர பூஜை செய்யவேண்டும்.

பிறகு க்ருச்ரம் என்ற ப்ராயஶ்சித்த கர்மாவை விதிப்படி (அதாவது குறைந்த பக்ஷம் 3 நாள் உபவாஸமிருத்தல் போன்றது க்ருச்ரம்) செய்ய முடியாததால் அதற்குப் பதிலாகக் கொஞ்சம் த்ரவ்யதாநம் செய்கிறேன் என ஸங்கல்பம் செய்து விக்நேஶ்வரரை உத்வாஸனம் செய்யவேண்டும். பின்னர் ஹிரண்யதாநம் செய்து மாணவன் ஸமிதாதாநம் செய்யவேண்டும். மாணவனும் குருவும் ப்ராணாயாமம் செய்து மாணவனை ப்ராஜாபத்ய ஸௌம்ய ஆக்நேய வைஶ்வதேவ காண்ட வ்ரதோபக்ரம கர்மாக்களை ஸமான தந்த்ரமாகச் செய்விக்கிறேன் என்று குரு ஸங்கல்பம் செய்யவேண்டும். மேற்படி வ்ரதத்தை ஸமாநதந்த்ரமாகச் செய்கிறேனென சிஷ்யன் ஸங்கல்பம் செய்யவேண்டும். பின்னர் சிஷ்யனுக்கு வபநம் செய்விக்க வேண்டும். ஸ்நாநம் செய்து மடிவஸ்த்ர மணிந்து

நெற்றிக்கிட்டுக்கொண்டு காலலம்பி ஆசமனம் செய்து காண்டரிஷி தர்ப்பணம் செய்யவேண்டும். பூணூலைத் தாவடமாக (மாலை போல் தரித்துக்கொண்டு) ரிஷி தர்ப்பணம் ரிஷி தீர்த்தத்தால் செய்யவேண்டும்.

ரிஷி தீர்த்தம் என்பது சுண்டி விரல் பக்கமாக ஜலம் விடுவது. நுனி விரல்கள் வழியாக ஜலம் விடுவது தேவதீர்த்தம். கட்டை விரல் பக்கமாக விடுவது பித்ரு தீர்த்தம். ஆசமனம் செய்வதுபோல் அடிக்கையால் விடுவது ப்ரும்ம தீர்த்தமாகும். (1) ப்ரஜாபதிம் காண்ட ரிஷிம் தர்ப்பயாமி. (2) ஸோமம் காண்டரிஷிம் தர்ப்பயாமி (3) அக்னிம் காண்ட ரிஷிம் தர்ப்பயாமி (4) விஸ்வான்தேவான் காண்ட ரிஷீம்ஸ்தர்ப்பயாமி (5) ஸாகும்ஹிதீர் தேவதா உபநிஷத: தர்ப்பயாமி (6) யாக்ஞிகீர் தேவதா உபநிஷத: தர்ப்பயாமி (7) வாருணீர் தேவதா உபநிஷத: தர்ப்பயாமி (8) ப்ரும்மாணம் ஸ்வயம்புவம் தர்ப்பயாமி. (ப்ரும்ம தீர்த்தத்தால் தர்ப்பணம் செய்க). 9. ஸதஸஸ்பதிம் தர்ப்பயாமி. என தர்ப்பணங்களைச் செய்யவேண்டும்.

பிறகு இந்த காண்ட ரிஷிகளை நாடி ஹோமம் செய்ய வேண்டும். அதற்கு முன்னர் கூறியபடி பூமியைச் சுத்தம் செய்து அக்னியை ப்ரதிஷ்டை செய்யவேண்டும். பாத்ர ஸாதந காலத்தில் 4 அத்தி ஸமித்துகளையும், ஒரு தீர்த்த கும்பத்தையும் தலையைச் சுற்றிக் கட்டுவதற்கான ஒரு வஸ்த்ரத்தையும் ஸாதநம் செய்யவேண்டும். பவித்ரம் செய்து பாத்ரங்களை ப்ரோக்ஷித்து ஆஜ்ய ஸம்ஸ்காரம் செய்து ஸ்ருக் ஸ்ருவம் என்ற ஹோம பாத்திரத்திற்குப் பதிலாக இரு பலாச இலைகளைத் தர்ப்பையால் துடைத்து அக்னியில் காட்டி ப்ரோக்ஷித்துப் பூமியில் வைத்து அக்னியைச் சுற்றி பரிதிகளை வைத்துப் பரிஷேசநம் செய்து முகாந்தமானபின் குருவும் சிஷ்யனும் ஒருவரையொருவர் தொட்டுக் கொண்டிருக்க குரு ஹோமம் செய்யவேண்டும்.

ப்ரஜா பதயே காண்ட ரிஷயே ஸ்வாஹா.

ப்ரஜா பதயே காண்ட ரிஷய இதம் நமம

இது போல் மற்ற 8 ரிஷிகளுக்கும் ஹோமம் செய்ய வேண்டும்.

வேத வ்ரத மந்த்ரார்த்தம்

(1) "ப்ரஜாபதயே காண்டரிஷயே ஸ்வாஹா" என்று ஹோமம் செய்தபின் "ப்ரஜாபதே" என்பதுமுதல் "யோராய ஈஸே" வரையில் ஆறு ப்ரஜாபதி தேவதாக மான—ப்ரஜாபதியைப் போற்றுவதான—மந்த்ரங்களால் ஹோமம் செய்து உத்தேச த்யாகம் கூறவேண்டும். "ஓ ப்ரஜாபதியே! உம்மைத் தழுவியே உலகில் ஸகல ப்ராணிகளும் உண்டாயின. நாங்கள் எதை நாடி உமக்கு ஹோமம் செய்கிறோமோ அது எங்களுக்கு உண்டாக வேண்டும். செல்வபதியாக நாங்கள் ஆகவேண்டும் என்று அருள் புரியும்" என்பது போல் மற்ற மந்த்ரங்களாலும் அவர் பெருமையைக்கூறி நமக்கு ஸமஸ்த ஸம்பத்தும் உண்டாகும்படி வேண்டுகிறோம். அங்ஙனமே (2) "ஸோமாய காண்டரிஷயே ஸ்வாஹா" என்று ஹோமம் ஆனபிறகு ஸோமதேவதாகமான-அதாவது ஸோமதேவனைக் கொண்டாடுவதான - "ஸோமோதேனும்" முதல் "த்வமிமா ஓஷதீ" வரையிலுள்ள ஆறு மந்த்ரங்களால் ஸோமனுக்கு ஹோமம் நடக்கின்றது. அந்த மந்த்ரங்களால் ஓஷதிகளுக்குத் தலைவனும், ப்ராம்மணர்களுக்கு ராஜாவுமான ஸோமனின் பெருமையைத் துதித்து நமக்கு அவர் நன்மை புரியும்படி வேண்டுகிறோம்.

அடுத்தபடி அதேபோல் (3) "அக்னயே காண்டரிஷயே ஸ்வாஹா" என்று அக்னிக்கு ஹோமம் செய்து, "அக்னயே" முதல் "ப்ரகாரவோ" வரையிலுள்ள அக்னியைப் போற்றும் ஆறு மந்த்ரங்களால் ஹோமம் செய்கிறோம். அம்மந்த்ரங்கள் அக்னி தேவதையின் பெருமையைப் போற்றிப் புகழ்ந்து நல்வழியில் செல்வம் முதலியன நமக்கு உண்டாகும்படி வேண்டுகின்றன. நான்காவதாக (4) "விஶ்வேப்யோ தேவேப்ய: காண்ட

ரிஷிப்ய ஸ்வாஹா" என ஹோமம் செய்கிறோம். பின்னர் "ஆகோவிஸ்வே" முதல் "விஸ்வே தேவா:" வரை உள்ள ஆறு மந்த்ரங்களால் ஹோமம் செய்கிறோம். அவை விஸ்வேதேவர் பெருமையை வர்ணித்து, துதித்து நமக்கு நன்மை உண்டாகும்படி வேண்டுகின்றன. 5. "ஸாகும்ஹிதிப்யோ தேவதாப்ய உபனிஷத்ப்ய: ஸ்வாஹா"—ஸாகும் ஹிதிப்யோ தேவதாப்ய உபனிஷத்ப்ய இதம் நமம" என முதல் உபனிஷத்திற்கு ஹோமமும் உத்தேஸத்யாகமும் செய்கிறோம். 6. "யாக்ஞி கீப்யோ தேவதாப்ய உபனிஷத்ப்ய ஸ்வாஹா." 7. வாருணீப்யோ தேவதாப்ய உபனிஷத்ப்ய ஸ்வாஹா. 8. ப்ரம்மணே ஸ்வயம்புவே ஸ்வாஹா. 9. ஸதஸஸ்பதிம்—ஸ்வாஹா என்ற மந்த்ரத்தால் ஸதஸஸ்பதி ஹோமம் செய்து முறையே உத்தேச த்யாகம் செய்து நான்கு காண்ட ரிஷிகளான தேவதைகளை நாடி உபஸ்தானம் செய்கிறோம். "அக்னே வ்ரதபதே" முதல் "வ்ரதானும் வ்ரதபதே" வரையிலுள்ள மந்த்ரங்களால் "நான் அந்த ரிஷிவ்ரதம் செய்கிறேன். நான் சக்தி உள்ளவனாக வேண்டும்" என வேண்டுகிறோம்.

பிறகு முதலில் ஸாந்தி மந்த்ரங்களை ஜபிப்பதற்காக சில ரித்விக்குகளை வரிக்கவேண்டும். வ்ரதம் செய்யும் மாணவன் மதந்தியைக் தொட்டுக்கொண்டு "நாமோ வாசே-ஸாந்தி" என்று ஜபிக்கவேண்டும். பிறகு நான்கு அத்தி ஸமித்துகளை நெய்யால் நனைத்து "ப்ருத்வீ ஸமித், அந்தரிக்ஷகும் ஸமித், த்யௌஸ்ஸமித், ப்ராஜா பத்யாமே" என்ற நான்கு மந்த்ரங்களால் ஹோமம் செய்யவேண்டும். உத்தேச த்யாகம் சொன்னபின், முன் போல் "அக்னே வ்ரதபதே" முதல் "வ்ரதானும்" வரை உபஸ்தானம் செய்யவேண்டும். பிறகு அந்த காண்ட அத்யயன பாடத்திற்காக ரித்விக்குகளை வரிக்கவேண்டும். "யுஞ்ஜதே" "ஸவிதா" என்ற இரு பதங்களையாவது மாணவன் சொல்லும்படி செய்யவேண்டும்.

பிறகு இந்த கர்மா ஸம்ருத்தியுள்ளதாகச் செய்ய "ஜயாதி" செய்யவேண்டும். அதன்பின் பரிதியை அக்னி

யில் போடுவது முதலிய உத்தர அங்கங்களைச் செய்து, மதந்தியைத் தொட்டுக்கொண்டு உத்தம அனுவாகத்தி ஞல் உத்தர ஶாந்தி செய்யவேண்டும். உத்தர ஶாந்திக் காக ரித்விக்குகளை வரித்து "ஶன்னோ ஶாந்தி:" என ஜபிக்கவேண்டும். பிறகு மாணவனது முகத்துடன் தலையைப் புது வஸ்த்ரத்தால் ப்ரதக்ஷிணமாக மூடி சிறிது நேரம் பேசாமல் மாணவனை உட்காரவைத்து, வஸ்த் ரத்தை எடுத்து, அக்னி, ஆதித்யன், ஜலபாத்ரம், கல் கன்று, ஹிரண்யம் முதலியவைகளைப் பார்க்கும்படி செய்து அந்த வஸ்த்ரத்தைக் குருவிற்கு கொடுக்கவேண் டும். "வயஸ் ஸுபர்ணா" என்ற மந்த்ரத்தால் ஆதித் யனை உபஸ்தானம் செய்யவேண்டும்.

இப்போது செய்ததும், செய்யப்போவதுமான, காண்டவ்ரத உத்ஸர்ஜன ஸ்னான கர்மாவிற்கு அங்கமாக நாந்தி ஶ்ராத்தம். புண்யாஹவாசனம், அக்னி உபஸ்தா னம், ஆஶீர்வாதம் இவைகளுடன் வ்ரதம் பூர்ணமாகிறது. இந்த வ்ரதத்தைச் செய்யாவிடில் வேதஸாரமான காயத்ரீ மந்த்ரம்கூட பூர்ணபலனைத் தராது. காண்டங்களுக்கு தேவதைகளான ரிஷிகளைப் பூஜித்து அந்த வேதத்தைக் காப்பாற்றி நமக்கு அளித்ததற்காக நன்றி செலுத்த வேண்டாமா?

ஸமாவர்த்தனம்

வேத வ்ரதங்கள் முடிந்த பின் குருவிற்கு ப்ரியமான தக்ஷிணையைக் கொடுத்துவிட்டு, விவாஹம் செய்து கொள்ள வேண்டும். விவாஹத்திற்கு முதல்நாள், அல்லது அன்றே செய்துகொள்ள வேண்டிய கர்மா ஸமாவர்த் தனம். ஸமாவர்த்தனம் என்ருல் குரு குலத்திலிருந்து திரும்பி வருவது என்று பொருள். நான்கு ஆஶ்ரமங் களில் ஒரு வித ஆஶ்ரமும் இல்லாமல் ஒரு க்ஷணம்கூட இருக்கக்கூடாது. ஆதலால், ஸமாவர்த்தனம் செய்து உடனே விவாஹம் செய்துகொண்டு க்ரஹஸ்தாஶ்ரமம் செல்லவேண்டும். இதில் ஸ்னானம் முக்யமானதால்,

ஸமாவர்த்தனத்திற்கு ஸ்னான கர்மா என்றும் ஒரு பெயர் உண்டு. ஆபஸ்தம்பர் ஸமாவர்த்தன கர்மாவைப் பூர்ண மாய் ஸாங்கோ பாங்கமாகச் சொல்லிவிட்டுப் பிறகு, "தூஷ்ணீம் வா" மந்த்ரங்களில்லாமல் பெண் குழந்தைக்கு ஜாதகாதி செய்வதுபோல் செய்யலாம் என்றும் கூறினர். ஆதலால், மந்த்ரமில்லாமல் செய்வதுதான் தற்சமயம் எங்கும் அதிகமாகக் காணப்படுகிறது.

ஸ்னானகர்ம முறை:—விவாஹத்திற்கு முதல் நாள் காலையில் எழுந்து நித்ய கர்மாவை முடித்துக் கொண்டு, ஸூர்ய உதயத்திற்கு முன் பசுச் சாலைக்குச் செல்ல வேண்டும் அதன் வாசற்படியைக் கீழே ரோமம் இருக் கும்படி ஒரு அஜினத்தால் மூடவேண்டும். மாலை நக்ஷத்ர உதயமாகும் வரை வெளியில் வரக்கூடாது. ஸூர்ய ரச்மி மேல்படக்கூடாது. வபனத்திற்கு ஏற்ற காலத்தில் உபநயனத்தில் செய்வது போல் மந்த்ரத்துடன் வபனம் செய்து கொள்ள வேண்டும். இந்த வபனத்தில் விசேஷம் ஸர்வ அங்க க்ஷவரம். (தற்சமயம் ஸர்வாங்கமும் செய்து கொள்வதில்லை. தலையிலும் செய்துகொள்ளாமல் இக் கர்மாவில்கூட முகக்ஷவரமே செய்துகொள்வது மிக பாபகரமானது. வபன மந்த்ரங்களால் உண்டாகும் அத்ருஷ்டத்தை இழப்பதாகும். ஆதலால், நமது நேயர்க ளேனும் இதைக் கவனித்து ஶாஸ்த்ர விதிப்படி ஸர்வாங் கம் செய்துகொள்ளும்படி செய்ய வேண்டும்.) வபனத் தீட்டுப் போக 13 முழுக்குப் போட்டு ஸ்னானம் செய்ய வேண்டும். பிறகு, அதுவரை தான் அணிந்துகொண் டிருந்த மேகலையை (முஞ்சிப் புல்லாலான கயிறு.) ஒரு ப்ரும்மசாரிக்கு தானம் செய்யவேண்டும். அவன் தர்ப்பைப் போத்தின் அடியில் புதைக்கவேண்டும். அது ஸ்னாதகனது பாபத்தைப் புதைப்பது போலாம்.

பிறகு, ஸ்னானம் செய்து அத்திக் குச்சியால் பல் துலக்க வேண்டும். அதன் பின், ஸ்னானத்திற்காக அமைந்துள்ள நெல்லிக்காய் முதலியவை கலந்த ஸ்னான பொடியால் மந்த்ரங்களைக் கூறி, விதானமாக ஸ்னானம்

செய்யவேண்டும். மந்த்ரத்துடன் இருவஸ்த்ரம், இரு பூணல்களைத் தரிக்கவேண்டும். (இது முதல் பஞ்ச கச்சம் ஆரம்பம். கச்சமில்லாமல் கர்மா செய்தால் பயனில்லை. பஞ்ச கச்சம் பார்க்கவும் அழகு. சாஸ்த்ரமும் கூறு கிறது. அதைக் கர்ம காலத்திலேனும் அவஶ்யம் கட்ட வேண்டும்.) பிறகு மந்த்ரங்களைக் கூறி, சந்தனம், குங்குமம், புஷ்பம், மை, கழுத்தில் ஸ்வர்ணமணி, கையில் இலந்த மணி அணிந்து, காதில் குண்டலமணிந்து, கண்ணாடி பார்த்து, காலில் செருப்பணிந்து, கையில் குடையையும், மூங்கில் தண்டத்தையும் பிடித்துக்கொள்ள வேண்டும்.

பிறகு அக்னியை விதிப்படி ஆராதித்து, ஸமித் ஹோமம் செய்து, உத்தராங்கமான கர்மாக்களையும் செய்து, நாந்தி ஶ்ராத்தம், புண்யாஹவாசனம், திக்கு, நக்ஷத்ரம் அக்னி இவைகளின் உபஸ்தானம் ஆகியவை களைச் செய்து, அக்ஷதாஶீர்வாதத்துடன் ஸமாவர்த்தன கர்மா அல்லது ஸ்னான கர்மா பூர்ணமாகிறது. அன்று முதல் இவன் ஸ்னாதகன் எனப்படுவான். நான்கு வேதங் களையும் கற்று, வ்ரதம் செய்து, இந்த ஸ்னானம் செய்த வன் வித்யாவ்ரத ஸ்னாதகன் எனப்படுவான். வேதமின்றி வ்ரதம் மாத்ரம் செய்து ஸ்னானம் செய்பவன் வ்ரத ஸ்னா தகன் ஆவன். ஸ்னாதகன் செருப்பு, குடை, தண்டம், கண் மை, புஷ்பம் முதலிய அலங்காரமில்லாமல் வெளி யில் போகக்கூடாது. அரசனிடம் சென்று, விவாஹத் திற்கு வேண்டிய பொருளைப் பெறவேண்டும்.

மந்த்ரார்த்தம்

ஸமித் ஆதானம்: நம்மிடம் நல்ல எண்ணங்கொண்டு அனுக்ரஹம் செய்யும் அக்னியைத் துதித்து ஹோமம் செய்கிறோம்.

வபனம்: ஜமதக்னி, கஶ்யபர் இவர்களைப்போல் பால்யம், யௌவனம், கிழத்தன்மை ஆகிய காலங்களில் தீர்க்காயுளைப் பெறவேண்டும்

ஸ்னானம்: ஜல தேவதையே, உமது ஸாரமான, ரஸமான அம்சத்தைக் கொண்டு எனக்கு ஸுகத்தை அளியும்.

தந்த தாவனம்: பற்களே, மலத்தைவிட்டு சுத்தமாக இருங்கள். சந்த்ரன் எனது முகத்தில் வந்து ப்ரகாசிப்பார்.

வஸ்த்ரம் அணிதல்: வஸ்த்ரம் சந்த்ரனைத் தேவனாக உடையது. அது என்னைக் காக்கட்டும்.

சந்தன மணிதல்: தேவருக்கு உன்னை அளிக்கிறேன். அவர்களுக்கும் அலங்காரத்தைத்தரும் சந்தனமே! என்னிடம் வாஸனையுடன் இரு.

குண்டல தாரணம்: பூமியில் தோன்றி, ஸகல உலகையும் காப்பாற்றும் ஸுவர்ணம் எனக்கு தேஜஸ்ஸைத் தரட்டும்.

இங்ஙனம் மற்றவைகளையும் ப்ரார்த்தித்து புஷ்பம், குங்குமம், குடை முதலியவைகளை அணிந்து, பந்துக்களைப் பார்த்து "இனி யான் என்ன செய்யவேண்டும்?" எனக் கேட்கவேண்டும். அவர்கள் கூறியபடி, தக்க குலத்தில் உதித்த கன்யகையைத் தேடி, மணம்புரிந்து கொள்ள வேண்டும்.

விவாஹம்

கர்பாதானம் முதல் புருஷக் குழந்தைக்கு வேத மந்த்ரத்தை உச்சரித்து ஸம்ஸ்காரங்கள் விதிக்கப்பட்டன. அவை அனைத்தும் பெண் குழந்தைக்கு மந்த்ரமில்லாமல் தந்த்ரம் மாத்ரம் செய்யப்படுகிறது. விவாஹம் என்பது உத்வாஹம், பாணிக்ரஹணம், கன்யாதானம், கல்யாணம் என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது. வி+வாஹ, உத்+வாஹ என்ற இரண்டும் "சிறப்பாக வஹிப்பது" என்ற அர்த்தம் உள்ளவை. யார்? எதை? ஜாயா பதி இருவரும் சேர்ந்தால் தம்பதி ஆவர். தம்பதிகள் ஒன்றாகச் சேர்ந்து தர்மத்தை வஹிப்பது. அதற்காக, க்ருஹஸ்த

தர்மத்தை வஹிப்பது என்று பொருள். வீட்டையும் குடும்பத்தையும் வஹிப்பது என்றும் பொருள்.

"ஒரு நிமிஷங்கூட ஆஸ்ரமம் இல்லாமல் இருக்காதே" என சாஸ்த்ரம் கூறுகிறது. ஆதலின், புருஷன் ஸமாவர்த்தனம் ஆனவுடன் நல்ல குலத்தில் பிறந்து, நற்குணம், நல்ல லக்ஷணம் வாய்ந்த கன்யகையை மணந்து, க்ருஹஸ்த தர்மத்தை நடத்தவேண்டும். ஒவ்வொரு ப்ராம்மணனும் தனக்கு ஏற்பட்ட ரிஷி கடன், தேவ கடன், பித்ரு கடன் என்ற மூன்றையும் தீர்த்து விட்டே மோக்ஷத்தைப் பற்றி பேசவேண்டும். ப்ரும்மசர்ய நியமத்துடன் வேத அத்யயனம் செய்வதால் ரிஷி கடன் அகல்கிறது. தேவ கடன் யக்ஞம் செய்வதால் அகலும். பித்ரு கடன் நல்ல ஸந்ததி பிறந்தால் அகலும்.

தேவ, பித்ரு கடன் அகல விவாஹம் மிக அவஸ்யமானதல்லவா? அதனால் தான் "தர்ம ப்ரஜார்த்தம் வ்ருணீமஹே"-யக்ஞம் முதலிய தர்மத்தைச் செய்யவும், தர்மமாக ப்ரஜை உண்டாவதற்காகவும் இந்த கன்யகையை வரிக்கிறோம் என்று முதலில் கூறப்படுகிறது. மற்ற நாட்டவரைப்போல் கேவல போகத்திற்காகவோ, வீட்டு வேலைக்காகவோ மாத்ரம் செய்து கொள்ளும் ஓர் உடன்பாடல்ல விவாஹம் என்பது. விசேஷமாக ஸ்த்ரீகளுக்கு விவாஹமே முக்ய ஸம்ஸ்காரமாகும். "ஸ்த்ரீணும் உபநயன ஸ்தானே விவாஹ:" பெண்களுக்கு விவாஹம் என்பது உபநயன ஸ்தானத்தில் விதிக்கப்பட்ட ஒரு ஸம்ஸகாரம் என்கின்றது சாஸ்த்ரம்

விவாஹம் செய்து கொள்ளாமல் ஒரு பெண் வெகு காலம் தவம் செய்தாள். கிழவியாகவும் ஆனுள். ஒரு ஸமயம் நாரதர் அங்கே வர, அவருக்கு அர்க்ய, பாத்ய, ஆசமனீயம் அளித்து விருந்தை ஏற்க வேண்டும் என்ருள். அவர் அதை ஏற்க மறுத்து, "நீ உபநயனம் ஆகாத புருஷன் போலாவாய். உனது உணவை உட்கொண்டால், பதிதனுடைய ஆகாரத்தை உட்கொண்டதுபோல் பாபம் உண்டாகும்" என்ருர். உடனே அவள் முனிவரைப்

பணிந்து, "என் அன்னமே தோஷமெனில், என் கதி யாது?' என்றாள். "உனக்கு விவாஹமானால் ஒழிய நற்கதி இல்லை" என நாரதர் கூற, அவள் மிக வருந்தி, அவர் கூறிய வண்ணம் தனது தவத்தில் பாதி அளித்து ஒருவரை மணந்து நற்கதி அடைந்தாள்.

இந்தக் கதையிலிருந்து விவாஹமாகாத பெண்ணுக்கு நற்கதி இல்லை என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். "கிழவியும் விவாஹம் செய்து கொள்ளலாம். ருதுவான பின் மணக்கலாம்" என்று தப்பர்த்தம் கொள்ளலாகாது. அவ்வளவு தபஸ் இருந்தும் விவாஹம் எனும் ஸம்ஸ்காரம் இல்லாவிடில் ஜன்மா வ்யர்த்தம் என்றே தெரிந்துகொள்ள வேண்டும். பெண்களுக்கு உபநயனம்போல் முக்யமான ஸம்ஸ்காரம் இது. புருஷனுக்கு ஸஹதர்மசாரிணீ யோகம் என்ற ஸம்ஸ்காரமாம். இதைக் கொண்டுதான் ஜனகர் ஸ்ரீராமனைப் பார்த்து "இயம் ஸீதா மம ஸுதா ஸஹ தர்ம சரீ தவ"-என் பெண்ணான இந்த ஸீதை உனக்கு ஸஹ தர்ம சரீ-அதாவது உடனிருந்து தர்மத்தை அனுஷ்டிப்பவள் என்கிறார்.

விவாஹம் என்பது ஒரு பவித்ரமான ஸம்ஸ்காரம். ஆண் பெண் இருவர்களுக்கும் பொதுவாக ஏற்பட்ட உத்தம ஸம்ஸ்காரம். இவ்விருவர்களுக்கும் பிறக்கப் போகும் ஸந்ததிக்கு முன்னதாக ஏற்பட்ட சிறந்த ஸம்ஸ்காரம். பெண் ஆண் என்ற இருவரது குலத்தில் உள்ள பித்ருக்களுக்கு ஸந்தோஷத்தை அளிக்கும் ஸம்ஸ்காரம். ஸரியான காலத்தில் ஸரியான பாத்ரத்தில் கன்யா தானம் செய்தால் 21 தலைமுறை ப்ரும்ம லோகத்தைத் தரும் புண்ய ஸம்ஸ்காரம். பெண்ணின் சரீரத்தை அண்டியிருந்த அக்நி, ஸோமன், கந்தர்வன் முதலியவர்களுக்கு இன்பம் அளிக்கும் ஸம்ஸ்காரம். திக்பாலர் முதலிய தேவருக்கும் பூஜை செய்து இன்பமூட்டும் ஸம்ஸ்காரம். இம்மையிலும் மறுமையிலும் இன்பம் தரும் ஸமஸ்காரம்.

கன்யாதானம்:—எட்டு வயதுள்ள பெண்ணே கன்யா எனப்படுவாள். 9 வயதானவள் ரோஹிணி. 10 வயதான

வள் கௌரீ எனப்படுவாள். அதற்கு மேல் வயதானவள் ரஜஸ்வலா எனப்படுவாள். கன்யாதானம் செய்தவர் ப்ரும்ம லோகம் செல்வர். 9 வயதுள்ள ரோஹிணீ தானம் செய்பவர் வைகுண்டமும், 10 வயதுள்ள கௌரியை அளிப்பவர் ஸ்வர்க்கமும் செல்வர். 11 வயது முதல் உள்ள ரஜஸ்வலைகளைத் தானம் செய்பவர் ரௌரவ நரகத்தை அடைவர். ருதுவாவதற்கு முன்பேயே பெண்களுக்கு விவாஹம் செய்துவிட வேண்டும். விவாகமாகாத பெண் பிதாவின் வீட்டில் ருதுவானால் தந்தை ப்ரூணஹத்தி செய்த பாபத்தை அடைகிறான். விவாஹம் ஆகாமல் எவ்வளவு முறை ருதுவாகின்றாளோ அவ்வளவு ப்ரூணஹத்தி செய்த பாபம் தந்தையை அடையும். அவளும் சூத்ரஸ்த்ரீ யாகிறாள். அவளை மணந்தவன் எந்த வைதிக கர்மாவுக்கும் உதவாத சூத்ர ஸ்த்ரீ பதியாகிறான்.

“ருதுவாகி மூன்று வருஷ பர்யந்தம் தந்தை தன்னை விவாஹம் செய்து கொடுக்காவிட்டால் நான்காவது வருஷம் நல்ல வரனை தேடித்தானே பெண் விவாஹம் செய்து கொள்ளலாம். நல்ல வரன் கிடைக்காவிடில் ஸாமாரான வரமானாலும் விவாஹம் செய்து கொள்ள வேண்டும்,” என்ற இந்த ஶாஸ்த்ரமானது ருதுமதீ விவாஹம் ஶாஸ்த்ர ஸம்மதம் எனக் கூற வந்ததல்ல. பெற்றோருக்கே அந்த பொறுப்பு. ருதுவாகி விவாஹம் செய்து வைக்கக் கூடாது. ருதுவாகியும் விவாஹம் ஆகவில்லை யெனில் மூன்று வருஷங்களை பொருத்திருக்கலாம். அதற்கு மேல் பெண்ணை நல்ல வரனைத்தேடி மணக்கலாம் என பெண்ணுக்கு அதிகாரம் அளிப்பதே அதன் கருத்தாகும். ருதுவான பின் மணம் க்ஷத்ரிய வைசியர்களுக்கு உண்டு. ப்ராம்மணர்களுக்கு இல்லை. க்ஷத்ரியனாக இருந்தும் ஜனக மஹாராஜன் வைதிக தர்மத்தைக் கைப்பற்றி ருதுவாவதற்கு முன்பேயே ஸீதையைக் கன்யா தானம் செய்தார். ஸ்ரீராமனும் மணந்து கொண்டார்.

“ருதுவான பின் விவாஹம் செய்தால் அந்த பெண்ணின் ருதுவை (பஹிஷ்டை காலத்தில் வெளியாகும்

ரத்தத்தை) பித்ருக்கள் சாப்பிடும்படி ஏற்படும். ஆதலின் பெண் குழந்தைகளுக்கு வெட்கம் உண்டாவதற்குள் புழுதியில் விளையாடும் காலத்திலேயே விவாஹம் செய்து விடு" என ஆபஸ்தம்பர் முதலிய மஹரிஷிகள் கூறுகி ஞர்கள். அங்ஙனமே நமது முன்னேர் பால்ய விவாஹம் செய்து வந்தனர். பெண்களும் தீர்க்க ஸுமங்கலிகளாக வாழ்ந்தனர். அச்சமயம் வரதக்ஷிணை என்ற கொடுமையும் இல்லை. அவர்களுக்கு உண்டான குழந்தைகளும் அரோக த்ருட காத்ராாகவே இருந்தனர்.

தற்சமயம் மேநாட்டு நாகரிகத்தால் பலர் "விவாஹம் என்பது ஒரு பவித்ரமான ஸம்ஸ்காரம். ருதுவாவதற்கு முன் விவாஹம் செய்ய வேண்டும். நம் முன்னேர்கள் நம்மைவிட விவேகி. மஹரிஷிகள் தீர்க்கதர்ஶிகள், விசால மான த்ருஷ்டியும், பரந்த நோக்கமும் சிறந்த அறிவும், உயர்ந்த கருணையும், உள்ளவர்" என்று நினைப்பதில்லை. குருட்டுத்தனமாக எல்லாவற்றிற்கும் மேநாட்டையே கைப்பற்றுவது என்ற எண்ணம் உள்ளே குடி கொண் டது. அதனல் கற்பு என்பதையே அறியாத வரும், பாலோக சிந்தையில்லாதவரும், மிக மிக உயர்ந்த நமது ஶாஸ்த்ர ஸம்ப்ரதாயங்களை உணராதவரும், அதை மதி யாதவருமான சில ஆங்கிலேயர் சொன்ன மொழிகளைக் கிளிப் பிள்ளைகளைப்போல் திரும்பத் திரும்பக் கூறுவர். நமது ஸதாசாரத்தைப் பின் பற்றுவதும் அதைப்பற்றி பேசுவதும் அநாகரிகம் எனக் கருதுவர். அந்த வாஸனு பலத்தால் தீர்க்க த்ருஷ்டியையும் பகுத்தறிவையும் இழந் தனர். சிலர் துணிந்து தாலும் அதர்மத்தில் இறங்கி, தார்மிகரையும் படுகுழியில் தள்ள பகிரத ப்ரயத்னம் செய்தனர். செய்கின்றனர்.

"ஶாஸ்த்ரமே ருதிமதி விவாஹத்திற்கு அனுகூலமாக இருக்கிறது. அதற்கு ஸரியான அர்த்தம் தெரியாமல் குருட்டுப் பழக்கத்தைப் பின் பற்றினேம். இதை விட்டு உண்மை ஶாஸ்த்ரியமானதும் முன் கைப்பற்றப்பட்டது மான ருதுமதி விவாஹத்தைச் செய்வோம்" என்கின்றனர்

ஒரு சிலர். இவர்கள் சில விவாஹ மந்த்ர அர்த்தங்களைக் கண்டு ஏமார்ந்து பிறரையும் ஏமாற்றுகின்றனர். அவர்களது கேள்வியின் ஸாராம்சம்:

(1) விவாஹப் பெண்ணைப் பார்த்துக் கணவன் கூறும் மந்த்ரங்களில் "என்னை ஆலிங்கனம் செய்து கொள்" என்பது போன்றவை பெரிய ருதுவான பெண்களிடமே பொருந்தும். ஆனதால் ருதுமதி விவாஹம் ஶாஸ்த்ர ஸம்மதம் என்பர். பதில்:—பல ஸ்ம்ருதி வாக்யங்கள் ஸ்பஷ்டமாக ருதுவாவதற்கு முன் விவாஹம் செய் என்று கூறுவதும் நமது புத்திக்கு எட்டின காலம் முதல் நடந்து வருவதும் சிஷ்டாசாரமும் ப்ரமாணமல்லவா? அதை விட்டு நேராக ருதுமதீ விவாஹம் செய் என்று கூறாத மந்த்ரத்தின் பொருளைக் கொண்டு ருதுமதீ விவாஹத்தை ஸாதிக்கக் கருதுவது முறை அன்று. அந்த மந்த்ர அர்த்தமும் இப்போதே பரஸ்பர ஆலிங்கனத்தை கூறவில்லை. பின்னால் நடக்கப் போவதைக் குறிக்கும். ப்ரும்மசாரி செய்யும் ஸமிதாதான மந்த்ரத்தில் "நல்ல புத்ரன் பிறக்க வேண்டும்" என்கிறது ஒரு மந்த்ரம். அதைக் கொண்டு ப்ரும்மசாரி புத்ரன் பிறப்பதற்கு ஏற்ற மனைவி வந்தவுடன் ஸமிதாதானம் செய்ய வேண்டும் என பொருள் கொள்ளக் கூடுமா? ப்ரும்மசர்யம் முடிந்து விவாஹம் ஆனபின் நல்ல புத்ரன் பிறக்க வேண்டும் என்று பொருள் கூறுவது பொருத்தமல்லவா? அங்ஙனமே ருதுவாகாத பெண்ணின் விவாஹ காலத்தில் கூறப்படும் மந்த்ரம் ருதுவான பின் நடக்கும் விஷயத்தைக் கூறுவதாகும் என்பது ஸரியான பொருள்.

(2) ருதுவாவதற்குள் விவாஹம் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருப்பதால் வரதக்ஷிணை கொடுமை அதிகமாகி விட்டது. ருதுமதீ விவாஹம் நடந்தால் வரதக்ஷிணை அகலும். பதில்:—இதைப்பற்றி அனுபவமே தக்க ஸமாதானம் கூறும். நாம் சொல்ல வேண்டிய அவஶ்யம் இல்லை. சாரதா சட்டம் வந்தபின் கன்யகா விவாஹம் மிகக் குறைந்தது. 20, 22 வயதில் பலர் விவாஹம் செய்கின்றனர். வரதக்ஷிணை குறைந்ததாகக் கூற முடியவில்லை.

ஶாஸ்த்ரிய விவாஹம் நடக்காததுடன் சொல்ல முடியாத பல அனர்த்தங்களையும் பார்க்கிறோம். ஆதலின் வரதக்ஷிணைக்கும் இதற்கும் ஸம்பந்தம் சிறிதும் இல்லை.

(3) மணம் என்பது என்ன என்று தெரியாத கன்யகைகளுக்கு விவாஹம் செய்விப்பது நியாயமா? மந்த்ரம் சடங்கு, பொறுப்பு இவைகளை அறியும் வயது வரவேண்டாமா? பதில்:—தக்க குணவானைத் தேடி விவாஹம் செய்யாத பிதா பாபி. நரகம் செல்வான். என சாஸ்த்ரம் கூறுகிறது. தனது வயிற்றில் தோன்றிய பெண்ணுக்குச் செய்ய வேண்டிய பொறுப்பு பிதாவுக்கு அதிகமல்லவா? அதை உணர்ந்து செய்யும் பிதாவைவிட அறிவு முதிர்ந்தவர்களா பெண்கள்? ஜாத கர்மா, நாம கரணம் முதலிய ஸம்ஸ்காரம்போல் விவாஹ ஸம்ஸ்காரத்தைத் தந்தை செய்யும்போது மந்த்ர அர்த்தம் அறிய வேண்டிய அவஶ்யம் பெண்ணுக்கு இல்லை. பிதாவே சிறந்த பொறுப்பாளி.

(4) இளம் வயதில் விவாஹம் செய்வதால் விதவைகள் அதிகமாகின்றனரே! பதில்:—வயதான பின் விவாஹம் செய்தால் அந்த கணவனைக் கொண்டு போவதில்லை என அந்தகன் ஏதேனும் வாக்களித்திருக்கிறானா? பூர்வ கர்மாவுக்கேற்க அவன் அல்பாயுஸ்ஸாக இறக்கிறான். இவள் விதவையாகிறாள். ருதுமதி விவாஹத்தால் வைதவ்யத்தைத் தடுக்க முடியாது.

(5) பால்ய விவாஹம் செய்து கொள்வோரது ஸந்ததி பலஹீனர்களாகப் பிறக்கின்றனரே! பதில்:—பெற்றோரது ஶரீர பலமே குழந்தை பலத்திற்குக் காரணம். 20 வயதிற்குமேல் மணம் புரியும் பெண்ணின் குழந்தைகளும் பலஹீனமாக இருப்பதைக் காண்கிறோம்.

(6) ஸதிபதிகள் ஒருவரை ஒருவர் நேசித்துக்காதல் மணம் புரிவதே ஸந்தோஷத்திற்கு இடமாகும். பெற்றோர் செய்து வைக்கும் பால்ய விவாஹத்தில் தம்பதிகள் எலியும் பூனையும்போல் ஸுகமின்றி வாழ்கின்றனரே! பதில்:—காதல் மணத்தின் அழகைக்கண் கூடாகக் காண்கின்றோம். நமது பத்திரிகையில் எழுத முடியாத பல

ஆபாஸங்கள் தோன்றி அதனல் விவாஹ ரத்தில் வந்து முடிகின்றன. அத்தகைய விவாஹத்தில் கற்பு ப்ரஶ்னே ஒருவாறு இருக்க, தற்சமயம் கண்ணுக்குப் பிடித்தவரை மணந்தால் அவர் பரம்பரையிலுள்ள ரஹஸ்யமான கர்ம வ்யாதி, குணக் குறைவு, முதலிய பல துன்பங்கள் பின்னரே தெரிந்து பல துன்பங்கள் தோன்றுகின்றன. பால்ய விவாஹத்திலோ இருவர்க்கும் என் பதி, என் மனைவி என்ற பரஸ்பர அன்பு, தர்ம உறத்தால், பெற்ரோரின் அன்பு நீர் பெருக்கால், நாளுக்கு நாள் வளர்கிறது. தர்ம விவாஹம் எப்போதும் பிரியாமல் இருவரையும் பிணைத்திருக்கின்றது.

(7) பால்ய விவாஹம் பெண் கல்விக்குத் தடங்கலாக இருக்கின்றதே. பதில்:—பெண்களுக்கு அவஶ்யமானது மதக் கல்வி. அது தற்காலக் கலாசாலேகளில் கற்பிக்கப் படாததுடன் விபரீதமான கல்வியும் போதிக்கப்படுகிறது. அதனல் உண்டாகும் தீமைகள் கொஞ்சமல்ல. ஆதலால் வீட்டில் கற்கும் தர்மப்படிப்பே போதும்.

(8) கார்க்கி, மைத்ரேயீ, ஸீதா, த்ரௌபதி இவர்கள் நன்கு படித்தவர்களாகக் கூறப்படுவதால் பெண் கல்வி அவஶ்யமல்லவா? பதில்:—பெண் கல்வி மிக மிக அவஶ்யமே. ஆனல் தற்காலம் கலாசாலேகளில் படிப்பதுபோல் அவர்கள் கற்றதாக ப்ரமாணமில்லே. பெற்ரோரிடமே குடும்ப வேலே, பின்னல், தையல், பாட்டு, சமயல், வைதிக கர்மா, ஸதாசாரம், வேதாந்தம் இவைகளேப் பயின்றனர்.

(9) ஆண்களோடு கலந்து படிப்பதால் தைர்யம், உயர்ந்த குணம், விஶாலமான நோக்கம் முதலிய பல நன்மைகள் உண்டாகுமல்லவா. பதில்:—இத்தகைய குணம் புருஷர்களுக்கே உண்டாகவில்லே. அப்படி அதனல் உண்டாவதானுலும் குணத்தைவிட தோஷமே அதிகமாவதைக் காண்கிரோம். அக்னி குடம் பெண். நெருப்பு குடம் புருஷன். இரண்டையும் ஒன்று சேர்க்காதே என ஶாஸ்த்ரம் கூறுகிறது. இருவரும் சேர்ந்து கலாசாலேகளில் நடப்பதே சாக்ஷி.

(10) ஒரு ஸமயம் அவஸ்யம் நேர்ந்தால் பெண்கள் படித்திருந்தால் கணவனுக்குப் பிறகு உத்யோகம் செய்ய உதவுமல்லவா? பதில்:—பெண்கள் ஜீவநத்திற்குத் தானே ஸம்பாதிக்க வேண்டிய நிலை ஏற்படுத்தக் கூடாது. இளமையில் பெற்றோரும், பருவத்தில் பதியும், முதுமையில் மக்களும் கார்க்க வேண்டும் என தர்ம நூல் கூறுகிறது. இம் மூவரும் இல்லாத துர் தசையில்கூட பெண்கள் உத்யோகம் செய்யவில்லை. கற்பையிழப்பதாயின் இவைகளில் ஆசை வைக்கலாம். உத்யோகம் பார்ப்பவர் கற்பற்றவரா? என சீறிவிழுவர் சிலர். அன்ய புருஷர்களுடன் பேசுவதும் பழகுவதும் கை குலுக்குவதும் கற்புக்கு பங்கமேயாகும். அன்யர் போகமில்லாதது மாத்ரம் கற்பல்ல.

கன்யகை, வரன்களின் லக்ஷணமும் தோஷமும்—அதிக அங்கமுள்ளவள், ரோகமுள்ளவள், உடலில் அதிகரோமம் உள்ளவள், ரோமமே இல்லாதவள், செம்பட்டை மயிர் உள்ளவள், பூனைக்கண் உள்ளவள், மரம், நக்ஷத்திரம், பக்ஷி, பாம்பு இவைகளின் பெயருள்ளவள், மிக குள்ளமானவள், ரொம்ப திர்க்கமானவள், குறைவான அங்கமுள்ளவள், புருஷனைப்போல் இருப்பவள், புருஷனைப் போல் நடை, பேச்சு உள்ளவள், தாய், தந்தை, ஸஹோதரி ஸகோதரன் இல்லாதவள் ஆகிய கன்யகைகளை மணந்துகொள்ளக் கூடாது.

ஹம்ஸம்போன்ற சப்தமுள்ளவள், தேன்போன்ற வர்ணமுள்ளவள், தந்தையின் ஸமான கோத்ரமில்லாதவள், தாயின் ஸமான ப்ரவரம், ஸமான பிண்டம் இல்லாதவள், ருதுவாகாதவள், முன் ஒருவனுக்குக் கன்யகாதானம் செய்யப்படாதவள், தன்னைவிட வயது குறைந்தவள், இத்தகைய கன்யகைகளே விவாஹம் செய்துகொள்வதற்கு ஏற்றவர்கள். தன் தாயைக்கொண்டு கன்யகையை ஏகாந்தமாக நன்கு பரீக்ஷிக்கவேண்டும். பிறகே விவாஹம் நிச்சயிக்க வேண்டும். நல்ல குலம், சீலம், சரீரம், வயஸ், வித்யை, தனம், பந்துக்களுடன் கூடியவன் என்ற வரலக்ஷணங்களைக் கவனித்துக் கன்யகாதானம் செய்யவேண்டும்.

கன்யகையைவிட இருமடங்கு அதிக வயஸ் உள்ளவனுக இருக்கவேண்டும் வரன். நபும்ஸகனு என பரீக்ஷித்துப் பின்பே கன்யகையை அளிக்க வேண்டும். நிஷ்டுரனுகவும், க்ரூரனுகவும், தீய குணமுள்ளவனுகவும் உள்ளவன் நற் குலத்தில் பிறந்தவனுக இருக்கமாட்டான். அத்தகைய வனுக்குக் கன்யகையை அளிக்கக்கூடாது. பிதாவைக் கொண்டு, மாப்பிள்ளையை நன்கு பரீக்ஷிக்க வேண்டும். பிறகே கன்யகாதானம் செய்யவேண்டும்.

வெட்கம் தெரிவதற்குள், மண்ணில் விளையாடும் காலத்தில், பசு நடமாடும் வீதியில் நிற்கும் காலத்தில், கன்யகைகளுக்கு விவாஹம் செய்வது உத்தமம்.

ருதுவாவதற்குள்ளாவது விவாஹம் செய்யவேண் டும். ருதுவானபின் விவாஹம் செய்தால், ஒவ்வொரு மாதமும் பித்ருக்கள் அந்த ரஜஸ்வலா ரத்தத்தைக் குடிக்க நேரும். ரஜஸ்வலையை விவாஹம் செய்தால் தாய், தந்தை, மூத்த ஸஹோதரன் ஆகிய மூவரும் நரகம் செல்வர்.

பெண்களுக்கு விவாஹம் என்பது உபநயன கர்மா வானதால், காலத்தில் விவாஹம் செய்யவேண்டும். பெண் ணின் உடலில் ரோமம் உண்டாகும்போது ஸோமன் அவளை ஏற்கிருன். ஸ்தனம் உண்டாகும்போது அக்னி யும், ரஜஸ் உண்டாகும்போது கந்தர்வனும் அவள் உடலை ஏற்று அனுபவிக்கின்றனர். ருது ஆனவளை விவாஹம் செய்து கொண்டவன் எந்த வைதிக கர்மாவிற்கும் ஏற்றவனல்ல. ப்ரும்மஹத்தி செய்தவன்போல் நித்யம் தீட்டுள்ளவனவன். ஒரு முறைதான் ஸஹோதரர்களுக்கு பங்கு பிரித்தல், ஒரு முறைதான் கன்யகாதானம், ஒரு முறை தான் தருகிறேன் எனக் கூறுவது. இம்மூன்றை யும் மறுமுறை செய்யலாகாது. குலம், சீலம், குணம், கல்வி, தனம், ஆகியவை இல்லாதவனுக்கும் நபும்ஸக னுக்கும் கன்யகையைக் கொடுப்பவன் நரகம் செல்வான். அரசன் அவனை சிக்ஷிக்கவேண்டும். ஆதலால் தக்க வரனைத்தேடி அளிப்பது நம் கடமை.

கன்யகாதானம் ஆவதற்குள், வரவேற்பு, ஜானுவாஸம், நிச்சிதார்த்தம், வ்ரதம், பரதேசிக் கோலம் முதலியவைகள் ஆனபின்பு வரன் அல்லது கன்யகை தோஷம் உள்ளவர் என அறிந்தால், கன்யகாதானத்திற்குள் அந்த விவாஹத்தை நிறுத்தி வேறு விவாஹம் செய்யலாம் என்று நாரத ஸ்ம்ருதி கூறுகிறது.

எட்டு வித விவாஹங்கள்

ப்ராம்மம், தெய்வம், ஆர்ஷம், ப்ராஜாபத்யம் ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம் பைஶாசம் என 8 வித விவாஹங்கள் உள.

1. ப்ராம்மம்: வேதம் அறிந்து, நற்குணமுள்ளவரைப் பூஜித்து, அலங்கரித்துக் கன்யாதானம் செய்வது ப்ராம்ம விவாஹம் எனப்படும். ப்ராம்ம விவாஹத்தால் பிறக்கும் புத்ரன் தனக்கு முன் உள்ள 10 தலைமுறை, பின்வரும் 10 தலைமுறை, தான், ஆக 21 தலைமுறைகளைப் பாபத்திலிருந்து விடுவித்து நன்மைஉண்டு பண்ணுகிறான். (இப்போது நாம் செய்வது ப்ராம்ம விவாஹம் எனக் கூறப்படுகிறது.)

2. தெய்வம்: யக்ஞத்தில் ஒரு ரித்விக்காக உள்ளவருக்குக் கன்யகையை அலங்கரித்து, தக்ஷிணையாகக் கொடுத்து விவாஹம் செயவது தெய்வ விவாஹம் எனப்படும். இந்த விவாஹத்தால் பிறக்கும் புத்ரன் 15 தலைமுறைகளை முன்போல் பாபத்திலிருந்து விடுவித்துக் தானும் நற்கதி பெறுவான்.

3. ஆர்ஷம்: ஒன்று அல்லது இரண்டு பசுவையும் காளையையும் வரனிடமிருந்து வாங்கிக்கொண்டு விதிப்படி விவாஹம் செய்வது ஆர்ஷ விவாஹம் எனப்படும். அதனால் ஜனிக்கும் புத்ரன் 7 தலைமுறைகளைப் பாபத்திலிருந்து விடுவிப்பான்.

4. ப்ராஜாபத்யம்: இருவரும் தர்மத்தைச் செய்யுங்கள் என்று கூறி, விவாஹம் செய்வது ப்ரஜாபத்யம்

எனப்படும். அதனல் பிறந்தவன் 13 தலைமுறைகளைப் பாபத்திலிருந்து விடுவிப்பான்.

இந்த நான்கு விவாஹத்தால் உண்டாகும் புத்ரர் மறுமையில் அந்தந்த பலன்களைத் தருவதுடன், இப்பிறவியிலும் மிக்க ப்ரும்மவர்ச்சஸ் உள்ளவர்களாக இருப்பார்கள். நீண்ட ஆயுளும் ஆரோக்யமும், செல்வமும், போக பாக்யமும் பெற்றிருப்பார்கள்.

5. ஆஸுரம்: கன்யகைக்கோ, அவளைச் சார்ந்தவர்களுக்கோ சக்திக்கு அதிகமாக பணத்தைத் தந்து விவாஹம் செய்வது ஆஸுர விவாஹமாகும். இதனல் உண்டாகும் புத்ரர் க்ரூரராகவும், பொய் சொல்பவராகவும், நிந்திக்கத்தக்கவராகவும் இருப்பார்கள். ஆதலால் ஆஸுரம் முதலான மற்ற விவாஹங்கள் ஶ்லாக்யமல்ல.

6. காந்தர்வம்: ஆணும் பெண்ணும் இச்சையால் ஒன்று கூடி, பிறகு விவாஹம் செய்துகொள்வது காந்தர்வ விவாஹமாம். இது க்ஷத்ரியர்களுக்கேற்றது. இதில் தர்மமில்லை. கேவல காமமே ப்ரதானமானதால், இது காந்தர்வம் எனப்படும்.

7. ராக்ஷஸம்: அடித்து, உதைத்து, அழ அழத் தூக்கி வந்து விவாஹம் செய்து கொள்வது ராக்ஷஸ விவாஹமாம்.

8. பைஶாசம்: ஏமார்ந்தபோதோ, தூங்கும்போதோ, புத்தி ஸரியாக இல்லாதபோதோ, ஏகாந்தத்தில் கூடி விவாஹம் செய்துகொள்வது பைஶாச விவாஹம் எனப்படும். இது மிகவும் நீசமானது.

பெண்களுக்குப் பணமளித்து, மணப்பது ஆஸுர விவாஹம் என்றும், அதனல் உண்டாகும் குழந்தை க்ரூரனகவும், பாபியாகவும் ஆவான் என்கின்றது தர்ம சாஸ்தரம். தற்சமயம் அதற்குப் பதில் வரனுக்குத் தனம் அளித்து-அதாவது, அவர்கள் சொல்கிறபடி தனமாகவும், வரிசைகளாகவும் செய்து, பெண்ணைப் பெற்றவன் இதனல் ஸொத்தை இழந்து கஷ்டப்படும்படியும் விவா

ஹம் செய்கிறோம். இது முற்றிலும் ஆஸுர விவாஹம் என்பது சொல்லாமலே விளங்கும். ஆதலால், அதனால் உண்டாகும் குழந்தைகள் பெற்றோருக்கு அடங்காமல் துராசாரம் உள்ளவர்களாயிருப்பதில் ஆச்சர்யமில்லை.

ப்ராம்மம், தைவம், ஆர்ஷம், ப்ராஜாபத்யம் என்ற இந்த நான்கில் ஒன்றை ப்ராம்மணன் அனுஷ்டிக்கலாம். க்ஷத்ரியனுக்கு காந்தர்வம், ஆஸுரம் என்ற விவாஹம் உசிதமானது. வைஶ்யனுக்கும் சூத்ரனுக்கும் ஆஸுர விவாஹம் உசிதமானது. பைஶாச விவாஹம் எவருக்கும் ஏற்றதல்ல. பரம நீசமானது.

பணமே ப்ரதானமான ஆஸுர விவாஹம் இப்போது நம்மால் அனுஷ்டிக்கப்படுகிறது. அதனால் உண்டாகும் ஸந்ததி, எந்த வழியிலாவது பணத்தைத் தேடுவது என்ற கொள்கையைக் கொண்டு, தன் ஜாதிக்குத் தகாததும், மற்றவர்கூட செய்ய அஞ்சுவதுமான நீச வேலைகளைச் செய்கின்றனர். அதனால் ஜாதிச் சண்டை வளர்கிறது. தனமுள்ளவர் பெண்ணை மஹாலக்ஷ்மியாகப் பாவித்து, ஸ்ரீ தனத்தைத் தன் இஷ்டப்படி கொடுப்பதை சாஸ்த்ரம் ஆமோதிக்கின்றது. சிறிதளவாவது கொடுக்க வேண்டுமென்றும் கூறுகிறது. ஆனால் "இவ்வளவு கொடுத்தால்தான் விவாஹம் செய்து கொள்வேன். இதைச் செய்து கொண்டு வந்தால்தான் வீட்டில் சேர்ப்பேன்". என்று கூறுவது மிக பாபமானது. ஸமூஹத்தைக் கெடுக்கக் கூடியது. ஆதலால் ஆதரவுடன் இதைப் படிக்கும் நம் அன்பரேனும் இந்தப் பாபம் செய்யாமல், ஸ்ரீதனமாகக் கொடுப்பதைப் பெற்று விவாஹம் செய்ய வேண்டும். விவாஹத்திற்கு முன் வேத சாஸ்த்ரம் அறிந்தவரைக் கொண்டு விவாஹ மந்த்ர அர்த்தங்களைக் கூறும்படி சொல்லிக் கேட்க வேண்டும். இந்த கர்மா எதற்காக என உணர்ந்து நன்கு அதை அனுஷ்டிக்க வேண்டும். வீண் செலவை நிறுத்த வேண்டும். ஸௌகர்யப்பட்டவர் கன்யகாதானம் பெற்றவுடன், புருஷன் வீட்டிற்கு வந்து, ப்ரவேஶ ஹோமம் (ப்ரவிஶ்ய ஹோமம்) விதிப்படி செய்யவேண்டும் விவாஹமானநாளே ஊர்வலம் நடத்தி

பந்துக்களை அனுப்பிவிட்டு, நான்கு நாட்கள் க்ரமமாக ஔபாஸனம் செய்து, விதிப்படி ஶேஷ ஹோமம் செய்ய வேண்டும். தவறாமல் ஸ்தாலீபாகமும் ஆரம்பிக்க வேண்டும்.

ஸமாவர்த்தனமான பிறகு வரன் காசிக்குப் புறப் படும்போது பந்துக்களைப் பார்த்து "ப்ரும்மசர்யத்தை முடித்து நான்கு வ்ரதங்களையும் செய்து முடித்தேன். யான் காசிக்குச்செல்லத் தாங்கள் உத்தரவு கொடுங்கள்" என்று கூறி ப்ரார்த்திக்க வேண்டும். இதைக் கேட்டு கன்யகையின் பிதா, "ஓ ப்ராம்மண, அலங்காரம் செய்து எனது கன்யகையை உமக்குத் தருகிறேன். அவளை மணந்து கொண்டு ஔபாஸன அக்னியுடன் காசி செல்லலாம். நம் வீட்டிற்கு வாரும்" என்று பதில் கூற வேண்டும். விவாஹம் செய்து கொள்ளப்போகும் வர னுக்கும் கன்யகைக்கும் அவர்களது தந்தை இந்த விவா ஹத்திற்குப் பூர்வ அங்கமாக அங்குர, ப்ரதிஸரபந்தம் என்ற இரு கர்மாக்களைச் செய்ய வேண்டும். அங்குரம் என்பது பாலிகை என்றும், ப்ரதிஸரம் என்பது கங்கணம் என்றும் கூறப்படும். கங்கண பந்தம் என்பதைக் காப்பு கட்டிக் கொள்வது என்பார்கள். பாலிகை காப்பு என்ற இரண் டும் ஒரே பொருளைக் கூறும் சொற்கள். இந்த விவாஹ கர்மா விக்னமின்றி நடக்க வேண்டும். இதில் பூஜிக்கப் படும் தேவதைகள் இந்த தம்பதிகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இவை செய்யப்படுகின்றன.

அங்குரார்ப்பணம்

சௌளம், உபநயனம், ஸ்நாநம், விவாஹம் ஆகிய இந்த கர்மாக்களில் அங்குர அர்ப்பணம் என்ற கர்மா வைச் செய்ய வேண்டும். போதாயனர் என்ற மஹர்ஷி யால் கூறப்பட்ட கர்மாக்களில் உதக ஶாந்தி, அங்குரார்ப் பணம், ப்ரதிஸரபந்தம் என்ற கர்மாக்களை ஆபஸ்தம்ப ஸூத்ர ரீதியாக ஸ்மார்த்த அல்லது க்ருஹ்ய கர்மாவைச் செய்வோரும் பின்பற்ற வேண்டும்.

வழக்கப்படி அநுக்ஞை, விக்நேஸ்வர பூஜை, ஸங்கல்பம் முதலியவைகளைச் செய்து முடித்து, முதலில் புண்யாஹ-வாசநம் செய்யவேண்டும். (அங்குரப்திஸரம் போல் புண்யாஹவாசநமும் பல கர்மாக்களில் அங்கமாகக் கூறப்பட்டுள்ளது.) 5 பாலிகைகளைக் கொண்டுவந்து அவைகளின் அடியில் அருகம்புல், அரச இலை, வில்வ பத்ரம் முதலியவைகளை வைத்து வெண்மை நிறமுள்ள நூலால் சுற்றி சுத்தமான மண்களால் அவைகளை நிரப்ப வேண்டும்.

புண்யாஹவாசன ஜலத்தால் கூர்ச்சத்தைக் கொண்டு (கூர்ச்சம் என்பது தர்ப்பை முஷ்டியை நுனியில் பவித்ரம்போல் ஒருவகை முடிபோட்டுள்ளது) வ்யாஹ்ருதியைக் கூறி 5 பாலிகைகளையும் ப்ரோக்ஷிக்க வேண்டும். நடுவில் ஒரு பாலிகையை வைத்து 4 பக்கங்களில் நான்கு பாலிகைகளை வைக்க வேண்டும். முதலில் நடுவிலுள்ள பாலிகையில் "ஓம்பூ: ப்ரும்மாணம் ஆவாஹயாமி, ஓம்புவ: ப்ராஜாபதிம் ஆவாஹயாமி, ஓம் ஸுவ: சதுர்முகம் ஆவாஹயாமி. ஓம் பூ—வ: ஹிரண்ய கர்ப்பம் ஆவாஹயாமி. ப்ரும்மா தீநாம் இதம் ஆஸநம்." என்று ஆவாஹந ஆஸநாதிகளைச் செய்யவேண்டும். இதேபோல் கிழக்குப் புறத்திலுள்ள பாலிகையில் தனித் தனியாக 3 வ்யாஹ்ருதிகளைக் கூறியும் சேர்த்துக் கூறியும் "இந்த்ரம் ஆவாஹயாமி, வஜ்ரிணம் ஆவாஹயாமி, ஶதக்ரதும் ஆவாஹயாமி, ஶசிபதிம் ஆவாஹயாமி" என்று இவர்களை ஆவாஹநம் செய்ய வேண்டும். இந்த்ராதீநாம் இதம் ஆஸநம். தெற்கு புற பாலிகையில் யமன் வைவஸ்வதன், பித்ருபதி தர்மராஜன் ஆகியவர்களை முன்போல் வ்யாஹ்ருதிகளால் ஆவாஹநம் செய்து யமாதீநாம் இதம் ஆஸநம் என்று ஆஸநம் அளிக்க வேண்டும். மேற்கு பாலிகையில் வருணம், ப்ரசேதஸம், ஸுரூபிணம் அபாம்நிதிம் ஆவாஹயாமி என இவர்களை வரித்து வருணாதிநாம் இதம் ஆஸனம் என ஆஸநமளிக்க வேண்டும். வடபுற பாலிகையில், ஸோம இந்து நிஶாகர ஒஷதிஶ என்றவர்களை ஆவாஹநம் செய்து ஆஸநமும் கொடுக்கவேண்டும்.

பாலிகைகளுக்குப் பரிஸ்தரணம் செய்து "ப்ரும்மா திப்யோநம: இதம் பாத்யம், இதம் அர்க்யம், இதம் ஆசமநீயம்" என பூஜை செய்து ஆபோஹிஷ்டா என்று 3 மந்த்ரங்களாலும், ஹிரண்யவர்ண, என்ற 4 ரிக்குகளாலும், பவமான என்ற அநுவாகத்தாலும் அபிஷேகம்போல் ஜலத்தை ப்ரோக்ஷித்து வஸ்த்ரம் தூபதீப நிவேதந, தாம்பூல மந்த்ர புஷ்ப ஸ்வர்ண புஷ்பாதிகளைத் தந்து ஷோடஶோபசாரத்தைச் செய்யவேண்டும். பாலிகா த்ரவ்யங்களை பாலாலும் ஜலத்தாலும் நனைத்துக் கூர்ச்சத்துடன் பாலிகா த்ரவ்ய பாத்ரத்தை எடுத்துக்கொண்டு எழுந்து நின்று உபஸ்தாநம் செய்யவேண்டும். உபஸ்தாந மந்த்ரம்: "திஶாம் பதீன் நமஸ்யாமி, ஸர்வகாம பலப்ரதான். குர்வந்து ஸபலம் கர்ம குர்வந்து ஸததம் ஶுபம்." ஸர்வகாமனைகளையும் பூர்த்தி செய்து வைக்கும் திக்பாலர்களை நமஸ்கரிக்கிறேன். அவர்கள் கர்மாவை ஸபலமாகச் செய்யட்டும். கர்மாவை மங்களமாகச் செய்யட்டும்.

பாலிகா தான்யங்கள்: நெல்லு, உளுந்து, எள்ளு, பச்சைப் பயர், கடுகு என்றவை பாலிகா த்ரவ்யங்கள். சிறிது முன்னமே ஊறவைத்து அதன் பிறகு பாலிகையில் இவனும் ஸுமங்கலிகளும் இந்த விதைகளைப் போட்டு 4 நாட்களும் காலை மாலைகளில் ஜலம் விட்டு வைத்திருந்தால் நன்ருக முளைத்து ஓங்கி வளரும். அது தம்பதிகளது வளர்ச்சிக்கும் அவனது ஸந்ததி வளர்ச்சிக்கும் அறிகுறியாகும். சிலவிடங்களில் நவக்ரஹ த்ரவ்யமான, கோதுமை, நெல்லு, துவரை, பயத்தம்பயர், கடலை, மொச்சைக் கொட்டை, எள்ளு, உளுந்து, கொள்ளு ஆகியவைகளைப் பாலிகா த்ரவ்யங்களாக உபயோகிக்கின்றனர். பலவிடங்களில் தான்யக் கடைகளில் சிந்திக்கிடக்கும் ஸகல தான்யங்களையும் (மிளகாய் விதை உள்பட) கடைக்காரன் கொடுத்ததையே பாலிகா த்ரவ்யங்களாக உபயோகிக்கின்றனர். அது நியாயமில்லை.

உபஸ்தானம் ஆனபிறகு ஓஷதி ஸூக்தங்களைப் பாராயணம் செய்ய நான்கு பேருக்குக் குறையாமல்

ப்ராம்மணர்களை வரித்து, ஜபம் ஆனபின் அவர்களுக்குத் தக்ஷிணை தரவேண்டும். யஜாஜாதா என்ற அனுவாகம் ஒஷதி ஸூக்தமாம்.

மத்யம பாலிகையில் ப்ரும்மஜக்ஞானம், பிதாவிராஜ என்ற மந்த்ரங்களைக் கூறி, ப்ரும்மாதிப்யோ நம:, அயம் பீஜாவாப: என்று, மந்த்ரத்தால் ஒரு முறையும், மந்த்ர மில்லாமல் இருமுறையும் பாலிகா த்ரவ்யங்களை அதில் விதைக்க வேண்டும். கிழக்குப் பாலிகையில் யத இந்த்ர–ஸ்வஸ்திதா என்ற மந்த்ரங்களால் இந்த்ராதிப்யோ நம: அயம் பீஜாவாப: என முன்போல் மந்த்ரத்தால் ஒரு முறையும் மந்த்ரமில்லாமல் இருமுறையும் பீஜங்களை விதைக்க வேண்டும். தெற்கில் யோஸ்ய, யமங்காய என்பவைகளால், யமாதிப்யோநம: அயம்பீஜாவாப:. மேற்கில் இமம்மேவருண-தத்வாயாமி என்பவைகளால் வருணாதிப்யோ நம: அயம் பீஜாவாப:. வடக்கில் ஸோமோ தேனும்-ஆப்பா யஸ்வ என்பவைகளால் ஸோமாதிப்யோ நம: அயம்பீஜாவாப: என பீஜாவாபம் செய்து, பஞ்சகவ்யத்தாலும் சுத்தமான மணலாலும் மூடி, கர்மா முடியும் வரை நன்கு அதைக் காப்பாற்ற வேண்டும். காலை மாலைகளில் நிவேதனம் முதலிய பூஜைகளைச் செய்து வரவேண்டும். கர்மா முடிந்த பிறகு ஒற்றைப்பட்ட நாளில் ப்ரணவம், வ்யாஹ்ருதி முதலிய அதே மந்த்ரங்களால் முறையே ப்ரும்மாதி தேவர்களை உத்வாஸனம் செய்து, நதியிலோ, குளத்திலோ அந்த முளைகளை விட்டு, பாலிகை பாத்ரத்துடன் வீட்டிற்குக் கொண்டுவர வேண்டும். புருஷர் விதை விதைத்த பின் கன்யகைகளோ, ஸுமங்கலிகளோ, 3 அல்லது 5 அல்லது 7 பேர் கூர்ச்சத்துடன் அந்த விதைகளையும் அத்துடன் உள்ள தீர்த்தத்தையும் பாலிகையில் மூன்று மூன்று முறை போடவேண்டும். ஸுமங்கலிகளானால், குழந்தை உள்ளவர்களாகவும் பஹிஷ்டை நீங்காதவர்களாகவும் இருக்கவேண்டும். அவர்களுக்குச் சந்தன தாம்பூலமளித்துப் பூஜை செய்யவேண்டும்.

ப்ரதிஸர பந்தம்

ஒரு கார்யத்தைச் செய்து முடிப்பதாக ஸங்கல்பம் செய்து கொள்பவனை "தீக்ஷை செய்து கொண்டு திறி கிறான். காப்புக்கட்டிக் கொண்டு திறிகிறான்" என்றும் சொல்வர். அந்தக் கர்மா உபநயனமாகவோ, விவாஹ மாகவோ இருக்கலாம். ஆலயங்களில் நடக்கும் ப்ரும் மோத்ஸவத்தில் முக்யமாக அதை நடத்துபவர் கங்கணம் கட்டிக்கொள்வர். அந்தக் கங்கண தாரணம் ஆன பிறகு அந்தக் கர்மா முடியும் வரை அவருக்குப் பங்காளிகள் இறந்தது மூலம் அல்லது குழந்தை ப்ரஸவம் ஆனது மூல மாக வரும் ஆஸௌசம், வ்ருத்திகள் உண்டாவதில்லை. அவரைப் பலவகைகளிலும் காப்பாற்றுவதால் அதற்கு "காப்பு" எனப் பெயராம். நித்யப்படியே பெண்கள், சில தேசங்களில் ஆண்களும், வெள்ளி அல்லது தங்கத்தினால் கங்கணம் தரித்துக் கொள்வர். அது கேவலம் அலங்காரம் மாத்ரமல்ல. ரக்ஷையும் ஆகும். சிலவிடங்களில் கை கால் களில் ரோகம் வந்தவர் வெள்ளியினால் ஒரு காப்பு போல் தரித்து, அதைக் "தடை" என்று கூறுவர். அதாவது அது நோய்வரவிட்டாமல் தடுப்பதாகும்.

ஆனால் நூலால் 9 மடிப்பாகத் திரிக்கப்பட்டு மஞ்சள் பூசிய ப்ரதிஸரம் ஸ்மார்த்த, ஆகம, புராண கர்மாக்களில் அணியப்படுகிறது. த்ராஹ்யாயணர் என்ற ஸாமவேத ஸூத்ரக்காரர் ஸாமவேத ஸ்ராவணத்திலும், இதைத் தரித்துக்கொள்ளும்படி கூறி இருக்கிறார்.

இந்த கர்மாவும் போதாயனர் கூறியபடி ஆபஸ்தம்பி களால் அனுஷ்டிக்கப்படுகிறது. புருஷர்களுக்கு அன்ன ப்ராஸனம், சௌளம், உபநயனம், ஸ்நானம், விவாஹம் ஆகிய வைதிக கர்மாக்களில் ப்ரதிஸரபந்த கர்மா வைச் செய்யவேண்டும். பெண்களுக்கு பும்ஸவன, ஸீமந் தோன் நயன, அன்னப்ராஸன, சூடா கர்ம விவாஹங் களில் ப்ரதிஸரபந்தம் செய்ய வேண்டும். புராணாதிகளில் கூறப்படும் வ்ரலக்ஷ்மீ வ்ரதம் போன்ற சிற்சில வ்ரதங்களி லும் கங்கண தாரணம் உண்டு.

முன்போல் அனுக்ஞை, விக்னேஶ்வர பூஜை, முதலியவைகளைச் செய்து, இன்ன நக்ஷத்ரம் இந்த ராஶியில் பிறந்த இன்னாருக்குப் போதாயன உக்த ப்ரகாரமாக ப்ரதிஸர பந்த கர்மா செய்கிறேன் என ஸங்கல்பம் செய்ய வேண்டும். உதக ஶாந்திக்கு வைப்பது போல் சுத்தமான இடத்தில் கலஶத்தை வைத்து அதில் வருணனை இமம்மே வருண என்ற மந்த்ரத்தால் ஆவாஹனம் செய்து, நிவேதனம் வரை பூஜை செய்யவேண்டும்.

கலஶத்திற்கு வடக்கே வெண்கல பாத்ரத்தில் அரிசியை வைத்து அதன் மீது பஞ்சினால் நூற்ற நூலை 9 மடிப்பாக முறுக்கி மஞ்சள் பூசி, தாம்பூலத்துடன் வைக்க வேண்டும். பிறகு ப்ரதிஸரபந்த ஜபம் செய்ய நான்கு ப்ராம்மணர்கள்மீது அக்ஷதையைப் போட்டு ஜபம் செய்ய வரிக்க வேண்டும். அந்த ரித்விக்குகளுடன் கும்பத்தைத் தொட்டுக்கொண்டு காயத்ரியைப் பதம் பதமாகவும், பாதமாகவும் கூறி நான்கு வேதங்களின் ஆதியையும் க்ருணுஷ்வபாஜ என்ற அனுவாகத்தையும், அக்னே யஶஸ்வின் என்ற நான்கு ரிக்குகளையும், ததிக்ராவிண்ண, ஆபோ ஹிஷ்டா, ஹிரண்யவர்ணா, பவமான, வருண ஸூக்தம், ருத்ர ஸூக்தம், ப்ரும்ம ஸூக்தம், விஷ்ணு ஸூக்தம், துர்கா ஸூக்தம், ஸ்ரீ ஸூக்தம் முதலியவைகளையும் நமோ ப்ரும்மணே என்பதை மூன்று முறையும் ஜபித்து, வருணனை யதாஸ்தானம் செய்ய வேண்டும். ப்ரணவத்தைக் கூறி, கும்பத்தை எடுத்து, ஸுரபிமதி ரிக்கால் ஜலத்தைப் போற்றும் மந்த்ரங்களால் அந்த ப்ரதிஸரத்தை ப்ரோக்ஷிக்க வேண்டும். தேவஸ்யத்வா என்ற மந்த்ரத்தால் மும்முறை கர்த்தாவை ப்ரோக்ஷிக்க வேண்டும். இந்த மந்த்ரங்கள் நமது பீடையை அகற்றி, நம்மைச் சுத்தமாக்கி நன்மையைத் தரும் அர்த்த முள்ளவை.

ப்ரதிஸர ஸூத்ரத்தை எடுத்து இடது கை கட்ட விரல், மோதிர விரல்களால் அடியைப் பிடித்துக்கொண்டு வாஸுகியை மனதால் நினைக்கவேண்டும். வலது கை

கட்டவிரல், மோதிர விரல்களால் விபூதியை அடி முதல் நுனி வரை த்ரயம்பகம் என்ற மந்த்ரத்தைக் கூறி ஒரு முறையும், மந்த்ரம் இல்லாமல் இருமுறையும் மேல் நோக்கித் தடவவேண்டும். பிறகு இரு கரங்களிலும் அரிசியை நிறப்பி அதன்மீது பழத்தையும் அதன்மேல் அந்த ஸூத்ரத்தையும் வைத்து, அக்னி ராயுஷ்மான் என்ற 5 பர்யாயங்களால் மந்த்ரித்து, க்ரஹப்ரீதி செய்யவேண்டும். பிறகு, புருஷனுல் வலது கையிலும் பெண்ணுல் இடது கையிலும் ஸூத்ரத்தைக் கட்டவேண்டும். கட்டும் போது "ப்ருஹத்ஸாம" என்ற மந்த்ரத்தைக் கூற வேண்டும். விபூதியால் "யோப்ரும்மா" என்ற க்ருதஸூக்தத்தால் ரக்ஷை செய்யவேண்டும். பிறகு ப்ராம்மணர்களுக்கும் ஆசார்யருக்கும் தக்ஷிணை தரவேண்டும்.

எந்த கர்மாவிற்காக இந்த கங்கண தாரணம் செய்து கொண்டோமோ அந்தக் கர்மா பூர்த்தியானபின் ஸாயம் ஸந்த்யா காலத்தில் வ்யாஹ்ருதியைக் கூறி, ஸூத்ரத்தை அவிழ்த்து நதியிலோ தடாகத்திலோ போடவேண்டும்.

இத்துடன் ப்ரதிஸரபந்த கர்மா பூர்த்தியாகின்றது.

பாலிகையை விடுவதுபோல் ஷை ஸூத்ரத்தையும் அவிழ்த்து ஜலத்தில் விடவேண்டும் என்ருலும் சிஷ்டாசாரத்தில் அப்படிச் செய்வதில்லை. கர்மாங்கமான கார்யம் ஆய்விட்டாலும், அது நமது கரத்திலேயே இருந்தால் நமக்கு நன்மை. ஜலத்தில் போடுவது என்பது முக்ய தாத்பர்யமல்ல. அங்கமுமல்ல. சுத்தமான விடத்தில், பழய பூணலைப்போல், அசுத்தமாக்காமல் வைக்கவேண்டும் என்றே அதன் பொருள் என்றும், பெரும்பாலும் முன்னவர் எப்போதும் சுத்தராகவே இருந்ததாலும் அதை எறிவதில்லை. விநாயக சதுர்த்தியில் பூஜை ஆன பின் மறுநாள் அதைச் சுத்த ஜலத்தில் போடவேண்டுமென்று புராணம் கூறினுலும், சிஷ்டர் வீட்டிலேயே அதைச் சுத்தமான விடத்தில் வைப்பதுபோல் இதுவும் ஏற்பட்டிருக்கும். வைஶ்யாதி சில வகுப்பார் விவாஹம்

ஆனவுடன் அதை அவிழ்த்து விடுவது ஸஹஜமான ஆசாரமாக இருக்கின்றது.

ஜாநவாஸம் அல்லது மாப்பிள்ளை அழைப்பது, கல்யாணம் சொல்வது இவை முற்றிலும் லௌகிகமானவை. அதாவது, வைதிகமான கர்மாவோ, மந்த்ரமோ இல்லை. நிஸ்சிதார்த்தம், லக்ன பத்ரிகை என்ற கர்மாக்களிலும் விசேஷமான வைதிக கர்மாக்களில்லை. விக்னேஸ்வர பூஜை செய்து, இன்னருடைய குமாரியை இன்னவருடைய குமாரனுக்குக் கொடுப்பது என்ற நிச்சயத்தையும், இன்ன லக்னத்தில் பாணிக்ரஹணம் என்ற லக்ன பத்ரிகையையும் சிலவிடத்தில் ஸமஸ்க்ருதத்தில் கூறுவர். சிலர் தமிழிலேயே கூறுவர். ப்ரஸூக்மந்தா என்ற இரு மந்த்ரங்களை இச்சமயம் கூறுவர்.

வரன் (மாப்பிள்ளை) செய்ய வேண்டியவை:—நித்ய கர்மாவை முடித்துச் சுத்தனாக, தட்டில் தாம்பூலத்துடன் தக்ஷிணையை எடுத்துக்கொண்டு, நமஸ்ஸதஸே—ப்ருநிவ்யை "அஶேஷே ஹே பரிஷத், பவத்பாதமூலே மயா ஸமர்ப்பிதாம் இமாம் ஸௌவர்ணீம் யத்கிஞ்சித் தக்ஷிணாமபி யதோக்த தக்ஷிணாமிவ தாம்பூலம்ச ஸ்வீக்ருத்ய, ஆவயோ: உத்வாஹ கர்ம கர்த்தும் யோக்யதா ஸித்திரஸ்து இதி அநுக்ரஹாண" என்று இதைக் கூறி, தக்ஷிணை தந்து, விவாஹம் செய்து கொள்வதற்கு ஏற்ற யோக்யதையைப் பெற்றுக் கொள்கிறுன். இது வேத மந்த்ரமல்ல. ஸகல கர்மாக்களிலும் முதலில் செய்ய வேண்டிய கார்யம் இது. இதன் பொருள் "ஒவித்வான்களது ஸபையே! தங்களது திருவடியில் ஏதோ கொஞ்சம் ஸூவர்ண தக்ஷிணை ஸமர்ப்பிக்கிறேன். அதை உயர்ந்த தக்ஷிணையாக, தாம்பூலத்தையும், ஏற்றுக்கொண்டு எங்களுக்கு விவாஹம் செய்து கொள்வதற்கு ஏற்ற யோக்யதை உண்டாக வேண்டுமென்று அனுக்ரஹம் செய்யுங்கள்." தக்ஷிணையைப் பெற்றுக்கொண்ட ப்ராம்மணர்கள் "ததாஸ்து. யோக்யதா ஸித்திரஸ்து" என்று அனுக்ஞை கொடுப்பார்கள். அதன் பிறகே கர்மாவைத் துவக்கவேண்டும். ப்ராம்மணர் சொல் தேவவாக்குப் போலாகும். (பெரியோர்களை

தக்ஷிணை தந்து ஆராதித்து அவர்களிடமிருந்து கர்மாவைச் செய்ய அனுக்ஞை பெறுகிறோம். தற்சமயம் தக்ஷிணைக்கே அனுக்ஞை என்று பெயரிட்டு, "எனக்கு அனுக்ஞை வரவில்லை. எனக்கு அனுக்ஞைகொடு, உமக்கு அனுக்ஞை சேர்ந்ததா?" என தவறுதலாகச் சொல்கிறோம். தக்ஷிணை பெற்ற பெரியோர் இந்த கர்மாவைச் செய்ய உனக்கு யோக்யதை உண்டாகட்டும் என்று கூறுவதற்கே அனுக்ஞை என்று பெயர்.)

பிறகு எந்த கர்மாவும் நிர்விக்னமாக முடிவதற்காக விக்னேஶ்வர பூஜை செய்யவேண்டும். மஞ்சள் பொடியால் விக்னேஶ்வரரைப் பிடித்து, த்யான ஆவாஹனாதி ஷோடஶ உபசார பூஜை செய்யவேண்டும். அதன் பிறகு, "ஶுபே ஶோபனே—பரமேஶ்வர ப்ரீத்யர்த்தம், தர்ம ப்ரஜா ஸம்பத்யர்த்தம் வரான் ப்ரேஷயிஷ்யே" என்று ஸங்கல்பம் செய்தபின், விக்னேஶ்வரரை உத்வாஸனம் (யதாஸ்தானம்) செய்து, அவருக்குப் பூஜை செய்த அக்ஷதை புஷ்பங்களை ஆசார்யர் ஆசீர்வாதம் செய்து அளிப்பர். அதைத் தலையில் தரித்துக்கொண்டு, மந்த்ரங்களை அறிந்த 4 ப்ராம்மணர்களைத் தக்ஷிணை தாம்பூலங்களால் பூஜித்துப் பெண்ணின் வீட்டிற்குப் போய்த் தனக்கு அந்த கன்யகையைத் தரும்படிக் கேட்க அனுப்ப வேண்டும். அச்சமயம் இந்த ப்ராம்மணர்களைப் பார்த்துக் கூறும் மந்த்ரம் இரண்டு.

ப்ரஸூக் மந்தா—புபோததி. அந்ருக்ஷரா—அஸ்துதேவா:

(1) இதன் பொருள்—"ஓ நண்பர்களே, நினைத்த மாத்ரத்தில் நன்கு வேகமாகப் போகின்ற ஸாமர்த்யம் வாய்ந்த நீங்கள் நல்ல வழியாக கன்யகையின் பந்துக்களிருப்பிடம் செல்லுங்கள். இதில் தேவேந்த்ரனும் ஆமோதித்து எங்கள் இருவருக்கும் நன்மை புரிவான். நாங்கள் இருவரும் சேர்ந்து விதிப்படி யாகம் செய்து, ஸோமரஸமெனும் உயர்ந்த அன்னத்தை அவருக்குக் கொடுக்கப் போகிறோம் என்பதை அவர் உணர்வார். (2) எனக்காகக் கன்யகையின் வீட்டிற்குச் செல்கின்ற

உங்களுக்கு வழியானது கல்கள், முள்ளுகள் இல்லாமல் நன்ருக இருக்கட்டும். அர்யமா, பகன் எனும் தேவர்களும் எங்களை ஒருவரோடொருவரைச் சேர்க்கட்டும். தேவர்களே! எங்களது தாம்பத்யம் நன்ருகச் சேரட்டும்!" இப்படிக் கருத்துள்ள இரு மந்த்ரங்களைக் கூறி, வரனுல் அனுப்பப்பட்டவர் கன்யகையினது பந்துக்களிடம் போய் இன்ன கோத்ரத்தில் பிறந்த இந்த வரனுக்கு இந்த கோத்ரத்தில் தோன்றிய கன்யகையைப் பத்னியாகத் தரும்படி வேண்டுகிருேம் என்று கூறவேண்டும். கன்யாபிதா அப்படியே ஆகட்டுமென்று கூற, அதை வரனிடம் வந்து பந்துக்கள் தெரிவிக்கவேண்டும் பிறகு கன்யாபிதா நல்ல தினத்திலே கன்யகா தானம் செய்ய ஏற்பாடு செய்வார். இதே விவாஹ முறை. (தற்சமயம் மந்த்ரம் மாத்ரம் கூறப்படுகிறது).

கன்யகாதான ஸங்கல்பம்:—கன்யகையின் பிதா சுத்தராய்ப் பத்னியுடன் ப்ராம்மணர்களை நமஸ்கரித்துத் தாம்பாளத்தில் தாம்பூலத்துடன் தக்ஷிணையை எடுத்துக் கொண்டு, அஶேஷே ஹே பரிஷத்—அனுக்ரஹாண, என்று கன்யாதானம் செய்ய அனுக்ஞை கேட்கிருர். விக்னேஶ்வர பூஜை செய்து திதி, வார நக்ஷத்ரங்களைக் கூறி "எனக்கு முன்னே என் குலத்தில் பிறந்த 10 பேரும், நானும், பின்னே பிறக்கப் போகும் 10 பேரும்—ஆக 21 பேரை நற்கதி அடைவிப்பதன் மூலமாக, அழிவற்றதும், அளவற்ற ஆனந்தமுள்ளதுமான, ஶாஶ்வதமான ப்ரும்ம லோகத்தை அடைவதற்காக, மஹாவிஷ்ணுவின் ப்ரீதியைப் பெறுவதற்காகவும் (ப்ராஹ்ம விவாஹ விதிப்படி) கன்யாதானமெனும் மஹாதானத்தைச் செய்கிறேன்" என்று ஸங்கல்பம் செய்து, க்ரஹப்ரீதியும் செய்த பின்பே வரனை விஷ்ணுவாகக் கருதி பூஜை செய்து கன்யகாதானம் என்னும் மஹாதானத்தைச் செய்யவேண்டும். (இப்போது வரன் இறங்கியுள்ள இடத்திலேயே வேத வ்ரதங்களை முடித்துக்கொண்டு, காசியாத்ரை போவதாக பாவனை நடக்கிறது. பிறகு கன்யகையின் பிதா தன் பத்னியுடன் வரனது பாதத்தை ஜலத்தால் அலம்பி, பூஜித்து,

கன்யயைத் தருவதாகக் கூறி, அழைத்து வந்து, மாலை மாற்றல், ஊஞ்சல் முதலியவைகளைச் செய்கின்றனர். இவை வேதோக்தமான கர்மா அல்ல என்றாலும், ஸ்த்ரீகளின் ஸம்ப்ரதாயத்தைத் தழுவி செய்ய வேண்டியவைகளைச் செய்தல் வேண்டும் என்று சாஸ்த்ரம் கூறுகிறது. பெரியோர் அதை அனுஷ்டித்து வந்தனர். அதில் பல தத்துவங்கள் அமைந்திருப்பதாலும் அவை அலக்ஷ்யம் செய்யத்தக்கவை அல்ல.)

மாலைமாற்றுவது :—கன்யகையின் அம்மான் கன்யகையையும், வரன் அம்மான் வரனையும் தூக்கிக்கொண்டு வருவர். அச்சமயம் தன்னருகேவரும் கன்யகைக்குத் தன் கழுத்திலுள்ள மாலையில் ஒன்றை எடுத்துப் போட்டு அவள் அணிந்து அளிக்கும் மாலையில் ஒன்றை வரன் ஏற்று வருவான். இங்ஙனம் கன்யகை வரனிடம் சென்று தன் மாலையில் ஒன்றை வரனுக்கு அளித்து, வரனது மாலையில் ஒன்றை ஏற்று வருவாள். இங்ஙனம் மும்முறை நடைபெறும். சிலவிடத்தில் இது முடிந்தபின் அம்மான்களுக்குப் புது வஸ்த்ரமளித்து சந்தனம் பூசி உபசரிப்பர். சிலர் முன்னதாகவே வஸ்த்ர சந்தன மளித்து பிறகு கன்யகையையும் வரனையும் தூக்கும்படி செய்வர். இது கன்யகைகளாக இருக்கும்போது நடந்த விவாஹத்தில் முன்னர் நடந்தது. [இச்சமயம் வயதான அம்மாமி போன்ற பெண்டுகளைத் தூக்குவது பலவகையிலும் அனுசிதமானதால், அப்படி தூக்காமலிருப்பது கெடுதலில்லை. ஒரு நல்லது எனலாம். ஆனால் அம்மான்களுக்கு வஸ்த்ரமளிப்பதும், மாலை மாற்றுவதும் மாறவில்லை.]

மாலை மாற்றுவதின் தத்வம் :—மாலையானது வாஸனையுள்ள புஷ்பங்களால் தொடுக்கப்பட்டது. அதைத் தம்பதிகள் மார்பில் தரித்துக் கொள்கின்றனர். கன்யகையின் மாலை வரனுக்கும், வரனது மாலை கன்யகைக்கும் அளிக்கப்படுகிறது. பொதுவாக ஒருவர் அணிந்த மாலையைப் பிறர் அணியலாகாது என சாஸ்த்ரம் கூறுகிறது. ஆனால். தம்பதிகள் மாற்றிக்கொண்டு மாலையை

அணிய வேண்டும் என்பதும் சாஸ்த்ரத்தால் தோன்றிய ஶிஷ்டாசார வழக்கம்.

சாஸ்த்ர விரோதமானதை ஶிஷ்டர் கைகொள்ள மாட்டார். சாஸ்த்ர விரோதமானதைக் கைகொள்பவர் ஶிஷ்டரல்ல. அவர் ஆசாரம் ஶிஷ்டாசாரமல்ல. அது ஏற்கத்தக்கதுமல்ல. அப்படியிருக்க ஏன் தம்பதிகள் விவாஹத்தில் ஒருவர் மாலையை மற்றவர் தரிக்க வேண்டும்? இது பெரியோரால் தொன்றுதொட்டு அனுஷ்டிக்கப்பட்டு வருவதால், சாஸ்த்ர ஸம்மதமானதே. ஸதியும் பதியும், இந்த விவாஹ கர்மாவால், இருவராயினும் ஒன்ருக்கப்படுகின்றனர். இருவரும் ஒன்ருகச் சேர்ந்த பின் அன்யர் அணிந்த மாலை என்ற வ்யவஹாரமில்லை. இருவரும் ஒன்று படுத்தப்பட்டாலும், சில கார்யங்களில் வேற்றுமை உண்டு. புருஷர் புஜித்து மிகுந்த அன்னம் ஸ்த்ரீகளுக்குப் பாவனமானது. புஜிக்க வேண்டியது. ஸ்த்ரீ உண்ட மிகுதியைப் புருஷன் புஜிக்கலாகாது. அது அசுத்தமானது. ஸமுத்ரமும் அலையும் ஒன்றே வேறல்ல. ஆயினும், அலை ஸமுத்ரத்தைச் சார்ந்தது. ஸமுத்ரம் அலையைச் சார்ந்ததல்ல அல்லவா? கன்யகை புருஷனிடம் வந்த பின்பும் "அவரை, புருஷனைச் சார்ந்தவள் யான்" என சிறிது காலம் நினைப்பாள். பேசுவாள். சிறிது காலம் சென்றபின் "என்னைச் சார்ந்தவர் அவர்" என எண்ணுகிருள். கூறுகிருள். அதன்பின் சிறிது காலம் சென்றபின் "நானும் அவரும் ஒன்றே" என்று நினைக்கிருள். சொல்லுகிருள். இந்த முறைதான் ஜீவன் ப்ரும்மத்தை உபாஸித்து, தன் மயமாகும் வழியாகும்.

வாஸனை என்பது வெளிப்படையான புஷ்ப வாஸனை மாத்ரமல்ல. மனிதனது மனத்திலுள்ள வாஸனையுமாம். இப்புருஷன் தன் மனோ வ்ருத்தியையும் வாஸனையையும் பத்னியிடம் இன்னதென்று மாலை வ்யாஜமாகக் காட்டுகிருன். அக் கன்யகையும் எனது மனோ வாஸனை இத்தகையது. இதை இனி தனியாக வளரவிடாமல் உம்மிடம் அர்ப்பணம் செய்து உமது வாஸனையை ஏற்றுக்கொள்

றேன் என மாலையிடுவது மூலமாகக் கூறுகிறாள். மூன்று முறை ஒன்றைக் கூறினாலும் செய்தாலும் அது ஸ்திர மாகிவிடும். பிறகு அதை மாற்ற முடியாது. அங்ஙனம் இருவரும் ஒன்ருகி, மனோவ்ருத்தியில்கூட வேறுபாடின்றி வாழவேண்டும் என்பதைக் காட்டுகின்றது மாலை மாற்றல் என்ற ஐதிஹ்யம். அங்ஙனம், பதியின் மனதை அனு ஸரித்து எண்ணங்களை எண்ணியதாலும் நடந்ததாலும் அருந்ததீ என்ற பெயர் அவளுக்குத் தோன்றிற்று. நக்ஷத்ர வடிவமான அவளைத் தர்ஸிப்பது, அவளைப்போல் பத்னியும், அவள் பதி வஸிஷ்டர் போல் பதியும் இருக்க வேண்டும் என்பதற்காகவே. மாலை மாற்றுவதன் மூலம் இருவரும் மனதிலும் ஒன்றுபட்டு இருத்தல் வற்புருத்தப் படுகிறது.

ஊஞ்சல்

தம்பதிகளை ஊஞ்சலில் உட்காரவைத்து, ஸுமங் கலிகள் ஊஞ்சல் பாடுவார்கள். லக்ஷ்மீ நாராயணன், மீனாக்ஷீ ஸுந்தரேசர் ஆகியவர்கள் இங்ஙனம் ஊஞ்ச லாடியதாக அவர்களைப் புதிய தம்பதிகளும் மற்றவரும் நினைக்கும்படி அந்தப் பாட்டு அமைந்திருக்கும். ஊஞ்சல் ஆடுவது, பிடி சுற்றிப்போடுவது, பாலால் கால் அலம் புவது, தீபம் ஜலம் இவைகளைக் கையிலேந்தி ஸுமங் கலிகள் தம்பதிகளை வலம்வருவது முதலியவை வைதிக கர்மா அல்ல என்றாலும், ஆபஸ்தம்பர் "பெண்கள் கூறிய தையும் செய்க" என்று கூறியதால் இவை அனுஷ்டிக்கப் படுகின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்து வத்தைக் காட்டுவதாகும்.

மேலே இருந்து தொங்கும் சங்கிலிகள் கர்ம பாசத் தால் மேலான பகவானிடமிருந்து பூமியில் இறங்கி இம் மானிடப் பிறவியைப் பெற்றிருக்கிறோம் என்பதைக் காண் பிக்கின்றன. ஊஞ்சல் முன்னும் பின்னும் செல்வது நமது வாழ்க்கை அலைபோல் சஞ்சலமானது. சிறிது முன்னுக்கும் வரும். பிறகு சிறிது பின்னேயும் செல்லும்.

சஞ்சலமான மனம்போல் வாழ்க்கையில்' இது நல்லதா? அது நல்லதா? இதைப்பின்பற்றுவோமா? வேண்டாமா என சஞ்சலம் உண்டாகும். ஊஞ்சலின் இயற்கையான அசைவற்ற நிலைபோல் ஸ்திரமான ஒன்றை நாம் பின்பற்ற வேண்டும்.

பாலினல் கால் அலம்பி, பட்டால் துவட்டுவது ஸுவாஸினிகள் வதூவரர்களைப் பூஜிப்பதாம். ஜலத்தாலும் தீபத்தாலும் ஊஞ்சலைச் சுற்றிவருவது அக்னிக்கு பரிஷேசனம் செய்வது போல் பூத, ப்ரேத, ராக்ஷஸ, பிஶாசாதிகள் தம்பதிகளை அருகே அணுகாவண்ணம் செய்யும் ரக்ஷையாம். வர்ணமிட்ட அன்னங்களால் தம்பதிகளைச் சுற்றிப் போடுவது த்ருஷ்டி பரிஹாரத்துடன் பூதப்ரேதாதிகள் தூரே எறியும் அன்னத்தைப் பலியாகப் புஜித்து தம்பதிகளை ஹிம்ஸிக்காமல் வெளியே போகும்படி செய்வதாம். வரனது தாய் கன்யகையையும், கன்யகையின் தாய் வரனையும் பூர்ண பலமான முழுத்தேங்காய், பழம், தாம்பூலம் முதலியவைகளைக் கையிலளித்து உள்ளே அழைத்துச் சென்று வேதியில் பட்டுப்பாயில் அமரும்படி செய்ய வேண்டும். தம்பதிகள் உள்ளே நுழையும் போதும், கன்யகாதான காலத்திலும், மாங்கல்ய தாரண ஸமயத்திலும் இது போன்ற முக்ய காலங்களிலும் கெட்டி மேளம் வாசிப்பது மற்ற அபசகுனமான சொற்கள் காதில் படாமல் தடுப்பதற்காம்.

கன்யகாதானம்: பத்னி இல்லாதவர் கர்மா செய்ய அர்ஹரல்லர். கன்யகையின் தந்தை (அல்லது அவரது ஸஹோதரர், அல்லது அவரால் ப்ரார்த்திக்கப்பட்டவர்) கன்யகாதானத்திற்காக, முன்போல் அஶேஷே ஹே பரிஷத்-ஸ்விக்ருத்ய என்று கூறி தக்ஷிணை தந்து, என் முன்னோர் 10, பின்னவர் 10, நான் ஒருவன், ஆக 21 தலை முறை பாபத்திலிருந்து கறை ஏறி நித்யமாய், ஒப்பற்றதாய், ஆனந்தம் நிறைந்ததாயுள்ள ஶாஶ்வதமான ப்ரும்ம லோகத்தை அடைய, மஹா விஷ்ணுவின் ப்ரீதியின் பொருட்டு, ப்ராம்ம விவாஹ விதிப்படி கன்யகாதானம்

செய்ய எனக்கு யோக்யதை உண்டாகும்படி அருள் புரியுங்கள்-என்று அனுக்ஞை கேட்கவேண்டும். ப்ராம்ம ணர்கள் "யோக்யதைத் உண்டாகட்டும்" என்பார்கள். பிறகு விக்னேஸ்வர பூஜை—ஸங்கல்பம். மமோபாத்த-ப்ரீத் யர்த்தம், முன் போல் 21 தலை முறை நற்கதி பெற்று ப்ரும்ம லோகத்தை அடைய கன்யகாதானம் எனும் மஹாதானம் செய்கிறேன்—என்று ஸங்கல்பம் செய்து விக்னேஸ்வரரை யதாஸ்தானம் செய்து, க்ரஹ ப்ரீதி செய்ய வேண்டும். கன்யகாதான காலத்தில் உண்டாகும் தோஷங்களை அகற்ற நவக்ரஹ ப்ரீதிக்காக சிறிது தக்ஷி ணையை ப்ராம்மணர்களுக்குக் கொடுப்பதே க்ரஹப்ரீதி எனப்படும்.

வரபூஜை: மஹா விஷ்ணு ஸ்வரூபராக எண்ணி, நல்வரவு கூறி, அர்க்யம், பாத்யம், ஆசமனீயம் அளித்து, வரனின் காலை அலம்பி, இருவரும் ஆசமனீயம் செய்ய வேண்டும். கால் அலம்பும் போது, தத்விஷ்ணோ:—பரமம் பதம் என்ற வேத மந்த்ரத்தைக் கூறவேண்டும். அதன் கருத்து:—மஹா விஷ்ணுவினுடைய உயர்ந்த பரமபத மானது உலகெலாம் ப்ரகாசமாக விளங்குகிறது. அதைக் குற்ற மற்ற புண்ய ஶீலர்களான பெரியவர்கள் எப் பொழுதும் பார்த்துப் போற்றுகின்றனர். அத்தகைய மஹா விஷ்ணுவின் பதமாக, வரனை உம்மைக்கருதி பூஜிக்கிறேன்.

வரன், கன்யகை இருவர்களுடைய மூன்று பெரி யோர்களை ப்ரவர, ஸூத்ர, கோத்ர, ஶர்மாவோடு கூறி, அவர்கள் மரபில் தோன்றிய இந்த கன்யகையை இந்த வரனுக்கு அளிக்கிறேன் என்று கூறவேண்டும். அதைத் தான் மாத்ரமல்லாமல், சில ப்ராம்மணர்களையும் தன் னுடன் கூறும்படி வரித்துக் கூறவேண்டும். உதாஹரணம்: பார்க்கவ ச்யவன ஆப்னவான ஔர்வ ஜாமதக்ன்ய பஞ்சார்ஷேய ப்ரவரான்வித ஶ்ரீவத்ஸ கோத்ரோதபவஸ்ய, ஶ்ரீராம ஶர்மண: நப்த்ரீம் (கொள்ளுப் பேத்தி), பார்க்கவ—கோத்ரோத் பவஸ்ய ந்ருஸிம்ஹ ஶர்மண:

பௌத்ரீம், பார்க்கவ—கோத்ரோத்பவஸ்ய வேங்கடராம ஶர்மண: புத்ரீம், ஸ்ரீவத்ஸ கோத்ரோத்பவாம் லக்ஷ்மீ நாம்னீம் மதியாம் கன்யாம், ஆங்கிரஸ, பார்ஹஸ்பத்ய பாரத்வாஜ த்ரயார்ஷேய ப்ரவரான்வித பாரத்வாஜ கோத்ரோத்பவஸ்ய ராமசந்த்ர ஶர்மண: நப்த்ரே (கொள்ளுப்பேரன்), ஆங்கிரஸ—கோத்ரோத்பவஸ்ய அர்த்த நாரீஸ்வர ஶர்மண: பௌத்ராய, ஆங்கிரஸ-கோத்ரோத்பவஸ்ய ஸ்ரீ க்ருஷ்ண ஶர்மண: புத்ராய, ஸ்ரீராம ஶர்மணே, யஜுஶ்ஶாகாத்யாயினே மஹாவிஷ்ணு ஸ்வரூபிணே வராய துப்யமஹம் ப்ரஜா ஸஹத்வ கர்மப்ய: ப்ரதி பாதயாமி என்று கன்யகையின் வலதுகையை ஜலதாரையுடன் தாம்பூல தக்ஷிணையுடன் வரனது கையில் அளிக்கவேண்டும். அச்சமயம் சிலஸ்லோகங்களைக் கூறவேண்டும் 1. கன்யாம் கனக ஸம்பன்னும் கனகாபரண பூஷிதாம் । தாஸ்யாமி விஷ்ணவே துப்யம் ப்ரும்ம லோக ஜிகிஷயா ॥ கருத்து: கனகத்துடன் (தங்கம்), கனக நகை பூட்டிய கன்யகையை ப்ரும்மலோகம் செல்லவேண்டும் என்ற ஆசையால் விஷ்ணு ரூபமான உமக்கு அளிக்கிறேன். 2. விஸ்வம்பரா ஸர்வபூதா: ஸாக்ஷிண: ஸர்வ தேவதா: । இமாம் கன்யாம் ப்ரதாஸ்யாமி பித்ரூணாம் தாரணாய ச ॥ கருத்து:—உலகைத் தரிக்கின்ற ஸர்வ தேவர்வர்களுக்கும் ஸர்வ பூதங்களும் ஸாக்ஷிகளாக இருக்கட்டும். பித்ருக்கள் நன்மை பெற இந்த கன்யகையைத் தானம் செய்கிறேன். 3. கன்யே மமாக்ரதோ பூயா: கன்யே மே தேவி பார்ஸ்வத: । கன்யே மே ஸர்வதோ பூயா: த்வத் தானாத் மோக்ஷ மாப்னுயாம். கருத்து:—ஓ கன்யே தேவி எனக்கு எதிரிலும் பக்கத்திலும் எங்கும் இரு. உன்னைத்தானம் செய்வதால் மோக்ஷம் அடைய வேண்டும். 4. ஹிரண்ய கர்ப்ப கர்ப்பஸ்தம் ஹேமபீஜம் விபாவஸோ: । அநந்த புண்ய பலதம் அதஸ் ஶாந்திம் ப்ரயச்சமே ॥ இது எல்லா தானங்களிலும் பொதுவாகக் கூறப்படுவது. ப்ரஜைகளைப் பெறுவதற்காகவும் புருஷனுடன் கூட இந்த கன்யகை இருந்து ஸகல கர்மாக்களையும் செய்யும் பொருட்டும் தானம் செய்கிறேன் என்றும் கூற வேண்டும்.

வரன்:—தேவஸ்யத்வா-ப்ரதிக்ருஹ்ணுமி என்ற மந்த்ரத்தைக் கூறி கன்யகையை ஏற்கவேண்டும். "ஸவித்ரு தேவன் நமக்கு நன்மை தருவதற்காக அஸ்வினீ தேவர்களுடைய பாஹுக்களாலும் பூஷாவினுடைய கரங்களினுலும் இதை வாங்கிக் கொள்கிறேன். சிறந்தவரான ஆங்கிரஸ் உன்னை ஏற்றுக்கொள்ளட்டும்" என்று அம் மந்த்ரத்தின் கருத்து. நாம் எந்தப் பொருளை தானமாக வாங்கினுலும் இம் மந்த்ரத்தைக் கூறவேண்டும். நமது தோளிலிருந்து முழங்கைவரை பாஹுவாம். அங்கு அதிஷ்டான தேவதையாக வஸிப்பவர் அஸ்வினீ தேவர்கள். அதற்குக் கீழே உள்ளது கரம் எனப்படும். அதற்கு அதிஷ்டான தேவதையாக உள்ளவர் பூஷா. இந்த இருவர் பெயராலும் வாங்கி ஆங்கிரஸ்ஸிடம் அளிக்கிறோம். இந்த வஸ்து, நேராகவோ, மாருகவோ, பரமாத்மாவிற்கு அளிக்கப்படுகிறது. அப்படி நாம் தானம் வாங்கிய வஸ்துவை நல் வழியில் பயன் படுத்தினுல்தான் தானம் வாங்கிய பாபம் நம்மை விட்டு அகலும்.

கன்யகையும் வரனுமாக வேதியினருகே அமர்ந்து ஸங்கல்பம் செய்ய வேண்டும். கால தேசங்களைக் கூறி, எங்கள் இருவர்க்கும் உத்வாஹ கர்மாவைச் செய்கிறோம் என்று ஸங்கல்பித்து, எதிரில் அக்னியை விதிப்படி ப்ரதிஷ்டை செய்ய வேண்டும். கன்யகையைத் தானம் செய்பவன் விதிப்படி வரனுக்கு மதுபர்க்கம் என்ற பூஜையைச் செய்ய வேண்டும். முதலில் கன்யா தாதா—"கூர்ச்ச:" என்று கூறி, தர்ப்பையாலாகிய கூர்ச்சத்தைத் தரவேண்டும். அதை வரன் "ஸுகூர்ச்ச:" என்று கூறி வாங்கி, அதில் அமர வேண்டும். ஓ கூர்ச்சமே, நீ ராஜ்யத்தைத் தரிக்கத் தக்கவன். ஆசார்யனுக்கு ஆஸனமாக இருக்கிறாய். உன்னை விட்டு யான் பிரிய வேண்டாம்—என்பது அம் மந்த்ரத்தின் பொருள்.

கன்யகையைக் கொடுப்பவர் ஆப: பாத்யா: என்று கூறி ஜலத்தை எடுக்கவேண்டும். வரன்:—ஆப: பாதாவநேஜநீ—ஸ்யஸாநி என்று கூறி வலது காலை நீட்டவேண்டும். மந்த்

ரார்த்தம் :—பாதத்தை அலம்பும் ஜலம் எனது சத்ருக்களை நாசம் செய்யட்டும். இந்த குலத்தில் நான் ப்ரும்ம வர்ச்சஸ் உள்ளவனாக வேண்டும். மயிமஹோ வீர்யம் என்ற மந்த்ரத்தைக் கூறி, வரன் தன் மார்பைத் தொட்டுக் கொள்ள வேண்டும். என்னிடம் பூஜை, கீர்த்தி, கண் முதலிய இந்த்ரிய சக்தி, வீர்யம் இவை உண்டாகட்டும் என்று அதன் பொருள்.

பெரியவர்கள் நம் காலைத் தொடும்போது நமது சக்தி குறைகின்றது. அப்படி குறையாவண்ணம் இந்த மந்த்ரத்தைக் கூறவேண்டும். இங்ஙனம் ஶ்ராத்த காலத்திலும் அதைச் செய்பவர் வயதிலும் ஆசாராதிகளிலும் உயர்ந்தவராக இருந்து சிறியவரிடம் தனது மூதாதைகளை ஆவாஹனம் செய்து கால் அலம்பும்போது, சிறியவர் தம் பலம் முதலியன குறையா வண்ணம் தர்ப்பையால் அவரைத் தொட்டுக் கொண்டு இம்மந்த்ரத்தைக் கூறுவதுண்டு.

கன்யகாதானம் செய்பவர் :—மஹாவிஷ்ணு ஸ்வரூபஸ்ய வரஸ்ய இதமாஸனம் :—மஹாவிஷ்ணுஸ்வரூபரே, உமக்கு ஸ்வாகதம். இதம்பாத்யம் என்று கூறி, மனைவி ஜலம் விட, தான் வரனது காலை அலம்ப வேண்டும். உடனே இருவரும் கை அலம்பி, ஆசமனம் செய்ய வேண்டும்.

கன்யா தாதா—இரு கூர்ச்சங்களால் ஜலத்தை எடுத்து அர்ஹணியா ஆப: என்று கூறவேண்டும். அந்த ஜலம் தன் அஞ்ஜலியில் ஏகதேசத்தில் படும்போது, வரன் ஆமாகன் - விராஜ என்ற மூன்று மந்த்ரங்களைக் கூறவேண்டும். மந்த்ர அர்த்தம் :—ஓ அர்க்ய ஜலமே, நீ என்னை வந்து அடைந்தாய். நீ யஶஸ், வர்ச்சஸ், பால், தேஜஸ் இவைகள் என்னிடம் இருக்கும்படி செய். இவைகளுடன் கூடிய என்னை ப்ரஜைகளுக்கு ப்ரியமாக இருக்கும்படி செய். பசு முதலியவைகளுக்கு அதிபதியாகச் செய். ஓ தீர்த்தமே, நீ அன்னத்தைக் கறப்பவர். உன்னை யான் ஏற்றால், அன்னம் எனக்கு வ்ருத்தியாக வேண்டும். என் ஸ்தானத்திலுள்ள என் குழந்தைக்கும் அங்ஙனம் நீர்

ப்ரகாசமாக இரும். அதாவது, என் ஸந்ததியையும் அன்னம் நிறைய உள்ளதாகச் செய்யும். ஓ தீர்த்தமே, உன்னை ஸமுத்ரத்திற்கு அனுப்புகிறேன். நீர் உம் இருப்பிடமான ஸமுத்ரத்தை அடையும். நானும் உமது தயவினல் ப்ரஜைகளுடன் கூடினவனுக இருக்கவேண்டும். ஜலம் இடைவெளியில்லாமல் சேர்ந்திருப்பதுபோல் என் ஸந்ததி தொடர்ச்சியாக இருத்தல்வேண்டும். மறுபடியும் நீர் எனக்குப் பயன்படும்படி இரும். மிகுதி ஜலத்தைப் பூமியில் விடும்போது இக்கடைசி மந்ரத்தைக் கூற வேண்டும்.

தயிர், தேன் இவைகளைக் கலந்து, வெண்கல பாத்ரத்தில் இரு கூர்ச்சங்களால் மூடி, தாதா—மதுபர்க்க: என்று கூறவேண்டும். அதை ஏற்றுக் கொண்டு வரன் த்ரய்யை—பசூனும் என்ற இரு மந்ரங்களைக் கூறவேண்டும். மந்த்ர அர்த்தம்—ஓ மதுபர்க்கமே, நீ மூன்று வேதங்களுக்கு யசஸ்ஸாக இருக்கிறுய். வேதத்தையே ப்ரகாசப்படுத்துகிறுய் நீ. அத்தகைய நீ என்னை ப்ரஜைகளுக்கு ப்ரியனுகச் செய். பசுக்களுக்கு அதிபதியாகச் செய். ஆமாகன்—பசூனும் என்ற முன் கூறிய மந்த்ரத்தை இங்கு மறுபடி கூறவேண்டும்.

அம்ருதோபஸ்தரணமஸி என்று முதலிலும், அம்ருதாபிதானமஸி என்று முடிவிலும் தீர்த்தத்தை வரன் பருக வேண்டும். (இதே ப்ராணுக்னி ஹோத்ரத்திற்கு முன்பும் பின்பும் ஏற்பட்ட மந்த்ரம்.)

யன்மதுன :—வ்யோஸானி என்ற மந்த்ரத்தைக் கூறி ஒரு முறையும், மந்த்ரமில்லாமல் இரு முறையும் மதுபர்க்கத்தைப் புஜித்து, பிறகு "அம்ருதாபிதானமஸி" என்று ஜலம் அருந்த வேண்டும். இங்கு அம்ருதத்திற்கு ஸமமான மதுபர்க்கத்திற்கு ஓ ஜலமே, நீ கீழே விரிப்பாக இரு, மேலே மூடுதலாக இரு என்று பொருள். மதுவிலிருக்கும் மதுரமான வீர்யத்தை அளிப்பதுமான பரமான்னத்தைப் புஜிக்கிறேன். அந்த சிறந்த பரமான்னத்தால் நான் சிறந்த அன்னமுள்ளவனுகவும் வீர்யமுள்ளவனுகவும்,

மதுபோன்ற வனாகவும், மதுபர்க்கத்திற்கு அர்ஹனாகவும் இருக்கவேண்டும் என்பது மதுபர்க்கத்தை உண்ணும் மந்த்ரத்தின் பொருளாம். (ப்ரத்யக்ஷமாக கோ - பசுவை எதிரில்நிறுத்தி தாதா மதுபர்க்க பூஜை செய்யவேண்டும். இப்போது அதன் ப்ரதிநிதியாக ஒரு முழுத்தேங்காய் அளிக்கப்படுகிறது. மந்த்ரமெல்லாம் கோவைப் போற்றும் கருத்துள்ளவை.)

மது பர்க்கம் அளிப்பவர் "கௌ:" என்று கூறி பசுவை அவரெதிரில் நிறுத்த வேண்டும். அதற்கு பதில் இப்பொழுது ஒரு தேங்காயை அளித்துக் கௌ: என்று கூறுகின்றனர். மதுபர்க்கத்தைப் பெறுபவர் "யக்ஞோ வர்த்தாம்" என மூன்று மந்த்ரங்களை மெதுவாகக் கூறி "ஓம் உத்ஸ்ருஜத" "இதை அங்கிகரித்தேன். விட்டுவிடுங்கள்" என்று உறக்கக் கூறவேண்டும். மந்த்ர அர்த்தம்:—விருந்தினருக்கு மதுபர்க்கம் அளிப்ப தென்ற யக்ஞும், எல்லோராலும் செய்யப்படட்டும். அதைத் தழுவி, ஓ கோவே! நீயும் வ்ருத்தி அடை. நீ மிகவும் பூஜிக்கத் தக்கவள். உன்னை அப்படியே விடுகின்ற நானும் உலகில் மனிதரால் பூஜிக்கத்தக்கவனாக ஆக வேண்டும்.

இந்தப் பசு நன்றாக கறக்கக் கூடிய காமதேனுவாக ஆகும். ருத்ராதி தேவர்களுக்குத் தாயாகவும், வஸுக்களுக்குப் பெண்ணாகவும், ஆதித்யருக்கு ஸஹோதரியாகவும் ஆவாள். அம்ருதத்தை அளிக்கும் யாகத்திற்குத் தொப்புள்போல் கோ முக்ய அவயவமாவாள். இவ்வளவு பெருமைவாய்ந்த தேனுவை ஹிம்ஸிக்காதீர் என அறிவுள்ள ஜனங்களிடம் கூறுகிறேன். இந்த கோ தன் இஷ்டப்படி ஜலமருந்தட்டும். புல்லைத் தின்னட்டும். இதை விட்டு விடுங்கள். (முன் யுகங்களில் மது பர்க்க பூஜையில் கோவை ப்ரத்யக்ஷமாக விருந்தினருக்கு அளிப்பர். விருந்தாளி அதன் ஈரலை ஹோமம் செய்து மிகுதி மாம்ஸத்தை உண்பர். இப்படிக் கட்டாயம் கோவைக் கொண்டு யாகம் செய்யவேண்டும் என விதியில்லை. இஷ்ட முள்ளவர் செய்யலாம். மற்றவர் இதை விட்டு விடுங்கள் எனக்

கூறுவர். அந்தக் கருத்தையே இந்த மந்த்ரங்கள் கூறுகின்றன.)

பிறகு விருந்தாளிக்கு அன்னமளிக்கவேண்டும். சாப்பிட்டபின் விவாஹஹோமம் முதலிய வைதிக கர்மாவைச் செய்யக் கூடாது என அன்னத்திற்குப்பதிலாக வாழைப் பழத்தைத் தற்சமயம் தருவர். அப்போது கூறும் மந்த்ரம். கன்யாபிதா "பூதம்" என்று கூற விருந்தாளி 'தத்ஸூபூதம்' என்ற மந்த்ரத்தைக் கூறுவார். மந்த்ர அர்த்தம்:— அன்னம் தயாராகிவிட்டது என்று முதல்வர் கூற விருந்தாளி, நன்றாகத் தயார் செய்யப்பட்டது. அது மிகவும் நன்றாக இருக்கிறது. அது குறையாமலிருக்கட்டும். அதை நான் உண்கிறேன். ஓ அன்னமே! நீ எனக்கு பலத்தை அளி. ஓ பரிசாரகர்களே! அதைப் பரிமாருங்கள். - இத்துடன் மது பர்க்க பூஜை முடிந்தது. நமது ஆசார்யன், ரித்விக், மாமனார், ராஜா ஆகியவர்கள் நம் வீட்டிற்கு வர நேர்ந்தால், இந்த மதுபர்க்க பூஜையை. அவர்களுக்கும் செய்யவேண்டும்.

வரன் கன்யகையைப் பார்த்துக் கூற வேண்டிய மந்த்ரம்: "அப்ராத்ருக்நீம்". அர்த்தம் :—ஓ வருண! ஸஹோதரனுக்குத் தீங்கிழைக்காததான பாக்யத்தை இவளுக்குக் கொடும். ஓ ப்ருஹஸ்பதே! கணவனுக்குத் தீங்கைச் செய்யாத தான பாக்யத்தை அளியும். ஓ இந்த்ர! புத்ரபாக்யத்தை உண்டு பண்ணும். ஓ ஸவிதா! ஸகலவிதமான பாக்யத்தையும் நீர் உண்டு பண்ணும். இவளது அல்லது எனது ஸஹோதரனுக்கும், எனக்குப் பிறக்கப் போகும் குழந்தைகளுக்கும் மரணம் வராதபடி நீங்கள் ரக்ஷியுங்கள்.

"அகோரசக்ஷு:" என்ற மந்த்ரத்தைக் கூறி வரன் கன்யகையின் ஒவ்வொரு அங்கத்தையும் பார்க்க வேண்டும். மந்த்ர அர்த்தம் :—

ஓ கன்யகையே! நீ நல்ல கண் உள்ளவளாக இரு. பதிக்குத் தீங்கு செய்யாதவளாக இரு. என்னிடமும் எனது ஸஹோதரர்களிடமும் மங்களமாக இரு. நல்ல மனமுள்ள வளாகவும், நல்ல வர்ச்சஸ் உள்ளவளாகவும்

இரு. சாகாத புத்ரன் உள்ள வளாகவும் யக்ஞம் செய்ய விருப்பமுள்ள வளாகவும் எங்கும் சிறந்த வளாகவும் இரு. எனக்கும் என்னைச் சார்ந்தவர்களுக்கும், எனது பசுக் களுக்கும் இன்பத்தைச் செய்.

கன்யகையுடன் வேதியினருகே அமர்ந்து வரன், "நாமிருவரும் கர்மாக்களைச் செய்வோம். புத்ரர்களை உண்டு பண்ணுவோம்," என்று ஸங்கல்பம் செய்ய வேண்டும். உடனே கட்டவிரலாலும், மோதிர விரலா லும் தர்ப்பத்தை எடுத்து "இதமஹம்" என்ற மந்த்ரத் தால் கன்யகையின் இரு புருவங்களுக்கிடையே துடைத்து மேற்கு புறமாக எறிந்து கை அலம்பவேண்டும். அர்த் தம்:—ஓ பெண்ணே! உனது பதியான என்னைக் கெடுக் கும்படியாய் உன்னிடம் உள்ள அலக்ஷ்மியை இந்த தர்ப்பையுடன் கூட தூரே எறிகிறேன்.

இந்த கன்யகை நம்மை விட்டு அன்யர் வீட்டிற்குச் செல்கிறாளே என்று எந்த பந்துவேனும் அல்லது கன்ய கையே கண்ணீர் விட்டால் "ஜீவாகும் ருநந்தி" என்ற மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். மந்த்ரார்த்தம்:-இந்த கன்ய கையை ஹிம்ஸிக்காமல் நன்கு வாழும்படி செய்யும் போது ஸந்தோஷப்படவேண்டுமல்லவா? இப்போது ஏன் வருந்தவேண்டும்? இந்த விவாஹத்தை ஏற்பாடு செய்த பந்துக்கள் எங்கள் இருவர்க்கும் நீண்ட நாள் அன் யோன்ய அன்பு உண்டாகும்படி த்யாநம் செய்யட்டும். இந்த விவாஹத்தால் இரண்டு வம்ச பித்ருக்களுக்கும், எனக்கும், இந்த பெண்ணுக்கும் இன்பம் உண்டாகின்ற தல்லவா? ஆதலால் பந்துக்கள் அழாமல் எங்களுக்கு ஆசிர்வாதம் செய்யட்டும்.

கீழ் வரும் மந்த்ரத்தைக் கூறி தீர்த்தம் கொண்டுவர ப்ராம்மணர்களை அனுப்பவேண்டும். தற்சமயம் மந்த் ரத்தை மாத்திரம் கூறுவது வழக்கம். "வ்யுக்ஷத்" என்ற மந்த்ரார்த்தம்:—ஜலத்திலுள்ள க்ரூரமான அம்ஸம் அகலட்டும். சுத்த ஜலம் இங்கு வரட்டும். இந்த வது வுக்கு-ஸ்நாநம்-ப்ரோக்ஷணம் செய்துவைக்க ப்ராம்மணர்

கள் அந்த ஜலத்தைக் கொண்டு வரட்டும். இந்த ஜலம் பிறக்கும் குழந்தைகளை கொல்லாமலிருக்கட்டும்.

மேலே, கன்யகையின் தலை மீது தர்ப்பத்தால் பிரிமணை போல் செய்து வைத்து அதன் மீது நுகத்தடியின் வலது துவாரத்தை வைத்து அதில் ஸுவர்ணத்தை வைத்து ஜலத்தால் நனைக்க வேண்டும். பிரிமணை வைக்கும் "அர்யம்ண" என்ற மந்த்ரத்தின் அர்த்தம் :—இந்த தர்ப்பம் சுற்றி இருப்பது போல் ஆதித்யனது அருளால் விவாஹத்திற்காக அமைக்கப்பட்ட அக்நியைச் சுற்றி மண்டலமாக நின்று எனது தாயும் ஸஹோதரனும் பார்க்கட்டும்.

அதன் மீது நுகத்தடியின் வலது த்வாரத்தை வைக்கும்போது கூறப்படும் "கேனஸ:" என்ற மந்த்ரத்தின் பொருள் :-ஓ இந்த்ர, ரதத்தின் துவாரத்திலும் வண்டியின் துவாரத்திலும் ஜலத்தை விட்டு மூன்று முறை சுத்தமாக்கி நீ அபாலா என்ற கன்யகையை சூர்யன்போல் ப்ரகாசிக்கும்படி செய்தாய். அப்படியே இவளையும் ப்ரகாசமுள்ளவாகச் செய். நோயற்றவளாகச் செய்.

இந்த அபாலா என்பவளைப் பற்றி ரிக்வேதத்தில் ஒரு கதை காணப்படுகிறது.-அதாவது அபாலா என்ற பெண் குஷ்டரோகமுள்ளவள். அவளை எவரும் மணக்க வில்லை. அவளுக்கு யாகம் செய்து இந்த்ரனைப் பூஜிக்க வேண்டுமென்று ஆசை இருந்தது. கல்யாணமாகாததால் அந்த ஆசை பூர்த்தியாகவில்லை. ஒரு ஸமயம் நதியின் வெள்ளம் இவளை இழுத்துச் சென்றது. தற்செயலாக அங்கு ஸோமலதையும் அவளிடம் வந்தது. அதைப் பல்லால் கடித்து அந்தஸோமரஸத்தை மனதினால் இந்த்ரனுக்கு அளித்தாள். அதை அருந்தி இந்த்ரன் தேர், வண்டி, நுகத்தடி, ஆகிய இம் மூன்றின் த்வாரம் வழியாக ஜலத்தை விட்டு அதனால் அபாலா என்பவளை மூன்று முறை பாவநமாக்கி நோயை அகற்றி மிக அழகுள்ளவளாகச் செய்தார்.

நுகத்தடி த்வாரத்தில் ஸுவர்ணத்தை வைக்கும் போது கூறப்படும் "ஶந்தே" என்ற மந்த்ர அர்த்தம் :—

இந்த நுகத்தடி த்வாரத்தில் வைக்கப்படும் ஸுவர்ணம், பெண்ணே உனக்கு ஸுகத்தைத் தரட்டும். அதன் மீது விடப்படும் ஜலமும் ஸுகந்தரட்டும். நுகத்தடியும் அதன் த்வாரமும் ஸுகத்தைத்தரட்டும். பலரைப் பாவநமாகச் செய்யும் ஜலமும் ஸுகந்தரட்டும். பிறகு-ருது வாகிஷேக முகூர்த்தம் நடக்கும் காலத்தில்-சுத்தமான உனது உடல் என்னுடன் சேரட்டும்.

"ஹிரண்ய வர்ண": முதலிய ஐந்து மந்த்ரங்களால் பெண்ணை ப்ரோக்ஷிக்க வேண்டும். மந்த்ர அர்த்தம் "சுத்த வர்ணமுள்ளதும் ஸ்வயம் சுத்தமானதும், நம்மைச் சுத்த மாக்கக் கூடியதும், பாபங்களை அகற்றக் கூடியதுமான இந்த ஜலத்தால் ஸவிதா எனும் தேவன் உன்னைப் பாவன மாகச் செய்யட்டும். எந்த ஜலத்திலிருந்து கஶ்யபரும், அக்கினியும் உண்டானார்களோ, எது அக்கினியைத் தன் வயிற்றில் வைத்திருக்கிறதோ, அத்தகைய சுத்தமான தீர்த்தம் உன்னைப் பாவனமாக்கி, இஹலோக பரலோக ஸுகத்தைத் தரட்டும். எந்த ஜலத்திற்கு அரசனான வருணன் ஜனங்களுடைய புண்யபாப கர்மாக்களைப் பார்த்துக்கொண்டு, ஜலத்தின் இடையே ஸஞ்சரிக்கிறானோ அந்த சுத்தமான ஜலம் உனக்கு இஹபரஸுகத்தைத் தரட்டும். ஆகாயத்திலுள்ள தேவர்கள் எந்த ஜலத்திற்கு உணவைக் கொடுக்கின்றார்களோ, எது ஆகாயத்தில் பலவாறாக இருக்கின்றதோ, எது அக்னியைக் கருவில் வைத்திருக்கிறதோ அத்தகைய சுத்த ஜலம் உனக்கு இஹபரஸுகத்தைத் தரட்டும். ஓ கன்யகையே, ஜலம் உன்னை மங்களமான கண்ணால் பார்க்கட்டும். மங்களமான சரீரத்தால் உன் தோலைத் தொடட்டும். நெய்யின் ஸாரத்தைத் தருகின்ற சுத்தமான தீர்த்தம் உனக்கு இஹ பர ஸுகத்தைத் தரட்டும்."

இவைகளால் ஸ்னானம் செய்து வைக்கவேண்டியது முறை. ப்ரோக்ஷிப்பது அல்லது ஜலத்தை மேலே பெருக்குவது ஸ்னானத்திற்கு ஸமமானதால் நுகத்தடியின் துவாரத்திலுள்ள ஸ்வர்ணத்தின்மேல் பட்டு, கன்யகையின் தலை

மீது விழும்படி ஜலத்தை விடுகின்றனர். கூறப்புடவையை-முகூர்த்தப் புடவையை-வேதம் சொல்லி ஆசீர்வாதம் செய்வார்கள். அந்தப் புடவையையும் திருமாங்கல்யத்தையும் அங்குள்ள பெரியோர்களும் ஸுமங்கலிகளும் கண்ணால் பார்த்து, கையால் தொட்டு ஆசீர்வாதம் செய்யும்படி எல்லோருக்கும் காண்பிக்க வேண்டும். ஆசீர்வாதம் செய்வதோடு, எந்த மாதிரி வஸ்த்ரம் வாங்கி இருக்கின்றனர் என்பதைப் பலரும் அறியக்கூடும் அல்லவா?

அந்த வஸ்த்ரத்தை அளித்து, கட்டிக்கொள்ளும்படி செய்ய, "பரித்வா" என்ற மந்த்ரத்தைக் கூறவேண்டும். அதன் அர்த்தம்:—"ஓ தேவேந்த்ர, யாகம் முதலிய வைதிக காமாக்களில் கூறப்படும் ஸ்துதிரூபமான வாக்குகள் உம்மைச் சூழ்ந்திருக்கின்றன. அதனால் உமக்குப் பெருமை உண்டாகிறதல்லவா? அதுபோல், உன் அருளால் இந்தக் கன்யகையைச் சுற்றிக் கட்டப்பட்ட புடவை அவளுக்கு ஸுகத்தையும், பெருமையையும் தரட்டும். உம்மைவிடச் சிறந்த தேவர்களை நீர் உபாஸிக்கின்றீர். ஆதலால், நாங்கள் கூறும் இந்த வாக்கும் வ்ருத்தி அடைந்து உம்மை ஸேவிக்கட்டும். நீர் இவளுக்குப் பரம ஸௌபாக்யத்தைத் தாரும்."

வரனின் ஸஹோதரி அல்லது அவனைச் சார்ந்த ஸ்த்ரீகளே இந்தப் புடவையைக் கட்டி, பெண்ணை அழைத்துவரவேண்டும். இதில் சில லௌகிக அம்சம் உண்டு. பெண்ணை முன்னே வரனைச் சார்ந்தவர்கள் பார்த்திருந்தாலும், பெரும்பாலும் முகம், கை, கால்களைத்தான் பார்த்திருக்கமுடியும். இச்சமயம் புடவை கட்டும் வ்யாஜமாக துடை முதலிய இடங்களில் ஏதாவது நோய்கள் இருக்கின்றனவா என கவனிக்கலாமல்லவா?

புதிய வஸ்த்ரம் தரித்தபின் கன்யகைக்குக் கால் அலம்பி, இரு முறை ஆசமனம் செய்விக்கவேண்டும். விரைக்கோட்டைமீது கிழக்கு முகமாகக் கன்யகையை உட்காரவைத்து, வரன் மேற்கு முகமாக நின்றுகொண்டு "மாங்கல்ய தந்துனனேன மமஜீவன ஹேதுனு. கண்டே பத்னமி

ஸுபகே த்வம் ஜீவ ஶரதஶ் ஶதம்" என்ற மந்த்ரத்தைச் சொல்லி தாலியைக் கட்டவேண்டும். எவ்வளவு நல்ல லக்னம் பார்த்திருந்தாலும், அதே ஸமயத்தில் மாங்கல்ய தாரணம் நடந்தாலும், நவக்ரஹங்களுடைய தயவை ஸம்பாதிப்பதற்காக க்ரஹ ப்ரீதி செய்யவேண்டும். அபசப்தம் காதில் கேட்காதபடி கெட்டி மேளம் அல்லது முகூர்த்த மேளம்வாசிக்கச் சொல்லி, ஸுமங்கலிகள் கௌரீ கல்யாணம் பாட, பந்துக்கள் புஷ்பம், சந்தனம், பன்னீர் வீச, வரன் தாலிகட்டவேண்டும். மந்த்ர அர்த்தம்:—"நான் சிரஞ்ஜீவியாக இருப்பதற்குக் காரணமான இந்த மாங்கல்ய கயிற்றை உன் கழுத்தில் கட்டுகிறேன். ஓ பாக்யவதி, நீயும் நூறுண்டு ஜீவித்திரு" என்று வரன் ஒரு முடிபோட, வரனது ஸஹோதரி மற்றும் இரண்டு முடிபோடவேண்டும். உடனே அவளுக்குச் சந்தன தாம்பூலம், லௌகிக ஆசீர்வாதம் செய்யவேண்டும். மாங்கல்ய ஸூத்ரம் தரித்த முகூர்த்தம் நல்ல முகூர்த்தமாக வேண்டுமென அருள் புரியுங்கள் என வரன் கேட்க, நல்ல முகூர்த்தமாகட்டும் என கூறுவார்கள். உடனே எல்லோர் மனமும் களிக்க, வாய் ருசிக்க, பானகம் அளித்து, முகூர்த்த சந்தன தாம்பூலம், கற்கண்டு, சர்க்கரை, ப்ராம்மணர்களுக்குப் பூரி தக்ஷிணை தரவேண்டும்.

இதன்பின்; "ஆஶாஸானு" என்ற மந்த்ரத்தால் புடவைமீது கன்யகையின் இடுப்பில் வரன் முஞ்ஜிப் பில்லாலாகிய கயிற்றைக் - ரஶனையை - கட்டவேண்டும். "ஓ அக்னியே, இனியான் செய்யப்போகின்ற ஸகல வ்ரத ஹோமங்களுக்கும் இவள் துணையாக இருக்கப்போகிறாள். இவள் நல்ல மனது, ஸந்ததி, சரீர ஆரோக்யம், ஸம்பத் முதலியவைகளை விரும்புகிறாள். அவைகளை நீர் தருவதற்காகவும், விவாஹம் செய்துகொள்வதற்கேற்ற யோக்யதை உண்டாவதற்காகவும் இந்த ரஶனையைக் கட்டுகிறேன்." இங்ஙனம் இஷ்டியிலும், வேள்வியிலும் பெண்களுக்குக் கட்டப்படுகிறது. உபநயனத்தில் ப்ரும்மசாரிக்கும் கட்டப்படுகிறது. இந்த ரஶனை வைதிகயோக்யதையைத் தருவதுடன், புதிதாகப் பெரிய புடவையைக் கச்சத்துடன்

-மடிசார்கட்டு- கட்டும்போது, அதன்மேல் இந்த ரஶனை -பில்ட்- கச்சை கட்டுவது போலாகும். அடிக்கடி எழுந்து நடந்து உட்காரும்போது, புதுப்புடவை அவிழ்ந்து விழா மல் இருக்கவும் பயன்படுகிறதல்லவா ?

கன்யகையின் நாபிக்குத் தென்புரத்தில் முடிச்சு வரும்படி கட்டவேண்டும். "பூஷா" என்ற மந்த்ரத்தைக் கூறி, பெண்ணின் வலது கையை வரன் வலது கையால் பிடித்துக் கொண்டு அக்னிக்கு அருகில்வந்து, அதன் மேற்கு புரத்தில், வடக்கு நுனியாகப் போடப்பட்டிருக் கும் புதுப்பாயில் தம்பதிகள், வடக்கே வரன், தெற்கே பெண்ணுமாக உட்காரவேண்டும். "பூஷா" என்ற மந்த் ரத்தின் அர்த்தம்:—"பெண்ணே, நான் உனது கையைப் பிடித்தாலும், பூஷா என்ற தேவனே என்மூலமாக உனது கரத்தைப் பிடித்து அக்னியினருகே அழைத்துச் செல்லட் டும். அங்கு நடக்கவேண்டிய ஹோமங்கள் முடிந்தபின், அஶ்வினீ தேவர்கள் தக்கவாஹனத்துடன் உன்னை என் வீட்டிற்கு அனுப்பட்டும். அங்கு வந்தவுடன் வீடு உன் னுடையது. அதற்கு யஜமானி நீயே. அந்த பாக்யத் தைப் பெற, ஸகல வைதிக கர்மாக்களையும் நீ என்னுடன் இருந்து செய்வாயாக."

பிறகு, முறைப்படி அக்னியை ப்ரதிஷ்டை செய்து, ஆஜ்யபாகம் வரை செய்து, "ஸோம:" "ஸோமோததந்" என்ற இரு மந்த்ரங்களை, பெண்ணைப் பார்த்து ஜபிக்க வேண்டும்.-(அனுக்ஞை, ஸங்கல்பம், ஸ்தண்டிலம், அக்னி ப்ரதிஷ்டை, ப்ராக்தோயம், அக்னி ஜ்வாலை, அக்னி பரிஸ் தரணம், பாத்ர ஸாதனம், பாத்ர ப்ரோக்ஷணம், ஆஜ்ய ஸம்ஸ்காரம், தர்வி ஸம்ஸ்காரம், அக்னி பரிஷேசனம், அக்னி ஸித்திக்காக ஹோமம், அக்னயே ஸ்வாஹா, ஸோமாயஸ்வாஹா, வரை "முகாந்தம்" அல்லது "ஆஜ்ய பாகம் வரை" என்று கூறப்படும். இது பெரும்பாலும் ஸகல ஹோம கர்மாவிலும் செய்ய வேண்டிய கர்மா.)

கன்யகையைப் பார்த்து வரன் ஜபிக்க வேண்டிய மந்த்ர அர்த்தம்:-"இந்த கன்யகையை ஒரு குறித்த காலம்

வரை ஸோமன் என்ற தேவதை காக்கிறார். பிறகு ஒரு காலம் வரை கந்தர்வனும் பிறகு அக்னியும் ரக்ஷிக்கின்றார்கள். இவளை மணக்கும் மனிதன் நான்காவதாக இவளை ரக்ஷிக்கிறான். ஆதலால், முன் கூறிய மூவரும் தம் கடமை முடிந்ததால், அடுத்தபடி பொறுப்பை ஏற்கும்படி என்னை ஆமோதிக்கட்டும்."

பாணி க்ரஹணம் :—விவாஹத்திற்கு பாணிக்ரஹணம் என்ற ஒரு பெயருண்டு. ஆதலால் விவாஹத்தில் இதுவும் ஒரு முக்யமான கர்மா. ஸ்ரீஸீதா கல்யாணத்தில் ஜனக மஹா ராஜன் ஸ்ரீராமரை நோக்கி "பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணினா" என்று கூறினர். அப்படிக் கையைப் பிடிக்கும்போது சில நியமங்கள் கூறப்படுகின்றன. விவாஹம் தர்மத்திற்காகவும், ஸந்ததிக்காகவுமல்லவா? புத்ரியே பிறக்கவேண்டும் என்று வரன் விரும்பினால், பெண்ணின் கட்டைவிரலை நீக்கி, உள்ளங்கையை -4 விரல்களை - தன் உள்ளங்கரத்தால் பிடிக்கவேண்டும். பிள்ளை மாத்ரம் பிறக்கவேண்டும் என்று விரும்பினால் கன்யகையின் கட்டைவிரலை மாத்ரம் பிடிக்க வேண்டும்.

பாணி க்ரஹண மந்த்ர அர்த்தம் :—"ஒ பெண்ணே, பகன், அர்யமா, ஸூர்யன், இந்த்ரன், மற்ற தேவர்களும், நான் க்ருஹஸ்தாஶ்ரமத்தை நடத்த உன்னை எனக்கு அளித்தார்கள். அதாவது, அவர்கள் அருள் பெற்று, அவர்கள் ஸாக்ஷியாக உன்னை நான் மணந்து கொள்ளுகிறேன். நீயும் நானும் கிழமானால் கூட, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதபடி உன் கையை யான் பிடிக்கின்றேன்."

பெண்ணே, பகன் முதலிய அந்தப் பழய காலத்து தேவர்களும் கூட நம்மைப்போல் விவாஹம் செய்து கொண்டார்கள். அங்ஙனம் மணம் புரிந்து கொண்ட க்ருஹஸ்தாஶ்ரமிகளுக்குள் அக்னியே முதல்வராக ப்ரகாசிக்கிறார். அத்தகைய தேவர்கள் நமது க்ருஹஸ்தாஶ்ரமத்திற்கு உரிய விவாஹத்தை ஆமோதித்து உன்னை எனக்கு அளிக்கட்டும்.

ஓ, ஸெளபாக்யவதியான ஸரஸ்வதியே! ஸகல தேவர்க்கும், ப்ராணிகளுக்கும் எதிரில் உம்மை நாங்கள் நன்கு துதிக்கின்றோம். இந்த பாணிக்ரஹணத்தை நன்ருகக் காப்பாற்று. எங்களுக்கு உன்னைப்போல் ஸகல பாக்யமும் உண்டாகும்படி அருள் புரி.

பெண்ணே, எங்கும் தங்கு தடையின்றி செல்லும் சக்தி உள்ளவர் வாயு. எல்லா பொருள்களையும் பவித்ர மாகச் செய்கிறவர். நமது உணவைப் பக்வம் செய்து தருபவரான அக்னிக்குத் தோழன். அத்தகைய வாயு, யார் எதைக் கேட்டாலும் கொடுக்க, கையில் ஸன்னத்த மாக ஸ்வர்ணத்தை வைத்திருக்கிருர். அவர் உனது மனதில் புகுந்து என்னிடம் உன்னை ஸதா அன்புள்ளவளாகச் செய்யட்டும்."

இந்த பாணிக்ரஹணமும், அடுத்தாற்போல் செய்யும் "ஸாப்த பதீனம்" என்பதும் விவாஹத்தில் கன்யகா தானம் போல் மிக முக்யமானது. இது முடிந்தால்தான் விவாஹம் முடிந்தது போலாகும்.

"ஏகமிஷே" முதல் ஏழு மந்த்ரங்களைக் கூறி, வரன் கன்யகையின் வலது காலைக் கையால் பிடித்து ஏழு அடி எடுத்து வைக்கும்படி செய்ய வேண்டும்.

"பெண்ணே, முதல் அடி எடுத்து வைக்கும்போது ஜகத்தைப் பரிபாலனம் செய்கிற விஷ்ணு எனக்கு நிறைய அன்னம் கிடைக்க உன்னுடன் வரட்டும். உனக்குப் பலத்தை அளிக்க இரண்டாவது அடியிலும் பின் தொடர்ந்து வரட்டும். நல்ல கர்மாக்களை நடத்திவைக்க மூன்ருவது அடியிலும் அவர் பின் வரட்டும். ஸுகத்தை அளிக்க நான்காவது அடியிலும், பசுவையும் செல்வத்தையுமளிக்க ஐந்தாவது அடியிலும் விஷ்ணு பின் தொடரட்டும். ஆறு ருதுக்களிலும் நன்மை உண்டாக ஆருவது அடியிலும் அவர் பின்தொடரட்டும். ஹோதா, ப்ரஶாஸ்தா, ப்ராம்மணச்சம்ஸீ, போதா, நேஷ்டா, அச்சாவாகன், ஆக்னீத்ரன் என்ற ரித்விக்குகளை அதைச் செய்யும்படியான பாக்யத்தை உனக்குச் செய்ய ஏழாவது

அடியிலும் விஷ்ணு உன்னைத் தொடர்ந்து வரட்டும். இங்ஙனம் ஏழு அடிகளிலும் ஏழு வகையான பாக்யத்தை ஸ்ரீ மஹா விஷ்ணு தொடர்ந்து வந்து அளிக்கட்டும்".

ஏழாவது அடியில் ஜபிக்கும் "ஸகா" என்ற மந்த்ரத்தின் பொருள்: "ஒ பெண்ணே, ஏழு அடி தூரம் என்னுடன் வந்த நீ எனக்கு ஸகாவாவாய். ஏழு அடி நடந்த நாம் இருவரும் ஸ்நேஹிதர்களாக வேண்டும். உன்னிடத்தில் யான் ஸ்நேஹத்தை வைத்தேன். உன்னை விட்டு யான் பிரியமாட்டேன். நீ என்னை விட்டுப் பிரியக் கூடாது. நாம் இருவரும் சேர்ந்து ஒவ்வொரு கர்மாவையும் ஸங்கல்பம் செய்து கொள்வோம். பரஸ்பரம் ருசி உள்ளவர்களாகவும், நல்ல மனம் உடையவர்களாகவும் இருப்போம். அன்னம், ரஸம் இவைகளைச் சேர்ந்து அனுபவிப்போம். இருவர் மனமும் ஒத்திருக்கட்டும். வ்ரதங்களைச் சேர்ந்தே அனுஷ்டிப்போம். மனம் மாத்ரமல்ல வெளி இந்த்ரிய வ்யாபாரங்களிலும் இருவரும் ஒத்திருப்போம்.

நீ ரிக், நான் ஸாமம். நான் ஸாமம், நீ ரிக். ரிக்கும் ஸாமமும் ஒன்றை விட்டு ஒன்று பிரியாததுபோல் நாம் இருவரும் இருக்கவேண்டும். நான் த்யுலோகம், நீ பூமி. நான் ரேதஸ், நீ ரேதஸ்ஸைத் தரிப்பவள். நான் மனஸ், நீ வாக்கு. நான் ஸாமம், நீ ரிக். -இவைகள் இணை பிரியாமலும் ஒன்றுக்கொன்று உதவியாகவும் இருப்பதுபோல், நாம் இருவரும் ஒத்திருக்கவேண்டும்-. ஸத்புத்ரனும், ஸம்பத்தும் உண்டாவதற்காக, முன் கூறியவைகளைப் போல், நீ என்னை அனுஸரித்து நட. என்னுடன் வா. எப்போதும் ப்ரியமாகவே பேசு."

இதுவே "ஸப்தபதி" எனப்படுகிறது. இதை ஜபித்துவிட்டு, கையை விடாமல் இருவருமாக அக்னியை வலம் வந்து பாயில் தம்பதிகளாக அமரவேண்டும். தெற்கு புறத்தில் ப்ரும்மாவுக்கு இடம். அக்னியை வலம் வரும்போது ப்ரும்மாவைச் சுற்றாமல், ப்ரும்மாவுக்கும் அக்னிக்கும் நடுவில் வரவேண்டும். தென் திசை யமனது இருப்பிடமானதால், தம்பதிகள் ப்ரும்மாவைத் தென் புறத்தில்

வைத்து வலம்வரவேண்டும். பத்னி தன்னைத் தொட்டுக் கொண்டே இருக்க, வரன் "ஸோமாய" என்ற 16 ஹோமங்களைச் செய்யவேண்டும். இருவருக்கும் கர்மா பொதுவானதால், அவனைத் தொட்டுக்கொண்டிருந்தால் பத்னியும் ஹோமம் செய்வது போலாகும்.

1. இப் பெண்ணிடம் தங்கி இருந்த, ஓ ஸோம, உமக்கு ஹவிஸ்ஸைத்தருகிறேன். இது ஜனிவித்தான ஸோமனுடையதே. என்னுடையதல்ல—என்று இங்ஙனம் ஒவ்வொரு ஹோமத்தையும் செய்து, உத்தேசத்யாகம் சொல்ல வேண்டும். (உத்தேசத்தேவரை நாடி த்யாகம் செய்து-ஹோமம் செய்து- அந்தப் பொருள் என்னுடைய தல்ல என்று கூறுவதே உத்தேசத்யாகம்).

2. இக்கன்யகையிடம் முன்னிருந்த கந்தர்வர் 3. அக்னி ஆகிய இவர்களுக்கும் அப்படியே ஹோமம். -இம் மூவரும் கன்யகையிடம் முன் இருந்ததாக பாணிக்ரஹண மந்த்ரத்தில் கூறப்பட்டது. அவர்கள் இவளைக் காப் பாற்றி, வரனிடம் அளித்ததால் நன்றி கூறும் வகையிலும் தேவர்கள் என்ற வகையிலும் அவர்களுக்கு விவாஹத் தில் முதலில் ஹோமம் செய்யப்படுகிறது.

4. இவள் பிறந்த வீட்டை விட்டு பதியின் வீட் டிற்கு வருகிறாள். கன்யகைக்கு உரிய நியமங்களை விட்டு விட்டாள். அதனால் யாதொரு தோஷமும் இல்லாமல் இருக்கும்படி ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஆஜ்யத்தைத் தருகி றேன். ஆத்மனே இதம் நமம.

5. இஷ்டங்களைப் பூர்த்தி செய்யும் ஓ தேவேந்த்ர, இந்த கன்யகையை, அவளது குலத்தை விட்டு, என் குலத்தில் சேரும்படி செய்யும். இவள் என் குலத்தில் சேர்ந்து கலந்து, நல்ல புத்ரர்களையும் பாக்யத்தையும் அடையும்படி அருள் புரியும். இந்த்ராய மீடுஷே இதம் நமம.

6. இஷ்டத்தை அளிக்கும் இந்த்ர, இவளை ஸத்ஸந் ததி, ஸம்பத் முதலியன உள்ளவளாகச் செய்யும். இவ ளிடம் 10 புத்ரர் உண்டாகட்டும். பதி, பதினோராவது

புத்ரனைப்போல் அவளது அன்புக்கு பாத்ரமாகட்டும். இந்த்ராய மீடுஷே இதம் நமம.

7. ஒ அக்னே வருண, இவளிடம் உண்டாகும் புத்ரர்களுக்கு அபம்ருத்யு தோஷம் தோன்ருமலும், இவள் புத்ர சோகத்தால் கண்ணீர் விடாமலும் இருக்கும் படி அருள் புரியுங்கள். அக்னி வருணப்யாம் இதம் நமம.

8. வீட்டிற்குப் பதியாயுள்ள அக்னி இவளை ஸகல விதமான ஆபத்துக்களிலிருந்தும் காக்கட்டும். இவள் குழந்தை தீர்க்காயுஸ்ஸாக இருக்கவேண்டும். இவள் மடியில் குழந்தையை வைத்து ஸந்தோஷமாக அதை வளர்க்கட்டும். இவள் பெற்ற குழந்தைகள் எல்லாம் ஜீவனுடன் இருக்கட்டும். இவள் காலையில் எழுந்தவுடன் புத்ரன் முகத்தில் விழித்து குழந்தையால் உண்டாகும் இன்பத்தை அனுபவிக்கட்டும். அக்னயே கார்ஹபத்யாய இதம் நமம.

9. இரவில் வீட்டில் நுழைந்து, தானும் அழுது, வீட்டிலுள்ளவர்களையும் அழவைக்கும்படியான துர்தேவதைகள் இவள் வீட்டை விட்டு வேறிடம் செல்லட்டும். இங்கு தலைமயிரை விரித்துக்கொண்டு, மார்பில் அடித்துக் கொள்ளும் நிலை வரவேண்டாம். நீண்ட காலம் ஜீவித்திருக்கும் பதியுடன் அவள் வீட்டில் அவருக்கு அனுகூலமாயிருந்து நல்ல குழந்தைகளைக் கண்ணால் பார்த்துக் கொண்டு விளங்க அருள்புரியும். க்ருஹ பதியான அக்னே உமக்கு ஹோமம் செய்கிறேன். அக்னயே க்ருஹபதய இதம் நமம.

10. பெண்ணே, உனது பின்புறத்தை த்யுலோக தேவதையும், தொடைகளை வாயுவும், ஸ்தனத்தை அஸ்வினீ தேவர்களும், உன் புத்ரனை ஸவிதாவும், "ஆவாஸஸ:" என்று கூறி யாக தீக்ஷை செய்து வஸ்த்ரம் உடுக்கும் வரை ப்ருஹஸ்பதியும், பிறகு விஸ்வேதேவர்களும் ரக்ஷிக்கட்டும். இது ஒரு கவசம் போன்ற மந்த்ரம். த்யு வாயு அஸ்வி ஸவித்ரு ப்ருஹஸ்பதிப்ய விஸ்வேப்யோ தேவேப்ய இதம் நமம.

11. அக்னியின் அருளால், புத்ரன் உண்டாவதற்கு ப்ரதிபந்தமான தோஷத்தையும், பிறந்த குழந்தை இறப்பதற்கு உரிய பாபத்தையும், மற்ற பாப தோஷங்களையும், நம் தலையில் வைத்து வாடிய புஷ்பத்தை எடுத்துத் தூரே எறிவதுபோல், உன்னிடமிருந்து உன் சத்ருக்களிடம் எறிகிறேன். அக்நயே இதம் நமம.

12. ஓ வருண, உமது அருளை நாடி நான் உம்மைத் துதிக்கிறேன். இதைக் கேட்டு, களித்து, ஸுகத்தைத் தாரும். வருணய இதம் நமம.

13. யாகத்தில் யஜமானன் தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று பல த்ரவ்யங்களைக்கொண்டு உமக்கு ஹோமம் செய்கிறார். அங்ஙனமே நான் வேத மந்த்ரங்களால் உம்மை ஸ்துதி செய்து வேண்டுகிறேன். 'செய்' என வேதம் கூறியதைச் செய்யாமலும், 'செய்யாதே' என்று கூறியதைச் செய்தும் என் ஆயுளை இழக்கிறேன். ஆதலின் என்மீது கோபமின்றி அருள் புரிந்து ஆயுளை வ்ருத்தி செய்யும். வருணய இதம் நமம.

14. ஓ அக்னே, நீ எல்லாம் அறிந்தவர். நான் நற்கர்மா செய்யாததால், என்மீது வருணனுக்கு ஏற்பட்ட கோபத்தை அகற்றி, ஸமாதானம் செய்யும். நீர் பூஜிக்கத் தக்க தேவர்களில் மிகச் சிறந்தவர். மற்ற தேவர்களுக்கு நரர் அளிக்கும் உணவை அப்படியே அவர்களுக்கு அளிப்பவர். மிக ப்ரகாசமுள்ளவரே என் எல்லா பாபங்களையும் அகற்றும். அக்னீ வருணப்யாம் இதம் நமம.

15. ஓ அக்னே, தேவர்களில் முதல்வர் நீர். எங்களைக் காக்க எப்போதும் எங்கள் அருகில் இருக்க வேண்டும். வருண பாஶம் எம்மீது விழாமல் காப்பாற்றும். உமக்கு இன்பமளிக்கும்படி நாங்கள் கொடுக்கும் பொருளை ஏற்றுக் கொள்ளும். என் ப்ரார்த்தனைக்குச் செவி கொடும். அக்னீ வருணப்யாம் இதம் நமம.

16. அக்னே; நீரே பக்தர்களால் கிட்டே நெருங்கி பூஜிக்கத்தக்க ப்ரத்யக்ஷ தேவராக இருக்கிறீர். உம்மை

மனதால் த்யானம் செய்கிறேன். அந்தந்த தேவர்களை நாடி நான் அளிக்கும் உணவை அவரவர்களிடம் சேர்த்து என் பாபத்தை அகற்றும். அக்னயே அயஸே இதம் நமம.

இத்துடன் முக்யமான விவாஹ ஹோமம் முடிந்தது. அக்னி ஸந்தானத்திற்கு முதல் நாள் உண்ணாமல் இருக்க வேண்டும். அப்படி இல்லாத பாபம் அகல அயாஸ்ச ஹோமம் விதிக்கப்பட்டுள்ளது.

அம்மி மிதித்தல்: முக்ய ஹோமம் ஆனபின், அக்னிக்கு வடபுரத்தில் கோலம்போட்டு வைக்கப்பட்டிருக்கும் அம்மிமீது "ஆதிஷ்ட" என்ற மந்த்ரத்தைக் கூறி, வரன் கன்யகையின் வலது காலைத்தூக்கி வைக்க வேண்டும். "ஓ பெண்ணே, நீ இந்தக் கல்லில் ஏறு. ஸம்ஸாரத்தில், பகைவனைப்போல் துன்பமளிக்கும்படியான நிலை ஏற்பட்டால் இக் கல்போல் அசையாமல் இரு. துன்பங்கள் நேரிட்டால் ஸஹித்துக் கொள்"

லாஜ ஹோமம்: பிறகு தம்பதிகள் அக்னிக்கு மேற்புறத்தில் அமர்ந்து, பத்னியின் அஞ்ஜலியில் அபிகாரம் செய்து, அவளது ஸஹோதரன் நெல் பொரியைக் கையில் போட, புருஷன் அதைப் பிடித்த, நுனி விரலால் "இயம் நாரீ" என்ற மந்த்ரத்தைக் கூறி ஹோமம் செய்யவேண்டும் அர்த்தம்:—ஓ அக்னே, இந்த எனது பத்னி தன் பதியான நான் நூறாண்டு ஜீவித்திருக்க வேண்டும் என ப்ரார்த்தித்து இந்தப் பொரியை ஹோமம் செய்கிறாள். தாங்கள் அங்ஙனமே அருள் புரியவேண்டும். அக்நய இதம் நமம. பிறகு அக்னியை இருவர்களுமாக ப்ரதக்ஷிணம் செய்து, முன்போல் அம்மிமீது மனைவியின் காலை ஏற்றி வைக்கவேண்டும். ப்ரதக்ஷிண மந்த்ரங்களின் பொருள்: "ஓ அக்னே, ஸூர்யை என்ற பெண்ணை -ஸ்வாஹா- நீர் மணந்திருக்கிறீர். அவள் விவாஹமாகின்ற பெண்களுக்கெல்லாம் அபிமான தேவதை. அவர்கள் அனைவரும் உமது மனைவி மூலமாக உமக்கு வசமாவார்கள். ஸந்ததி உண்டாகாமல் இருக்க சில ப்ரதிபந்தகங்கள் உண்டு. அதை அகற்றி, நல்ல

ஸந்தானம் உண்டுபண்ணக்கூடிய மனேவியை எனக்கு அளியும். நீண்ட ஆயுளையும் நல்ல அழகையும் பெற்ற மனேவியை எனக்குத் தாரும். அத்தகையவளின் பதியான நான் நூறுண்டு ஜீவித்திருக்க வேண்டும் ஒ அக்னே, நாங்கள் இருவரும் ப்ரவாஹத்தைப்போல் வரும் சத்ருக்களை உமது ஸஹாயத்தால் தாண்டவேண்டும்.''

பிறகு இரண்டாவது முறையாக "ஆதிஷ்ட'' என்ற மந்த்ரத்தைக் கூறி, அம்மி மிதிக்கவேண்டும். மறுபடியும் இடத்தில் அமர்ந்து, முன்போல் லாஜஹோமம் செய்யவேண்டும். இரண்டாவது லாஜஹோம மந்த்ரம் "அர்யமணம்" என்பதாம். அதன் பொருள் "ஒ அக்னே கன்யகைகள் பலர் பூஜிக்கத் தக்க உம்மை லாஜ ஹோமத்தால் பூஜித்தனர். ஒருவராலும் ஹிம்ஸிக்க முடியாத நீர் இந்தப் பெண்ணை அவள் தந்தை வீட்டைவிட்டு, என் வீட்டில் அன்புள்ளவளாகச் செய்யும். அர்யம்ணே அக்னய இதம் நமம. இருவரும் எழுந்து மறுபடியும் அக்னியை "துப்யம்'' என்ற மூன்று மந்த்ரங்களால் வலம் வர வேண்டும். இதன் பொருள் முன்பேயே கூறப்பட்டது.

மறுபடியும் "ஆதிஷ்டேமம்'' என்ற மந்த்ரத்தைக் கூறி, மூன்ருவது முறையாக அம்மி மிதிக்கும்படி செய்ய வேண்டும். பிறகு இருவரும் அக்னியின் மேற்புறத்தில் முன்போல் அமர்ந்து, "த்வமர்யமா" என்ற மந்த்ரத்தைக் கூறி, பொரியால் ஹோமம் செய்யவேண்டும் அர்த்தம்: ஒ அக்னே, இந்த விவாஹம் என்பது தேவர்களுக்கு அன்னம் அளிக்கவல்லது. அதனல் தம்பதிகளுக்கு ஸ்வர்க்க முண்டாகும். நீரே கன்யகாதானம் செய்தவர். தம்பதிகள் மனம் ஒத்து இருக்கும்படி செய்வதால் மரத்திற்கு ஜலம்விட்டு வளர்ப்பதுபோல் உம்மை நெய்யால் வளர்க்கிறோம். அர்யம்ண இதம் நமம. முன்போல் "துப்யம்'' முதலிய 3 மந்த்ரங்களைக் கூறி, அக்னியை ப்ரதக்ஷிணம் செய்யவேண்டும். பொரி ஹோமம், அம்மி மிதித்தல், அக்னியை வலம் வருதல் என்ற இம் மூன்றையும் மூன்று முறை செய்ய வேண்டும். பின்னர், பொரி

எடுத்துக் கொடுத்த கன்யகையின் ஸஹோதரனுக்கு அவரவர் சக்திக்கேற்றபடி மோதிரமோ, வஸ்த்ரமோ, ரூபாயோ மரியாதை செய்யவேண்டும். தாலி முடிவதில் புருஷனின் ஸஹோதரியும், லாஜ ஹோமத்திலும் நான்காவது நாள் தாம்பூலம் மடித்து அளிப்பதிலும், கன்யகையின் ஸஹோதரனும் ஈடுபடுவதால், பெண் வீடு, பிள்ளை வீடு என்ற இருசாராரும் அவரவர் குழந்தைகளுடன் சேர்ந்து இதை நடத்தவேண்டும். குடும்பத்தில் ஏதேனும் மனஸ்தாபம் இருந்தால்கூட அதை விட்டு, விவாஹத்தில் கட்டாயம் ஒன்று சேரவேண்டும் என்பதை எண்பிக்கின்றது.

அதன் பின், இந்தக் கர்மாவை மிகச் சிறப்பு உள்ளதாகச் செய்ய "ஜயாதி" என்ற ஹோமத்தைச் செய்யவேண்டும். அக்னியைச் சுற்றியுள்ள ஸமித்தை அகற்றி பரிஷேசனம் வரை உத்தர அங்கத்தைச் செய்யவேண்டும். ப்ரும்மாவுக்குத் தக்ஷிணை தந்து, அவரை உத்வாஸனம் செய்து, "ப்ரத்வா" என்ற இரு மந்த்ரங்களால் கன்யகை இடுப்பில் கட்டியுள்ள தர்ப்பைக் கயிற்றை அவிழ்க்கவேண்டும். அதன் கருத்து: "ஒ பெண்ணே, இந்த தர்ப்பைக் கயிற்றின் மூலமாக ஸவிதா உன்னை வருண பாசத்தால் கட்டினர். இதை அவிழ்ப்பதின் மூலமாக அந்த வருண பாசத்திலிருந்து உன்னை விடுவிக்கிறேன். இருவரும் இவ்வுலகில் சுகமாக வாழ்ந்து நல்ல புண்ய கர்மாக்களைச் செய்து ப்ரும்ம லோகம் செல்வோம். ஸுகத்தைத் தரும் ஸவிதா கட்டிய வருண பாசத்தை நான் அவிழ்த்து விடுகிறேன். புண்யம் செய்தோர் அடையக்கூடிய ப்ரும்ம லோகத்தில் நாம் இருவரும் வருண பாசம் இல்லாமல் ஸுகமாக இருக்க இதை அவிழ்க்கிறேன்". அவிழ்த்த தர்ப்பைக் கயிற்றை மேற்கு திக்கில் வைத்து, கை அலம்பி, அக்னே - நம: என்ற மந்த்ரத்தைக் கூறி, அக்னி உபஸ்தானம் செய்யவேண்டும். அதன் கருத்து: "அக்னி பகவானே, நல்வழியில் எனக்குச் செல்வம் வரும்படி செய்யும். உமக்கு எல்லா வழியும் தெரியுமல்லவா? எனது கடும் பாபமெனும் பகை

வரை அகற்றும். உமக்கு எண்ணிறந்த நமஸ்காரத்தைக் கூறுகிறேன்."

பிறகு அக்ஷதை ஆசீர்வாதம் பெற்று, காலை விவாஹ கர்மாவைப் பூர்த்தி செய்யவேண்டும். இந்த விவாஹ அக்னியைத் தம்பதிகள் ஜீவித்திருக்கும் வரை காப்பாற்றி ப்ரதி தினம் ஒளபாஸனமும், ப்ரதமைகளில் ஸ்தாலீ பாகங்களையும் செய்து வரவேண்டும். இதை எடுத்துச் செல்லும்போது மனைவிக்கும் அக்னிக்கும் இடையில் யாரும் எதுவும் குறுக்கே போகக்கூடாது. விவாஹ அக்னி அணைந்துவிட்டால், அரணிக் கட்டையைக் கடைந்து அல்லது வேதம் ஓதி ஸத்கர்மாவைச் செய்ப வரது வீட்டிலிருந்தாவது அக்னி கொண்டுவந்து, ப்ராயஶ் சித்த ஹோமம் செய்து ஒளபாஸனம் செய்துவரவேண் டும். தம்பதிகளில்ஒருவர் ஒரு வேளை உபவாஸம் இருப் பதே ப்ராயஶ்சித்தமாகும். உபவாஸம் இருக்கமுடியா விடில் "அயாஶ்சாக்னே" என்ற மந்த்ரத்தைக் கூறி, ஒரு ஆஜ்யாஹுதி செய்யவேண்டும். அதன் கருத்து: ஓ அக்னே,நீர் ஸுலபமாக அடையத்தக்கவர். தோஷமற்ற வர். உண்மையான பக்தருக்கு எளிதில் கிட்டத்தக்கவர். தங்களை மனதுடன்த்யானம் செய்கிறேன். பக்தரிடம் அன்பு கொண்ட நீர், நாங்கள் அளிக்கும் ஹவிஸ்ஸை தேவர்களுக்கு அளிக்கிறீர். எங்களுக்கு ஆரோக்யத்தை அளியும்."

இரவு ஒளபாஸனம் ஆரம்பிக்கப்போவதால், தம்பதி கள் இருவரும் ஆஹாரம் உட்கொள்ளாமல், பலாஹாரம் செய்யவேண்டும். மஹாதானம் எனப்படும் கன்யகா தானத்தைச் செய்தவரும் அது பூர்ணமாக பலனை அளிக்க, நித்யமான ஒளபாஸனம், ஆஹாரநியமம் இவை களை அன்றேனும் கை கொள்ளவேண்டும். வரன் கன்யகா தானத்தைப் பெற்று, அந்த கன்யகையுடன் தன் வீட்டிற்கு சென்று மாலை முதல் மற்ற கர்மாக்களைச் செய்ய வேண்டும். போகும்போதும், வண்டியைத் தூக்கி மாட்டைக் கட்டி அதில் ஏறும்போதும், இடையில்

வண்டியில் ஏதேனும் ஒரு பாகம் உடைந்தாலும், மற்ற பாண்டங்கள் உடைந்தாலும் அச்சமயம் கூறவேண்டும் என சில மந்த்ரங்கள் கூறப்படுகின்றன. தற்சமயம் அங்ஙனம் வண்டியில் போகாததால், அத்தகைய மந்த்ரங்களைக் கூறவேண்டியதில்லையே என எண்ணலாகாது. அந்த நிமித்தம் இல்லாவிடினும், மந்த்ரத்தை ஜபித்தால் தான் விவாஹம் பூர்த்தியாகும். அந்த ஜபத்தால் ஓர் வகை அத்ருஷ்டம் எனும் புண்யமுண்டாகும். ஆதலால் அவைகளை ஜபிக்கவேண்டும்.

1. ஸத்யேந—பூமி ஸத்யத்தால் தரிக்கப்படுகிறது. ஸூர்யனால் ஆகாசம் தரிக்கப்படுகிறது. 12 ஆதித்யர்களும் யாகத்தினால் வஸிக்கின்றார்கள். ஸோமன் ஆகாசத்தில் இருக்கிறார். அங்ஙனமே, வண்டியை யான் தரிக்கிறேன். மாடு அல்லது குதிரையை வண்டியில் கட்டும்போது கூறவேண்டியது. 2. யுஞ்ஜந்தி—நன்கு ஓடுவதும், ஸ்தாவர வஸ்துக்களை வேறிடத்திற்குக் கொண்டு செல்வதுமான வாஹனத்தை ஆகாயத்தில் நக்ஷத்ரம் தெரியும்வரை வண்டியில் கட்டுவார்கள். நானும் அப்படி மனைவியை என் வீட்டிற்கு அழைத்துச் செல்ல வண்டியில் மாட்டைக் கட்டுகிறேன். 3. யோகே—தேவர்களுக்கு நண்பனான நான் ஒவ்வொரு கார்யத்திலும் விரைவாகப் பயனைத் தரும் இந்த்ரனை அழைக்கிறேன். ஆதலின், இதிலும் எங்களைக் காப்பதற்கு அவரை அழைக்கிறேன்.

வண்டியில் ஏறும்போது கீழ்வரும் மந்த்ரங்களை ஜபிக்கவேண்டும்.

1. ஸுகிம் சுகம்—ஓ பெண்ணே, நல்ல இலவ மரத்தால் செய்யப்பட்டதும், பலவகை வர்ணமுள்ளதும், ஸ்வர்ணம்போல் ப்ரகாசிப்பதும், நல்ல சக்ரமுடையதும், நன்கு ஓடுவதுமான இந்த வண்டியில் ஏறு. நீண்ட ஆயுள் உள்ளவனான என் வீட்டிற்கும் எனக்கும் இன்பத்தைத் தருவதான உன் பிதா கொடுத்த ஸ்ரீதனத்தை இதில் ஏற்று.

2. உதுத்நரம்—இதில் ஏறி, உன் பகைவர்களை எல்லாம் சிதற அடித்து, எனக்கு மிக ப்ரியமானவளாக இரு. பத்து புத்ரர்களைப் பெற்று, ப்ரகாசமாக இரு.

3. ஸம்ராக்ஞீ—மாமனாரிடமும், மாமியாரிடமும், நாத்தனாரிடமும், மைத்துனனிடமும் ப்ரியமாகவும் செல்வாக்குள்ளவளாகவும் இரு.

4. ஸ்நுஷாணும்—என் வீட்டிலுள்ள மற்ற நாட்டுப் பெண்களிடமும், மாமனார், சின்ன மாமனார், பெரிய மாமனார்களிடமும், குழந்தைகளிடமும், செல்வத்தினிடமும், என்னைப்போன்றவர்களிடமும், என் ஸஹோதர, ஸஹோதரிகளிடமும் செல்வாக்குள்ள யஜமானிபோல் இரு.-அன்பாக நடந்து, அவர்கள் உன்னைக் கொண்டாடும்படி இரு. புதிய இடமல்லவா? எப்படியோ என்று அஞ்சாதே.

ப்ரவேஶ ஹோமம்

காலையில் கன்யாதானத்தைப் பெற்று, விவாஹ ஹோமம் ஆனவுடன், புருஷன் அந்தப் பெண்ணுடன் தன் வீட்டிற்கு வந்து நுழைந்து செய்யும் ஹோமம் ப்ரவேஶ ஹோமம். வழியில் வண்டிப்பாதையில் வலது சக்ரத்தின் கீழ் நீலமான நூல்களையும், இடது சக்ரத்தின் கீழ் சிவப்பு நூல்களையும் போடவேண்டும். அப்பொழுது கூறவேண்டிய மந்த்ரம் இது. முன்கூறியபடி நூலைப் போடாவிடினும் மந்த்ரத்தைப் படிக்கவேண்டும். அதன் கருத்து :—“ஒ பெண்ணே, என்னால் வழியில் போடப்பட்ட கறுப்பு, சிவப்பு நூல்கள், நமக்கு அன்யோன்ய ப்ரீதி வளராதபடி வழியில் நமக்குத் தீங்கு உண்டாகும்படி நமது சத்ரு ஏதேனும் சூன்யம் முதலியன செய்திருந்தால் அவைகளை நாசம்செய்யட்டும். குழந்தைகளுக்கு தோஷம்பட்டிருந்தாலோ, அல்லது ஆபிசாரம் செய்யப்பட்டிருந்தாலோ நூல்களால் தடை அல்லது முடிகயிற் கட்டுவதைக் காணலாம் - வண்டிச் சக்ரம் அந்த நூல்மீது போகும்போது சொல்ல வேண்டிய

மந்த்ரங்களின் கருத்து :—இப்பெண் எனக்கு இன்ப மூட்டுகிறாள். இவள் ஸ்ரீதனமாகக் கொண்டுவந்த பொருளை யக்ஷ்மரோகம்போல் சில திருடர் கொள்ளை கொள்வர். அவர்கள் இங்கு வராதபடி தேவர்கள் தம் இடத்திற்கு அழைத்துச் செல்லட்டும். வழியை மறித்துத் திருடுபவர் எங்களிடம் வரவேண்டாம். நாங்கள் செல் லும் வழியை அவர் அறிய வேண்டாம். நல்வழியே சென்று நாங்கள் அபாயத்தைக் கடக்கவேண்டும். பகைவர் எங்களை விட்டு அகலவேண்டும். என்னைச் சார்ந்தவர் திருடரிடம் அகப்படாவண்ணம் திருடர் பொருளைக்கூட கவரும்படி நாங்கள் நல்வழியாகச் செல்லவேண்டும். என்னைச் சார்ந்த எந்த வஸ்துவுக்கும் துன்பம் நேரிடக்கூடாது - இங்கு திருடர், பகைவர் என்பதெல்லாம் நமது பாபமாகும். ஊர் போகும் வழி என்பது தம்பதிகள் செய்யும் கர்ம மார்க்கம் என்று பொருள்-.

வழியில் புண்ய தீர்த்தங்கள், பசு சொறிந்துகொள் ளும் கல் அல்லது மரம், நாற்சந்து இவைகளைத் தாண்டிச் செல்லும்போது கூறவேண்டிய மந்த்ரத்தின் கருத்து :— அஶ்வினீ தேவர்களை அனைவரும் துதிக்கின்றனர். நானும் அவர்களைத் துதிக்கிறேன். இதனால் அவர்கள் எனக்குச் செல்வத்தையும், குழந்தைகளையும் கொடுக்கட்டும். வழி தாகத்தை அகற்றவும், ஆரோக்ய மளிக்கவும் நல்ல தீர்த் தங்களைத் தரட்டும். வழியில் தடை செய்யும் கட்டை, திருடர் முதலியவைகளை அகற்றட்டும். நதிகளைத் தாண்ட ஓடத்தில் ஏறும்போது ஜபிக்கும் மந்த்ரத்தின் கருத்து :—மரத்தாலாகிய இந்த ஓடம் எங்களை ஆபத்தில் லாமல் அக்கரையில் கொண்டு சேர்க்கட்டும். நீ நீண்ட ஆயுளும் கீர்த்தியும் உள்ளவளாக வேண்டும்.

நதியைத் தாண்டியபின் கூறும் மந்த்ரத்தின் கருத்து :—உயிருடன் நதியைத்தாண்டி அக்கரை வந் தோம். பயமில்லாத இடத்திற்கு வந்து விட்டோம். இந்த்ரன் எங்களைக் காக்கட்டும். ஶ்மஶானத்தைக் கடக்க

நேர்ந்தாலோ, பெண் நகை கெட்டுப் போனாலோ, வண்டி முறிந்தாலோ, அக்னி ப்ரதிஷ்டை செய்து, சில ஹோமங்களைச் செய்யவேண்டும். அதன் கருத்து (1) பிசின் முதலியன இல்லாமலே இந்த்ரன் இரு வஸ்துக்களை ஒன்றாகச் சேர்க்கிறார். உருகிய அரக்கு கெட்டியாவதற்குள் உடைந்த வஸ்துக்களை அவர் ஒன்று சேர்க்கிறார். அவருக்கு ஹோமம் செய்கிறேன். (2) ஓ அக்னே, அன்னம் பசு முதலியவைகளை எனக்கு அளியும். அவை ஸ்திரமாக என்னிடம் இருக்கும்படி செய்யும். இமம்மே-தத்வாயாமி - த்வன்னோ அக்னே - ஸத்வன்னோ அக்னே - த்வமக்னே - இந்த மந்த்ரங்களாலும் ஹோமம் செய்ய வேண்டும். இவைகளின் கருத்து முன் கூறப்பட்டது. ஆல் அரசு, அத்தி முதலிய மரங்களையும், ஆறுகளையும், ஜலமில்லாத இடங்களையும்கடக்க நேர்ந்தால் ஜபிக்கவேண்டிய மந்த்ரங்களின் கருத்து :—இந்த மந்த்ரங்களில் வஸிக்கும் கந்தர்வர்களும் அப்ஸரஸ்ஸுகளும் இந்தப் பெண்ணுக்கு க்ஷேமத்தைத் தரட்டும். இவளையும் இவள் கொண்டுவரும் ஸ்த்ரீதனத்தையும் கெடுக்காமல் இருக்கட்டும். ஓஷதிகளும், ஆறுகளும், ஜலமில்லாத தேசமும் காடுகளும், இந்த பெண்ணைத் துன்பத்திலிருந்து விடுவித்து புத்ர பாக்யத்தைத் தரட்டும்.

கணவனது வீட்டைக் காட்டும்போது கூறும் மந்த்ரத்தின் கருத்து :-"பெண்ணே, உனது ஸ்ரீ தனத்துடன் இந்த வீட்டில் நுழைந்து, இதை நல்ல கண்ணால் பார். பந்துக்களால் உனக்கு பூட்டப்பட்ட ஆபரணங்களை ஸவிதா என்னும் தேவதை உனக்கு இன்பம் தரும்படி செய்யட்டும். வண்டியிலிருந்து காளைகளை அவிழ்த்து விடும்போது கூறும் மந்த்ரத்தின் கருத்து :—ஹவிஸ்ஸாலும், துதிகளாலும் பூஜிக்கப்படும் அஸ்வினீ தேவர்களே, உங்களது அருளால் எங்கள் இஷ்டம் பூர்த்தியாகி விட்டது. உங்களைப்போல் நாங்கள் இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாது இருக்கவேண்டும். ஓ காளைகளே, எங்களுக்கு வேண்டியபோது வாருங்கள். ஸவிதா, ப்ருஹஸ்பதி, இந்திராக்னீ, மித்ரா வருணர், த்வஷ்டா,

விஷ்ணு என்ற தேவர்கள் உங்களை உங்கள் இஷ்டப்படி ஸஞ்சரிக்கும்படி விடட்டும்.

வீட்டில் தோலைப்பரப்பி, பெண், தன் புருஷனது வீட்டில்நுழையும்போது வலது காலை முன்வைக்க வேண்டும். அச்சமயம் கூறும் மந்த்ரத்தின் கருத்து :—“இந்த தோல் மயமான விரிப்பு இப்பெண்ணுக்கு இன்பத்தைத் தரட்டும். ஸிநீவாலீ எனும் தேவதை இவளுக்குச் சக்தியை அளிக்கட்டும். பகன் இவளைக் காக்கட்டும்.

புத்ரர்களைச் சாகக் கொடுக்காதவளும், ஸந்தோஷமுள்ள பந்துக்கள் உள்ளவளும் மனோஹரமானவளும், ஸஹோதரர்களுக்கும் புத்ர பாக்யமுள்ளவளும், அன்னம் நிறைந்தவளும் விருந்தினருக்கு நெய்யை நிறைய அளிப்பவளும், களங்கமற்றவளாகவும் வீட்டில் நுழைகிறேன். -வண்டி, காளை, நதி, ஶ்மஶானம் இவைகளை எல்லாம் பற்றி மந்த்ரம் கூறுகிறது. நாம் மாட்டு வண்டியில் அங்கு செல்வதில்லையே. வேத மந்த்ரங்கள் அரிய பெரிய விஷயங்களை விட்டு, சிறிய இவ்விஷயங்களில் ஈடுபட்டதே. பண்டைய காலத்தில் வண்டி ஏறிச் சென்றதால் அந்த மந்த்ரங்கள் அக்காலத்திற்கு ஏற்றதாக இருக்கலாம். இப்பொழுது அது ஏன் என நினைக்கலாகாது. பொதுவாக இப்படி கருத்து இருந்தாலும், அவ்வண்டியில் ஏருவிடினும், ஒருவகை அத்ருஷ்டத்தைத் தருகின்ற அந்த மந்த்ரங்களைக் கூறவேண்டும் என பாஷ்யம் எழுதிய மஹர்ஷிகள் முடிவு கட்டியதால் தம்பதிகளின் நன்மையை நாடி அவைகளை ஜபிக்கவேண்டும்.

வீட்டின் ஈஶான திக்கில் அந்த அக்னியை ப்ரதிஷ்டை செய்து, பத்னியுடன் அமர்ந்து 13 ஹோமம் செய்யவேண்டும். அதன் கருத்து :—(1) ஓ அக்னே, என் மனைவி தன் தந்தை அளித்த செல்வத்துடன் இங்கு வந்தாள். அவள் தீர்க்க ஸுமங்கலியாகவும், ஸந்ததி ஸம்பத் உள்ளவளாகவும், ஔபாஸனம் முதலிய அக்னியை ஆராதிப்பவளாகவும் இருக்கவேண்டும். (2)

அக்னிதேவரே நமது வீட்டிற்குப்பதி. தனதான்யம் அளிப்பவர். அவரை ஆராதித்த பகன் முதலியவர்க்கு அளித்தது போல் எங்களுக்கும் ஸந்ததி ஸம்பத் முதலியவைகளை அளிக்கட்டும். (3) ஒ, ப்ராஜபதே! இந்த்ராக்னீ! எங்களுக்குக் குழந்தை பிறந்து, அது எங்களுக்கு முன் இறக்காதபடி காப்பாற்றும் (4) ஒ இந்த்ராக்னீ, நாங்கள் அளிக்கும் ஹவிஸ்ஸால் ஸந்தோஷமடைந்து, எங்களை வ்ருத்தி செய்யுங்கள். என் மனைவியையும் வ்ருத்தி செய்யும். (5) அக்னே, ஆஜ்ய ஆஹுதியைப் பெற்று, இவளைப் பாலுள்ளவளாகவும், வீடு, செல்வம் முதலிய பாக்யம் உள்ளவளாகவும் செய்யும். பலரை ரக்ஷிக்கும்படியான செல்வம் எங்களுக்கு நிறைய வேண்டும். பிறரிடம் சென்றுகேளாதபடி அதை அளியும். (6) நாங்கள் இந்த வீட்டில் பிரியாமல் சேர்ந்திருக்கவேண்டும். நீண்ட ஆயுளைப் பெற வேண்டும். அப்படி ஸர்வ க்ஷேமத்தையும் அளியும். (7) பெண்ணே, ப்ருஹஸ்பதி உன்னை எனக்கு அளித்தார். நான் உன்னை ரக்ஷிக்கிறேன். நீ குழந்தைகளைப் பெற்று நூறுண்டு ஜீவித்திரு. (8) த்வஷ்டா இந்த மனைவியை எனக்குத் தந்தார். அவரே பத்னிக்கு என்னைப்பதியாகத் தந்தார். நம் இருவருக்கும் காரணமான தவஷ்டா ஆயிரக்கணக்காகச் செல்வத்தையும் ஆயுளையும் நமக்குத்தரட்டும். (9) இமம் மே வருண (10) தத்வாயாமி, (11) த்வன்னோ அக்னே, (12) ஸத்வன்னோ அக்னே, (13) த்வமக்னே அயாஸி இவைகளாலும் தனித்தனி ஹோமம் செய்ய வேண்டும். இதன் கருத்து முன்பு கூறப்பட்டது.

பிறகு தோல் ஆஸனத்தில் உட்காரும்போது கூறும் மந்த்ரத்தின் கருத்து:—ஒ பசுக்களே, என் வீட்டில் நீங்கள் வ்ருத்தியாக வேண்டும். குதிரைகளும் வேலைக்காரர்களும் வ்ருத்தியாகட்டும். பிறகு புருஷக்குழந்தைகளை மாத்ரம் பெற்றவளும் தீர்க்காயுஸ் உள்ள புத்ரனைப் பெற்றவளுமான ஒருவளுக்குப் பிறந்த ஆண்பிள்ளையை மடிமீது உட்கார வைத்து ஒரு மந்த்ரத்தை ஜபித்து வாழைப்பழத்தை அதற்குத் தரவேண்டும். ஆண் குழந்தையை மடிமீது

உட்காரவைக்கும் போது கூறும் மந்த்ரத்தின் கருத்து: தேவர்களுக்குச் சந்த்ரனல் பலம் ஏற்படுகிறது. சந்த்ரனல் பூமி த்ருடமாக இருக்கிறது. நக்ஷத்திரங்களின் நடுவில் சந்த்ரன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறுன். அதைப்போல் இந்த குழந்தை இவள் மடியில் அமர்ந்திருக்கிறுன். குழந் தைக்குப்பழம் அளிக்கும்போது கூறும் மந்த்ர அர்த்தம்:—பழங்கள் மரத்தின் ஸந்ததியை வளர்ப்பது போல் இவள் நல்ல ஸந்ததிகளே உண்டு பண்ணட்டும்.

பிறகு இரு மந்த்ரங்களே ஜபித்து, தம்பதிகள் நக்ஷத் ரம் உதயமாகும்வரை மௌனமாக இருக்கவேண்டும். ஜபிக்கும் மந்த்ரத்தின் கருத்து:—இந்த வீட்டில் உனக்கு ஸந்ததி, ஸம்பத்துக்களால் ஆனந்தம் உண்டாகும்படி தேவர்கள் அருள் புரியட்டும். வீட்டிற்கு யஜமானியாக இரு. ஜாக்ரதையாக இருந்து உடலே ரக்ஷித்து ஸுகத்தை அனுபவி. வயதானபின் அனுஷ்டான முறையை உன் ஸந்ததிக்கும் உபதேசம் செய். பெரியோர்கள் இங்கு வந்து இவளுக்கு ஸந்ததி, ஸம்பத், மாங்கல்யம் முதலிய பாக்யங்களே ;ஆசிர்வதித்துச் செல்லட்டும்.

த்ருவனேயும் அருந்ததியையும் பெண்ணுக்குக் காட்டும்போது கூறும் மந்த்ரத்தின் கருத்து:—ஓ த்ருவ, நீர் அழிவில்லா பதவி பெற்றவர். ஸத்யத்திற்குக் காரண மானவர். ஸ்திரமாக இருப்பதற்கு நீரே காரணம். த்ருவம் என்ற பெயரைப் பெற்றீர். சுற்றுகின்ற நக்ஷத் திரங்களுக்கு நீர் கட்டுத் தறிபோல் இருக்கிறீர். அத் தகைய நீர் சத்ருக்கள் பாதை இல்லாமல் இவளே ஸ்திர மாக இருக்கச் செய்யும்.

ஸப்த ரிஷிகள் பத்னிகளுக்கு க்ருத்திகா என்று பெயர். அவர்களுள் சிறந்தவளான அருந்ததியை மற்ற ஷட் க்ருத்திகைகள் "இவளே எங்களில் மிக உத்தமி" என ஏற்றுக் கொண்டனர். அத்தகைய அருந்ததியின் தர்சனத்தால், இவள் எட்டாவது க்ருத்திகைபோல் கற்பினுலும் பாக்யத்தினுலும் வ்ருத்தி யடையட்டும்.

[நான்கு நாட்களில் செய்ய வேண்டிய விவாஹம் தற்சமயம் ஒரே நாளில் வந்து முடிந்திருக்கிறது. அதிலும், ஒரு வேளையிலேயே—அதாவது பகலுக்குள்ளேயே முடிக்கின்றனர் சிலர். இனி ஒரு மணி அல்லது ஒரு நிமிஷத்தில் வந்து முடியுமோ என அஞ்ச வேண்டியிருக்கிறது. ஒரு வேளையில் முடிப்போர், இரவிலே மாத்ரம் காணக்கூடிய த்ருவனைத் தர்சித்து த்ருவமாக வாழமுடியுமா? பகலில் அருந்ததியைத் தர்சிக்க முடியுமா? அவளைப் போல் உத்தமியாக வாழவேண்டும் என அவளைக் காணாமல் ப்ரார்த்திக்க முடியுமா?

ஆகையால் ஆஸ்திக அன்பர்கள் விவாஹ தினத்தில் இரவு த்ருவ அருந்ததி தர்சனம், ஆக்னேய ஸ்தாலீபாகம், ஔபாஸனம் இவைகள் ஆனபின் ஊர்வலமும் நடத்தி, பலதானம் செய்து, விவாஹம் முடிந்ததாக ஸம்பந்திகளையும் மற்றவரையும் அனுப்பிவிட்டு, தம்பதிகளை, கன்யகை அல்லது புருஷன் வீட்டில் 4 நாட்கள் ஔபாஸனம் செய்வித்து, பாலிகைக்கு ஜலம் விட்டு வளரச் செய்து, விதிப்படி 4-வது நாள் இரவு சேஷ ஹோமம் செய்யவேண்டும். இதே உத்தமம். பல காரணங்களால் அப்படி முடியாவிடில் (ஶ்ரத்தை இருந்தால் முடியாததுண்டோ?) பகலோடு விவாஹத்தை முடிக்காமல், இரவில் ப்ரவேச ஹோமம், த்ருவ அருந்ததீ தர்சனம், ஆக்னேய ஸ்தாலீபாகம் ஔபாஸனாரம்பங்களைச் செய்து, முடித்து லௌகிகமான ஊர்வலம் முதலியவைகளைச் செய்து, மறுநாள் காலே 4 மணிக்கெழுந்து சேஷ ஹோமம் முதலியவற்றைச் செய்யலாம். இது மத்யம பக்ஷம். இப்படிச் செய்யும்போது 3 நாள் நடுவில் விட்டுப்போன ஔபாஸனங்களைச் சேர்த்து 6 ஔபாஸன ஹோமங்களைச் செய்வது நலம். இது பழக்கமில்லை என்பர் சிலர். அக்னிஹோத்ரம்போல் ஆகர்ஷித்துச் செய்யலாம் என ப்ரயோகங்களை எழுதின வித்வான் மணக்கால் முந்து ஶ்ரௌதிகளும், அபிநவ வ்யாஸரான என் குரு ஶ்வேதாரண்யம் நாராயண யஜ்வா அவர்களும் தீர்மானித்து, ஒரு விவாஹத்தில் அப்படிச் செய்து வைத்தனர். ஆதலால்

முக்யமான ஔபாஸனத்தை அதற்கேற்ற முக்ய கால மான இரவில் ஆரம்பித்து, மத்யம பக்ஷத்தில்—3 இரவு வேளை 3 காலை வேளை ஹோமங்களுக்காக—என ஸங்கல் பம் செய்து அக்ஷதைகளை எடுத்து ஒரே ஹோமமாகச் செய்யவேண்டும். சேஷ ஹோமத்தை மறுநாள் காலையில் செய்யவும். நான்கு நாட்கள் ஔபாஸனம் செய்வதே தர்மம். உத்தமம். ஆசாரம்].

கந்தர்வ பூஜை: அரசஸமித் அல்லது அத்திஸமித் அல்லது ஆலஸமித்து ஒன்றில் சந்தன புஷ்ப அலங்காரம் செய்து கன்யகையின் உடலில் தங்கி இருந்த விஶ்வாவஸு என்ற கந்தர்வனை ஆவாஹனம் செய்து தம்பதிகளிடையே வைக்கவேண்டும். விவாஹதினம் முதல் நாலாவது நாள் வரை தம்பதிகளுக்குத் தீக்ஷை விதிக்கப்பட்டது. யாக தீக்ஷைபோல் முதல்நாள் உடுத்திய புது வஸ்த்ரத்தையே உடுத்தி பூமியில் படுத்து வெளியில் செல்லாமல் ஔபாஸ னம் உள்ள வீட்டில் தம்பதிகள் வஸிக்கவேண்டும். இந்த தீக்ஷா காலத்தில் ஏதேனும் தீட்டு நேர்ந்தால் தம்பதி களுக்கு ஸூதகத் தீட்டோ சாவு தீட்டோ கிடையாது. பெற்றோருக்கும் மற்றோருக்குமே தீட்டாம்.

ஆக்நேய ஸ்தாலிபாகம்: முதல் நாள் காலை விவாஹ ஹோமம் செய்த அக்னியைக் குண்டத்தில் வைத்திருக்கிற தல்லவா? வரன் ஸாயம்ஸந்த்யா வந்தனம் செய்து முடித்து அந்த அக்னியை வேதியில் எடுத்து வைத்து மூட்டி ஸங்கல்பம் செய்யவேண்டும். விவாஹம் செய்து கொண்ட இந்த கன்யகையுடன்கூட ஆக்நேய ஸ்தாலீபாகம் செய் கிறேன் என்பது ஸங்கல்பத்தின் பொருள். கன்யகை அரிசி குத்துவதுபோல் பாவனை செய்து 3 முறை களைந்து அந்த அக்னியில் வைத்துப் பாகம் செய்யவேண்டும். பக்வ மானவுடன் அபிகாரம் செய்து வடக்கு அல்லது கிழக்கு முகமாக இறக்கி வைக்கவேண்டும். கீழே வைத்தபின் ஒருமுறை அபிகாரம் செய்யவேண்டும். முகாந்தம் செய்து பத்னீ தொட்டுக்கொண்டே இருக்க பலாச இலை யில் அபிகாரம் செய்து அந்த அன்னத்தை இருமுறை

எடுத்து அவ்விலையில் வைக்கவேண்டும். அதன் மீதும் பாத்ரத்தில் உள்ள அன்னத்தின் மீதும் ஒவ்வோர் முறை அபிகாரம் செய்யவேண்டும். ஸ்ரீவத்ஸ கோத்ரக் காரர் மாத்ரம் 3 முறை ஹோமத்திற்கு அன்ன மெடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். இதற்கு அவதாநம் என்று பெயர். நடுவிலிருந்து முதல் முறையும் கிழக்கிலிரண்டாம் முறையும் மேற்கிலிருந்து மூன்றும் முறையும் அவதாநம் செய்யவேண்டும். ஒவ்வொரு முறையிலும் நம் கட்டை விரல் முதல் கோடு அளவு அன்னமெடுக்க வேண்டும். இது எல்லா அன்ன ஹோமங்களுக்கும் பொதுவானது. அதிகமாகவோ குறைவாகவோ எடுக்கலாகாது. அன்ன பாத்ரத்தை இடது கையால் பிடித்துக்கொண்டு அக்நயே ஸ்வாஹா என்று முதல் ஹோமம் செய்து அக்நயே இதம் நமம என்று கூறவேண்டும். பிறகு பலாச இலையில் அபிகாரம் செய்து அன்ன பாத்ரத்தின் வடக்கு புறத்தி லிருந்து முன்ஹோம அளவைவிட சிறிது அதிகமாக ஒருமுறை-ஸ்ரீவத்ஸ கோத்ரிகள் இருமுறை-அன்னத்தை எடுத்து வைத்து அபிகாரம் இரண்டு முறை செய்து முன் போல் அன்னபாத்ரத்தை இடது கரத்தால் தொட்டுக் கொண்டே உறக்க அக்நயே ஸ்விஷ்டக்ருதே ஸ்வாஹா என்று அக்நியின்வடகிழக்கில் ஹோமம் செய்யவேண்டும். மற்ற ஹோமத்துடன் சேராமல் தனியாக இதைச் செய்ய வேண்டும். உத்தேச த்யாகம் பரிதிஅபிகாரம் லேபகார்யம் பரிதியை அக்நியில் போடுவது ஸக்குஸ்ராவ ஹோமம் அநாக்ஞாதாதி ஹோமம் பரிஷேசநம் முதலியன செய்ய வேண்டும். இத்துடன் ஆக்நேய ஸ்தாலீ பாகம் முடிந்தது.

ஔபாஸன ஆரம்பம்: இதுவரை ப்ரும்மசாரியாக இருந்து ஸமிதாதாந அக்நியை உபாஸித்து இதுமுதல் ஔபாஸந அக்நியை உபாஸிக்க ஆரம்பித்ததால் அஸேஷே ஹேபரிஷக் என்று ப்ராம்மணர்களுக்குத் தக்ஷிணை தந்து அநுக்ஞைபெற்று ஸங்கல்பம் செய்யவேண்டும். தம்பதிகள் ஜீவித்திருக்கும் வரை ப்ரதிதிநம் ஔபாஸனம் செய்கிறோம் என்று ஸங்கல்பத்தின் கருத்து. க்ரஹ ப்ரீதி செய்து ஸாயம் ஔபாஸநத்தை அரிசியால் செய்

கிறேன் என ஸங்கல்பம் செய்து "சத்வாரி ஶ்ருங்கா" என்ற மந்த்ரம் கூறி அக்னி த்யாநம் செய்யவேண்டும்'

"யக்ஞரூபமான ஓ அக்நியே! உமக்கு 4 வேதங்கள் கொம்புபோல் இருக்கின்றன. ப்ராதஸ் ஸவனம் மாத்யந்தின ஸவனம் த்ருதிய ஸவனம் என்ற 3 பாதங்களிருக்கின்றன. ப்ராயணீயம் உதயணீயம் என்ற இருதலைகளும் 7 சந்தஸ்ஸுகள் என்ற 7 கரங்களும் இருக்கின்றன. மந்த்ரம் ப்ராம்மணம் கல்பம் என்ற முப்பிரி ஏற்றிய கயிற்றால் கட்டப்பட்டிருக்கிறீர். 3 வேதங்களாலும் துதிக்கப்பட்டு காளைபோல் கர்ஜிக்கிறீர். மஹாதேவரான நீர் மனிதர்களிடம் வந்து நுழைந்திருக்கிறீர். வித்வான்களால் அனுபவிக்கப்படுகிறீர். ஸ்வப்ரகாசமாக இருக்கிறீர். பத்து திக்குகளிலும் வ்யாபித்திருக்கிறீர். நீர் முதலில் உண்டானவர். ப்ரும்மாண்டத்தின் உள்ளேயும் இருக்கிறீர். இப்போதிருக்கும் ப்ராணிகளாகவும் இனி உண்டாகப்போகும் ப்ராணிகளாகவும் இருக்கிறீர். கிழக்குமுகமாக இருக்கின்ற ஓ அக்நே! வாரும், எனக்கு அபிமுகமாக இரும்." இது அக்னி த்யான மந்த்ரத்தின் கருத்து.

அக்நிகுண்டத்திற்கு 8 திக்குகளிலும் திக்தேவதைகளைப் பரிவார தேவதைகளாகக் கருதி ஆங்காங்கு அக்ஷதையை வைக்கவேண்டும். 1. அக்நயே நம: 2. ஜாதவேதஸே நம: 3. ஸஹோஜஸே நம: 4. அஜிராப்ரபவே நம: 5. வைஶ்வாநராய நம: 6. நர்யாபஸே நம: 7. பங்க்திராதஸே நம: 8. விஸர்ப்பிணே நம:. மஞ்சள் அல்லது குங்குமம் கலந்த அக்ஷதைகளால் இவைகளைச் செய்து அக்நயே நம: என்று சுத்தாக்ஷதையை அக்நியில் போடவேண்டும். பிறகு ஆத்மநே நம: என்று தன் தலைமீதும் ஸர்வேப்யோ ப்ராம்மணேப்யோ நம: என்று ப்ராம்மணர் மீதும் அக்ஷதையைப் போடவேண்டும். பிறகு அதிதேநுமன்யஸ்வ [தென்புறத்திலும்] அநுமதேநுமன்யஸ்வ [மேற்கிலும்] ஸரஸ்வதேநுமன்யஸ்வ[வடக்கிலும்] பரிஷேசநம் செய்து தேவஸவித: ப்ரஸுவ என்று

4 புறத்திலும் ஜலத்தால் பரிஷேசநம் செய்யவேண்டும். இந்த பரிஷேசநத்தை ஆதியிலேயே செய்வர் சிலர்.

ஒரு ஸமித்தை அக்னியில் வைத்து ஹோஷ்யாமி என உத்திரவு கேட்கவேண்டும். அருகிலுள்ளவர் ஜுஹுதி, ஹோமம் செய் என உத்திரவளிப்பர். நித்யம் செய்யும் ஔபாஸநத்தில் ஒருவருமருகே இல்லாவிடில் நாமே ஜுஹுதிஎன கூறவேண்டும். நன்கு களைந்து ஈரமில்லாத அக்ஷதையை வ்யாஹ்ருதியைக் கூறி கையில் எடுத்துக் கொண்டு அதை இரண்டாகப் பிரித்து இடது கரத்தில் ஸ்விஷ்டக்ருத்திற்காகச் சிறிது அதிகமெடுத்துக்கொண்டு வலது கையில் நுனியால் அக்நயே ஸ்வாஹா என்று ஹோமம் செய்யவேண்டும். அக்நய இதம் நமம என்று உத்தேசத்யாகம் கூறி இடது கரத்திலுள்ளதை வலது கரத்தில் மாற்றிக்கொண்டு அக்நயே ஸ்விஷ்டக்ருதே ஸ்வாஹா என்று உறக்கக்கூறி வடகிழக்கில் ஹோமம் செய்யவேண்டும். அக்நயே ஸ்விஷ்டக்ருதே இதம்நமம என்பது உத்தேசத்யாகம் ஹோமம் ஆனவுடன் அதை விரட்டியால் உடனே மூடவேண்டும். இவ்விரண்டு ஹோமங்களும் ஒன்று சேருதபடி கவனிக்க வேண்டும். பின்னர் அதிதேன்வமக்குஸ்தா: அநுமதேன்வ மக்குஸ்தா: ஸரஸ்வதேன்வமக்குஸ்தா: தேவஸவித: ப்ராஸாவீ: என்று பரிஷேசநம் செய்யவேண்டும்.

இந்த ஔபாஸந கர்மா நன்கு அநுஷ்டிக்கப்பட்டதாக ஆவதற்காக "அநாக்ஞாதாதி மந்த்ர த்ரய ஜபம் கரிஷ்யே" என ஸங்கல்பம் செய்து ஜபிக்கவேண்டும். கருத்து:—ஒ அக்நே! உமது பூஜையான யக்ஞத்திற்கு எவ்வளவு அங்கம் என அறியோம். தெரிந்தோ தெரியாமலோ தவறுதலாகவோ ஏதோ செய்கிறோம். அதை எல்லாம் ஒழுங்காக்கி பூர்ணபலனைத் தரும்படி செய்யும். உமக்குக் கர்மதத்வம் நன்கு தெரியுமல்லவா? ஒ அக்நே! யக்ஞம் புருஷனைப் போலிருக்கிறது. புருஷன் நன்றாக அநுஷ்டிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நான் செய்த யக்ஞத்தை ஒழுங்குபடுத்தி பலனுள்ளதாகச்

செய்யும். குழந்தைகளைப் பெரியவர் ரக்ஷிப்பதுபோல் நீர் எங்களை ரக்ஷிக்கவேண்டும். நாங்கள் அறியாமையால் எதை விட்டோமோ அதையும் யக்ஞஸ்வரூபத்தையும் நீர் நன்கு அறிவீர். யாகம் செய்யும் ஸாமர்த்யமும் வாய்ந்தவர். அந்தந்த தேவர்களை அழைத்து அந்தந்த காலத்தில் அவரவர்க்கேற்றபடி நீர் தான் பூஜை செய்து எங்களுக்குப் பலனைத் தரவேண்டும். இதம் விஷ்ணு: என்ற மந்த்ரத்தையும் ஜபிக்கவேண்டும். அதன் பொருள். மஹா விஷ்ணு த்ரிவிக்ரம அவதாரம் செய்து தன் திரு வடிகளால் உலகை அளந்தார். ஓரடியில் இவ்வுலகம் அடங்கிற்று. அவர் பாதத்தால் கர்மபூமி புண்யமாகி கர்மாவிற்கேற்றவிடமாகவும் ஆனது. என அவரது திருவடி ஸ்மரணத்தால் ஸர்வ தோஷமும் அகன்று புண்யம் உண்டாகும். ஆதலால் ஒவ்வொரு வைதிக கர்மாவிலும் ஹோமத்திலும் ஜபத்திலும் இந்த மந்த்ரம் பயன்படுத்தப்படுகிறது. காலை ஔபாஸனத்தில் முதல் ஹோமம் ஸூர்யாய ஸ்வாஹா என்று ஒரே மாறுதல் தான். மற்றதெல்லாம் முன்போலவேயாம். ஸ்வாஹா என்று ஒரு ஸமித்தை ஹோமம் செய்து அக்னி உபஸ் தானம் கரிஷ்யே என்று எழுந்து "அக்நேநய" என்ற மந்த்ரம் கூறவேண்டும். கருத்து :—ஓ அக்நே! நீர் எல்லா மார்க்கங்களையும் அறிவீர். நல்ல மார்க்கத்தால் செல்வம் உண்டாகும்படி செய்யும். மிக குடிலமான ப்ரதிபந்தக மெனும் பாபத்தை அகற்றும். உமக்குப் பல நமஸ்காரம் கூறுகிறோம். அபிவாதயேகூறி பஸ்மாவை இட்டுக் கொள்ளவேண்டும்.

சேஷ ஹோமம்

நான்காவது நாள் அபர (பின்) ராத்ரியில் எழுந் திருந்து செய்ய வேண்டிய ஹோமம் சேஷ ஹோமம் எனப்படும். தம்பதிகள் கைகால்களை அலம்பி சரீர சுத்தி செய்து கொண்டு முன்போல் அநுக்ஞைபெற்று விக்நேச பூஜை ஸங்கல்பம் முதலியவைகளைச் செய்யவேண்டும். ஏற்கனவே ஸமித்தில் சந்தனமிட்டுப் பூவைச்சுற்றி

தம்பதிகளுக்கு இடையே வைத்திருந்த விஸ்வாவஸு எனும் கந்தர்வனை உதீர்ஷ்வாத: என்ற இருமந்த்ரங்களால் எழுப்பவேண்டும்.

ஓ விஸ்வாவஸோ எழுந்திரும். இளம் பருவத்திலிருந்து இதுவரை இவளிடம் வஸித்தீர். இப்பொழுது இவளுக்கு நான் பதியாகிவிட்டேன். விவாஹமாகாமல் பித்ருக்களுடைய வீட்டில் இருப்பவளும் உமக்குப் பங்காக அளிக்கப்பட்டவளுமான கன்யகையை அடைந்து நாங்கள் ஸதிபதிகளாக இருக்கும்படி அருள் புரியும்.

[கந்தர்வர் காமம் அதிகமுள்ளவர். பெண்கள் பிறந்தவுடன் அவர்களது உடலில் வந்து தங்குகின்றனர். ருதுவாவதற்கு முன் விவாஹத்தைச் செய்து விதிப்படி அவர்களைப் பூஜித்து அவரிடம் உத்திரவு பெற்றால் அந்தப் பெண்ணை விட்டுவிடுகின்றன. காலத்தில் விவாஹம் நடவாமல் பெண்கள் யுவதிகளாக ஆகிவிட்டால் அவள் உடலிலிருந்து கந்தர்வர் சிற்றின்பத்தை அனுபவிக்கின்றனர். பெண்கள் நல்ல பலமுள்ளவர்களானால் அது உடலில் தெரிவதில்லை. பலஹீனமானவர்கள் கந்தர்வர் காமஸுகத்தை அனுபவிக்கும்போது ஒன்றும் அறியாமல் கட்டையாக விழுந்து விடுகின்றனர். பிறகு எழுந்தும் கைகால் ஓச்சல் பலஹீனம் முதலியன உடலில் காணப்படுகின்றன. பேய் பிடிப்பதைச் சிலர் பார்த்திருக்கலாம். அது போல் கந்தர்வ சேஷ்டை இது. இதை நோய் எனக் கருதி சிகித்ஸை செய்வர். சிகித்ஸையால் உடலுக்கு வலிவு ஏற்பட்டால் இந்த கந்தர்வ சேஷ்டையால் உண்டாகும் அதிர்ச்சி சிலருக்குத் தெரிவதில்லை. இவைகளை அறிந்தே மஹர்ஷிகள் ருது ஆவதற்குள் விவாஹம் என்ற முறையை அனுஷ்டித்து நமக்கும் உபதேசித்தனர்.

நான்கு நாளைய விவாஹத்திலேகூட சில ஆண்டுகளாக வைதிக கார்யத்தில் ச்ரத்தை குறைந்து லௌகிகத்தில்

"நன்ருக நடத்திஞர்" என்றபெயரைப் பெறுவதற்கேற்ற படி மற்றவைகளில் ஊக்கமும் உத்ஸாஹமும் காட்டப் படுகிறது. ஆதலால் விவாஹமந்த்ர அர்த்தத்தை விசாரிப் பதில்லே. இது எதற்காக யாரை நாடி செய்யப்படுகிறது என்று ஸ்தூலமாகக்கூட அறிவதில்லே. ஒரு நாளே விவா ஹத்தில், ஒரு வேளே விவாஹத்தில், இதுபற்றி பேசவே வேண்டாம். 4 நாள் விவாஹத்தில் அந்த கந்தர்வரை ஆவாஹநம் செய்த ஸமித்தை வேதிக்கு மேல் பந்தலில் சொருகி வைப்பர்.

வாத்யார் ப்ரோக்ஷ ஹோமத்திற்கு முன் கந்தர்வரை ஆவாஹனம் செய்த ஸமித்தை எடுத்து எறிந்துவிடுவார். ஸ்ரத்தை உள்ள, பாபத்திற்கும் பயந்த லௌகிகர் கோபத்திற்கு அஞ்சாத சிலர் விதிப்படி அதைப்பார்த்து வரனே மந்த்ரம் கூறும்படி சொல்வர். பலர் யதோக்தமாக விவாஹத்தை நடத்தி வருவதால் அதிக ஸ்ரமமும் செலவும் இல்லாத இத்தகைய கர்மாக்களில் அக்கரை கொண்டு மற்றவரும் அனுஷ்டிக்கட்டும் என்பதற்காக சிறிது விரிவாக எழுதநேர்ந்தது.]

இரு மந்த்ரங்களேக் கூறி கந்தர்வனே எழுப்பி அந்த ஸமித்தை அலம்பி வேறிடத்தில் வைத்துவிட்டுக் குண்டத் திலுள்ள அக்னியை எதிரில் வைத்துக்கொண்டு பூர்வாங் கங்களேச் செய்து ப்ரதானமான எழு ஹோமங்களேச் செய்யவேண்டும்.

மந்த்ரார்த்தம்-ஓ! அக்னே! நான் மணந்துகொண்ட இப்பெண்ணிடம் நானறியாமல் சில தோஷங்கள் இருக் கலாம். அவை எனக்கும், என் ஸந்ததிக்கும், என் செல்வத் திற்கும் நாசத்தைத் தருபவைகள். அவைகள் இவளே விட்டு கற்புக்குக் கேடுவிளேவிக்கக் கருதும் துஷ்டர்களிடம் செல்லட்டும். இங்ஙனம் வாயுவும் ஆதித்யனும் ப்ரஜாப தியும் இப்பெண்ணின் தோஷத்தை அகற்றி துஷ்டரிடம் கொண்டு சேர்க்கட்டும். அநுக்ஞை, பூமி, ஜலமுள்ள இடம், ஏரி, வீடு, பொருள், செல்வம், அந்தரிக்ஷம், ஆறு, கடல் முதலியவற்றிற்கு அபிமானிகளான தேவதை

களிடமும், ஸரஸ்வான் இந்த்ரன் முதலிய தேவர்களிடத்திலும், என்னை எவன் வெறுக்கிறானோ யாரைநான் வெறுக்கிறேனோ அவர்களை அனுப்புகிறேன். அவர்கள் இவனைச் சாப்பிடட்டும். ஆறு ருது தேவர்களும், 12 மாஸதேவதைகளும் என் சத்ருக்களை அழிக்கட்டும். மநஸ், மநோவ்ருத்தி, விரும்பிய பொருள், விருப்பம், அத்யயநம் ஒதிவைத்தல், அத்யயநம் செய்தல், அறியப்பட்ட பொருள், அறிதல் முதலியவைகளுக்கு அதிஷ்டான தேவதையாக உள்ளவர் நமது சத்ருக்களை அழிக்கட்டும்.

இந்த ஹோமங்கள் ஆனபிறகு இந்த கர்மாவை ஸம்ருத்தி உள்ளதாகச் செய்ய ஜயாதி ஹோமம் செய்து, அக்னிக்கு மேற்கு புறத்தில் கன்யகையை உட்காரவைத்து ஹோமம் செய்த மிகுதி நெய்யைக்கொண்டு பெண் தலையில் பூஸ்வாஹா, புவஸ்வாஹா, ஸுவஸ்வாஹா, ஒகுஸ்வாஹா என்று 4 பொட்டு நெய்யை விடவேண்டும். இதனால் 3 லோகத்திற்கும் அதிஷ்டான தேவதைகள் ஸந்தோஷமடைந்து கன்யகையைப் பதியுடன் காப்பாற்றுவார்கள்.

பிறகு கன்யகை கணவனை "அபஶ்யந்த்வா" என்ற மந்த்ரத்தைக்கூறி பார்க்கவேண்டும்.—தவத்தினால் ப்ராம்மணன் ஆனவரும் தவத்தினால் ஸம்பத்தைப் பெற்றவருமான உம்மை மநதால் பார்க்கிறேன். இவ்வீட்டில் என்னுடன் ஸந்ததி ஸம்பத் முதலியவைகளை அனுபவித்துக் கொண்டு நீரே புத்ர ரூபமாக என்னிடம் பிறப்பீராக.

வரன் வதுவைப் பார்த்துக் கூறும் மந்த்ர அர்த்தம்—"ருது காலத்தில் புத்ர உற்பத்தியை நாடி கர்ப்பாதானத்தை நாடுகின்றவளாக நினைக்கிறேன். நன்கு இல்லற இன்பத்தை அனுபவி. நீயே குழந்தை ரூபமாக இரு" ஹோமத்தில் மிகுந்த ஆஜ்யத்தைத் தன் விரலால் தொட்டுத் தன் மார்பிலும் கன்யகையின் மார்பிலும் தடவவேண்டும். அப்போது கூறும் மந்த்ரத்தின் கருத்து. "எங்கள் இருவர்களுடைய ஹ்ருதயத்தையும் விச்வேதேவர், ஜலதேவதை, வாயு, தாதா ஆகியவர் பரஸ்பரம்

ஸ்நேஹம் உள்ளதாகச் செய்யட்டும். ஸரஸ்வதீ தேவி நாங்கள் அன்யோன்யம் அன்புடன் பேசிக்கொண்டிருக்கும்படி அருள்புரியட்டும். ஸந்தானத்தை உண்டுபண்ணும் ப்ராஜாபதி என் உடலில் வந்திருக்கட்டும். ரூபத்தை அளிக்கும் த்வஷ்டா, விஷ்ணு முதலிய தேவர்களுடன் என் சரீரத்தில் தங்கட்டும். இந்த்ரன் தன் நண்பர்களான ஸமஸ்த தேவர்களுடன்கூட என்னிஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொண்டு இவளிடம் இருக்கட்டும். தேவர்களுடைய அருளால் நான் குழந்தைகளுக்குத் தந்தையாக வேண்டும். ப்ராஜாபதி ப்ரஜைகளைத் தரட்டும். கிழத்தனம் வரும்வரை யாதொரு அவலக்ஷணமும் இல்லாமல் பத்நி என் வீட்டில் வஸிக்கட்டும். இங்ஙனம் மனிதர்க்கும் பசுக்களுக்கும் அவள் ஸுகத்தை அளிக்கட்டும். பூஷா என்ற தேவன் ஸந்ததி வ்ருத்தியாகும்படியான சக்தி எங்கள் இருவர்க்கும் உண்டாகும்படி செய்யட்டும். எங்கள் இருவர்க்கும் சிற்றின்பத்திலும் யாதொருகஷ்டமுமில்லாதபடி எங்களை ரக்ஷிக்கட்டும்.''

[சில மந்த்ர அர்த்தத்தைப் பார்த்தால் ருதுவானவள் விஷயமாக சொல்லப்படுவதுபோல் தோன்றும். அது பின்னர், ருதுவானபின் பயனைத்தரட்டும் என ப்ரார்த்திப்பதாகும். சில மந்த்ர அர்த்தம் கேவல வாழ்க்கையையும் அதற்கேற்ற ஸாதநங்களையும் பற்றியே வேண்டுவதாகத் தோன்றும். சுத்த, ஸுகமான வாழ்க்கையால் பேரின்பம் பெறலாமென்பதே அதன் கருத்தாம்.]

பிறகு, விவாஹத்திற்கு அங்கமாக நாந்தீ ஶ்ராத்தம் ஹிரண்யரூபமாகச் செய்து, அதற்கு அங்கமாக புண்யாஹ வாசனம் செய்யவேண்டும். அக்னி உபஸ்தானம் செய்து "எங்களுக்குத் தக்க காலத்தில் தீர்க்காயுஸ்ஸான புத்ரன் பிறப்பதற்காக பலதான தாம்பூலதானம் செய்கிறேன்'' என்று ஸங்கல்பித்து உமாமஹேச்வர, லக்ஷ்மீநாராயண வடிவமாகக் கருதி, ஆஸனம் முதலிய உபசாரங்களைச் செய்து, மனைவி தீர்த்தம்போட, தக்ஷிணையுடன், அனைவர்க்கும் பலதானம் செய்யவேண்டும். அந்த

மந்த்ரத்தின் கருத்து "பலமான துஸ்தா தானம் செய்பவருக்கு இஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறது. அது புத்ர பௌத்ர வ்ருத்தி, செல்வம், நன்மை, புஷ்டி, முதலியவைகளை எனக்குத் தரட்டும்".

அதன் பின் தாம்பூலந்தரித்துக் கொள்வதற்கு ஸங்கல்பம், க்ரஹப்ரீதி செய்துகொண்டு, மைத்துனன் தாம்பூலந்தர தம்பதிகள் முதல்முதல் வெற்றிலை பாக்குப் போட்டுக்கொள்ளவேண்டும். பிறகு மஹத் ஆசீர்வாதம். வேத மந்த்ரங்களைக் கூறி ப்ராம்மணர்கள் மங்களாக்ஷதையை அளிக்க தம்பதிகள் அதை வஸ்த்ரத்தால் வாங்கி நமஸ்காரம் செய்து பெரியோரிடம் அக்ஷதையை வாங்கிக் கொள்ளவேண்டும். அம்மான் பாட்டனர், நண்பர்கள் நன்கொடையளிப்பது, லௌகிக ஆசீர்வாதங்கள், தம்பதிகளுக்கு த்ருஷ்டி தோஷம் அகல ஹார்த்தி, ஸம்பந்திகளை வழியனுப்ப கட்டுசாதம், முதலியன லௌகிக காரியங்களாகும்.

விவாஹம் முற்றிற்று.

ப்ராம்மண போஜனம்

குறிப்பு :—ஸீமந்தம், பும்ஸவனம், நாமகரணம் இவைகளில் அநேகம் ப்ராம்மணர்களுக்கும், சௌளத்தில் 50, உபநயனத்தில் 100, விவாஹத்தில் தம் சக்திக்குத் தகுந்தபடியும், ஆதானத்தில் 100 ப்ராம்மணர்களுக்கும் போஜனம் செய்விக்க வேண்டும் என்பது சாஸ்த்ரம்.

பாக-ஹவிர்-யக்ஞங்கள்

ஸம்ஸ்காரங்கள் நமது ஜீவனிடம் உள்ள மலங்களை அகற்றி, நம்மை ப்ரும்மலோகம் அல்லது ப்ரும்மத் துடன் சேர்க்கின்றன. இவைகளில் சில நம் பெற்றோர் களால் செய்யத் தக்கவை. சில நாமே செய்யத் தக்கவை.

கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாத கர்ம, நாம கரணம், அன்ன ப்ராஸனம், சௌளம், உபநயனம், ப்ராஜாபத்ய — ஸௌம்ய—ஆக்னேய - வைஸ்வதேவ வ்ரதங்கள், ஸ்னானம், விவாஹம், தேவ—பித்ரு—பூத— மனுஷ்ய—ப்ரும்ம—எனும் பஞ்ச மஹா யக்ஞங்கள் அல்லது வைஸ்வதேவம். இவை 19. இவைகளைக் கூறி னோம்.

பாகயக்ஞங்கள் 7. அஷ்டகா, ஸ்தாலீபாகம், பார்வ ணம், ஆக்ர ஹாயணீ, ஸ்ராவணீ, சைத்ரீ, ஆஸ்வயுஜீ.

அஷ்டகா—மாகமாஸத்தில் அஷ்டகாதி ஸ்ராத்தம் செய்யவேண்டும். முதல் நாள் இரவு ஔபாஸனம் செய்து, ஒருவகையான அடைபோல் செய்து, அஷ்டகா தேவதைக்கு ஒரு ஹோமமும், ஸ்விஷ்டக்ருத்திற்கு ஒரு ஹோமமும் செய்யவேண்டும். அதன்மிகுதியை, மறு நாள் ப்ராம்மணர்களாக வரிக்கும் எட்டுபேர்களுக்கும் அளிக்க வேண்டும். அஷ்டகா ஸ்ராத்தத்தில் விஸ்வே தேவர் இருவர், பித்ரு வர்க்கம் மூவர், மாத்ரு வர்க்கம் மூவர், ஆக எட்டு ப்ராம்மணர்களை வரித்து, பார்வண ஸ்ராத்தம்போல் சில மாறுதல்களுடன் ஸ்ராத்தம் செய்ய வேண்டும்.

அஷ்டமி இரவு ஔபாஸனம் செய்து, விஸ்வேதேவர் களுக்காக ஒருவர், மாத்ரு - பிதா மஹி - ப்ரபிதாமஹிக் காக ஒருவர், மாதாமஹ வர்க்கத்திற்காக ஒருவர், ஸ்ராத் தத்தை ரக்ஷிக்கும் விஷ்ணுவுக்காக ஒருவர், ஆக ஐந்து ப்ராம்மணர்களை வரித்து, நவமியன்று சில மாறுதலுடன் பார்வண ஸ்ராத்தம் போல் செய்ய வேண்டும்.

அன்வஷ்டகைக்கு ப்ரதிநிதியாக தத்யஞ்ஜலி (दध्यञ्जलि) ஹோமம் ஒன்றைச் செய்ய வேண்டும். அதில் இரு கரங்களாலும் தயிரை எடுத்து, அஷ்டகா தேவ தைக்கு ஒரு ஹோமம், ஸ்விஷ்டக்ருத்துக்கு ஒரு ஹோமம் ஆக இரு ஹோமங்களைச் செய்ய வேண்டும்.

ஸ்தாலீபாகம்—இது பௌர்ணமிக்கு அடுத்த ப்ரதமை யிலும் அமாவாஸ்யைச்கு அடுத்த ப்ரதமையிலும் மாதா மாதம் செய்ய வேண்டியது. ஆக்ரயண, ஸர்ப்ப பலி முதலியவைகளுக்கு இதுவே ப்ரக்ருதியாகும். ஔபாஸன அக்னியிலேயே ஸ்தாலியில் சருவை வைத்து அக்னிக்கும் ஸ்விஷ்டக்ருத்துக்கும் ஒவ்வொரு ஹோமமும் செய்ய வேண்டும்.

பார்வணம்—இதை மாஸி ஶ்ராத்தம் என்றும் கூறு வார்கள். இதுதான் எல்லா ஶ்ராத்தங்களுக்கும் ப்ரக்ருதி யானது. ப்ரக்ருதி என்றால் பூர்ணம் என்று பொருள். இதைப் போலவே மற்றவைகளைச் செய்ய மேற்கோளாக இருக்கின்றது. இதற்கு மாறானது விக்ருதி எனப்படும். சில மாறுதல்களுடன், மாறுதல்கள் இல்லாத விடத்தில் ப்ரக்ருதியைப் போல் செய்வது என்று பொருள்.

ஶ்ராவணி—ஆவணி மாதம் பௌர்ணமியில் செய்ய வேண்டிய கர்மா இது. இதை ஸர்ப்ப பலி என்றும் கூறுவர். ஆவணி பௌர்ணமி இரவில் சரு ஆஜ்ய ஹோமம் செய்து, பலாஶ புஷ்பங்களை இரு கரங்களாலும் ஹோமம் செய்து, ஸர்ப்பங்களுக்கு புற்று அல்லது சுத்த மான விடத்தில் பச்சை அரிசி மாவினால் கோலம் போல் போட்டு, ஸர்ப்ப மந்த்ரங்களைக் கூறி, உபஸ்தானம் செய் வது ஸர்ப்ப பலியாம். இங்ஙனம் ப்ரதிதினமும் மார்கழி மாத பௌர்ணமி வரை செய்து வரவேண்டும்.

ஆக்ரஹாயணி—ஶ்ராவண பௌர்ணமியில் ஆரம்பித்த ஸர்ப்ப பலியை மார்கழிமாத பௌர்ணமியில், ஆவணி மாதத்தில் செய்தது போல் ஹோமங்களைச் செய்து பூர்த்தி செய்யவேண்டும். இது ஆவணி அவிட்டத்தில்

ஆரம்பித்த வேதத்தை தை மாத பௌர்ணமியில் விஸர்ஜனம் செய்வது போல் அமைந்துளது.

அன்றியும், ஸர்ப்பங்களை அடித்து அதனால் ஸர்ப்ப சாபத்தைப் பெற்று ஸந்ததியில்லாதவர்கள் ஸர்ப்ப ஶாந்தி செய்வதுபோல் ஸர்ப்ப பலி செய்தால், ஸர்ப்ப சாபமாயிருந்தால் அது அகன்று உடனே ஸந்தானம் உண்டாகும். அதனால், இது ஸம்ஸ்காரமான நித்ய கர்மாவானாலும், காம்ய கர்மாவைப் போல் காமத்தையும் பூர்த்தி செய்யும்.

சைத்ரீ—சித்ரை மாதத்தில் செய்யவேண்டிய இதை ஈஶான பலி என்றும் கூறுவார்கள். நான்கு வீதிகள் கூடுமிடத்தில் ஈஶான தேவதையை ஆராதிப்பதால் இதை ஈஶான பலி என்பார்கள்.

ஆஶ்வயுஜீ—கார்த்திகை மாஸத்தில் பௌர்ணமியில் செய்ய வேண்டிய கர்மா இது. இதை ஆக்ரயண ஸ்தாலீ பாகம் என்றும் கூறுவார்கள். இதில் ஶ்யாமாகம் என்ற தான்யத்தைக் கொண்டு பாகம் செய்து ஹோமம் செய்ய வேண்டும்.

இந்த ஏழு யக்ஞங்களையும் ஸுலபமாகச் செய்யலாம். இவை ஹவிர்யக்ஞம் போலவோ, ஏழு ஸோம ஸம்ஸ்தை போலவோ கடினமானவை அல்ல. இந்த ப்ரயோகங்களை பூர்ணமாய் அச்சிட ஒரு பண்டிதரை ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்வாமிகள் அவர்கள் தூண்ட, அச்சிட்டவர் அதை வெளியிடுவதற்குள் மறைந்ததால், இவைகளைப் பூர்ணமாக எழுத முடியவில்லை. இதில் ஶ்ரத்தை கொண்டு, கர்மானுஷ்டானம் செய்ய அக்கரை யுள்ளவர் தெரிவித்தால், தேடிப்பிடித்து ப்ரயோகம் அனுப்பப்படும்.

ஹவிர்யக்ஞங்கள் 7. அக்னி ஆதானம், அக்னி ஹோத்ரம், தர்ஶ பூர்ணமாஸம், ஆக்ரயணம், சாதுர்மாஸ்யம், நிரூட பஶுபந்தம், ஸௌத்ராமணி.

ஸோம ஸம்ஸ்தைகள் 7. அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்த்யம், ஷோடஶி, வாஜபேயம், அதி ராத்ரம், அப்தோர் யாமம்.

ஆக இவைகளே 40 ஸம்ஸ்காரங்கள். ஔபாஸனம், அக்னி ஹோத்ரம், வைஶ்வ தேவம் இவை நித்யம் செய்ய வேண்டியவைகள்.

கார்ஹ பத்யம், ஆஹவனீயம், தக்ஷிணாக்னி என்ற மூன்று அக்னிகளை ஆரம்பிப்பது அக்னி ஆதானம். நித்யம் காலைமாலைகளில் ஔபாஸனம்போல் அவைகளில் ஹோமம் செய்வது அக்னி ஹோத்ரம். அமாவாஸ்யை பூர்ணிமா இவ்விரண்டுகளுக்கு அடுத்த நாள் ப்ரதமையில் செய்யும் இஷ்டி தர்ஶ பூர்ண மாஸம் என்றே கூறப்படுகிறது. அது தர்ஶ பூர்ண ஸ்தாலீ பாகம் போன்றது. ஶ்யாமை தான்யத்தைக் கொண்டு செய்யும் இஷ்டி ஆக்ரயணம். சாதுர் மாஸ்யம் என்பது பல இஷ்டிகள் சேர்ந்த ஒரு கர்மா. நிரூட பஶுபந்தம் ஸௌத்ராமணி இவை ஆண்டுக்கோர் முறை செய்யும் கர்மா. இவ்வேழு ஹவிர்யக்ஞங்களையும் யாகம் செய்தவர்களே செய்கின்றனர். ஏழு ஸோம யக்ஞங்களை வெகு வெகு சிலரே செய்கின்றனர். கர்ப்பாதானம் போல் ஒவ்வொரு ப்ராம்மணனும் அவஶ்யம் செய்ய வேண்டிய முக்ய ஸம்ஸ்காரங்கள் இவை. நம்மை உயர்ந்த ப்ராம்மணனாகச் செய்து உலகிற்கும் நல்ல மழை தந்து, முடிவில் நம்மை முக்திக்குத் தயாராக்குகின்றன. இந்த ஸம்ஸ்காரங்களை ஜாதகாதிகளைப் போல் விவரிப்பதானால் பல பக்கங்கள் ஆகும். ஆதலின் அவைகளைப் பற்றி அதிகம் எழுதவில்லை.

ஒரே பிறவியில் இந்த நாற்பது ஸம்ஸ்காரங்களும் ஒருவரால் செய்யப்பட்டால் அவர் மனம் நிர்மலமாகி எட்டு ஆத்ம குணங்கள் தோன்றும்.

எட்டு ஆத்ம குணங்கள்

1. தயை—எட்டு ஆத்ம குணங்களில் இது முதலாவது. முக்யமானது. ஸர்வ ப்ராணிகளிடமும் அன்பு காட்டுவது. பிறருக்குத் துன்பம் வந்தபோது இரக்கம் கொண்டு, "ஐயோ, பாவம்" என வருந்தி, தன்னைப்போல் கருதி முடிந்தவரை உதவி செய்வது. அவர்களுக்கு ஹிதமாய்ப் பேசுவது. அவர்கள் க்ஷேமத்தை நாடுவது. அவர்களுக்குத் துன்பம் நீங்கியபோது ஸந்தோஷப்படுவது. இவைகளும், இவை போன்ற செயலும் தயை என்பதாம்.

2. க்ஷாந்தி அல்லது க்ஷமா—நமக்கு, நம்மைச் சார்ந்தவரோ, அன்யரோ தீங்கு செய்தால், நம்மைத் திட்டினால், அடித்தால், அல்லது வேறு எந்த வகையில் கெடுதல் செய்தால், அவர்கள் மீது கோபம் கொள்ளாமலும், அவர்களைத் திட்டாமலும், அடிக்காமலும், மனதினாலும், வாக்கினாலும், உடலினாலும் பொறுப்பது க்ஷமா எனப்படும். தீங்கு செய்தவருக்கு உடனே பதில் தீங்கு செய்ய நினைப்பதும், செய்வதும் மனித குணம். நமது கையே நம் கண்ணைக் குத்திவிட்டால், நாம் யார்மீது கோபம் கொள்கிறோம்? ஒருவன் நம்மீது கல்லைவிட்டு எறிந்தால், அந்தக் கல்லை நாம் சிக்ஷிப்பதில்லை. கல்லை எறிந்தவனையே சிக்ஷிக்கிறோம். அதேபோல், நாம் செய்த வினையே நமக்குத் தீங்கை பிறர் மூலமாகத் தருகிறது என்று எண்ணி, பதில் செய்யாமல் இருக்கவேண்டும்.

3 அநஸூயா—அஸூயை இல்லாமல் இருப்பது அநஸூயா. ஒருவர் பூர்வ ஜன்ம கர்மாவினால் சிறந்த தனிகராகவோ, தர்ம ஶீலராகவோ, நல்ல போகத்தை அனுபவிப்பவராகவோ, அல்லதுசிறந்தவேதாந்தியாகவோ இருந்தால், அதைக் கண்டு சிலர் மனம் ஸஹிக்காது. அவரிடம் த்வேஷம் உண்டாகும். அவரிடமுள்ள நற்குணங்கள்மீது குற்றங் கூறுவர். ஒருவர் கோவில் கட்டினால் "ஊர் பணத்தைக் கொள்ளை அடித்தான். அந்த கெட்ட பெயர் மறைவதற்காக இதைச் செய்கிறான்" என்பர்

அஸூயை உள்ளவர். அப்படி இல்லாமல் நல்ல வாஸனையால் நற்கர்மா செய்கிருன் என்று அதை ஆமோதிக்க வேண்டும்.

4. ஶௌசம்—ஶுசியாக இருத்தல் என்பது இதன் பொருள். உடல், வாக்கு, மனம் என்ற மூன்றும் ஶுத்தமாக இருக்கவேண்டும். அக்ரமமாகவோ, பிறரை ஏமாற்றியோ பணம் ஸம்பாதிக்கக்கூடாது. வாங்கிய பொருளை குறித்த காலத்தில் தவருமல் திருப்பித் தரவேண்டும். தர்மத்திற்காக வஸூலான பணத்தை ஸொந்த கார்யத்திற்கு உபயோகிக்கக்கூடாது. மனதால் கூட பிறர் பொருளைத் தான் அனுபவிக்கவேண்டும் என எண்ணக் கூடாது. இது மனஶ் ஶௌசம். பிறரை நிந்திக்காமல், பொய் சொல்லாமல், எல்லோருக்கும் ப்ரியமாகவும், ஹிதமாகவும் பேசுவது வாக் ஶௌசம். எச்சில் தீட்டு, விழுப்பில்லாதிருத்தல், அநாசார இடத்திற்குப் போகாமை, அஶுத்த உணவை உண்ணுமை முதலியன ஶரீர ஶௌசம்.

5. அநாயாஸம் — ஆயாஸப்படாமை அநாயாஸம் எனப்படும். உடலுக்கும், பொருளுக்கும், பிறருக்கும் அளவு கடந்த ஆயாஸத்தை (ஶ்ரமத்தை) கொடுக்கக்கூடிய எந்த கார்யத்தையும் செய்யக்கூடாது. பசி துடிக்கத் துடிக்க, தீர்த்தம்கூட அருந்தாமல் உபவாஸம் இருத்தல், வியர்வை சொட்ட, கைகால் தளர்ந்து போகும்படி கடுமையான வேலை செய்வது, வழி நடப்பது, ஒரு கார்யத்தைச் செய்ய தன் சக்திக்கு மீறிய பொருளைச் செலவு செய்வது போன்ற ஆயாஸகரமான கார்யங்களைச் செய்யக்கூடாது.

6. மங்களம் — அழுக்கில்லாத, ஆடம்பரமில்லாத அவஶ்யம் வேண்டிய ஆடை, ஆபரணங்களை அணிவது, நெற்றிக்குத் திலகமிட்டு, சிறித்த முகமாகவே இருப்பது, ஶுபமான சொற்களையே கூறுவது, சிறந்த ஆசாரங்களைக் கைகொள்வது முதலியன மங்களமாம். துன்பம் வந்தபோது, "ஐயோ", "எழவு" இது போன்ற சொற்களைக் கூருமல், "ராம, ராம", "சிவ, சிவ" "க்ருஷ்ண,

க்ருஷ்ண" என பகவன் நாமாக்களைக் கூறவேண்டும். புருஷர் அநாவஸ்யமாக கேஸத்தை வளர்க்கக்கூடாது. ஒரு க்ஷணங்கூட நெற்றிக்கிடாமலோ, கச்சம் இல்லாமலோ இருக்கக்கூடாது. வெகு நேரம் ஈற வேஷ்டியைத் தரித்திருக்கக்கூடாது.

7. அகார்ப்பண்யம் — கார்ப்பண்யம் இல்லாமை. என்ன கஷ்டம் வந்தாலும், தைர்யமாக இருப்பது, ஏழ்மையிலும் ஸக்திக்கு ஏற்ற அளவு ஸத்பாத்ரத்தில் தானம் செய்வது, ஆத்ம விசாரம் செய்வது, ஜன்மாவைப் பாழாக்காமல் ஜீவனுக்குப் பல வழிகளிலும் நன்மை தேடுவது— இவைகள் போன்றவை அகார்ப்பண்யமாகும்.

8. அஸ்ப்ருஹா — ஸ்ப்ருஹை (பற்று) இல்லாமல் இருத்தல். தன் பொருளிலும், பிறர் பொருளிலும், உடலிலும், மற்றவைகளிடமும் ஆசை வைக்கக்கூடாது. கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷப்படவேண்டும். பணக்குறைவாலோ, தனக்கோ அல்லது தன்னைச் சார்ந்தவர்களுக்கோ ஏற்படும் துன்பத்தினாலோ, குறையாலோ, துன்பப்படாமலிருத்தல் வேண்டும். அன்யரிடம் உள்ள அழகிய ஒரு பொருளைப் பார்த்தவுடன், அதுபோல் நமக்கு ஒன்று வேண்டும் என்று விரும்பக்கூடாது.

இத்தகைய எட்டு குணங்களையும் தேவகுணம் என்று கூறாமல், ஆத்ம குணம் என்பதால், இவை ஆத்ம ஸ்வரூபத்தை அடைவதற்கேற்ற குணம் என்றும், இவை ஆத்மாவிற்கு இயற்கையானது என்றும் தெரிகிறது.

நாற்பது ஸம்ஸ்காரங்கள் பூர்த்தி.

அனுபந்தம்

[இவைகளின் விளக்கம்]

(1) புண்யாஹ வாசனம்

இடத்தை அல்லது ஒரு பொருளைச் சுத்தம் செய்வதற்காக ஏற்பட்ட வேதோக்த கர்மா இது. காயத்ரியைக் கூறி ப்ரோக்ஷிப்பதும், "அபவித்ர: பவித்ரோவா ஸர்வா வஸ்தாம் கதோபிவா—யஸ்மரேத் புண்டரீ காக்ஷம் ஸ பாஹ்யாப்யந்தரஶ்ஶுசி:"—என்பதைக் கூறி ப்ரோக்ஷிப்பதும் ஸாமான்யமானது. சிறிது அதிகமாக ஶுத்தியை விரும்பினால் புண்யாஹ வாசனம் செய்யவேண்டும். ஶுத்திக்காக மாத்ரம் அல்லாமல் சில கர்மாக்களுக்கு அங்கமாகவும் கூறப்படுகிறது.

ஶுத்தமாகவும் ஸமமாகவும் உள்ள இடத்தில் பசுஞ் சாணியால் நான்கு மூலை சதுரமாக மெழுகி, கோலமிட்டு, அதன்மீது நெல்லைப் பறப்பி, அதன்மேல் நுனி வாழை இலையை வடக்கு முகமாக அமைத்து, அதன்மீது அரிசியைப் பறப்பி, அதில் தாமரை புஷ்பம்போல் எழுதி, கிழக்கு நுனியாக தர்ப்பையை போடவேண்டும். அதன் மேல் தீர்த்தத்துடன் கலசத்தை வைத்து, அதற்குமேல் கூர்ச்சம், மாவிலை, தேங்காய் முதலியவைகளை வைத்து, கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து, ஸங்கல்பம் செய்யவேண்டும்.

பவித்ரம் அணிந்து, தர்ப்பத்தின்மேல் அமர்ந்து, (இப்பொழுது உட்கார்ந்தபின் ஆஸனத்திற்காக தர்ப்பத்தைக் காலின் கீழ் போடுவது வழக்கம்) ஶுக்லாம் பரதரம்—ஶாந்தயே என குட்டிக்கொண்டு, ப்ராணயாமம் செய்து, ஸங்கல்பம் செய்யவேண்டும். ஶுபே ஶோபனே—ஶுபதிதௌ ஆத்மஶுத்யர்த்தம், ஸர்வ உபகரண ஶுத்யர்த்தம் ஶுத்தி புண்யாஹம் வாசயிஷ்யே என்று கூறி, கலசத்தில் வருணனை இமம்மே வருண, அஹேட மான என்ற இரு மந்த்ரங்களால் ஆவாஹனம் செய்து ஷோடஶ உபசார பூஜை செய்யவேண்டும்.

நான்கு திக்குகளிலும் நான்கு ப்ராம்மணர்களைப் புண்யாஹ ஜபம் செய்வதற்காக அமர்த்தவேண்டும்.

"உங்கள் உத்திரவு பெற்று, மந்த்ரங்களைக் கூறும்படி வேண்டுகிறேன்." இப்படி பல உத்திரவுகள் கேட்க அவர்கள் தக்க பதில் கூறுவர். பிறகு, ததிக்ராவிண்ண:, ஹிரண்யவர்ணு :—புனுது வரையும், "தச்சம்யோ" என்ற ஶாந்தியையும் ஜபிக்க வேண்டும். வருணனை யதாஸ்தானம் செய்து, ப்ராம்மணர்கள் "தேவஸ்யத்வா" என்ற மந்த்ரங்களால் யஜமானன், பத்னி, புத்ரன், புத்ரி, பூஜாத்ரவ்யங்கள், வீடு முதலியவைகளை ப்ரோக்ஷிப்பர். பிறகு அந்த தீர்த்தத்தைச் சாப்பிடவேண்டும். சாப்பிடுவதற்காக, ப்ரோக்ஷிப்பதற்கு முன்பேயே, தீர்த்தத்தை எடுத்து வைக்கவேண்டும். ப்ராம்மண தக்ஷிணை தந்து, பவித்ரத்தை அவிழ்த்து, ஆசமனம் செய்யவேண்டும்.

இந்த மந்த்ரங்கள் ஸகல தேவதைகளும் ஜலத்தின் மூலமாக நம்மையும் பூஜாத்ரவ்யங்களையும் ஶுத்தமாகச் செய்யட்டும் என்று பொருள் கொண்டவை.

(2) முகாந்தம் அல்லது ஆஜ்ய பாகாந்தம்

தேவர்களுக்கு அக்னியே முகம். அவர் மூலமாக மந்த்ரங்களைக் கூறி ஹோமம் செய்தால்தான் அது தேவர்களிடம் செல்லும். அந்த அக்னியும் ஸாதாரண தீயாக இல்லாமல், விதிப்படி ப்ரதிஷ்டை செய்தால்தான் தேவர்களிடம் ஹவிஸ்ஸைச் சேர்க்க முடியும். அதனுல், முதலில் யாக பூமியை உழுவதுபோல் "ப்ராசீ: பூர்வம் உதக் ஸக்குஸ்தம் தக்ஷிணாரம்பம் ஆலிகேத். அத உதீசீ: புரஸ் ஸக்குஸ்தம் பஸ்சிமாரம்பம் ஆலிகேத்" என ஸமித்தால் கிழக்காக மூன்று கோடுகளும், வடக்காக மூன்று கோடுகளும் போடவேண்டும். இது குறுக்கு நெடுக்காக உழுவது போலாம். இதை உபாத்யாயர் கூறும்போது, மந்த்ரம் என நினைத்துச் சிலர் இதையும் கூறுவர். அது அவஶ்யமில்லை. பிறகு, மூன்று வ்யாஹ்ருதிகளைக் கூறி, அக்னியை ப்ரதிஷ்டை செய்யவேண்டும். அக்னி கொண்டுவந்த பாத்ரத்தில் அக்ஷதையுடன் தீர்த்தத்தை விடவேண்டும். கிழக்கே ஒரு பாத்ரத்தில் தீர்த்தத்தை வைக்கவேண்டும்.

அது அஸுரர் வராமல் தடுத்து தேவர் மாத்ரம் வர வழி அளிக்கும். மற்ற மூன்று பக்கங்களிலும் பரிதி என்ற ஸமித்தும், பரிஸ்தரணம் என்பவைகளும் நாம் செய்யும் ஹோமத்தை அஸுரர் கொண்டுபோகா வண்ணம் ரக்ஷிக்கும் வேலி போலாம்.

அக்னியை குழாயினல் ஊதி, ஜ்வலிக்கும்படி செய்து கிழக்கு நுனியாகவும், வடக்கு நுனியாகவும் தர்ப்பங்களைப் போடவேண்டும். அதே பரிஸ்தரணம் எனப்படும். தெற்கிலிருந்து வடக்கே போடும் தர்ப்பமானது, தென் புறமாகப் போடும் கிழக்கு நுனியாக தர்ப்பத்தின் மேலும் வடக்கு புறமுள்ளது கீழாகவும் இருக்கவேண்டும். அக்னிக்கு வட புறத்தில் பாத்ரங்களை வைப்பதற்காக கிழக்கு நுனியாக தர்ப்பங்களைப் போட்டு, அதன்மீது ப்ரதான தர்வி, ஆஜ்ய ஸ்தாலீ, இதர தர்வீ, ப்ரோக்ஷணீ என்ற நான்கு பாத்ரங்களை இரண்டு இரண்டாகச் சேர்த்து கவிழ்த்து வைக்கவேண்டும்.

ஸ்தாலீ பாகம் முதலியவைகளில், ப்ரதான தர்வீ, ஆஜ்யஸ்தாலீ, ப்ரோக்ஷணீ பாத்ரம், ப்ரணீதா பாத்ரம், இதர தர்வி, இத்மம் இவைகளை மேற்கிலிருந்து கிழக்கு வரை வைக்கவேண்டும். ஶ்ராத்தம், ஸீமந்தம் முதலியவைகளில், அதில் உபயோகமாகும் சரு பாத்ரம், பன்னி முள் முதலியவைகளையும் அங்கு வைக்க வேண்டும். அதில் வைத்து, ஸம்ஸ்காரம் செய்யாததை ஹோமத்தில் உபயோகிக்கக் கூடாது.

ப்ரோக்ஷணீ பாத்ரத்தை எடுத்து, நமக்கும் அக்னிக்கும் நடுவில் வடக்கு நுனியாகப் போட்டிருக்கும் தர்ப்பத்தில் வைக்கவேண்டும். ஹோமத்திற்குரிய பாத்ரங்களைப் பூமியில் வைக்காமல் ஆஸனத்தில் வைக்கவேண்டும். ப்ரோக்ஷணீ பாத்ரத்தில் அக்ஷதையைப் போட்டு, அதில் தீர்த்தத்தை விட்டு, பவித்ரத்தினல் கிழக்கு முகமாக மூன்று முறை அறைப்பதுபோல் தீர்த்தத்தைச் சுத்தம் செய்ய வேண்டும். கவிழ்த்திருந்த பாத்ரங்களை நிமிர்த்தி, இந்த தீர்த்தத்தைக் கொண்டு பவித்ரத்துடன் மூன்று

முறை எல்லா ஜலத்தாலும் ப்ரோக்ஷிக்க வேண்டும். இது பாத்ர ஶுத்தியாம். அந்த ப்ரோக்ஷணீ பாத்ரத்தை வலது புறம் வைத்து, ஆஜ்ய ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். நமக்கும் அக்னிக்கும் நடுவில் உள்ள தர்ப்பத்தில் ஆஜ்ய பாத்ரத்தை வைத்து, அதனுள் பவித்ரத்தை வைத்து உருகிய நெய்யை அதில் விடவேண்டும்.

அக்னிக்கு வடக்கு புரத்தில் ஒரு விரட்டியில் (வரளியில்) அக்னியை எடுத்து வைத்து, அதன்மேல் இந்த ஆஜ்ய பாத்ரத்தை வைத்து, ஒரு தர்ப்பத்தைக் கொளுத்தி அதன்மீது காட்டி, வடக்கு பக்கமாய் எறிய வேண்டும் இரண்டு தர்ப்ப நுனிகளை அறுத்து, நனைத்து, ஆஜ்ய பாத்ரத்தில் போட்டு, மறுபடி ஒரு தர்ப்பையைக் கொளுத்தி, மூன்று முறை அதைச்சுற்றி எறியவேண்டும். ஆஜ்ய பாத்ரத்தை வட புரமாய் இறக்கி, தணலை அக்னியுடன் சேர்த்து, ஆஜ்ய பாத்ரத்தை நம் எதிரில் வைத்து, வடக்கு நுனியான அந்த பவித்ரத்தால் முன்னும் பின்னுமாக மூன்று முறை அறைக்கவேண்டும். அந்த பவித்ர முடிச்சை அவிழ்த்து, ஜலத்தைத் தொட்டு அதை அக்னியில் போடவேண்டும். இது ஆஜ்ய ஸம்ஸ்காரம். இப்படிச் செய்த நெய்யால்தான் ஹோமம் செய்யவேண்டும். இதைப் பாக்கி வைத்துக்கொண்டு, அதிக நெய் வேண்டுமானல் இதில் கலந்துகொள்ளலாம். விரட்டியிலுள்ள தணலை அக்னியுடன் சேர்க்கவேண்டும்.

ஹோமம் செய்யும் இரு தர்விகளையும் அக்னியில் காய்ச்சி, தர்ப்பைகளால் துடைத்து, மறுபடியும் ஒரு முறை காய்ச்சி, ஜலத்தால் ப்ரோக்ஷித்து ஆஜ்ய பாத்ரத்திற்கு இடது புரத்தில் வைத்து, அந்த தர்ப்பைகளை ஜலத்தால் தொட்டு, அக்னியில் போடவேண்டும். "அதிதேநு மன்யஸ்வ" முதலிய மந்த்ரங்களால் பரிஷேசனம் செய்து, அக்னியை அலங்கரித்து, இதர தர்வியால் நான்கு முறை ப்ரதான தர்வியில் நெய்யை எடுத்துவிட்டு, "அக்னி ஸித்யர்த்தம் வ்யாஹ்ருதி ஹோமம் கரிஷ்யே" என ஸங்கல்பம் செய்து, "ஓம் பூர்புவஸ்ஸுவஸ்வாஹா" என

ஹோமம் செய்து, "ப்ராஜாபதயே இதம் நமம" என உத்தேச த்யாகம் சொல்லவேண்டும்.

உபவாஸம் இருப்பதற்கு பதிலாகச் சொல்லப்பட்ட "அயாஸ்ச ஹோமம் கரிஷ்யே" என ஸங்கல்பித்து, முன் போல் நான்கு முறை நெய் எடுத்து, அந்த மந்ரத்தைக் கூறி ஹோமம் செய்யவேண்டும். "அக்னயே அயஸ இதம் நமம" எனக்கூறி, அக்னி ஸித்தித்தபின் அக்னி ஸந்தான மானல், இதுவரை ஔபாஸனம் செய்யாதிருந்த தோஷம் அகல முன்போல் நான்குமுறை நெய்யை எடுத்து வ்யாஹ்ருதிகளைக் கூறி, ஸர்வ ப்ராயச்சித்தம் செய்ய வேண்டும். ஔபாஸனமில்லாமல் நவக்ரஹ ஹோமம் முதலியவைகளில் இந்த ஹோமம் இல்லை.

பிறகு இந்த அக்னிமுக அல்லது முகாந்த கர்மாவில் ஆரம்பித்தது முதல் இதுவரை ஏற்பட்ட தோஷம் அகல "அனுக்ஞாதம்" முதலிய ஹோமங்களைச் செய்யவேண்டும். அனுக்ஞாதம் முதலியன 3, தனித்தனியாக வ்யாஹ்ருதி 3, சேர்த்து 1, மந்த்ர தந்த்ராதி லோப ப்ராயச்சித்தம்1, விஷ்ணு 1, ருத்ரன் 1 ஆகிய இந்த ஹோமங்களைச் செய்து, இரண்டு தர்விகளையும் ஒரு கையிலும், ஆஜ்ய பாத்ரத்தை ஒரு கரத்திலும் வைத்துக்கொண்டு, "ஸப்நதே அக்னே" என்ற மந்த்ரம் கூறி, எல்லா நெய்யையும் ஹோமம் செய்து, நெய் பாத்ரத்தை இடது புரத்தில் வைத்துப் பரிஷேசனம் செய்யவேண்டும்.

இத்ம தந்த்ரம் ஆனல் ப்ரணீதா பாத்ரத்தில் அக்ஷதையுடன் தீர்த்தம் விட்டு, கிழக்கு முகமாக மூன்று முறை அறைத்து, மார்பிற்கு நேராகத் தூக்கி, அக்னிக்கும் பாத்ர ஸாதனத்திற்காகப் போட்டிருக்கும் தர்ப்பைக்கு நடுவில் தர்ப்பம் போட்டு, அதன்மீது வைத்து, தர்ப்பைகளால் மூடி, "வருணாய நம: ஸகல ஆராதனை: ஸு அர்ச்சிதம்" என அக்ஷதையைப் போடவேண்டும். (ப்ரதான ஹோமங்கள் ஆனபின் இதை எடுத்து, கூடக் கொஞ்சம் ஜலத்தைச் சேர்த்து, நான்கு புரமும் மேலும் கீழும் ஜல அர்க்யம் அளித்து, மிகுதி ஜலத்தைத் தரையில்

கவிழ்த்து, அதைத் தலையில் ப்ரோக்ஷித்துக் கொள்ள வேண்டும். இது அவப்ருத ஸ்னானம் எனப்படும்.)

ப்ரணீதைக்குப் பிறகு, ப்ரும்ம வரணம், ஆஜ்ய ஸம்ஸ்காரம், தர்வீ ஸம்ஸ்காரம் செய்து, இத்மத்திலுள்ள நீண்ட ஸமித்து மூன்றுகளில் பெருமனுக இருப்பதை வடக்கு நுனியாக அக்னிக்கு மேற்கு புரத்திலும், கொஞ்சம் மெல்லியதும், தீர்க்கமுமானதைத் தென்புரத்திலும், அதைவிட மெல்லியதும், சிறியதுமானதை வட புரத்திலும் வைக்கவேண்டும். இவைகளை விடச் சிறியதும் மற்ற ஸமித்துக்களைவிட கொஞ்சம் பெரியதுமான இரண்டு ஸமித்துக்களை எடுத்து, நடு பரிதியைத் தொட்டு, நிற்பது போல் அக்னியில் தென்புரம் முதலில், வடபுரம் பின்னர் வைக்கவேண்டும். பரிஷேசனம் செய்து, அக்னியை அலங்கரித்து, இத்மத்தை ஆஜ்யத்தால் நனைத்து, ப்ரும்மாவிடம் உத்திரவு பெற்று அக்னியில் வைக்கவேண்டும். அது ஜ்வலிக்கும்போது, இதர தர்வியைக்கொண்டு, ப்ரும்மாவை மனதால் த்யானம் செய்து, "ஸ்வாஹா" என்று கூறி, வடக்கே உள்ள இரு ஸமித்துக்களும் சேருமிடத்திலிருந்து ஆரம்பித்து, எல்லா ஸமித்துகளிலும் நெய் படும்படி, குறுக்காக ஆக்நேய மூலைவரை ஆஜ்ய தாரைவிட வேண்டும். 'ப்ரஜாபதயே இதம் நமம" என்று கூறவேண்டும். ப்ரதான தர்வியைக் கொண்டு, தென் புரத்திலுள்ள பரிதிகளின் அடியிலிருந்து நிருருதியிலிருந்து ஈஶான திக்கு வரை முன்போல் "ஸ்வாஹா" என்று ஆஜ்ய தாரையைக் குறுக்காக விடவேண்டும். "இந்த்ராய இதம் நமம."

இதன் பிறகு, ஆஜ்ய பாகம். ப்ரதான தர்வியால் "அக்னயே ஸ்வாஹா" என்று வட கிழக்கிலும், "ஸோமாய ஸ்வாஹா" என்று தென் கிழக்கிலும் இரு ஹோமங்களைச் செய்து, "அக்னய இதம் நமம," "ஸோமாய இதம் நமம" எனக் கூறவேண்டும். இவ்விரண்டும் அக்னிக்கு இரு கண்கள். நடுவில் "அக்னயே ஸ்வாஹா" என்று ஒரு ஹோமம் செய்ய வேண்டும். இதுவே அக்னிக்கு முகமாகும். இதனுல்தான் முகாந்தம்

என்றும், அக்னிஸோம ஹோமங்களால் "ஆஜ்ய பாகாந் தம்" என்றும் பெயர் உண்டானது. இதுவரை எல்லா கர்மாக்களும் பொதுவாம். இதற்கு ஆரம்பம் முதல் இதுவரை நேர்ந்த தோஷங்களுக்கு ப்ராயச்சித்தமாக "ஸர்வ ப்ராயஶ்சித்த ஹோமம்" செய்ய வேண்டும். மற் றவை முன் கூறியபடி.

(3) ஜயாதி ஹோமம்

உபநயனம், விவாஹம் முதலியவைகளில் முக்ய ஹோமங்கள் ஆனபின்பு, அது நல்ல பலனுடையதாகச் செய்ய ஜயாதி ஹோமம் செய்ய வேண்டும். ஜயத்தை அளிக்கக் கூடியதால், இங்கு கூறப்படும் தேவர்களுக்கு ஜயாதிகள் என்று பெயர் தோன்றிற்று. இவர்கள் தம்தம் தொழிலால் ஸர்வேஶ்வரனை ஆராதிக்கிறார்கள். ஆலயங் களில் பரிவார தேவதைகளுக்கு பூஜை செய்வதுபோல் முக்ய தேவதைகளுக்கு ஹோமம் செய்தபின் இவர்களுக்கு ஹோமம் செய்வதும், இவர்களை ஆராதிப்பதும் முக்ய தேவர்களையே பூஜிப்பதாம். இவர்களின் வரலாறுபற்றி புராணங்கள் கூறுகின்றன. இதில் சில தேவதைகளையும், அவர்களது பத்னிகளையும் ஆராதிக்கிறோம். சில தேவதை கள் மனோ வ்ருத்திக்கும், சிலர் காலத்திற்கும், சிலர் நக்ஷத்ரங்களுக்கும், சிலர் கந்தர்வர்களுக்கும் அதிஷ்டான தேவதை ஆவர். ஒரு தேவருடன் இன்னொரு தேவரைச் சேர்த்தால் அவரே தனியாக ஒருவராகவும், சேர்க்கை யால் வேறு ஒருவராகவும் ஆகிறார். இங்ஙனம் இங்கு பல சிறிய தேவர்களை ஹோம மூலமாக ஆராதிக்கின்றோம். நமது வாழ்க்கைக்கு அவர்களுடைய உதவி மிக மிக இன்றியமையாதது.

சித்தம்	விஷ்ணு
சித்தி	மருத்
ஆகூத	பித்ருக்கள்
ஆகூதி	அக்னி கந்தர்வர்
விக்ஞாத	ஓஷதி அப்ஸரஸ்
விக்ஞான	ஸூர்ய கந்தர்வர்

மனஸ்	மரீசி அப்ஸரஸ்
ஶுக்வரீ	சந்த்ரமா கந்தர்வர்
தர்ஶ	நக்ஷத்ர அப்ஸரஸ்
பூர்ணமாஸ	யக்ஞ கந்தர்வர்
ப்ருஹத்	தக்ஷிணா அப்ஸரஸ்
ரதந்த்ர	மனஸ் கந்தர்வர்
ப்ரஜாபதி	ரிக்ஸாம அப்ஸரஸ்
அக்னி	வாதகந்தர்வர்
இந்த்ரன்	அப் அப்ஸரஸ்
யமன்	புவனபதி
வாயு	ம்ருத்யு கந்தர்வர்
ஸூர்யன்	விஶ்வ அப்ஸரஸ்
சந்த்ரன்	பர்ஜன்ய கந்தர்வர்
ப்ருஹஸ்பதி	வித்யுத் அப்ஸரஸ்
மித்ரன்	ம்ருத்யு கந்தர்வர்
வருணன்	ப்ரஜா அப்ஸரஸ்
ஸமுத்ரம்	காம கந்தர்வர்
அன்னம்	ஆதி அப்ஸரஸ்
ஸோமன்	புவனபதி
ஸவிதா	ப்ரஹ்மா
ருத்ரன்	ப்ரஜாபதி
த்வஷ்டா	மூன்று வ்யாஹ்ருதிகள்
	அக்னி ஸ்விஷ்டக்ருத்

என்பவர்களை நாடி ஸுமார் 60 ஆஜ்ய ஹோமங்கள் ஜயாதியில் நடைபெறுகின்றன.

(குறிப்பு—ருத்ர ஹோமமும் பித்ரு ஹோமமும் செய்தபின், கையலம்பி அவர்களுக்குத் தனி கௌரவம் அளிக்கவேண்டும்).

பரிதிகளை அக்னியில் போட்டு, ஸக்கு ஸ்ராவ ஹோமம், வ்யாஹ்ருதி, அனுக்ஞாதம், முதலிய ஹோமங்கள் செய்து, ஸப்ததே அக்னே என்று தர்விகளுடன் ஆஜ்ய பாத்ரத்திலுள்ளதை எல்லாம் ஹோமம் செய்யவேண்டும்.

(4) நாந்தீ ஶ்ராத்தம்

விவாஹம் முதலிய ஶுப கார்யங்கள் நடக்கும் பொழுது, ஸகல தேவதைகளையும் ஸந்தோஷப் படுத்தி, பின்பே அவைகளைச் செய்யவேண்டும். குல தேவதைகளுக்குப் பூஜை, ஸுமங்கலி ப்ரார்த்தனை, வேங்கடாசலபதி அல்லது ஸுப்ரமண்ய ஸ்வாமி ஸமாராதனைகளைச் செய்கிறோம். அதை அனுஸரித்து, ஸூத்ரக்காரர்கள், கர்மா ஆரம்பத்திலும், சில கர்மாவின் முடிவிலும் நாந்தீ ஶ்ராத்தம் செய்யும்படி விதிக்கிறார்கள். இதை "ப்ராம்மணான் போஜயித்வா" "ஆஶிஷோ வாசயித்வா" எனக் கூறுகிறார்கள். இதற்கு "நாந்திஶ்ராத்தம் செய்" என்று பொருள்.

பித்ருக்களில் பலவகை உண்டு. அதில் நாந்தீ முக என்பவர் ஶுபகாலத்தில் ஆராதிக்கத்தக்கவர். ஸுமங்கலி ப்ரார்த்தனை, ஸமாராதனைகளைப் போலவே இதையும் முன்னாளில் செய்யவேண்டும். இப்படி இன்றைக்கும் மலையாளத்தில் அனுஷ்டிக்கின்றனர். ஶ்ரத்தையுள்ள சில ஆஸ்திகர் இங்கும் அன்ன ரூப ஶ்ராத்தமாகவே செய்கின்றனர். இது பார்வண ஶ்ராத்தம் போன்றதாம். இதில் ப்ராசீனாவீதம் செய்து கொள்வதில்லை. எள்ளைத் தொடுவதில்லை. அதற்குப்பதில் ஶோபன அக்ஷதையை எடுத்துக்கொள்வர். ஒவ்வொரு ஸமயமும் வஸு, ருத்ர ஆதித்ய, ஸ்வரூப, பித்ரு, பிதாமஹ, ப்ரபிதாமஹ என்பதற்குப் பதிலாக நாந்தீமுக எனப்படும். முதலில் ஸத்ய வஸு, ஸம்ஜ்ஞக, விஶ்வே தேவர் எனக் கூறவேண்டும். பித்ரு கோஷ்டிபோல் விஶ்வே தேவக் கூட்டத்திலும் துருருசி, ஸத்ய வஸு. புரூரவார்த்ரவ என்ற பேதம் உண்டு.

இங்கு நாந்தி ஶ்ராத்தத்தில் ஸத்ய வஸு என்ற பெயருள்ள விஶ்வே தேவர்களே வரிக்கப்படுகின்றனர். அன்றியும் முதலில் ஸ்த்ரீ வர்க்கங்களுக்கே வரணம், பூஜை முதலியன. அதிலும், நாந்திமுக ப்ரபிதாமஹீ,

பிதாமஹீ, மாத்ருப்யோ நம: என்றும், பிறகு நாந்திமுக ப்ரபிதாமஹ, பிதாமஹ, பித்ருப்யோ நம: என்றும் அதற்கு மாருகக் கூறவேண்டும். ஹோமத்திலும் நாந்திமுக ப்ரபிதா மஹோ வ்ருந்தாம், நாந்திமுக பிதா மஹோ வ்ருந்தாம், நாந்திமுக பிதா வ்ருந்தாம் என்று கூற வேண்டும் மற்றவை பெரும்பாலும் பார்வண ஶ்ராத்தம் போலவே ஆகும்.

இப்படி விதிவத்தாக ஹோமம் செய்து ப்ராம்மணர் களை வரித்து, அன்னம் அளித்து ஶ்ராத்தமாகச் செய் வதே உத்தமம். இப்படிச் செய்ய ஸௌகர்யம் இல்லா விடில் ஆம ஶ்ராத்தமாகச் செய்வது மத்யமம். அதில் விதிப்படி எல்லோரையும் வரித்து, வாழை இலையில் அரிசியை வைத்து, வாழைக்காய், தக்ஷிணை, தாம்பூலம் வேஷ்டி, முதலியவைகளை அளித்து, த்ருப்தி ஆசிர்வாதம் கூறும்படி செய்யவேண்டும். இப்படியும் செய்யமுடியாத வர் ஹிரண்ய ஶ்ராத்தம் என்ற வகையில், தாராளமாகத் தக்ஷிணையைத் தரவேண்டும். அதிலும் லோபப்பட்டால் பித்ரு ப்ரஸாதத்தைப் பெறுவது எப்படி? அவர்களுக்கு ஒரு வேளை உணவுக்கு ஆகும் செலவையேனும் அளிக்கா மல் கால் ரூபாய் தருவது நன்றன்று. ஹிரண்ய ரூபமாகச் செய்வது மூன்ரும் பக்ஷமாம்.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
31	16	யத்தே ஸுஸீமே	யத்தே ஸுஸீமே
50	14	மங்ர	மந்த்ர
74	12	வேத வ்ரதங்கனின்	வேத வ்ரதங்களின்
108	34	அர்ப்பன்ம்	அர்ப்பணம்
110	3	ஊஞ்சலிள்	ஊஞ்சலின்
111	30	ச்யவன	ச்யாவன
115	9	மங்ரத்தை	மந்த்ரத்தை
117	27	அகோரசஷு:	அகோரசக்ஷு:

(5) வைதிக பரிபாஷை விளக்கம்

அபிகார்ய	— நெய்யை விட்டு.
அப்யஜ்ய	— நெய்யினுல் நனைத்து.
அப உபஸ்ப்ருஶ்ய	— ஜலத்தைத் தொட்டு.
அனுக்ஞா	— தக்ஷிணை தந்து, உத்திரவு கேட்டு.
அர்க்யம்	— பூஜைக்காக ஜலம் தருவது.
அங்காரான்	— கட்டைத் தணல்களை.
அக்ஷத	— நுனி முறியாத அரிசி.
அந்தர்ஹித	— உள்ளே இருக்கின்ற.
அப்யுக்ஷ்ய	— ப்ரோக்ஷித்து.
அநுக்ரஹாண	— அருள் செய்யுங்கள்.
ஆசம்ய	— அச்யுதாய நம: அனந்தாய நம: கோவிந்தாய நம: என்று கூறி, மும்முறை தீர்த்தத்தை கரத்தின் அடி பாகத்தால் அருந்துவது.
ஆஜ்ய பாத்ரம்	— நெய் வைக்கும் பாத்ரம்.
ஆவாஹனம்	— இங்கு தங்கும்படி செய்வது.
ஆகார	— அக்னியில் வாயுதிக் முதல் அக்னி திக் வரை, நிருருதிதிக்முதல் ஈஶான திக் வரை, தர்வியால் குறுக்காக நெய்யினுல்கோடுபோல் போடுவது.
ஆகாரஸமித்	— அக்னியில் ஆகாசத்தை நோக்கி நிறுத்தும் ஸமித்து.
ஆஜ்யம் நிருப்ய	— நெய்யை விட்டு.
ஆஸனம்	— சுத்தமான உட்காரும் இடம்.
ஆஸீன:	— உட்கார்ந்துகொண்டு.
இத்மம்	— ஸமித்துக்கட்டு.
இதர தர்வி	— மற்றொரு பலாச நடு இலை.
உத்தர	— வடக்கு
உல்லிக்ய	— பூமியைக் கீறி.
உபவீதி	— இடது தோளில் பூணல் இருப்பது.
உத்தரீயம்	— மேல் வஸ்த்ரம்.
உக்த்வா	— சொல்லி
உத்தேஶத்யாகம்	— உத்தேசித்த தெய்வத்திற்கே இது என்னுடையது அல்ல என்று கூறுவது.
கரிஷ்யே	— செய்கிறேன்.
கந்தம்	— சந்தனம்.
க்ரஹீத்வா	— எடுத்து.
க்ரந்தி	— முடிச்சு.

குண்டம்	— அக்னி அல்லது ஜலம் இருக்கும் இடம்.
சரு	— கஞ்சி வடிக்காத அன்னம்.
தண்டுல	— அரிசி.
தர்வி	— பலாசத்தின் நடு இலே.
திலம்	— எள்ளு.
தோயம்	— ஜலம்.
தக்ஷிணதோ நிதாய	— தெற்கே வைத்து.
த்ருத்வா	— தரித்து.
நிவீதி	— பூணலே மாலே போல் தரித்தல்.
நிரஸ்ய	— எறிந்து.
பத்னி	— ஹோமத்தில் ஈடுபட்ட மனேவி.
பவித்ரம்	— தர்ப்பத்தால் செய்து, பவித்ர விரலில் அணிவது.
பவித்ரம்	— நுனியில் முடிச்சுப்போட்டு பாத்ர ஆஜ்ய சுத்திக்காக ஏற்பட்ட தர்ப்பம்.
பவித்ரம் விஸ்ருஜ்ய	— பவித்ர முடிச்சை அவிழ்த்தெறிந்து.
பரிதி	— அக்னிக்கு மூன்றுபுறமும் போடும் ஸமித்.
பரிஸ்தரணம்	— அக்னிக்கு நான்குபுறமும் போடும் தர்ப்பம்.
பரிஷேசனம்	— ஜலத்தினல் சுற்றுவது.
ப்ராக்தோயம்	— கிழகே ஜலம்.
ப்ரதிஷ்டாப்ய	— நிலே நிறுத்தி வைத்து.
ப்ரோக்ஷணி பாத்ரம்	— ஜலம் ப்ரோக்ஷிப்பதற்காக உள்ள பாத்ரம்.
ப்ரணிதா பாத்ரம்	— அக்னிக்கு வடபுறம் வைக்கும் தீர்த்த பாத்ரம்.
பாத்யம்	— கால் அலம்ப அளிக்கும் ஜலம்.
மால்யம்	— மாலே.
மதந்தி	— கர்மாவில் பயன் படுவதற்காக ஏற்பட்ட தீர்த்த பாத்ரம்.
யத்கிஞ்சித்	— ஏதோ கொஞ்சம்.
யதாஸ்தானம்	— முன் இருந்த இடம்.
ஸமித்	— ஹோமத்திற்கேற்ற சுள்ளி.
ஸேசயித்வா	— நனேத்து.
ஸ்வீக்ருத்ய	— வாங்கிக்கொண்டு
விஸ்ருஜ்ய	— அவிழ்த்து.
ஹிரண்யம்	— தங்கம் அல்லது வெள்ளி.

A. N. 7147
R689

ஆசிரியர் ஸ்ரீ வத்ஸ ஸோமதேவ சர்மா
அவர்களால்

வெளியிடப்பட்ட அரிய ப்ரசுரங்கள்.

		ரூ.	அ.	பை
1.	ஸந்த்யாவந்தனம் — (ஸ்வரத்துடனும், அர்த்தத்துடனும்) காலிகோ அட்டை	1	8	0
	ஸாதாரண பைண்ட்	1	4	0
	(பத்தாயிரம் ப்ரதிகள் வினியோகப்படுத்தப்பட்டன. ஸ்வல்ப ப்ரதிகளே கைவசம் உள்ளன.)			
2.	ஆபஸ்தம்ப ஸூத்ர தர்ப்பண விளக்கம்	0	6	0
3.	ஸ்ரீ சிவநாம அஷ்டோத்தர சதம் (ஸ்ரீ பாஸ்கரராயர், ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இவர்களின் கருத்தைத் தழுவி, தமிழுரையுடன் கூடியது)	0	10	0

தமிழில் உள்ளவை

4.	யஜுர் உபகர்ம விளக்கம்	0	4	0
5.	வைசாக மாஹாத்ம்யம்	0	3	0
6.	25 ஏகாதசிகளின் பெருமை	0	4	0
7.	ஸ்தோத்ர சிந்தாமணி	0	4	0
8.	ஸ்துதி குஸுமாஞ்ஜலி	0	4	0
9.	வேதமும், வேதாங்கமும்	0	4	0
10.	ஸ்ரீ பஜகோவிந்தமும், கோபிகா கீதமும்	0	3	0
11.	அஷ்டபதி தத்வார்த்த ஸாரம்	0	2	0
12.	ஸ்ரீ வ்யாஸ சரிதம் பூஜாகல்பம்	0	2	0
13.	ஸ்ரீ சங்கர சரிதம் ,,	0	3	0
14.	துளஸி ,, ,,	0	4	0
15.	காவேரி பூஜை	0	2	0
16.	விநாயக ,,	0	2	0
17.	சங்கராந்தி, கோ பூஜை	0	2	0
18.	ஸரஸ்வதி பூஜை	0	4	0
19.	சிவராத்ரி பூஜையும், கதையும்	0	4	0
20.	சித்ரகுப்த, காரடை நோன்பு, ஸ்ரீராம நவமி பூஜாகல்பம்	0	4	0
21.	ப்ருஹ்ம புராணம்	1	0	0

(குறிப்பு) ஷை புஸ்தகங்களில் ஸ்வல்ப ப்ரதிகளே கைவசம் உள்ளன. தபால் செலவு ப்ரத்யேகம்.

வைதிக தர்மவர்த்தினி கார்யாலயம்

2/218, தம்பு செட்டி தெரு, சென்னை—1.